

# குழந்தைகள் வகுப்பு போதித்தல் கிரேட் 1



ரூஹி பயிற்சிக்கழகம்





நூல் 3

# குழந்தைகள்
# வகுப்பு போதித்தல்
# கிரேட் 1

ரூஹி பயிற்சிக்கழகம்

இத்தொடர்வரிசையில் வரும் நூல்கள்

ரூஹி பயிற்சிக் கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்தத் தொடர்வரிசையில் உள்ள தலைப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்களும் முதியவர்களும் தங்கள் சமூகங்களுக்குச் சேவை செய்வதற்கான திறனாற்றலை மேம்படுத்துவதற்கு்ரிய ஒரு முறைமையான முயற்சியில் இந்த நூல்கள் பிரதான தொடர்வரிசையாகப் பயன்படுத்தப்படும். பஹாய் குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தொடர்வரிசையில் வரும் மூன்றாவது நூலின் கிளைப்பயிற்சித் தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருவதுடன், இளைய் இளைஞர் குழுமங்களுக்கு எனிமேட்டர்களை உருவாக்குவதற்கு நூல் 5'இன் கிளை பயிற்சிகள் தொகுப்பு ஒன்றையும் ரூஹி பயிற்சிக்கழகம் உருவாக்கி வருகின்றது. அவையும் கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றன. களத்தில் ்அனுபவம் பெருகி, மேம்பாட்டில் உள்ள பாடத்திட்ட அம்சங்கள் பல விரிவாகக் கிடைக்கும் கட்டத்தை அடையும் போது இந்தப் பட்டியலும் மாற்றம் கண்டு, கூடுதல் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

நூல் 1 ஆன்மாவைப் பற்றி பிரதிபலித்தல்
நூல் 2 சேவைக்காக எழுதல்
நூல் 3 குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1
குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 2 (கிளை பயிற்சி)
குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 3 (கிளை பயிற்சி)
குழந்தைகள் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 4 (கிளை பயிற்சி)
நூல் 4 இரட்டை அவதாரங்கள்
நூல் 5 இளைய இளைஞர் சக்திகளை விடுவித்தல்
ஆரம்ப உந்தம்: நூல் 5'இன் முதல் கிளை பயிற்சி
விரிவடையும் வட்டம்: நூல் 5'இன் இரண்டாவது கிளை பயிற்சி
நூல் 6 சமயத்தைப் போதித்தல்
நூல் 7 ஒரு சேவைப் பாதையில் ஒன்றாகப் நடப்பது
நூல் 8 பஹாவுல்லாவின் திருவொப்பந்தம்
நூல் 9 ஒரு வரலாறு சார்ந்த முன்னோக்கைப் பெறுதல்
நூல் 10 துடிப்பான சமூகங்களை நிர்மாணித்தல்
நூல் 11 லௌகீக வழிமுறைகள்
நூல் 12 குடும்பமும் சமூகமும்
நூல் 13 சமுதாய நடவடிக்கையில் ஈடுபடல்
நூல் 14 பொது சொல்லாடல்களில் பங்கேற்றல்

பதிப்புரிமை © 2014, 2021 - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 2.2.1.PE ஏப்ரல் 2024
Printed in India

Originally published in Spanish as *Enseñar clases para niños, primer grado*
Copyright © 1987, 1996, 2021 by the Ruhi Foundation, Colombia
ISBN 978-958-52941-7-2

Permission for a limited printing of this book in Tamil has been granted by the Ruhi Institute.

ரூஹி பயிற்சிக்கழகம்
காலி, கொலம்பியா
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org

# உள்ளடக்கம்


பயிற்றுநருக்கான சில சிந்தனைகள் .......... v

பஹாய் கல்வியின் சில கொள்கைகள் .......... 1

குழந்தைகள் வகுப்புகளுக்கான சில பாடங்கள், நிலை 1 .......... 47

# பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்

இந்த நூல், அண்டைப்புறங்களிலும் கிராமங்களிலும் குழந்தைகளின் ஆன்மீகக் கல்வியின் முறையான வகுப்புகளில், கற்பித்தல் எனும் மிகவும் மதிப்புவாய்ந்த செயலை மேற்கொள்ள அதிகரித்துவரும் எண்ணிக்கையிலான தனிநபர்களுள் திறனாற்றலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரூஹி பயிற்சியகத்தின் கிரமமான பயிற்சிகளில் மூன்றாவதாக விளங்கும் இந்தப் பாடப்பிரிவு, விசேஷமான ஒரு சேவையைத் தொடர விரும்புவோருக்கு அதன் பாதையைத் திறப்பதில் முதலாவதாகத் திகழ்கிறது. அவ்வாறு செய்ய முடிவு செய்யும் பங்கேற்பாளர்கள், குழந்தைகளுக்குக் கற்பிக்கத் தொடர்ச்சியான கிளை பாடப்பிரிவுகளைப் பயில்வார்கள்; பிரதான பயிற்சிவரிசை வரைந்துள்ள பாதையில் தொடர்ந்து முன்னேறும் அதே வேளை, ஒவ்வொரு கிளை பாடப்பிரிவுகளைத் தன் சொந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறும், தங்களுக்கேற்ற  வேகத்திலும் படிப்பார்கள்.

ஒரு குழுவை இந்தப் புத்தகத்தினூடே வழிநடத்தும் பொழுது, பயிற்றுநர் மேற்கண்ட தொலைநோக்கை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது, பங்கேற்பாளர்களில் ஒரு சதவீதத்தினர் மட்டுமே இந்த முயற்சியில் தங்களை அர்ப்பணிக்க விரும்புவார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அதன் உடனடி குறிக்கோளுக்கும் அப்பால்,  சேவை பாதையில் இப்போது உறுதியாக காலடி எடுத்து வைக்கும் தனிநபர் ஒவ்வொருவருக்கும் தங்களின் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் மடிப்பவிழ்ந்துவரும் இளையோருக்கான கல்வியல் திட்டங்களுக்கு வடிவம் கொடுக்கும் சில கருத்தாக்கங்கள் மற்றும் யோசனைகளை இந்த நூல் விரிவாக அறிமுகப்படுத்திடும். இதில், ஒரு சமூகத்தில்  குழந்தைகளை ஆன்மீக ரீதியில் பேணுவதற்கான அதன் கடமை, அவர்களுடனான தங்களின் பரஸ்பர செயல்பாடுகளில் அதன் முதிய உறுப்பினர்கள் வெளிப்படுத்த வேண்டிய நற்பண்புகள், மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகள் ஆகிய இரண்டிலும் அதிகரித்து வரும் விழிப்புணர்வுக்குப் பங்களிப்பது இந்த நூலின் எதிர்ப்பார்ப்பாகும்.

நூல் இரண்டின் இரண்டாவது பாடப்பிரிவு படிப்பாய்வின் மூலம் கல்வி என்பது மூன்று வகையானது --லௌகீகம், மனிதம், ஆன்மீகம் -- எனும் அப்துல்-பஹாவின் கூற்றுரையுடன் பங்கேற்பாளர்கள் ஏற்கனவே பரிச்சயமாகியிருப்பர்.  பிந்தைய கல்வியான ஆன்மீகக் கல்வி குறித்து தங்களின் புரிதலை மேம்படுத்திக்கொள்ள அவர்களுக்கு இங்கு ஒரு வாய்ப்பளிக்கப்படும். இக்கல்வியின் உதவியுடன், ஒரு தனிநபரின் உயர் இயல்பாகிய அவனது ஆன்மீக இயல்பு மேம்படுத்தப்படுகின்றது.  ஆரம்பத்திலிருந்தே, பஹாய் சமயத்தில் கருதப்படும் குழந்தைகளுக்கான ஆன்மீகக் கல்வியானது, சில சமயம் மத போதனைகளுடன் தொடர்புப்படுத்தப்படும் மதப்பிடிவாத நம்பிக்கைகளின் திணிப்பிலிருந்து அது அடிப்பையில் வேறுபட்டதாகும். அதற்கு மாறாக, அறிவின்பால் அன்பு, கற்றலின்பால் திறந்த மனப்பான்மை, மெய்ம்மையை ஆராய்வதற்கு நிலையான ஆவல் ஆகியவற்றைப் பேணுதலை அது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இளையோரின் கல்வியில், சமயக் கொள்கைகள் தள்ளிவைக்கப்பட முடியாது என்பதை ஒப்புக்கொள்வது சம அளவு முக்கியமாகும். ஏனெனில், அது அவர்களின் சிந்தனை மற்றும் செயல்களின் மீது ஆதிக்கம் செலுத்தவிருக்கும் தெய்வீக உண்மைகள் மற்றும் ஆன்மீகக் கொள்கைகளுக்கான அணுகலை அவர்களுக்கு மறுப்பதாகிவிடும். 'சுதந்திரத் தேர்வுகள்' எனும் கூற்றுக்கு ஏற்ப, இளையோர், சமுதாயத்துடனான தங்களின் பரஸ்பர செயல்பாடுகளின் மூலம்

அவர்களின் சொந்த செந்தரங்களையும் உலகக் கண்ணோட்டங்களையும் பெற்றுக்கொள்ள விட்டுவிடுவதே சிறந்தது என கோருவோர், அரசியல், பொருளாதார, மற்றும் கலாச்சார சக்திகள் எவ்வளவு தீவிரமாக அவற்றின் சொந்த தன்னலத்திற்காகச் செயல்படுகின்றன என்பதை மதித்துணர்வதில்லை. அது அவ்வாறில்லை எனினும், அடுத்தடுத்து வரும் தலைமுறையினர், தனிநபரின் ஆன்மீக இயல்பைப் பேணுகின்ற ஒரு கல்வியின்றி ஒரு சிறந்த உலகை உருவாக்கவியலும் என அனுமானிப்பதற்கான காரணம் ஏதுமில்லை. தெய்வீகக் கல்வியாளரின் வழிகாட்டலற்ற மானிடம் குழப்பம், அநீதி, மற்றும் துன்பத்திற்கும் மேற்பட்டு வேறு எதையும் உருவாக்க இயலாது.

ஆதலால், இந்த நூலிலும் அதிலிருந்து கிளைக்கின்ற நூல்களிலும் தொலைநோக்காகக் காணப்பட்டுள்ள ஆறு வருட குழந்தைகள் கல்விக்கு பஹாய் போதனைகள் மையமாக உள்ளன. அவ்வாறு கூறிய பின்னர், திட்டத்தின் வடிவம், குறிப்பாக உள்ளடக்கங்களைக் கிரேட்களாக வரிசைப்படுத்தலானது எல்லாவித பின்னணிகளையும் சார்ந்த இளையோர் பங்கேற்பதற்கு ஏதுவான வழியைத் திறந்துவிடுகின்றது. கிரேட் ஒன்றின் பாடங்கள், 5 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுள் ஆன்மீகப் பண்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன -- கடந்த வருடம் ஆராயப்பட்ட உள்ளார்ந்த பண்புகளுக்கு செயலுருவம் வழங்கும் நடத்தை குறித்த பழக்கவழக்கங்கள் மற்றும் நடத்தைமுறைகளைப் பேணுவதன் மூலம் இந்த கிரேட் இப்பாடங்களின் அஸ்திவாரத்தில் கட்டமைக்கின்றது-- அடுத்து வரும் கிரேட்கள் அறிவு பற்றிய கேள்வியின்பால் திரும்புகின்றன. குறிப்பாக, தங்களின் சொந்த ஆன்மீக மேம்பாட்டிற்காக விழிப்புடன் செயல்பட, கடவுளின் அறிவு வழிந்தோடும் அந்த மூலாதாரத்துடன் தனிநபர்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆதலால், இந்நாளின் இரட்டை அவதாரங்கள், அவர்களுக்கு முன் தோன்றிய அவதாரங்கள் ஆகியோரின் வாழ்க்கைக்கு மையமான கருப்பொருள்கள் யாவும் இந்த கிரேட்களின் பாடங்களில் விவாதிக்கப்பட்டுள்ளன. இறுதி கிரேட், அப்துல்-பஹாவின் விளக்கங்கள் மற்றும் உதாரணத்தின் மூலம் வழிகாட்டலும் பயனும் பெறுதல் வழி பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு குறித்த அறிவில் வளர்ச்சியடைவதற்கான ஒரு வாய்ப்பை குழந்தைகளுக்கு வழங்குகின்றது. குழந்தைகள், வாழ்க்கையில் முன்னேறிச் சென்று தங்கள் சிந்தனைகளையும் செயல்களையும் பஹாவுல்லாவின் போதனைகளுடன் இணைவாக்கிக்கொள்ள முயலும் போது அவர்கள் அவரது திருவாசகங்கள் மற்றும் வாக்குகளின் திரும்பும் பழக்கத்தை அவர்களுள் பலப்படுத்த இது உதவும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அவர்கள் 11 அல்லது 12 வயதை அடையும் தருணம், இந்த இளையோர் இளைய இளைஞர் ஆன்மீக சக்தியளிப்புத் திட்டதிற்குள் பிரவேசிக்கத் தயாராக இருக்கின்றனர். இத்திட்டத்தில், பஹாய் குழந்தைகள் வகுப்பில் அவர்கள் பெற்ற கல்வியின் தொடர்ச்சியாக விளங்கும் சில பாடங்கள் உட்பட, ஓர் அனிமேட்டரின் உதவியுடன் படிக்கப்படும் சில பாட வரிசைகளின் வழி அவர்களின் அதிகரிக்கும் நனவாற்றல் மேலும் விரிவடைகின்றது. குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களாகிட நோக்கங்கொண்டுள்ளோர், பஹாய்களல்லாத பெற்றோர், தங்கள் மகன்களையும் மகள்களையும் இத்தகைய வகுப்புகளுக்கு அனுப்பும் வாய்ப்பை வரவேற்கவே செய்வர் என்பதிலும் அக்குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களிலும் மனதிலும் ஆன்மீகக் கல்வியானது கண்டிப்பாக ஏற்படுத்தப்போகும் நல்விளைவுகளைக் கண்டும் மகிழ்ச்சியடைவர் என்பதிலும் முழு நம்பிக்கைகொள்ள வேண்டும்.

மேலே காணப்பட்டவாறு, நடத்தையைத் துல்லியப்படுத்துவதில் கிரேட் 1 வகுப்புகள் கவனம் செலுத்துகின்றன. இதன் சூழலில்தான், “பஹாய் கல்வியின் சில கொள்கைகள்” எனும் முதல் பாடப்பிரிவு, பஹாய் திருவாக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட, கல்விக்கான ஆழ்ந்த தாத்பர்யங்களைக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில அடிப்படை கருத்தாக்கங்களை ஆராய்கிறது.

பாடப்பிரிவின் முதல் பாதி இந்த ஆய்விற்கு அர்ப்பணிக்கப்படும் அதே வேளை, மீதியுள்ள பகுதி பாடங்களை எவ்வாறு நடத்துவது என்பதற்கான அணுகுமுறைகள், பெற்றோருடனான ஆசிரியர்களின் உறவு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

பாடப்பிரிவில் ஆராயப்படும் முதல் கருத்தாக்கங்களில் ஒன்று மனித சாத்தியமாகும். இது, மனிதனை "விலை மதிப்பிடவியலாத இரத்தினங்களைக் கொண்ட (வளமான) சுரங்கமாக" வர்ணிக்கும் பஹாவுல்லாவின் கூற்றில் காணப்படும் உவமையின் மூலம் ஆராயப்படுகின்றது. அக்கூற்றிலிருந்து எடுக்கப்படக்கூடிய இரண்டு உடனடி தாத்பர்யங்கள் மீது பிரதிபலிக்குமாறு பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்—அதாவது, மாணவர்கள் தகவல்களால் நிரப்பப்பட காத்திருக்கும் காலி பாத்திரங்களாகக் கருதும் கல்வியல் அணுகுமுறைகள் புறக்கணிக்கப்பட வேண்டும், மற்றும் முறையான பேணுதலின்றி, குழந்தைகள் தங்களின் உள்ளார்ந்த நிலையில் பெற்றுள்ள பல இரத்தினங்களை வெளிப்படுத்த இயலாமல் போகும்.

ஒவ்வொரு தனிநபருக்கும் வழங்கப்பட்டுள்ள, பாடப்பிரிவு பரிந்துரைக்கும் இரத்தினங்களில், "ஆன்மீகப் பண்புகள்" எனப்படுபவை ஒரு மேன்மையான மற்றும் நேரான நடத்தை உருவாக்கப்படக்கூடிய ஒரு நிரந்தர கட்டமைப்பாகக் காணப்படுகின்றன. பழக்கவழக்கங்கள் மற்றும் மனப்பான்மைகளுடன் திறன்கள், திறமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய-- ஒவ்வொரு பாராட்டத்தக்கப் பண்புகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொது பதமான-- "நன்னெறிகளின்" ஒரு தனித்துவமான வகைமையை உள்ளடக்குகின்றன. பகுதிகள் 6 மற்றும் 7-ம் இக்கூற்றின் தாத்பர்யங்கள் சிலவற்றைப் பரிசீலிக்கின்றன. குழுவினர் தாங்கள் விவாதிப்பவற்றை நூல் 1-இன் மூன்றாவது பாடப்பிரிவில் தாங்கள் படிப்பாய்வு செய்தவற்றுடன் தொடர்புப்படுத்திட முடிவதை பயிற்றுனர் உறுதிசெய்திட விரும்பலாம். அப்பாடப்பிரிவில், கடவுளை நோக்கிய நமது நித்திய பயணத்தில் நமக்கு உதவியும் ஆதரவும் நல்கக்கூடிய மனித ஆன்மாவின் ஆற்றல்கள் எனும் முறையில் எவ்வாறு ஆன்மீகப் பண்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பது குறித்து சிந்தித்தனர். ஆன்மீகப் பண்புகளைப் பேணுவதில் கடவுளின் அன்பும் கடவுளின் அறிவும் இன்றியமையாதவை. இந்த இரண்டு பகுதிகளிலும் உள்ள யோசனைகள் காலந்தவறாமை மற்றும் வாய்மை இரண்டையும் ஒரே விதமான பண்புகளாகக் கருதும் ஒரு பயிற்சியிலிருந்து கிரேட் 1-இன் பாடங்களை எவ்வாறு வேறுபடுத்திக் காட்டுகின்றன என்பதைப் பங்கேற்பாளர்கள் கண்ணுறுவது முக்கியமாகும். மற்றும், ஆசிரியர்கள் இந்த வேறுபாட்டை மதித்துணரும் போது, நன்னடத்தையின் உருவாக்கத்தை நடத்தையை மாற்றியமைப்பதன் அடிப்படையில் கண்ணுறும் போக்கைத் தவிர்ப்பார்கள். நிச்சயமாகவே, ஆன்மீகப் பண்புகளுக்கு அவற்றின் சொந்த இயலாற்றல்கள் உள்ளன. அவற்றை பாடங்களின் மைய அம்சங்கள் குறிப்பாக -- பிரார்த்தனை, மேற்கோள்களை மனனம் செய்தல், மற்றும் கதைகள் – பேணுவதற்கு முயல்கின்றன. பங்கேற்பாளர்கள் தங்களின் நூல்கள் 1 மற்றும் 2'இன் படிப்பாய்விலிருந்து இந்த அம்சங்களின் இயல்பு குறித்து சில அகப்பார்வைகளை ஏற்கனவே பெற்றுள்ளனர், மற்றும் பகுதி 8 அவர்கள் கற்றவற்றைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் பணிக்குப் பயன்படுத்தும் நோக்கமுடையது. அவ்வாறு செய்கையில், இளையோரில் ஆன்மீகப் பண்புகளைப் பேணுவதற்கு, பாடங்கள் அவர்களைக் கடவுள் திருவாக்குடன் நேரடியாகத் தொடர்புபடுத்தி, அதிவுயர்ந்த மனித இலட்சியங்களின் திருவுருவாம் அப்துல்-பஹாவின் கதைகளைக் கொண்டு அவர்களுக்கு உத்வேகமூட்டுகின்றது என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

பாடப்பிரிவில் ஆராயப்பட்ட மற்றொரு கருத்தாக்கம் கடவுளின்பால் பயம் குறித்ததாகும்; அது பகுதி 12-இல் குறித்துரைக்கப்பட்டுள்ளது. பஹாய் திருவாக்குகளின்படி, ஒரு மனிதனின்

கல்வியில் அது “பிரதான காரணியாக” இருக்கின்றது. பங்கேற்பாளர்கள் முக்கியமாகப் புரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், இந்தப் பயமானது கடவுளின்பால் அன்பிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒன்றென்பதாகும். அது, நாம் நேசிக்கும் ஒருவரை மகிழ்ச்சிப்படுத்தும் ஆவலிலிருந்து பிறக்கும் பயமும் அவரது அன்பின் அருட்கொடைகள் நம்மை வந்தடைவதிலிருந்து நம்மைத் தடுக்கும் எந்தச் செயலையும் புறக்கணிப்பதும் ஆகும். அன்பில்லா நிலையில், தகாத நடத்தையிலிருந்து நம்மை அப்பால் திரும்பச் செய்யும் அந்தப் பயம் மற்றொரு வகையானது—சீற்றமிக்க கடவுளினால் வழங்கப்படும் தண்டனைக்கான பயம். இது, குழந்தைகளின் மனதில் பதிய வேண்டிய ஒரு காட்சியல்ல. கல்வியல் செயல்முறையில், ஆசிரியர்களாக விரும்புவோர் கடவுளின்பால் அன்பிற்கும் கடவுளின்பால் பயத்திற்கும் இடையிலான தொடர்பை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமெனினும் அது அவர்களால் வகுப்பில் வெளிப்படையாக எழுப்பப்படும் ஒரு தலைப்பல்ல என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். மாறாக, அவர்கள் தங்கள் மாணவர்களின் இதயங்களில் கடவுள் அன்பின் தீப்பொறியை மேலும் அதிகமாக்கிட கற்றுக்கொண்டு, அவரது எல்லையற்ற அன்பினால் மனிதகுலத்தைப் படைத்த பிறகு, கடவுள் நம்மைப் பேணி வளர்ப்பதையும் பாதுகாப்பதையும் நிறுத்தமாட்டார் எனும் முற்றான உத்தரவாதத்தை அவர்கள் அடைந்திட அவர்களுக்கு உதவ வேண்டும். இறுதியில், அவரது அழகின்மீதான அன்பே, கடவுளின் நல்விருப்பத்திற்கு எதிரான வழிகளில் நடப்பதிலிருந்து அவர்களைத் தடுத்திடும்.

இறுதியில், ஆன்மீகக் கல்வி சார்ந்த ஒரு செயல்முறையின் மூலம், குழந்தைகள் ஆன்மீகப் பண்புகளைப் பெறுவதே உள்ளபடி ஒரு பரிசாகும் தகுதியற்ற நடத்தையே மிகப் பெரும் தண்டனையாகும் எனக் குழந்தைகள் கருத ஆரம்பித்திட வேண்டும் என்பதை பங்கேற்பாளர்கள் உணர்ந்திட மேற்கண்ட கருத்தாக்கங்கள் மற்றும் யோசனைகள் மீதான கலந்துரையாடல் வழிகாட்ட வேண்டும். பின்னர், இவை யாவும் இளையோர்களுள் நடத்தையை சரிசெய்தலை ஒரு முறையான கண்ணோட்டத்திலிருந்து காண்பதற்கு—ஒரு மைய குறிக்கோளாக இன்றி, நடத்தையைத் துல்லியமாக்குவதற்கான ஓர் உதவியாக—பங்கேற்பாளர்களுக்கு உதவிட வேண்டும். குழந்தைகளுடனான தங்களின் பரஸ்பர செயல்பாட்டின் மூலம் விரும்பத்தக்க நடத்தையை ஊக்குவிக்கவும் தகுதியற்ற நடத்தைமுறைகளிலிருந்து பின்வாங்கச் செய்யவும் பொருத்தமான வழிகளை அவர்கள் காண்பர். சுதந்திரமும் கட்டுப்பாடும் பகுதியில் சுருக்கமாகக் குறித்துரைக்கப்படும் பிற கருத்தாக்கங்கள். குழந்தைகள் கல்வியில் கடுமையான தண்டனைக்குத் தெளிவாகவே இடமில்லை எனினும் அவர்கள் விரும்பியபடி அவர்களை முழு சுதந்திரமாக விட்டுவிடுதலும் அவர்களின் ஆன்மீக மேம்பாட்டை பாதித்துவிடும்.

ஒரு வகுப்பில் மகிழ்ச்சியான கற்றல் சூழ்நிலையை உருவாக்கும் அதே வேளை, அதில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் எவ்வாறு பராமரிப்பது எனும் கேள்விக்குப் பாடப்பிரிவு திரும்புகிறது. பெரும்பாலான பங்கேற்பாளர்களுக்கு குழந்தைகளுக்குப் போதிக்கும் முந்தைய அனுபவம் இருக்காது என்பதை பயிற்றுனர் நினைவில்கொள்ள வேண்டும். ஆதலால், இங்கு அவர்களின் பரிசீலனைக்காக சில யோசனைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் இந்தச் சேவையை மேற்கொண்ட பிறகு சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் திரும்பி அதே யோசனைகளை அனுபவத்தின் அடிப்படையில் பிரதிபலிப்பதற்கு விரும்பலாம்.

பங்கேற்பாளர்கள், அதன் பின்னர், பாடங்களில் உள்ளடங்கியுள்ள நடவடிக்கைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதற்குத் தாங்கள் பின்பற்றக்கூடிய சில அணுகுமுறைகளை ஆராய்வர். மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரார்த்தனை, மேற்கோள்களை மனனம் செய்தல், கதைகள் ஆகிய மைய அம்சங்களுக்கும் கூடுதலாக, இந்த நடவடிக்கைகள், பாடல்கள்,

விளையாட்டுகள் மற்றும் வர்ணம் தீட்டுதலையும் உள்ளடக்கியுள்ளன. அவர்களுக்கு இருக்கும் அணுகுமுறைகளை ஆய்வு செய்வதில் தூய்மை எனும் ஆன்மீகப் பண்பு குறித்த முதல் பாடத்தை பங்கேற்பாளர்கள் மதிப்பாய்வு செய்வர்.

இறுதியாக, பாடப்பிரிவு 26-இல், ஓர் ஆசிரியருக்கும் அவரது வகுப்பில் உள்ள சிறுவர்களின் பெற்றோருக்கும் இடையே நடந்து வரும் உரையாடலின் தன்மையை அவர்கள் பரிசீலிக்கின்றனர். இந்தப் பகுதி, இது தொடர்பாக பங்கேற்பாளர்கள் ஏற்கனவே நூல் 2-இல் என்ன படிப்பாய்வு செய்துள்ளனர், மற்றும் தங்கள் அண்டைப்புறம் அல்லது கிராமத்திலிருந்து வகுப்புகளில் கலந்துகொள்ளும் குழந்தைகளின் வீடுகளுக்கு விஜயம் செய்யும் நண்பர்களின் அதிகரித்து வரும் மையக்கருவின் ஒரு பகுதியாக அவர்கள் பெற்றிருக்கக்கூடிய எந்த அனுபவத்தின் மீதும், கட்டமைக்கின்றது. பெற்றோருடன் அவர்கள் நடத்தவிருக்கும் உரையாடல்களுக்கான தயாரிப்பில் இந்த முதல் பாடப்பிரிவில் உள்ள கருத்துகளை மறுஆய்வு செய்ய கோரும் பயிற்சியை மேற்கொள்ள பங்கேற்பாளர்களுக்குப் போதுமான நேரம் வழங்கப்படுவதை பயிற்றுநர் உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சி, குழுவின் உறுப்பினர்களின் மனதில் விவாதிக்கப்பட்ட பல கருத்துக்கள் மற்றும் கருத்தாக்கங்களை வலுப்படுத்த ஒரு வழிமுறையாக இருக்கும்.

“குழந்தைகள் வகுப்புக்கான பாடங்கள், கிரேட் 1” எனும் இரண்டாவது பாடப்பிரிவு, இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது: இந்த கிரேட்டிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இருபத்து நான்கு பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்தின் உள்ளடக்கத்துடன் நன்கு பரிச்சயமாவதற்கு ஆசிரியர்களுக்கு உதவக்கூடிய ஆரம்பப் பகுதிகள். ஒவ்வொரு பாடமும் ஓர் ஆன்மீகப் பண்பைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஒரு நேரத்தில் நான்கு பகுதிகளை எடுத்துக்கொண்டு, பூர்வாங்கப் பகுதிகள் ஒவ்வொரு பாடத்தின் மைய அம்சங்கள் வழி பங்கேற்பாளர்களை நடத்திச் செல்கின்றன. முந்தைய பாடப்பிரிவில் முதலாவதான தூய்மைக்குச் செய்தது போன்றே இந்த மைய அம்சங்களையும் பூர்வாங்கப் பகுதிகள் ஆய்வு செய்கின்றன.

ஒவ்வொரு பாடத்திற்கும் பஹாய் திருவாக்குகளிலிருந்து எடுக்கப்படும் ஒரு மேற்கோள் ஒரு நடுமைய அம்சமாக இருக்கின்றது. அந்த மேற்கோளை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்படும் ஒரு சிறு கூற்றுரையுடன் அவை உடன்வருகின்றன. சுருக்கமானவை எனினும், இதில் குறித்துரைக்கப்படும் ஆன்மீகப் பண்பை வகைப்படுத்தும் இயக்காற்றலை குழந்தைகளின் மனதில் உருவகப்படுத்த அவர்களுக்கு உதவும் ஒரு சொற்குவியலையும் மனக்காட்சிகளையும் இக்கூற்றுரை பயன்படுத்துகின்றது. ஓர் இயற்கையான முறையில் ஆரம்ப குறிப்புகளை அறிமுகப்படுத்தவும் இந்த இயக்காற்றல்கள் குறித்த அகப்பார்வைகளைப் பெற மாணவர்களுக்கு உதவுவதற்குமான ஓர் ஆசிரியரின் திறன், அனுபவத்தின் மூலமாகவும் பாடங்களில் விவாதிக்கப்படும் ஆன்மீகப் பண்புகளைத் தொடர்ந்தாற் போன்று ஆழச் சிந்திப்பதன் மூலமாகவும் வளர்ச்சி காண்கின்றது. இதன் அடிப்படையில், தனிநபரின் வாழ்க்கை மற்றும் அவர்களின் போதித்தல் முயற்சிகளுக்கு இந்த ஒவ்வொரு பண்பின் முக்கியத்துவம் மீதான ஓர் ஆரம்பப் பிரதிபலிப்பை மேற்கொள்ள பூர்வாங்கப் பகுதிகளில் பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். இந்த நோக்கத்திற்காக, அப்பண்புகள் ஒவ்வொன்றுடனும் தொடர்பு கொண்ட ஒரு சிறு மேற்கோள் தொகுதி இணைக்கப்பட்டுள்ளது.

அத்தகைய பிரதிபலிப்பில் ஈடுபட்ட பிறகு, அவர்கள் பரிசீலித்து வரும் பண்புகளை விளக்கும் கதைகளை அடுத்து ஆராய்கின்றனர். பெரும்பாலானவை 'அப்துல்-பாஹா'வின்

வாழ்க்கையிலிருந்து பெறப்பட்ட கதைகள். இவை மனித ஆன்மாவின் தன்மைகள் எனும் முறையில் ஆன்மீகப் பண்புகளின் எண்ணற்ற வெளிப்பாடுகளின் ஒரு காட்சியைக் குழந்தைகளுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக, ஒவ்வொரு கதையிலும் நிகழ்வுகளின் வரிசைக்கு அப்பால், அந்தக் கதை ஆராயும் ஆன்மீக மெய்நிலையைக் கண்ணுற ஆசிரியர்களுக்கு உதவக்கூடிய சில கேள்விகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக 'அப்துல்-பாஹா'வின் கதைகளைப் பார்க்கையில், ஆசிரியர்கள் தங்கள் விளக்கத்தில், அவர் எவ்வாறு ஆன்மீகப் பண்புகளை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தினார் என்பதையும், அவரது செயல்களின் உண்மையான முக்கியத்துவத்தைப் பார்ப்பதிலிருந்து குழந்தைகளைத் திசைதிருப்பக்கூடிய உடனடி மற்றும் மேலோட்டமான தொடர்புப்படுத்தலைத் தவிர்ப்பதற்காகவும், இந்தக் கேள்விகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பங்கேற்பாளர்கள் நான்கு பாடங்களின் ஒவ்வொரு குழுவையும் இந்த வழிமுறையில் பகுப்பாய்வு செய்த பிறகு, முதல் பாடப்பிரிவில் கலந்தாலோசிக்கப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, தங்களிடையே பல்வேறு கூறுகளைப் பயிற்சி செய்ய நேரம் செலவிடும்படி கேட்கப்படுகிறார்கள். பயிற்சிக்கூறுகளின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. சாத்தியமிக்க ஆசிரியர்கள் எனும் முறையில் தங்கள் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் குழு உறுப்பினர்களுக்கு உதவிடும் பொறுப்பு இப்போது பயிற்றுநரிடமே எதிர்ப்பார்க்கப்படும். பாடங்களின் படிப்பை நான்கு தொகுப்புகளாக அமைப்பது, இந்த வகையில் ஒரு நெகிழ்வுத்தன்மையை அளிக்கிறது; மேலும், இந்தப் பயிற்சியை எப்படி தொடர்ந்தால் சிறப்பு என்பது குறித்து குழந்தைகளின் வகுப்புகளுக்கான ஒருங்கிணைப்பாளருடன் கலந்தாலோசித்து, பயிற்றுநரால் சில சிந்தனைகள் கொடுக்கப்பட வேண்டும். பங்கேற்பாளர்கள் இந்தச் சேவைச் செயலை மேற்கொள்வதற்கு முன்பதாகவே, அதன் முழுப் பாடப்பிரிவையும், அது உள்ளடக்கிய பயிற்சிக் கூற்றையும் முடிக்கக்கூடிய தருணங்கள் இருக்கலாம். அப்படியானால், வகுப்புகளை நடத்த விரும்புவோர், புத்தகம் 3-ஐ முடித்தவுடன், சுயமாக ஒரு வகுப்பைத் தொடங்கி வழிநடத்துவதன் மூலமாகவோ அல்லது மற்றொரு ஆசிரியருடன் சேர்ந்து பணிபுரிவதன் மூலமாகவோ, சில நடவடிக்கைகளுக்கு உதவுவதன் மூலமாகவோ, விரைந்து செயல்பட்டு அனுபவத்தைப் பெற முடியும். இருப்பினும், மற்றச் சூழ்நிலைகளில், பங்கேற்பாளர்கள் நான்கு பாடங்களின் ஒன்று அல்லது இரண்டு தொகுப்புகளின் படிப்பு மற்றும் பயிற்சியை முடித்த பிறகு, இதே போன்ற கற்பித்தல் அனுபவத்தைப் பெறத் தொடங்குவது பயனளிக்கும். தகுந்த இடைவெளிகளில், பயிற்றுநர் பங்கேற்பாளர்களுடன் மீண்டும் ஒன்றுகூடி, அவர்களின் வளர்ந்து வரும் அனுபவத்தையொட்டி மேலும் நான்கு பாடங்களைப் படிக்கவும் பயிற்சியை மேற்கொள்ளவும் செய்யலாம். ஆரம்பப் பிரிவுகளில் நான்கு பாடங்களின் குழுக்களாக அமைத்த முறையானது, அவற்றில் வழங்கப்பட்ட ஆன்மீகப் பண்புகள் எந்தவிதமான சிறப்பு வழியிலும் இணைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டவில்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாமல், ஆசிரியர்கள் பாடங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்; ஒவ்வொரு வகுப்பிற்கும் நன்கு தயாராக வேண்டும். ஆசிரியர் புத்தகத்திலிருந்து நேரடியாகப் படிக்காமல், பிரார்த்தனைகள் மற்றும் மேற்கோள்களை மனனம் செய்யக் கற்றுக்கொள்வதும், பாடத்திற்கான மேற்கோளை அறிமுகப்படுத்த முன்கூட்டியே தயாராகிக்கொள்வதும், கதையைச் சொல்லப் பயிற்சி செய்துக்கொள்ளவதும், குழந்தைகள் வகுப்புகளை மிகவும் விளைபயன்மிக்கதாய் அமைக்கும். இந்த வகையான தயாரிப்பைத் தவிர, விளையாட்டுகளுக்கான சில பொருட்கள், வண்ணத் தாள்கள் மற்றும் க்ரேயோன்களுக்கு (crayons) அப்பால், வேறுவித பொருள் வளங்கள் வகுப்புகளுக்கு மிகக் குறைவாகவே

தேவைப்படுகின்றன. இரண்டாவது பாடப்பிரிவின் முடிவில் காணப்படும் வண்ணத் தாள்களை, ஸிரோக்ஸ் எடுக்கலாம் தனித்தனி காகிதத்தில் அவற்றின் சுவடுவரைதலின் மூலம் நகல்கள் எடுக்கலாம். மேலும், அச்சிடுவதற்கு ரூஹி பயிற்சிக்கழக இணையதளத்தில் இருந்து அவற்றை பதிவிறக்கம் செய்யலாம். இணையதளத்தில் கிரேட் 1-க்கான பாடல்களின் பதிவுகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை, ஆசிரியர்கள் தங்களை வகுப்பிற்குத் தயார்படுத்திக்கொள்வதற்கு மட்டுமல்லாமல், குழந்தைகளுக்குப் பாடல்களைக் கற்றுக்கொடுக்கும்போது பயன்படுத்தவும் விரும்பலாம். தங்கள் சமூகத்தில் சிறார்களுக்காக ஒரு வகுப்பைத் தொடங்குகிறவர்கள், தங்களின் முயற்சிகளை எழுதி வைக்க ஒரு குறிப்புப் புத்தகத்தைத் தயாரிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள், இது அவர்களுக்குத் தேவையான தகவல்களை உடனடியாக கையில் வைத்திருக்கவும், முன் தயாரிப்பு மற்றும் பிரதிபலிக்கும் முறையை வலுப்படுத்தவும் உதவுகிறது.

கிரேட் 1-க்கான இருபத்து நான்கு பாடங்களும், ஒரு சாதாரன சூழ்நிலையில் ஒவ்வொரு பாடமும் ஒரே வகுப்பு நேரத்தில் முடிக்கப்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை இங்கே தெளிவாகச் சொல்வது பயனுள்ளது. ஒரு பாடத்தின் அம்சங்களை இரண்டு வகுப்பு நேரங்களாகப் பிரிப்பது, நடவடிக்கைகளைத் தேவையில்லாமல் நீட்டிக்கும் போக்கிற்குப் பங்களிக்கிறது மற்றும், மிக முக்கியமாக, ஒரு கற்றல் செயல்முறையின் விளைவுத்திறத்தை இது கீழறுத்திட முடியும். இதில், ஒவ்வொரு நடவடிக்கையும் வெவ்வேறு நிலையிலான தீவிரத்தில் இருந்தாலும் எல்லா நடவடிக்கைகளும் ஒரே ஆன்மீகப் பண்பை வலம் வருவது மிகவும் அவசியம்.

இறுதியாக, கல்விச் செயல்பாட்டில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவைப் பற்றி -- முதல் பாடப்பிரிவில் பகுதி 9 மற்றும் 10-இல் விவரிக்கப்பட்ட, ஆனால் புத்தகம் முழுவதிலும் மறைமுகமாக உள்ள -- ஒரு கருப்பொருள் பற்றி சில வார்த்தைகள் சொல்லப்பட வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் கிரேட் 1-இல் படிப்பாய்வுச் செய்யும் எல்லா ஆன்மீகப் பண்புகளையும் குழந்தைகள் மத்தியில் தங்களின் முயற்சிகளுக்குக் கொண்டு வர அதிகபட்சமாக முயலவேண்டும் என்பது தெளிவு. இவற்றில், அன்பை விட வேறு எதுவும் முக்கியமல்ல; கடவுளின் அன்பின் பிரதிபலிப்பாக இருக்கும் அன்பே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அன்பானது ஆசிரியரால் உருவாக்கப்பட்ட சூழலில் -- வகுப்பிற்கு முன்பான தயாரிப்பின் அளவிலும் ஒவ்வொரு வகுப்பின் தொடக்கத்திலும் செய்யப்படும் பிரார்த்தனைகளிலும், மாணவர்களுடனான தொடர்புகளில் பயன்படுத்தப்படும் மொழியிலும், மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப்படும் விதத்திலும் மற்றும் அவர்களின் முன்னேற்றத்தினால் பெறப்படும் பாராட்டுக்களிலும் – உணரப்படும்.



# பஹாய் கல்வியின் சில கொள்கைகள்

## நோக்கம்

பஹாய் திருவாக்குகளில் காணப்படும் கல்வி சார்ந்த கொள்கைகள் மற்றும் கருத்தாக்கங்கள் சிலவற்றை ஆய்வு செய்வதுடன், குழந்தைகளை ஆன்மீக ரீதியில் பேணிடும் வகுப்புகளில் குழந்தைகளை எவ்வாறு ஈடுபத்துவது என்பது குறித்து பிரதிபலித்தல்.

# பகுதி 1

ரூஹி பயிற்சிக்கழகத்தின் இந்த மூன்றாவது நூல், குழந்தைகளின் ஆன்மீக கல்விக்கான வகுப்புகளில் போதித்தல் என்னும் பெரும் மதிப்பிற்குரிய ஒரு சேவையின்பால் உங்களை அறிமுகப்படுத்துகிறது. நூலைப் பயின்று, அதன் பயிற்சிக் கூறை செயல்படுத்திய பிறகு, இந்த சேவை செயலின்பால் உங்கள் நேரம், ஆற்றல் ஆகியவற்றின் சிறிதளவை அர்ப்பணித்திட நீங்கள் தீர்மானித்தால், உங்கள் சமூகத்தில் ஓர் ஆறு வருட கல்வியல் திட்டத்தின் முதல் கிரேட்டில் பிரவேசிக்கும் குழந்தைகள் குழு ஒன்றிற்கு ஒரு வாராந்திர வகுப்பை ஆரம்பிக்கும் நிலையில் நீங்கள் இருப்பீர்கள். இந்த வகுப்பை நீங்கள் நடத்தி வரும் போது, நிச்சயமாகவே நீங்கள் பிரதான தொடர்வரிசையில் உள்ள நூல்களில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருவீர்கள்.

குழந்தைகளுக்கு போதித்தலானது நீங்கள் அடியெடுத்து வைக்கும் பாதையில் உள்ள பல சேவை செயல்களில் ஒன்று மட்டுமே. அதில் ஈடுபட நீங்கள் விரும்பாவிட்டாலும், இந்தப் பயிற்சியின் பயில்வு மதிப்புடையதாக இருந்திட காண்பீர்கள். உங்கள் கிராமம், நகரம் அல்லது அண்டைப்புறத்தில் சமூக நிர்மாணிப்பு செயல்முறைக்கான உங்கள் பங்களிப்பில், பல சூழல்களில் நீங்கள் குழந்தைகளுடன் பரஸ்பரமாக செயல்பட்டும் இங்கு உங்கள் பயில்விலிருந்து நீங்கள் பெற்றுள்ள அகப்பார்வைகளின் பயனை நீங்கள் பெறுவீர்கள். பின்வரும் உலக நீதிமன்றத்தின் கூற்றுரையானது குழந்தைகளின்பால் உருவாக்கிடும் உணர்வுகள் மீது நீங்கள் சிறிது நேரம் எடுத்து பிரதிபலித்திடவும்.

> **“ஒரு சமூகம் பெற்றிருக்கக்கூடிய ஆக விலைமதிப்பற்ற பொக்கிஷம் குழந்தைகளாகும். ஏனெனில், வருங்காலத்தின் வாக்குறுதியும், உறுதியளிப்பும் அவர்களிடம்தான் உள்ளது. வருங்கால சமுதாயத்தின் நற்பண்புகளின் வித்துக்களை அவர்கள் கொண்டுள்ளனர். அது, குழந்தைகள் தொடர்பாக, சமூகத்தில் உள்ளடங்கியுள்ள முதியோர் மேற்கொள்ளும் அல்லது மேற்கொள்ளத்தவறும் நடவடிக்கைகளால் பெரும்பாலும் வடிவமைக்கப்படுகின்றது. குழந்தைகள் எந்தவொரு சமூகமும் விலக்கீட்டுரிமை காரணமாகக்கூட அலட்சியப்படுத்த முடியாத ஒரு பொறுப்புடைமையாகும். குழந்தைகள் மீது பொழியப்படும் பூரணமான அன்பு, அவர்களை நடத்தும் விதம், அவர்களிடம் காட்டப்பட்டும் கவனத்தின் தரம், முதியயோர்கள் அவர்களிடம் கொள்ளும் உறவின் ஆற்றல், இவை யாவும் குழந்தைகள்பால் காட்டப்பட வேண்டிய மனப்பான்மைகளின் முக்கிய அம்சங்கள் ஆகும்.”[1]**

நூலின் இரண்டாவது பாடப்பிரிவில் வழங்கப்பட்டுள்ள, முதல் கிரேட்’டிற்கான பாடங்கள், எளிமையானவை. அவை ஒவ்வொன்றும் ஓர் ஆன்மீகப் பண்பின் உருவாக்கத்தின் மீது கவனம் செலுத்தும் நடவடிக்கைகளின் தொகுப்பை உள்ளடக்கியுள்ளன. குழந்தைகள், திருவாக்குகளிலிருந்து பிரார்த்தனைகளையும் மேற்கோள்களையும் மனனம் செய்தல், கதைகள் மற்றும் போதனைகள் குறித்த விளக்கங்களைச் செவிமடுத்தல், சித்திரம் வரைதல் மற்றும் வர்ணம் அடித்தல், பாடுதல், விளையாடுதல் ஆகியவற்றை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்தப் பாடங்களை வழங்கிட, கல்வியல் பற்றிய அதிக அறிவு தேவையில்லை. ஓர் ஆசிரியர் எனும் முறையில் உங்களுக்கு முறையான பயிற்சி இல்லாவிடினும், இந்தப் பயிற்சிப்பாடம் வாராந்திரமாக ஒரு குழந்தைகள் வகுப்பை விளைவுத்திறத்துடன் நடத்திட உங்களை ஆயத்தப்படுத்தும். நூல் 3’லிருந்து கிளைக்கின்ற

பயிற்சிப்பாடங்களை நீங்கள் பயின்று அனுபவம் அடையும் போது, கல்வி சார்ந்த பல அடிப்படை பிரச்சினைகள் குறித்து சிந்தித்திட உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். ஆரம்பத்தில் பாடத்திட்டங்களை நீங்கள் அணுக்கமாக பின்பற்றக்கூடும், ஆனால் அதிகரிக்கும் அளவில் நீங்களே விவரிக்கும் கூடுதல் உள்ளடக்கங்களுடன் அவற்றை நீங்கள் வளப்படுத்திட இயலும்.

## பகுதி 2

ஓர் ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் பணியை மதித்துணர உதவிடும் பஹாவுல்லா, அப்துல்-பஹா ஆகியோரின் பின்வரும் சொற்களை பிரதிபலிப்போமாக. போதிக்கும் போது அவற்றை நினைவுபடுத்திக்கொள்வதற்கு ஏதுவாக அவற்றை மனனம் செய்திட நீங்கள் விரும்பலாம்.

> **"குழந்தைகளுக்குப் போதிப்பதற்காகவும் அருள்பவரும், அதிநேசிக்கப்படுபவருமான கடவுளின் வழிகளில் மக்களை வழிகாட்டுவற்காக முன்னெழும் ஆசிரியர் ஆசிபெற்றவர்."[2]**
>
> **"சர்வ சக்திவாய்ந்த இறைவனுக்காக மனிதன் ஆற்றிடைக் கூடிய அனைத்துச் சேவைகளிலும் மிக உயர்வானது அப்ஹா சுவர்கத்தின் இளஞ் செடிகளான குழந்தைகளுக்கு கல்வியளிப்பதும் பயிற்றுவிப்பதுமாகும்..."[3]**
>
> **"தெளிவான புனித வாசகங்களின் படி, குழந்தைகளுக்குப் போதிப்பதானது இன்றியமையாததும் கட்டாயமானதுமாகும். வழிபாட்டுக்குச் சமமான இந்தப் பணியை மேற்கொள்ள அவர்கள் முன்னெழுந்துள்ளதனால் ஆசிரியர்கள், பிரபுவான கடவுளின் சேவகர்கள் ஆகின்றனர்."[4]**

1. இந்த வார்த்தைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி நீங்கள் பிரதிபலிக்கையில், பின்வரும் வாக்கியங்களில் உள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும்.

   அ. குழந்தைகளுக்குப் __________________ __________________, __________________ கடவுளின் __________________ மக்களை __________________ முன்னெழும் __________________ __________________.

   ஆ. சர்வ சக்திவாய்ந்த இறைவனுக்காக மனிதன் ஆற்றிடைக் கூடிய அனைத்துச் __________________ மிக __________________ அப்ஹா சுவர்கத்தின் இளஞ் செடிகளான குழந்தைகளுக்கு __________________ __________________ .

   இ. தெளிவான புனித வாசகங்களின் படி, குழந்தைகளுக்குப் போதிப்பதானது __________________ __________________. __________________ __________________ இந்தப் பணியை மேற்கொள்ள அவர்கள் __________________ __________________, பிரபுவான கடவுளின் __________________ ஆகின்றனர்.

2. இதுவரை நாம் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில், பின்வரும் கூற்றுகளில் எவை உண்மை என்பதைத் தீர்மானிக்கவும்:

___ குழந்தைகளின் ஆன்மீக கல்விக்கு பெற்றோர், ஆசிரியர், மற்றும் சமூகத்தினர் அனைவரும் பொறுப்பேற்றுக்கொள்கின்றனர்.

___ ஒவ்வொரு சமூகமும் குழந்தைகளின் ஆன்மீக கல்விக்கு வகுப்புகள் ஏற்பாடு செய்வதற்கான கடமையைக் கொண்டுள்ளன.

___ குழந்தைகளைப் பயிற்றுவிப்பதானது ஒரு பக்தி சார்ந்த செயலாகக் கருதப்படலாம்.

___ குழந்தைகள் பள்ளிக்கு செல்வதனால், சமூகம் அவர்களின் ஆன்மீக கல்விக்கான வகுப்புகளை ஏற்பாடு செய்வது அவசியமில்லை.

___ குழந்தைகளின் ஆசிரியர் ஒருவர் ஆன்மீக மகன்களையும் மகள்களையும் பேணுகின்றார்.

## பகுதி 3

கல்வித் துறையின் மீது கவனம் செலுத்தும் திருவாசக மேற்கோள்கள் பல உள்ளன. இப்பயிற்சியிலும் அதிலிருந்து கிளைக்கின்ற பயிற்சிகளிலும் அம்மேற்கோள்களில் சிலவற்றைப் படிப்பாய்வு செய்வோம். ஆரம்பமாக, பஹாவுல்லாவின் பின்வரும் சொற்களைப் படிக்கவும்.

> **“மனிதனை விலை மதிப்பிடவியலாத இரத்தினங்களைக் கொண்ட சுரங்கமாகக் கருதுங்கள். கல்வி ஒன்றே, அதனைத் தன் பொக்கிஷங்களை வெளிப்படுத்தச் செய்து, மனிதனை அதிலிருந்து பயன்பெற உதவிடும்."**[5]

நீங்கள் இன்னுமும் அவ்வாறு செய்யாதிருப்பின், பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்தல், இக்கூற்றின் ஆழ்ந்த அர்த்தத்தின் மீது தியனிக்கவும் அதை மனனம் செய்திடவும் உங்களுக்கு உதவிடும்.

அ. மனிதன் என்பவன் விலை மதிப்பிடவியலாத இரத்தினங்களைக் கொண்ட __________________ போன்றவன்.

ஆ. _________ ஒன்றே, அதனைத் தன் பொக்கிஷங்களை __________________ செய்து, மனிதனை அதிலிருந்து பயன்பெற உதவிடும்.

கல்வித் துறை சார்ந்த பஹாவுல்லா சொற்களின் தாத்பர்யங்கள் பரந்தவையும், அவற்றுள் பல தொடர்ந்து வரும் பகுதிகளில் கவனம் செலுத்தப்படும். இப்போதைக்கு ஒரு யோசனையைப் பரிசீலிப்போம். உங்களுக்கு இருபது வெற்று ஜாடிகள் கொடுக்கப்பட்டு, அவற்றை நீரினால் நிரப்பும்படி கூறப்படுகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். ஆனால் ஜாடிகளை ஒரு தேக்கரண்டியைக் கொண்டுதான் நிரப்ப வேண்டும். கல்வி இவ்வகையில் கருதப்படுமானால்—மாணவர்களுக்குத் துளி துளியாக தகவலளிப்பது—அது மிகவும் சலிப்பூட்டும் ஒரு பணியாக

இருந்திடும் அல்லவா? அடுத்து, கண்டுபிடிக்கப்படவும் வெளிக்கொணரப்படவும் தயாராக இருக்கும் இரத்தினங்கள் மறைந்துள்ள ஒரு சுரங்கத்தைக் கற்பனை செய்யுங்கள் கல்வி கற்பித்தலை, இரத்தினங்களைத் தோண்டியெடுக்கும் ஒரு செயலாகக் கருதுவோமானால் அது எத்தகைய மகிழ்ச்சிமிக்க ஒரு பணியாக இருந்திடும்?

## பகுதி 4

மேலே உள்ள மேற்கோளைப் பற்றி மேலும் சிந்திப்போமாக. பஹாவுல்லா குறிப்பிடும் இந்த இரத்தினங்களில், அன்பு, வாய்மை, நீதி, வள்ளன்மை, பற்றுறுதி, நேர்மை போன்ற நற்பண்புகளைச் சேர்க்கலாமா? இயற்கையிலுள்ள மர்மங்களைக் கண்டுபிடித்தல், அழகிய கலைப் படைப்புகளை உருவாக்குதல், மேன்மையான மற்றும் ஊக்குவிக்கும் சிந்தனைகளை வெளிப்படுத்துதல் போன்ற, மனித மனதின் சக்திகளைப் பற்றி என்ன தோன்றுகிறது? நீங்கள் கற்பிக்கும் குழந்தைகள் இந்தப் பண்புகள் அனைத்தையும் இயல்பாகவே பெற்றுள்ளனர். அவற்றுள் வேறு சிலவற்றைக் குறிப்பிட முடியுமா? முறையான கல்வியின்றி அவற்றுள் எதுவுமே மேம்படுத்தப்பட முடியுமா? இக்கேள்விகள் குறித்த பிரதிபலிப்பில், ஒரு விளக்கிற்கு ஒளிகொடுக்கும் ஆற்றல் உள்ளது, ஆனால் அவ்விளக்கு ஏற்றி வைக்கப்பட வேண்டும் எனும் நூல் 1'ல் பயன்படுத்தப்படும் உவமானத்தை நினைவில்கொள்ளுங்கள்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 5

நமது உள்ளாற்றலை மேம்படுத்திக்கொள்வதற்கு, நமது வாழ்வின் முடிவு வரை மடிப்பவிழ்ந்துவரும் என நாம் கூறக்கூடிய, ஒரு கல்வியல் செயல்முறையின் பல்வேறு கட்டங்களை நாம் அனைவரும் கடந்து வருகின்றோம். வீட்டில், பள்ளியில், சமூகத்திற்குள் என நாம் கல்வி புகட்டப்படுகின்றோம். இங்கு நாம் கேட்க வேண்டிய ஒரு கேள்வி, வாழ்க்கை முழுவதுமான கல்வியல் செயல்முறையின் ஓர் அம்சமாக குழந்தைகளுக்கான, குறிப்பாக முதல் கிரேட்'டில், பஹாய் வகுப்புகளின் கவனம் என்னவாக இருக்க வேண்டும் என்பது. இதற்கான பதில்களைக் காண அப்துல்-பஹாவின் குறிப்பிட்ட சில அறிவுரைகள் உதவியாக இருக்கும்:

> **“நீங்கள், சிறந்த குணவியல்பு குறித்த கேள்வி தலையாய முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருத வேண்டும். நீண்ட காலமாக தங்கள் குழந்தைகளுக்கு அறிவுரைக் கூறி, என்றும் நிலையான பெருமதிப்புக்குக் கொண்டுசெல்லக் கூடியவற்றுக்கு அவர்களை வழிகாட்டுவது ஒவ்வொரு தாயும் தந்தைக்கும் கடமையாகும்.”[6]**

**“ஒழுக்கம் மற்றும் நன்னடத்தை ஆகியவற்றில் பயிற்றுவிப்பது நூல்களை கற்றப்பதைவிட மேலும் முக்கியமானதாகும். தூய்மையான, இணக்கமான, நல்லொழுக்கமுடைய, நன்னடத்தையுடைய ஒரு குழந்தையானது — அக்குழந்தை அறிவற்றதாக இருந்தாலும் —- ஒரு மரியாதை இல்லாத, அசுத்தமான, தீய இயல்புடைய, ஆனால், எல்லா அறிவியலும் கலைகலும் ஆழமாகக் கற்றுள்ள ஒரு குழந்தையைவிட மேலானதாகும். இதற்கான காரணம் என்னவென்றால், நன்னடத்தையுள்ள ஒரு குழந்தை, அதற்கு அறிவில்லை என்றாலும், மற்றவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்; அதே வேளையில், ஒரு தீய இயல்புடைய, தீய நடத்தையுடைய குழந்தையானது, கற்றிருந்தாலும், அது ஒரு சீரழிந்த, மற்றவர்களுக்குத் தீங்கிழைத்திடும் குழந்தையாகும். ஒரு குழந்தை, அறிவுடையதும், நன்னடத்தையுடையதுமாக பயிற்ருவிக்கப்பட்டால், அதன் விளைவு ஒளியின் மீது ஒளியாகும்.”[7]**

**“எதிர்காலத்தில், நன்னெறிகள் மிகத் தாழ்ந்த நிலைக்கு சீர் குலைந்துவிடும். குழந்தைகள் பஹாய் முறையில் பேணி வளர்க்கப்பட வேண்டும், அதனால் அவர்கள் இவ்வுலகிலும் வருவுலகிலும் மகிழ்ச்சியைக் காணக்கூடுமாக. இல்லையெனில், அவர்கள் துயரங்களும் சிரமங்களினாலும் சூழப் படுவர், ஏனெனில் மனிதனின் மகிழ்ச்சியானது, ஆன்மீக நன்நடத்தை எனும் அடித்தளத்தின் மீதே அமைக்கப் பட்டுள்ளது.”[8]**

இது போன்ற உரைப்பகுதிகள், குழந்தைகளின் ஆன்மீக கல்விக்கான அதன் திட்டத்தின் முதல் கிரேட்'டில் நடத்தையைப் பண்படுத்துவதன் மீது ரூஹி பயிற்சிக்கழகம் கவனம் செலுத்தத் தூண்டின. இக்குறிக்கோளை நாம் ஆய்வு செய்வதற்கு முன், “நன்நடத்தை” என்றால் என்ன என்பது குறித்த உங்கள் புரிதலை உங்கள் குழுவில் நீங்கள் கலந்துரையாட விரும்பலாம், மற்றும் உங்கள் முடிவுகள் சிலவற்றை கீழே வழங்கப்பட்டுள்ள காலியிடத்தில் எழுதவும்.

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

## பகுதி 6

நற்பண்புகள் குறித்து சிந்திக்கும் போது, உடனடியாக மனதில் தோன்றும் ஒரு கருத்தாக்கம் “நற்பண்பு” ஆகும். ஒரு மாணவரில், ஒரு வகையான நற்பண்புகளையோ வேறு வகையான நற்பண்புகளையோ உருவாக்கிட முயலும் பயனான பல திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்கள், ஒரு விரிவான நெடுக்கம் கொண்ட, பாராட்டுக்குரிய மனிதப் பண்புகளை விவரிப்பதற்கு “நற்பண்பு” என்னும் பதத்தைப் பயன்படுத்துகின்றன. சில நற்பண்புகள், நேரந்தவறாமை போன்ற பழக்கங்களாகும். மற்றவை, சிரமத்தில் உள்ளோருக்கு அனுதாபம் தெரிவிக்கும் நற்பண்பு போன்றவையாகும். வேறு சிலவோ, தெளிவாகப் பேசும் திறன் போன்ற குறிப்பிட்ட சில திறமைகள் மற்றும் திறன்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால்—வாய்மை, வள்ளன்மை, பணிவு,

அன்பு போன்ற--மற்ற அனைத்திலிருந்தும் தனித்து நிற்கும், “ஆன்மீக நற்பண்புகள்” என நாம் அழைக்கும் ஒரு வகையான நற்பண்புகளும் உள்ளன. முதல் கிரேட்’டில், உங்கள் முயற்சிகளை மனித ஆன்மாவின் இந்த அடிப்படை பண்புகளின் அபிவிருத்தி மீது செலுத்துமாறு கேட்டுகொள்ளப்படுகிறீர்கள். அதற்காக, குழந்தைகளுடனான உங்களின் பரஸ்பர செயல்பாடுகளில், நீங்கள் பிற நற்பண்புகளை அலட்சியம் செய்வீர்கள் என்பது அர்த்தமல்ல. அது என்னெவெனில், கடவுளை நோக்கிய ஆன்மாவின் நித்திய பயணத்திற்கான இன்றியமையாத பண்புகளுடன் நீங்கள் போதிக்கும் பாடங்கள் அடிப்படை தொடர்புடையவையாக இருக்கும் என்பதாகும். இங்கு செய்யப்படும் வேறுபாட்டை மதித்துணர, காலந்தவறாமையை ஒரு நற்பண்பாகக் கருதுங்கள். காலந்தவறாத ஒருவர், இழிவு, கொடூரம் ஆகியன நிறைந்த ஒருவராக இருக்கலாம். வாய்மை, நேர்மை, அன்பு, நீதி, வள்ளன்மை, மன்னிக்குந்தன்மை எனும் தெய்வீகப் பண்புகளை பெற்ற ஒருவர், இழிவு மற்றும் கொடூர குணங்கள் உடையவராக இருக்க முடியாது அத்தகைய ஒரு மனிதர் காலந்தவறாமையைக் கடைப்பிடிப்பவராக இருப்பதும் மிகவும் விரும்பத்தக்கதாகும்.

நூல் 1’இன் மூன்றாவது பாடப்பிரிவில் இந்த உலக வாழ்வில் ஆன்மா கண்டிப்பாகப் பெற வேண்டிய பண்புகள் குறித்து நீங்கள் சிந்தித்திருப்பீர்கள். நீங்கள் மீண்டும் அந்தப் பாடப்பிரிவுக்குச் சென்று அக்குறிப்பிட்ட பகுதிகளை மீளாய்வு செய்திடுவது சாதகமாக இருக்கும். பின்னர், குழந்தைப் பருவத்தில் ஆன்மீக நற்பண்புகளை உருவாக்கிக்கொள்வதன் முக்கியத்துவத்தின் சூழலில் அங்கு நீங்கள் படித்தவற்றைப் பற்றி சிந்திக்கவும். உங்கள் பிரதிபலிப்புகளைப் பதிவு செய்திட கீழே இடம் வழங்கப்பட்டுள்ளது.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

## பகுதி 7

குழந்தைகள் ஒரு பாராட்டுக்குரிய பண்பை வெளிப்படுத்துவதற்கு உதவியாக, நீங்கள் இயல்பாகவே அவர்களின் நடத்தை குறித்து அக்கறை கொண்டிருப்பீர். ஏனெனில், நற்பண்புகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஓர் ஆசிரியர் என்னும் முறையில் நன்னடத்தையை நீங்கள் பல வழிகளில் மறுவலுப்படுத்திடுவீர். பாராட்டு, ஊக்குவிப்பு, ஆலோசனை, விளக்கம், பரிசு—இவை ஒவ்வொன்றையும், ஒரு சிறிய குழந்தைகள் குழுவின் மேம்பாட்டைப் பின்தொடர்வதில் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவீர். உங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களுடன் நீங்கள் ஸ்தாபித்துக்கொண்டுள்ள அன்பு மற்றும் வாஞ்சையின் ஆழ்ந்த பந்தங்களுக்குப் பிறகு சில நேரங்களில், நீங்கள் வெளிப்படுத்தும் லேசான அதிருப்தி முகபாவம், ஒரு குழந்தை வெளிப்படுத்தும் விரும்பத்தகாத நடத்தையைத் தடுத்திடுவதற்கான ஒரு வழியாக இருந்திடும். நீங்கள் உங்கள் மாணவர்களுடன் எவ்வாறு பரஸ்பரமாக செயல்படுவீர் என்பதுடன்

தொடர்புடைய சில பிரச்சினைகளை நாம் பின்னர் வரும் சில பகுதிகளில் ஆராய்வோம். தற்போதைய கலந்துரையாடல் குறித்த நோக்கத்திற்காக, ஓர் உதாரணத்தைப் பரிசீலிப்போம். குழந்தைகளுடனான உங்கள் பரஸ்பர செயல்பாடுகளில், ஒரு பகிர்ந்துகொள்ளும் மனப்பான்மை, மற்றும் அதற்கு இணைவான பழக்கத்தையும் நீங்கள் சந்தேகமின்றி பேணிட முயல்வீர். நீங்கள் கூறக்கூடிய மற்றும் செய்யக்கூடிய சில விஷயங்கள் யாவை? இக்கேள்வியை உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவும்.

இப்பொழுது, பின்வரும் கேள்வியின் மீது பிரதிபலிக்கவும்: பற்றாக்குறை நேரங்களில், நடத்தையின் ஓர் அம்சமாக, அது, தாராளமானவரும் சர்வ அருட்கொடையாளருமான கடவுளின் ஒரு குணத்தைப் பிரதிபலிக்கும் ஓர் ஆன்மீகப் பண்பான வள்ளன்மையின் வெளிப்பாடாக இல்லாவிடில், பகிர்ந்துகொள்ளல் என்பது நிலைப்படுமா? இதற்கான பதில், நடத்தையில் மாற்றம் என்பது அதற்குறிய நிலையைப் பெற்றிருப்பினும், இங்கு உண்மையான குறிக்கோள், மனித ஆன்மாவின் ஆற்றல்கள் எனும் முறையில் கடவுள் பற்றிய அறிவினாலும் கடவுள் மீதான அன்பினாலும் பேணப்பட வேண்டிய ஆன்மீகப் பண்புகளின் அபிவிருத்தியே ஆகும். அப்துல்-பஹா பின்வருமாறு ஆலோசனை வழங்குகிறார்:

> **“தாங்கள் குழந்தைகளைப் பற்றி எழுதி இருந்தீர்கள்: தொடக்கத்திலிருந்தே, குழந்தைகள் தெய்வீகக் கல்வியைப் பெறவேண்டும், மற்றும் அவர்கள் தங்களின் ஆண்டவனை நினைவிற்கொள்ள வேண்டும் என தொடர்ச்சியாக நினைவூட்டப் படவேண்டும். ஆண்டவனின் அன்பு அவர்களது உள்ளார்ந்த இயல்பிற்குள் ஊடுருவி, அவர்கலதி தாய்ப் பாலோடு ஒன்றுகலந்திடச் செய்யுங்கள்.”[9]**
>
> **“அதன் பச்சிளம் பருவத்திலிருந்தே ஒரு குழந்தை கடவுளின் அன்பென்னும் மார்பில் பாலூட்டப்பட்டும், அவரது அறிவென்னும் அரவணைப்பில் பேணி வளர்க்கப்படவும் வேண்டும்; அதனால் அக்குழந்தை ஒளியைப் பிரகாசித்து, ஆன்மீகத்தில் வளர்ந்து, விவேகம் கற்றல் ஆகியவற்றால் நிரப்பப்பட்டு, தேவதூத படைகளின் பண்புகளை பெறக்கூடுமாக.”[10]**
>
> **குழந்தைகளின் கல்வி தொடர்பான தங்கள் கேள்வி குறித்து: இறை அன்பென்னும் மார்பினில் அவர்களைப் பேணி வளர்ப்பதும், ஆவியைச் சார்ந்தவற்றை நோக்கி அவர்களை ஊக்குவிப்பதும் தங்களுக்கு ஏற்புடையதாகும், அதனால் அவர்கள் தங்கள் வதனங்களை கடவுளின்பால் திருப்பிடக் கூடும்; அவர்களது செயல்கள் நன்னடத்தை என்னும் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாக இருக்கக்கூடும் மற்றும் அவர்களது குணவியல்பு எவருடைய குனவியல்புக்கும் இரண்டாம் நிலையில் இருந்திடாது இருக்கக்கூடுமாக; மனுக்குலத்தின் அனைத்து இனிய பண்புகளையும் போற்றத்தக்க குணங்களையும் தங்களுக்கு சொந்தமானதாக அவர்கள் ஆக்கிக்கொள்ளட்டுமாக...”[11]**
>
> இம்மேற்கோள்களில் ஒன்றையாவது நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்.

# பகுதி 8

முதல் கிரேட்'டில், பொதுவாக ஐந்து அல்லது ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நீங்கள் கற்பிக்கும் பாடங்கள், இதுவரை நாம் மனதால் ஆராய்ந்து வந்த கருத்துக்களைக் கொண்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இப்பொழுது நீங்கள் இரண்டாவது பாடப்பிரிவுக்குச் சென்று அதில் இரண்டு அல்லது மூன்று பாடங்களைப் படித்தல் உதவியளிப்பதாக இருக்கும். அவ்வாறு செய்யும் போது முதல் பாடத்தில் குறிப்பாக கவனம் செலுத்தவும். எல்லா இருபத்து நான்கு பாடங்களையும் விரிவாக பகுப்பாய்வு செய்வதற்கான வாய்ப்பு இதற்குப் பின்னர் உங்களுக்குக் கிடைக்கும். இப்போதைக்கு, இதற்கு முந்தைய பகுதிகளில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில், கீழே குறிப்பிட்டுள்ளபடி, அவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்து சிந்திக்கும்படி நீங்கள் ஊக்குவிக்கப்படுகின்றீர்கள்.

ஒவ்வொரு வகுப்பும், நீங்களும் சில  குழந்தைகளும் வாசிக்கும் சில பிரார்த்தனைகளுடன் ஆரம்பிக்கும். அதற்குப் பின் அக்குழந்தைகள் உடனடியாக உங்கள் உதவியுடன், நேரம் எடுத்துக்கொண்டு ஒரு பிரார்த்தனையை மனனம் செய்வர். "கடவுளின் அன்பெனும் மார்பில் பாலூட்டப்படும்" ஒரு குழந்தையின் மேம்பாட்டிற்குப் பிரார்த்தனை இன்றியமையாததாகும். அப்துல்-பஹா, "குழந்தைகள் இளஞ்செடிகள் போன்றவர்கள் எனவும், அவர்கள் மென்மையுடனும் பசுமையுடனும் வளர்ச்சியுற, அவர்களுக்குப் பிரார்த்தனைகளைப் போதிப்பது, அவர்கள் மீது மழை பொழிவிக்கச் செய்வது, மற்றும் கடவுளின் அன்பெனும் இளந்தென்றல்கள் அவர்கள் மீது வீசி, அவர்களை களிப்புடன் மேனிசிலிர்க்க வைப்பது போன்றதாகும்" எனக் கூறுகின்றார். குழந்தைகளுள் நற்பண்புகளைப் பேணுவது எனும் ஒட்டுமொத்த குறிக்கோளுக்கு இந்த அம்சம் எவ்வாறு பங்களிக்கின்றது என்பதைப் பற்றி சிறிது நேரம் சிந்திக்கவும். உங்கள் யோசனைகளை சில வாக்கியங்களில் உரைத்திட முயலவும். பின்வருவன போன்ற, நூல் 1'இல் மேற்கோளிடப்பட்ட குறிப்பிட்ட சில உரைப்பகுதிகள், உங்களுக்கு உதவிடும்:

**"பிரார்த்தனை மற்றும் இறைஞ்சுகின்ற நிலைதான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும். பிரார்த்தனை என்பது இறைவனுடன் உரையாடல் செய்வதாகும். அடையக்கூடிய மிக உயர்ந்த நிலை அல்லது மிக இனிமையான நிலை, இறைவனுடன் உரையாடுவதைத் தவிர வேறெதுவுமில்லை. அஃது ஆன்மீகத்தைத் தோற்றுவிக்கின்றது, விழிப்புணர்ச்சியையும் தெய்வீக உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றது;"[12]**

**"எனது ஊழியனே, உன்னால் பெறப்பட்ட கடவுளின் வாசகங்களை அவர் அருகாமையில் ஈர்க்கப்பட்டவர்கள் ஓதியது போல் ஓதுவாயாக. அதனால் உன் கீதத்தின் இனிமை உன் சொந்த ஆன்மாவைக் கிளர்ச்சியுறச் செய்வதுடன் எல்லா மனிதர்களின் இதயங்களையும் ஈர்த்திடும்."[13]**

**"ஆவி செல்வாக்கினைக் கொண்டுள்ளது; பிரார்த்தனை ஆன்மீக விளைவை ஏற்படுத்தக்கூடியது;"[14]**

**கடவுளிடம் பிரார்த்தித்து அவரது உதவியை நாடுவதும் அவரது ஆதரவைப் பெற அவரிடம் மன்றாடி வேண்டிக்கொள்வதும் ஊழியனுக்குப் பொருத்தமாகும். சேவகத்தின் தரம் இத்தகையதே ஆகும், மற்றும் தேவர் தமது முழுநிறைவான ஞானத்திற்கு ஏற்ப அவர் விரும்பிய எதனையும் அவர் கட்டளையிடுவார்."[15]**

________________________________________________________
________________________________________________________
________________________________________________________
________________________________________________________
________________________________________________________
________________________________________________________

ஒவ்வொரு பாடத்தின் கருப்பொருளும் குழந்தைகள் மனனம் செய்வர் என எதிர்ப்பார்க்கப்படும் புனிதவாசக மேற்கோள் ஒன்றினைச் சுற்றி வலம் வருகின்றது. அதன் அடிப்படை அர்த்தம் குறித்ததும் ஆன்மீகப் பண்புகளின் உருவாக்கத்திற்கு இன்றியமையாதது என நிரூபிக்கப்பட்டதுமான ஒரு புரிதலை அவர்கள் அடைந்திட உங்களால் ஆன உதவியை அவர்களுக்கு வழங்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இதன் தொடர்பில், கடவுள் திருவாக்கின் உதவியின்றி ஓர் அர்த்தமுள்ள வகையில் தேவைப்படும் நற்பண்புகளை நீங்கள் பேண இயலுமா என்பதே கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு கேள்வியாகும். மீண்டும், உங்கள் சிந்தனைகளை முறைப்படுத்துவதில், தொடர்வரிசையில் உள்ள முந்தைய நூல்கள் குறித்த உங்களின் பிரதிபலிப்புகளை நீங்கள் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்—உதாரணத்திற்கு, நூல் 2'இன் முதல் அலகில் உள்ள கடவுள் திருவாக்கின் சக்தி குறித்து.

குறிப்பாக, நீங்கள் ஏற்கனவே மனனம் செய்திருக்கக்கூடிய பின்வரும் உரைப்பகுதி, இந்தக் கேள்வியின் மீது கவனம் செலுத்துவதற்கு உங்களுக்கு எவ்வாறு உதவிடக்கூடும்?

> **"இறைவனின் போதனையை ஓர் இளஞ்செடிக்கு ஒப்பிடலாம்; அதன் வேர்கள், மனிதனின் இதயங்களில் பதிக்கப்பட்டுள்ளன. உயிர்நீரான விவேகம், திவ்விய திருமொழிகள் ஆகியவற்றைக் கொண்டு அதன் வளர்ச்சியைப் பேண வேண்டியது உங்கள் கடமையாகும்; அதனால், அதன் வேர்கள் உறுதிப்பெற்று, அதன் கிளைகள் விண்ணுலகளவும், அதற்கு மேலும், உயர்ந்து பரவக் கூடும்."[16]**

________________________________________________________
________________________________________________________
________________________________________________________
________________________________________________________
________________________________________________________
________________________________________________________

குழந்தைகளுக்கு கூறப்படும் கதைகளை பாடங்களின் மற்றோர் அம்சம் உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் பெரும்பாலானவை அப்துல்-பஹாவின் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். அப்துல்-பஹா தமது தந்தையார் போதனைகளின் பரிபூரண உதராணபுருஷர் எனும் முறையில் நீங்கள் பேணிட விரும்பும் நற்பண்புகளை உருவகப்படுத்துகின்றார். நூல் 2'இன் மூன்றாவது பாடப்பிரிவு குறித்த உங்கள் படிப்பாய்விலிருந்து, அப்துல்-பஹா எனும் பேராளுமையின் வடிவில், மானிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள தனித்துவமான அருட்கொடை குறித்து நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். குழந்தைகள் கற்றுக்கொள்ளும் அப்துல்-பஹாவின் வாழ்க்கை குறித்த கதைகள் அவர்கள்

பண்பினை மேம்படுத்துவதில் ஒரு விசேஷ பங்கினை வகிக்கின்றன. அப்துல்-பஹாவுடனான அவர்களின் பந்தம் வலுவடைந்து வரும் போது, அவரது உதாரணத்தை அவர்கள் பின்பற்ற முயலும் போது, அவர்கள் அப்துல்-பஹாவின் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டுவருகின்றனர் என அவர்களுக்கு நீங்கள் உறுதி கூறலாம். மகிழ்ச்சியுடனும் பயபக்தியுடனும் கூறப்படும் அப்துல்-பஹாவின் வாழ்க்கை பற்றிய கதைகள், குழந்தைகளுள் விரும்பத்தகும் நற்பண்புகளின் உருவாக்கத்திற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

பாடல்கள் பாடுதல் வகுப்பின் மற்றோர் அம்சமாகும். அது, குழந்தைகளின் இதயங்களிலும் ஆன்மாக்களிலும் மகிழ்ச்சியால் நிரப்புகிறது. அப்துல்-பஹா கூறுவதாவது:

> **“இசை கலை என்பது தெய்வீகமானதும், விளைவுத்திறம் மிக்கதுமாகும். அது ஆன்மாவுக்கும் ஆவிக்கும் உணவாகும். இசையின் ஆற்றல், வசீகரம் ஆகியவற்றின் மூலம் மனிதனின் ஆவி ஏழுச்சியுறுகிறது. அது குழந்தைகளின் உள்ளத்தில் ஓர் அற்புதமான செல்வாக்கையும் விளைவையும் கொண்டுள்ளது. ஏனெனில், அவர்களின் இதயங்கள் தூய்மையானவை, மற்றும் கீதங்கள் அவர்களுள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இக்குழந்தைகளின் உள்ளங்களுக்கு அருளப்பட்டுள்ள உள்ளார்ந்த திறன்கள் இசை எனும் ஊடகத்தின் வழி வெளிப்பாடு காண்கின்றன.”**[17]

உங்கள் குழுவில் குழந்தைகள் சிறுவயது முதற்கொண்டே அழகான பாடல்களைப் பாடுதல் ஏன் முக்கியம் என்பதை உங்கள் குழுவில் கலந்துரையாடவும்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

விளையாட்டும், வர்ணம் பூசுதலும் ஒரு வகுப்பின் இரண்டு பிற அம்சங்களாகும். விளையாட்டுகள் இயல்பில் ஒத்துழைப்பானவை, மற்றும் அவை சில விரும்பத்தக்க மனப்பான்மைகள் மற்றும் பழக்கங்கள் உருவாக்கப்படுவதற்குப் பங்களிக்கும் நோக்கமுடையவை. பாடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ணம் அடிக்கும் தாள்கள், அவை ஒவ்வொன்றும் கவனம் செலுத்தும் ஆன்மீகப் பண்புடன் தொடர்புகொண்டவையாகும். வர்ணம் அடித்தலானது, குழந்தைகளின் வளர்ச்சி குறித்த இக்காலகட்டத்தில் அவர்களுக்கு அவசியமான முக்கிய திறன்கள் மற்றும் திறமைகளைப் பலப்படுத்துகின்றது. இவ்விரண்டு நடவடிக்கைகளும் குழந்தைகளின் ஆன்மீகக் கல்வி குறித்த ஒரு வகுப்பிற்கு அடையாளமாக இருக்க வேண்டிய களிப்புமிகு ஒரு சூழ்நிலையை உருவாக்கிட உதவுகின்றன. ஆன்மீகப் பண்புகளின்

உருவாக்கத்திற்கு ஒரு களிப்புமிகு சூழ்நிலை எவ்வளவு இன்றியமையாதது என்பது குறித்து நீங்கள் சில வார்த்தைகள் கூற விரும்பலாம்.

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

## பகுதி 9

கடந்த பல பகுதிகளிலாக, முதல் கிரேட் பாடங்களின் குறிக்கோள் குறித்து சில அகப்பார்வைகளை நீங்கள் பெற்றுள்ளதுடன், எவ்வாறு அம்சங்கள் ஒவ்வொன்றும் நடத்தையை செம்மையாக்குவதில் பங்களிக்கின்றன என்பதைக் கண்டீர். இப்பொழு நீங்கள் கற்பிக்கும் குழந்தைகளுடனான உங்கள் உறவின் இயல்பை சுருக்கமாக ஆராய்வோம்.

நீங்கள் உங்கள் மாணவர்களின்பால் உணரும் அன்பே முதலும் முதன்மையாகவும் இருக்கின்றது. கடவுள் அன்பின் பிரதிபலிப்பாக இருந்திடும் இந்த அன்பு, எல்லா பின்னணிகளையும் சார்ந்த குழந்தைகளையும் அரவணைத்திடும். ஒவ்வொரு குழந்தையையும் சென்றடையும் வகையில் இந்த அன்பை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பது ஓர் ஆசிரியர் கற்றிட முயலும் ஒரு விஷயமாக இருக்கும்.

தூய்மையான மற்றும் ஒருதலை சார்பற்ற, மாணவர்பாலான உங்கள் அன்பு, எல்லாம் வல்லவரின் கரங்கள் ஒவ்வொரு குழந்தையின் மெய்நிலையிலும் வைப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமதிப்பற்ற இரத்தினங்களைக் கண்டறிவதைச் சுலபமாக்கிடும். ஒவ்வொரு மாணவரும் ஓர் உன்னதமான கடவுளின் பிரதிபிம்பமாகப் படைக்கப்பட்டுள்ளதை நீர் காண்பீர்.

**“நினைவுக்கெட்டாத எனது நிலையிலும், எனது சாராம்சம் எனும் புராதன நித்தியத்திலும் மறைந்திருக்கும் யான், உன்பால் எனக்கு ள்ள அன்பினை உணர்ந்தேன், ஆகவே உன்னைப் படைத்தேன்; எனது உருவத்தை உன்னில் செதுக்கியு ள்ளேன்; எனது அழகையும் உனக்கு வெளிப்படுத்தினேன்.”[18]**

**“சக்தியெனும் கரங்களினால் உன்னை ஆக்கினேன்; வலுவென்னும் விரல்களினால் உன்னைப் படைத்தேன்; எனது ஒளியின் சாரத்தினையும் உன்னுள் வைத்துள்ளேன்.”[19]**

**“நீயே எனது தீபம், எனது ஒளி உன்னுள் இருக்கின்றது. அதிலிருந்து உனது ஒளியைப் பெற்றுக்கொள், என்னைத் தவிர வேறெவரையும் தேடாதே. ஏனெனில், யான் உன்னைச் செல்வந்தனாகப் படைத்து எனது சலுகையையும் உன்மீது தாராளமாகப் பொழிந்துள்ளேன்.”[20]**

இறுதியில் அன்பு என்பது, நிச்சயமாக சோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதை நீங்கள் கண்டிப்பாக உணரவேண்டும். கற்பிக்கும் போது, விரும்பத்தகாக பல பண்புக்கூறுகளை உங்கள் மாணவர்களுள் நீங்கள் காணக்கூடும். அத்தகைய நேரங்களில், சில குழந்தைகள் திருத்தப்பட முடியாதவர்கள் எனும் தவறான எண்ணத்தை நீங்கள் தவிர்ப்பது முக்கயமாகும். ஒரு பஹாய் குழந்தைகள் வகுப்பு ஆசிரியருக்கும், ஒவ்வொரு குழந்தையும் கடவுளின் அவதாரங்கள் மூலமாக அவரை அறிந்துகொள்வதற்கான மற்றும் அந்த அவதாரங்களின் போதனைகளைப் பின்பற்றுவதற்குமான திறனாற்றலைப் பெற்றுள்ளது என்பது குறித்த எந்த சந்தேகமும் இருக்கக்கூடாது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஆன்மீக ரீதியில் மேம்பாடு காண்பதற்கான திறனாற்றல் உள்ளது. உங்கள் வகுப்பில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் மேன்மையான பிறவியாக படைக்கப்பட்டுள்ளது, மற்றும் உங்கள் உதவியுடன், இந்த மேன்மையை அக்குழந்தை வெளிப்படுத்திட இயலும்.

குழந்தைகளைக் குறிப்பிட அன்பார்ந்த மாஸ்டர் அவர்கள் பயன்படுத்திய சொற்றொடர்களை நினைவுகூர்தல் கடவுளின் படைப்புகள் எனும் முறையில் அக்குழந்தைகளின் ஆன்மீக சாராம்சத்தை மேலும் தெளிவாகக் காண்பதற்கு உங்களுக்கு உதவிடும். அத்தகைய பல சொற்றொடர்களின் தேர்வு கீழே உள்ளது; அவற்றைப் படித்து, நீங்கள் போதிக்கப் போகும் விலைமதிப்பற்ற உயிர்கள் குறித்த உங்கள் புலனறிவை அவை எவ்வாறு வடிவமைக்கும் என்பதைப் பற்றி பிரதிபலியுங்கள்.

- அழகான இக்குழந்தைகள்
- ஒளிவீசும், பிரகாசமான இக்குழந்தைகள்
- இராஜ்யத்தின் அழகுமிகு இக்குழந்தைகள்
- உமது வழிகாட்டல் எனும் வழிந்தோடலினால் முளைத்துள்ள இவ்விழஞ்செடிகள்
- அப்ஹா சுவர்க்கத்தின் இளஞ்செடிகள்
- உமது தோட்டத்தின் செடிகள்
- கடவுள் அன்பெனும் தோட்டத்திலுள்ள மென்நாற்றுகள்
- கடவுள் அறிவெனும் புல்வெளியின் பசுமையான இளஞ்செடிகள்
- உமது தெய்வீக இளவேனிற் காலத்தில் மலர்களால் பூத்துக் குலுங்கும் இளஞ்செடிகள்
- உமது தோட்டத்தின் ரோஜாக்கள்
- உமது வழிகாட்டல் எனும் தோட்டத்தின் ரோஜாக்கள்
- உமது பசும்புல்வெளியின் மலர்கள்
- வாழ்வெனும் மரத்தின் சிறுகிளைகள்
- உமது அறிவெனும் தோட்டங்களில் வளரும் இளங்கிளைகள்
- உமது கிருபை எனும் தோப்புகளில் துளிர்த்திடும் கிளைகள்
- மோட்சமெனும் பசும்புல்வெளியின் பறவைகள்
- திவ்ய பரிபூரணரின் விரல்களால் பற்றவைக்கப்பட்டுள்ள மெழுகுவர்த்திகள்
- உமது வலிமையெனும் விரல்களின் கைவினைகள்
- உமது மகத்துவத்தின் அற்புத அடையாளங்கள்
- அப்துல்-பஹாவின் அன்புக்குகந்தோர்

## பகுதி 10

அன்புடன் சேர்ந்து, நீங்கள் உங்கள் மாணவர்களுடன் பேணக்கூடிய உறவானது முதல் கிரேட் பாடங்களில் குறித்துரைக்கப்பட்ட ஆன்மீகப் பண்புகளால் வகைப்படுத்தப்படும். வகுப்பில் குழந்தைகளுடனான பரஸ்பர செயல்பாடுகளில் மட்டுமின்றி, உங்கள் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் நீங்கள் இந்தப் பண்புகளை அதிகரிப்புடன் வெளிப்படுத்திட முயல்வீர்கள் என்பலி சந்தேகமில்லை. பஹாவுல்லா பின்வருமாறு ஆலோசனை வழங்குகின்றார்:

**“மனிதர்களே, கவனமாய் இருங்கள்; இல்லையெனில், நீங்களும், மற்றவர்களுக்கு நல்லறிவுரைகளை வழங்கியபோதும், தாங்களே அவற்றைப் பின்பற்றத் தவறியோனைச் சேர்ந்திடக்கூடும்.”[21]**

குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்கள், பாடங்களில் நாம் கலந்தாலோசித்த பண்புகள் ஒவ்வொன்றின் அர்த்தம், தாத்பர்யங்கள் ஆகியன பற்றிய ஓர் அதிகரிக்கும் மதிப்புணர்வைப் பெறுதல் மிகவும் முக்கியமாகும். இந்த மதிப்புணர்வு அந்த ஆசிரியர்கள் பராமரிப்பின் கீழுள்ள பசும் பிஞ்சுகளை பயிற்றுவிக்கும் மற்றும் பேணும் முயற்சிகளில் அவர்களுக்கு உதவிடும். உதாரணத்திற்கு, முதல் பாடம் தூய்மை எனும் பண்பின் மீது கவனம் செலுத்துகிறது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஆதலால், நடத்தை குறித்த கேள்வியின் மீது கவனம் செலுத்தும் வகுப்புகள், இதயத்தின் தூய்மை பற்றிய பண்பை ஆராய்வதன் மூலம் ஆரம்பிக்கப்படுவது பொருத்தமாக இருந்திடும். தமது அழகு, மகிமை ஆகியவற்றின் உரைவிடமாக அவர் ஆக்கியுள்ள “மனித இதயம் தவிர… விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்தையும்,” கடவுள் நமக்காக விதித்துள்ளார், என பஹாவுல்லா நமக்கு நினவுறுத்துகின்றார். ஒருவரின் உள்ளமெனும் கண்ணாடியைச் சுத்தமாக வைத்திருப்பது, ஒரு மனித ஆன்மா அனிகலன்களாகப் பெற்றிருக்க வேண்டிய பிற பண்புகள் அனைத்தையும் அது பிரதிபலித்திட உதவும்.

இந்த கிரேட்’டில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆன்மீகப் பண்புகள் குறித்து ஆசிரியர்கள் சிந்திப்பதற்கு உதவியாக, இரண்டாவது பாடப்பிரிவு அவை ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய மேற்கோள்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. இப்போதைக்கு, தூய்மை குறித்து கீழே உள்ள மேற்கோள்களைப் படிக்கும்படி நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். பின்னர், உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன், பொதுவாக ஒரு மனிதனின் வாழ்வில் இந்தப் பண்பின் முக்கியத்துவத்தையும் குறிப்பாக குழந்தைகளுக்குக் கற்பிக்க முன்னெழுவோரின் முயற்சிகளையும் கலந்தாலோசிக்கவும் கீழே வழங்கப்பட்டுள்ள காலியிடத்தில் உங்கள் எண்ணங்களை எழுதிய பிறகு, மேற்கோள்களில் ஒன்றையாவது நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்.

**“என் சகோதரனே! ஒரு தூய்மையான இதயம் ஒரு கண்ணாடியைப் போன்றது; அதை அன்பெனும் மெருகுடனும் கடவுளைத் தவிர அனைத்திலிருந்தும் பற்றறுத்தலையும் கொண்டு சுத்தப்படுத்தவும். அதன் மூலம் அக்கண்ணாடியில் உண்மை சூரியன் பிரகாசித்தும் நித்திய காலைப்பொழுது விடியவும் கூடும்.”[22]**

**“உனது உள்ளமே எனது இல்லம்; எனது வருகைக்காக அதனைப் புனிதப்படுத்துவாயாக. உனது ஆன்மாவே எனது வெளிப்படுத்துதலின் இடம்; எனது அவதரிப்புக்காக அதனைத் தூய்மைப்படுத்துவாயாக.”[23]**

**"மனிதனின் ஆன்மா எந்த அளவுக்கு அதிக தூய்மையும் பரிசுத்தமும் பெறுகின்றதோ, அந்த அளவுக்கு அது இறைவனை அந்த அளவுக்கு நெருங்கிடும் அதனுள் மெய்ம்மை சூரியனும் வெளிப்படுத்தப்படும்."[24]**

**"முதலில், ஒரு மனிதனின் வாழ்க்கை முறையில் பரிசுத்தமும் பின்னர் பசுமையும், தூய்மையும், சுதந்திர ஆவியும் இருக்க வேண்டும். முதலில் நீரோடையின் படுகை சுத்தப்படுத்தப்பட வேண்டும், பின்னரே ஆற்றின் இனிய நீர் அதனில் வழிந்தோடச் செய்யப்படும்."[25]**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 11

இப்பொழுது, இளம் சிறார்களின் ஆசிரியர் எனும் முறையில், கடவுள் தமது அவதாரமான பஹாவுல்லாவின் மூலம் வெளிப்படுத்தியுள்ள போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கும் நமது ஆன்மாக்களை நாம் அலங்கரித்துக்கொள்ள வேண்டிய பண்புகளை உருவாக்கிக்கொள்வதற்கும் அவர்களின் ஆர்வத்தை எவ்வாறு வலுப்படுத்த உதவிட முடியும் என்பதைப் பற்றி உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்வது அவசியம். இந்தக் கேள்விக்கான பதிலை நீங்கள் தேடும் போது, பஹாவுல்லாவின் பின்வரும் சொற்கள் மீது பிரதிபலிக்கவும்:

**"எமது சக்தி என்னும் நா சர்வ வல்லமைப் பெற்றுள்ள எமது ஒளி என்னும் சுவர்க்கத்திலிருந்து எமது படைப்பை நோக்கி இச் சொற்களை இயம்புகின்றது: "எமது அழகின் மீதுள்ள அன்பின் பொருட்டு எமது கட்டளைகளைக் கடைப்பிடிப்பாயாக. எந்தவொரு நாவுமே வருணிக்க இயலாத தெய்வீக, நறுமணம் மிக்க இச் சொற்களிலிருந்து தனது அதி அன்புக்குரியவரின் நறுமணத்தினை நுகர்ந்திட்ட அன்பன் மகிழ்வெய்துவான்."[26]**

**"இறையன்பெனும் சுடரினை உங்களின் பிரகாசமிக்க உள்ளங்களில் கொழுந்து விட்டெரிய விடுவீராக. தெய்வீக வழிகாட்டுதல் என்னும் எண்ணெயைக் கொண்டு அதற்கு ஊட்டமளித்து, உங்களின் மாறாத் தன்மை என்னும் நிழலின்கீழ் அதனைப் பாதுகாப்பீராக. பொறுப்புடைமை, இறைவனைத் தவிர மற்றதனைத்தின்பாலும் பற்றின்மை, என்னும்**

**கோளத்தினுள் அதனைக் காப்பீராக; அதனால், சமய நம்பிக்கையற்றோரின் தீய குசுகுசுப்புகள் அதன் ஒளியினை அணைத்திடாதிருக்கக் கூடும்."[27]**

**"எனதன்பே எனது அரண்; அதனுள் நுழைபவன் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கின்றான்; அப்பால் திரும்புகின்றவன் நிச்சயமாக வழி தவறிப்போய் உயிரிழப்பான்."[28]**

1. பின்வரும் வாக்கியங்களை மேல்காணும் மேற்கோள்களில் உள்ள சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்யவும்:

அ. "கடவுள் ____________ ______________ அன்பின் பொருட்டு அவரது கட்டளைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆ. இறையன்பெனும் ____________ நமது ___________________ உள்ளங்களில் ____________ _______________ விடுவீராக.

இ. தெய்வீக _________________ என்னும் எண்ணெயைக் கொண்டு _______________ _________________ ஊட்டமளிக்க வேண்டும்.

ஈ. நமது ______________ ____________ _____________ ______________ அதனைப் பாதுகாக்க வேண்டும்.

உ. ________ ________________ மற்றதனைத்தின்பாலும் _________________, என்னும் கோளத்தினுள் அதனை நாம் ________________ வேண்டும்.

ஊ. நாம் கடவுளின் கட்டளைகளை அவரது ____________________ மீதான் அன்பின் பொருட்டு கடைப்பிடிக்க வேண்டும்.

எ. இறையன்பெனும் _____________ நமது ____________________ உள்ளங்களில் ______________ _____________ எரிய விட வேண்டும்.

ஏ. _____________ வழிகாட்டுதல் என்னும் எண்ணெயைக் கொண்டு அதற்கு ஊட்டமளித்து, நமது ___________________________ என்னும் நிழலின் கீழ் அதனை நாம் பாதுகாக்க வேண்டும். இறைவனைத் தவிர மற்றதனைத்தின்பாலும் ____________________ என்னும் கோளத்தினுள் அதனை நாம் பாதுகாத்திட வேண்டும். கடவுள் நம்பிக்கையற்றோரின் குசுகுசப்புகள் அதன்________________ ________________ நாம் கடவுள் அன்பெனும் தீச்சுடரைத் தூண்டிவிட்டும் பாதுகாத்திடவும் வேண்டும். கடவுள் ____________________ அரணுக்குள் நூழைபவன் பத்திரமாகவும் _______________ இருப்பான்.

# பகுதி 12

குழந்தைகளுடன் நீங்கள் கடத்தும் நேரத்தின் போது, அவர்களின் பிரகாசமான இதயங்களில் “கடவுள் அன்பெனும் தீச்சுடரை” தூண்டிவிட முயன்றும் அவரது ஆசிகள் மற்றும் அவரது திருச்சொற்களின் மூலம் வளர்ச்சியுறும் மகிழ்ச்சி குறித்தும் அவர்களுள் விழிப்புணர்வை ஏற்படுத்துவீர். நிச்சயமாக, கடவுளின்பாலான நமது அன்பும் அவரது அருட்கொடைகளைப் பெறுவதற்கான நமது ஆர்வமும் ஏதாவது ஒரு காரணத்தினால் அவரது அன்பு நம்மை வந்து அடையாமல் போய்விடுமோ என்னும் பயத்தை அவற்றுடன் கொண்டுவரும். நமது தப்புகள் அவரது ஆசிகளை நாம் பெறுவதைத் தடுத்திடும் தடைகளாகினால் என்னவாகும்? நாம் உயிருடன் இருப்பதற்கு கடவுளின் அன்பே காரணமாகும். அதை நாம் ஒரு கணமேனும் இழந்துவிட்டால், நமது வாழ்வு நாசமாகிவிடும். கடவுளுக்கு நாம் கீழ்ப்படியாவிட்டால் அவரது அன்பை நாம் இழந்துவிடுவோம் என்னும் இந்த பயம், நம்மை நேர்பாதையில் இருக்கச் செய்து, நமது அகங்காரம், பொறாமை, பேராசை, வீண் கற்பனைகள், இழிவான ஆசைகள் ஆகியவற்றின் தூண்டல்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றது.

குழந்தைகளின் உள்ளங்களில் கடவுளின் அன்பு எனும் விதைகளை விதைக்கும் உங்கள் முயல்வில், நீங்கள் கடவுள் பயம் குறித்தும் சிந்திக்க வேண்டும், ஏனெனில், அவ்விரண்டும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாது. அப்துல்-பஹா நமக்குக் அறிவுறுத்துவதாவது:

> **“தெய்வீக அறிவுறுத்தல்களைக் கொண்டு இக்குழந்தைகளைப் பயிற்றுவிப்பீராக. அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களின் உள்ளங்களில் கடவுளின் அன்பை விதைத்திடுங்கள், அதன் மூலம் அவர்கள் கடவுள் பயத்தை அவர்களின் வாழ்வில் வெளிப்படுத்தி, கடவுளின் அருட்கொடைகளில் நம்பிக்கை வைத்திடக்கூடும். மனித குறைபாடுகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவும் மனித இதயத்தில் உள்ளார்ந்திருக்கும் தெய்வீக பூரணத்துவங்களை அடைந்திடவும் அவர்களுக்குக் கற்பியுங்கள்.”[29]**

கடவுள் பயம் என்பது குழந்தைகளுடன் நேரடியாக விவாதிக்கப்படும் ஒரு கருத்தல்ல என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமாகும். அவரது அருட்கொடைகள் மற்றும் அருட்பொழிவுகளில் பூரண உறுதியும் நம்பிக்கையும் கொண்டிருக்க வேண்டிய ஓர் அன்புமிகு கடவுள் குறித்த உருவகத்தை மட்டுமே அவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்றிட வேண்டும். அவர்களுள் கடவுளின் அன்பைப் பேணும் உங்கள் முயல்வில், குறிப்பிட்ட சில சொற்களும் செயல்களும் கடவுளுக்கு விருப்பமானவை எனவும் மற்றவை அவ்வாறல்ல என்பது குறித்தும் அவர்களுள் ஓர் எண்ணத்தை நீங்கள் அறிமுகப்படுத்தலாம். குழந்தைகள் கடவுளின் மீது அன்பு கொண்டுள்ளதன் காரணமாக, அவர்கள் கடவுளுக்கு மகிழ்ச்சியளிக்க விரும்பலாம் என்பதை அவர்களுக்கு அவ்வப்போது நினைவுபடுத்தலாம். அவர்களிடம், ஓர் அன்பான நாவைப் பெற்றிருப்பதும் ஒருவர் மற்றவரிடம் அன்பாக இருப்பதும் கடவுளுக்கு விருப்பமான செயல்கள் எனவும் அதே நேரம் கடுமையான சொற்களைப் பயன்படுத்துதல் அல்லது பிறர் உள்ளத்தை வேதனைப்படுத்துதல் அவருக்கு விருப்பமில்லாதவை என அவர்களுக்கு எடுத்துக்கூறலாம்.

பின்வரும் மேற்கோள்கள் உங்கள் பிரதிபலிப்பிற்காக வழங்கப்பட்டுள்ளன:

**“மனித மேம்பாட்டிற்கான தூண்டுகோலை அறிந்துகொண்டு, அதிவிழுமிய ஸ்தானம், மகிமையின் சிகரம் ஆகிவற்றை நோக்கி, மிகுந்த முயற்சியுடன் தங்களை வழிநடத்திக்கொள்வதற்கு ஏதுவாக, எல்லா சூழ்நிலைகளிலும் ஆன்மீகப் பண்புகள், நற்செயல்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தச் செய்திடும் எதன்பாலும் மக்களை ஆணையிட்டு அழைப்பது உங்களுக்குக் கடமையாகும். கடவுளின்பால் பயமே அவரது உயிரினங்களின் கல்வியில் பிரதான காரணியாக என்றுமே இருந்துவந்துள்ளது.”[30]**

**“இவ் வெளிப்பாட்டில், போற்றுதலுக்குரிய செயல்களும் நேர்மைமிக்க நடத்தையுந்தாம் சமயத்தை வெற்றிபெறச் செய்யும் சைனியங்களாகும். இறைவன்பால் அச்சமே என்றென்றும் இச்சைனியங்களின் தலைவனாகவும் தளபதியாகவும் இருந்துவந்துள்ளது; இவ்வச்சமே சகலத்தையும் உள்ளடக்குகின்றது, அனைத்தின் மீதும் ஆட்சி செலுத்துகின்றது.”[31]**

**“இறையச்சம், அவரது ஊழியர்களை நேசிப்பதன் மூலம் கடவுளையே நேசிப்பது, மென்மை, பொறுமை, அமைதி ஆகியவற்றைக் கடைப்பிடிப்பது, நேர்மை, இணக்கப்பாடு, அருளிரக்கம், காருண்யம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல்; சங்கல்பம் மற்றும் மனவுறுதி, நம்பகம் மற்றும் ஆற்றல், முயற்சி மற்றும் போராட்டம், பரோபகாரம் மற்றும் விசுவாசம், வன்மமில்லாமை, ஆர்வத்துடன் இருப்பது, மரியாதையுணர்வும், மேன்மையான உள்ளமும் பெருந்தகைமையும், பிறரின் உரிமைகளின்பால் அக்கறை கொண்டிருப்பது ஆகியவையே பூரணத்துவத்தின் பிற பண்புகளாக இருக்கின்றன.”[32]**

இந்தப் பகுதி மற்றும் இதற்கு முன்வந்த பகுதியின் அடிப்படையில், கடவுளின் மீதான அன்பிற்கும் கடவுள் மீதான அச்சத்திற்குமிடையில் உள்ள உறவை விவரிக்கும் மற்றும் ஒரு பாராட்டுக்குரிய நடத்தையின் உருவாக்கத்திற்கு இவ்விரண்டின் ஆற்றல்மிகு பரஸ்பர செயல்பாடு எவ்வாறு முக்கியம் என்பது குறித்து ஒன்று அல்லது இரண்டு பத்திகள் எழுதவும்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## பகுதி 13

கடந்த பகுதிகளில் நடைபெற்ற நமது கலந்துரையாடல்களிலிருந்து, ஆன்மீகக் கல்வியென்பது அழகின்பால் ஈர்ப்பு என்னும் ஆற்றலிலிருந்து பயன்பெற்று, ஆன்மீகப் பண்புகளின் உருவாக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் குழந்தைகளின் உள்ளங்களை, நன்னடத்தை என்னும் அழகு, திருவாக்கில் உள்ளார்ந்துள்ள அழகு, எடுத்துக்காட்டான நடத்தை என்னும் அழகு, உயர் சிந்தனைகள் என்னும் அழகு, அதிமுக்கியமாக, சர்வ-ஜோதியானவரின் அழகான உண்மையான அழகின்பால் வழிநடத்துகிறது இறுதியில், கடவுள் அழகின்மீதான அன்பிலிருந்தே அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் உண்டாகின்றது. ஆதலால், குழந்தைகள் வளர்ந்துவரும் போது, ஆன்மீகப் பண்புகளை உருவாக்கிக்கொள்தலே மாபெரும் வெகுமதி என்பதையும் ஒரு மதிப்பற்ற நடத்தையைப் பெற்றிருத்தலே மாபெரும் தண்டனை என்பதையும் உணர்ந்தவாறு வளர்ந்து வருகின்றனர். அப்துல்-பஹா கூறுவதாவது:

> **"தவறான நடத்தைக்கான மூல காரணம் அறியாமை ஆகும்; நாம் உணருந்திறன், அறிவு ஆகிய கருவிகளை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். நன்னடத்தை கற்பிக்கப்பட வேண்டும். ஒளி எங்கும் பரப்பப்பட வேண்டும்; அதனால், மனுக்குலம் என்னும் பள்ளியில், அனைவரும் ஆவியின் தெய்வீகப் பண்புகளைப் பெற்றிருடுவார்களாக. மேலும், தீயதும், மோசமானதுமான ஒரு குணத்தைவிட மேலும் கொடியதொரு நரகம், மேலும் அக்கினிமயமான பாதாளம் இல்லை என்பதையும்; கண்டனம் செய்யப்படுவதற்கு உகந்த பண்புகளை வெளிப்படுத்துவதை விட வேறெந்த இருண்ட குழியோ, அருவருக்கத்தக்க இம்சையோ இல்லை என்பதையும் எவ்வித ஐயப்பாடும் இன்றி அவர்கள் தாங்களாகவே காண்பார்கள்."[33]**

குழந்தைகள் தெய்வீகப் பண்புகளைப் பிரதிபலித்தல் என்னும் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கு உதவியாக, ஒரு நேர்மையான நடத்தையை வெளிப்படுத்துவதில் அவர்களின் முயற்சியை நாம் ஊக்குவித்தும் வேண்டத்தகாத நடத்தையை தடுத்திடவும் வேண்டும். கடுமையான தண்டனை, குழந்தைகள் தாங்கள் விரும்பிய வண்ணம் நடந்துகொள்வதற்கான முழு சுதந்திரம் ஆகிய இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டும். அன்பு கட்டொழுங்கினையும், குழந்தைகளை இன்னல்களுக்கு பழக்கப்படுத்தும் துணிச்சலையும், அவர்கள் தங்களுக்குப் பிடித்த செயல்களில் ஈடுபடுவதையோ அல்லது அவர்களை மொத்தமாக அவர்களது சுயவிருப்பத்திற்கே தனித்து விடலாகாது என்பதனையும் வேண்டுகின்றது." தொடர்ந்து, குழந்தைகள், "பஹாய் செந்தரங்களுக்கு ஏற்ப வாழ்ந்திட... அன்போடும், அதேவேளையில் கண்டிப்புடனும் அவர்கள் வழிகாட்டப்பட வேண்டும்," என மேலும் கூறுகின்றது. அப்துல்-பஹா தொடர்ந்து விளக்கமளிக்கின்றார்:

> **"தன் குழந்தை நற்செயலை செய்துள்ளதை ஒரு தாய் காணும்போதெல்லாம், அவள் அக்குழந்தையை புகழ்ந்து, போற்றி, அதன் இதயத்தை மகிழச் செய்யட்டுமாக; மேலும் சிறிதளவு விரும்பத்தகாத குணவியல்பு தோன்றினாலும், அவள் அக்குழந்தைக்கு ஆலோசன வழங்கி கண்டிக்கட்டுமாக, மற்றும் பகுத்தறிவு அடிப்படையிலான வழிமுறைகளை, அது சிறிதளவான வாய்மொழிக் கண்டித்தலாயினும், அவற்றை பயன்படுத்தட்டுமாக. ஆனால் ஒரு குழந்தையை அடிப்பதோ, இழிவுபடுத்துவதோ, அனுமதிக்கப்படமுடியாது; ஏனெனில் அடிகளுக்கும் வாய்மொழி**

**துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக்கப்பட்டால், அக்குழந்தையின் நடத்தை முற்றிலும் வக்கிரமாகிவிடும்.”[34]**

அப்துல்-பஹாவின் வழிகாட்டலைப் பின்பற்றுவதற்கு ஏதுவாக, குழந்தைகளை எவ்வழிகளில் பாராட்டலாம், மற்றும் அவர்கள் நன்றாக நடந்துகொள்ளும் போது அவர்களின் உள்ளங்களுக்கு எவ்வகையில் மகிழ்ச்சியூட்டலாம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இதில், ஆசிரியருக்கு அவதானிப்புத் தேவைப்படுவதுடன், ஒவ்வொரு குழந்தையின் முன்னேற்றத்தை குறித்துக்கொள்வதையும் அதே நேரம் குறிப்பிட்ட சில குழந்தைகளையே சதா பாராட்டிக்கொண்டும் பிற குழந்தைகளை கவனியாதிருத்தலையும் தவிர்த்திடுவதில் கவனமாக இருக்க வேண்டும். எப்போதுமே தனது ஆசிரியரின் அன்பான கவனத்தைப் பெறும் பழக்கத்திற்கு ஆளான ஒரு குழந்தை, சற்று குறும்புத்தனமாக நடந்துகொள்ளும் போது சிறிது முகச்சுழிப்பு, எளிமையான ஆனால் விளைவுத்திறமான தண்டனையாக இருந்திடக்கூடும். சில நேரங்களில், அதற்கும் மேற்பட்டு, குறிப்பாக குழந்தை ஒன்று ஒரு நடவடிக்கையை சீர்குலைக்கும் போது, அத்தகா நடத்தைக்கு வாய்மொழியான கண்டனம் தெரிவித்தல் தேவையாக இருந்திடும். இது, மரியாதை கலந்த ஆனால் சற்று உறுதி தொனிக்கும் குரலில், சிறிதளவேனும் ஆத்திரமோ பொறுமையின்மையோ இன்றி தெரிவிக்கப்பட வேண்டும். கூடுதலாக, வகுப்பு நேரத்திற்கும் அப்பால் குழந்தைகளுக்கு அறிவுரை வழங்கிட ஆசிரியர் நேரம் ஒதுக்கிட முயல வேண்டும்.

மேற்கண்ட ஆலோசனையை ஆசிரியர் பின்பற்றிய போதும், சில குழந்தைகள் எதிர்ப்பார்ப்பது போன்று நடந்துகொள்ள மாட்டார்கள். அந்நேரங்களில், சிறிதளவு பொருத்தமான தண்டனைகள் தேவைப்படலாம். வர்ணம்தீட்டுதலை அனுமதிக்காமல் இருத்தல் அல்லது பல நிமிடங்களுக்கு ஒரு விளையாட்டில் கலந்துகொள்வதனின்று தடுத்தல் போன்றவை இவ்வித தண்டனைகளின் உதாரணங்களாகும். இதன் தொடர்பிர் இரண்டு இன்றியமையா யோசனைகள் நினைவில் கொள்ளப்பட வேண்டும். முதலாவது, ஆசிரியர் அக்குழந்தை ஏன் தண்டிக்கப்படுகின்றது என்பதை தெளிவாக விளக்கிட வேண்டும். அதை, “நீ, உதாரணத்திற்கு, இப்படி செய்தாய், ஆகவே விளையாட்டில் கலந்துகொள்வதற்கு முன் நீ ஐந்து நிமிடங்கள் காத்திருக்க வேண்டும்,” எனக் கூறுவதன் மூலம் செய்யலாம். இரண்டாவது யோசனை, தண்டனையானது அத்தகாத நடத்தைக்குப் பிறகு உடனடியாக பயன்படுத்தப்பட வேண்டும்; இல்லையெனில், அக்குழந்தை அத்தண்டனையை தனது விரும்பத்தகாக நடத்தையுடன் தொடர்புப்படுத்த இயலாம் போய்விடும்.

இப்பொழுது, உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் மேற்கண்ட யோசனைகளை விவாதிக்கவும். குழந்தைகளில் நன்நடத்தையை ஊக்குவிப்பதற்கும் அவர்கள் தனிப்படவும் குழுவினராகவும் முன்னேற்றம் காணும் போது அவர்களை பாராட்டுவதற்கும் பயன்படுத்தப்பட பொருத்தமாக இருந்திடக்கூடிய சில வாக்கியங்களை நீங்கள் எழுதமுடியுமா? தேவைப்படும் போது, தவறான நடத்தையை மறுப்பதற்குப் பொறுத்தமாக எந்த வாக்கியங்கள் சரியாக இருக்கும்?

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 14

குழந்தைகள் பாராட்டுக்குரிய பண்புகளை உருவாக்கிக்கொள்வதில் உதவிட, வகுப்பில் அதற்குப் பொருத்தமான சூழ்நிலையை, ஒழுக்கம், ஒழுங்கு ஆகியவற்றால் வேறுபடுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்குவது முக்கியமாகும்.

அப்துல்-பஹா கூறுவதாவது:

> **“…குழந்தைகளின் பள்ளிக்கூடமும் மிகுந்த கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ள இடமாக இருக்கவேண்டும்; கற்பித்தல் முழுமையாக இருக்க வேண்டும்; மேலும் நடத்தையை திருத்தவும் சீர்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதன் வழியாக, அவர்களுடைய தொடக்க ஆண்டுகளிலிருந்து, குழந்தையின் சாராம்சத்திலேயே, தெய்வீக அஸ்திவாரம் அமைக்கப்பட்டும், புணிதத்தன்மை எனும் கட்டமைப்பு எழுப்பப்படவும் வேண்டும்.”[35]**

குழந்தைகளுடைய வாராந்திர வகுப்புகளைக் குறிப்பிட்டு, அவர் பின்வரும் ஆலோசனைகளை வழங்குகின்றார்:

> **“நிச்சயமாக தாங்கள் இந்த ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கையை நிறுத்தாமல் தொடர வேண்டும், மற்றும் அதற்கு முக்கியத்துவமும் வழங்க வேண்டும். அதனால் நாளுக்கு நாள் அது வளர்ச்சி கண்டு, பரிசுத்த ஆவியின் சுவாசங்களினால் உயிரூடப்படக்கூடுமாக. இந்த நடவடிக்கை நன்றாக ஏற்பாடு செய்யப்பட்டால், அது பெரும் வெற்றிகளை ஈன்றிடும் என்பதில் உறுதியாக இருங்கள்.”[36]**

கற்பித்தல் கலை என்பது, பெரும்பாலும் ஒரு குழந்தையின் நடத்தை ஒரு களிப்புமிகு ஆனால் ஒழுங்கு நிறைந்த ஒரு கற்றல் சூழ்நிலைக்கு பங்களிக்கும் வகையில் வழிநடத்தப்படுவதை உள்ளடக்கியுள்ளது. இதன் தொடர்பில் நீங்கள் அனுபவத்தின் மூலம் பல நுண்ணறிவுகளைப் பெறவேண்டியிருப்பினும், ஆரம்பத்திலிருந்தே நீங்கள் உங்களை தயார்படுத்திக்கொள்வதற்கான சில அடிப்படை யோசனைகளை நாம் விவாதிக்கவிருக்கின்றோம். ஆரம்பமாக, வகுப்பின் ஒரு நிரலைப் பற்றிய பின்வரும் வர்ணனையைப் படிக்கவும்:

குழந்தைகள் வந்தவுடன் தங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு அமைதியாக அமர்வதற்கு அவர்களுக்கு சில நிமிடங்களை வழங்குகிறீர்கள். குழந்தைகள் அனைவரும் அமைதியாக

அமர்ந்தவுடன், வகுப்பை பிரார்த்தனைகளுடன் ஆரம்பிக்க அந்தச் அமைதியான சூழலைப் பயன்படுத்திக்கொள்வீர். பாடல்கள் பாடுவதே நீங்கள் அடுத்து அறிமுகப்படுத்தக்கூடிய நடவடிக்கையாகும். அதன் பின்னர், நீங்கள் பாடத்தின் கருப்பொருளைத் அறிவித்து ஒரு மேற்கோளை குழந்தைகள் மனனம் செய்திட உதவுவீர். பின்னர், ஓர் எதிர்ப்பார்ப்புமிகு சூழ்நிலையை உருவாக்கி, குழந்தைகளுக்கு ஒரு கதையைக் கூறுவீர். அதன் பிறகு அவர்கள் ஒரு விளையாட்டை விளையாடுவார்கள். அது முடிந்தவுடன், குழந்தைகளுக்கு சில வர்ணம்தீட்டும் காகிதங்களையும் கிரேயான்கள் அல்லது பென்சில்களை வழங்கி காகிதத்தில் உள்ள படத்திற்கு கவனமாக வர்ணம்தீட்டும்படி கூறவேண்டும். வகுப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, குழந்தைகளிடம் அமைதியாக உட்கர்ந்து முடிவு பிரார்த்தனைகளுக்காக தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள ஊக்குவீப்பீர்கள். பிரார்த்தனைகளை நீங்களும் குழந்தைகளுள் சிலரும் கூறுவீர்.

நடவடிக்கைகள் வரிசையில் ஒரு தர்க்கமுறை இருக்கின்றதா? நடவடிக்கைகள் ஏன் இவ்விதமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 15

மேற்கண்டதை நீங்கள் விவாதித்திருப்பது போன்று, குழந்தைகள் வகுப்பில் அமைதியாக இருப்பதற்கு வருவதில்லை. அல்லது, அவர்களை அவ்வாறு கட்டுப்படுத்துவதும் உங்கள் நோக்கமாக இருந்திடக்கூடாது. அவர்களுக்கே இயல்பான ஆற்றலைப் பயன்படுத்தி, அதைக் கற்றலாக வாய்க்காலிட நீங்கள் முயல வேண்டும். இதைச் செய்வதற்கு, அமைதிமிகு தருணங்கள், நடவடிக்கைக்கும் மற்றும் தன்னிச்சையாக செயல்படுவதற்குமான நேரங்களை நீங்கள் திட்டமிடுவது அவசியம். யாவற்றிலும், ஒழுங்கமைத்திடுவதே ஓர் அடிப்படை அம்சமாகும். ஒரு வகுப்பு நன்கு ஒழுங்கமைக்கப்படும் போது, குழந்தைகள் கவனம் செலுத்துவதற்கும் கற்பதற்கும் சுலபமாக இருக்கும். இதன் தொடர்பில் பின்வரும் மூன்று விஷயங்களைப் பின்பற்றுவது பற்றி சிந்திப்பது பயனளிப்பதாக இருந்திடும்.

1. ஒவ்வொரு வகுப்பும் ஒரு தெளிவானதும் சீரானதுமான வழியில் ஆரம்பித்து அதே போன்று ஓர் ஒழுங்குடனும் முடிவுற வேண்டும்.

2. ஒரு நடைமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஆதலால், சிறுகச் சிறுக, ஒரு நடவடிக்கையைத் தொடர்ந்து வேறு என்ன நடவடிக்கை வரும் மற்றும், அவர்களிடமிருந்து என்ன எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்பதைக் குழந்தைகள் அறிந்துகொள்வார்கள்.
3. ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஒதுக்கப்படும் நேரம் நெகிழ்வாக இருந்திட வேண்டும் மற்றும் அது குழந்தைகளின் உற்சாகம் மற்றும் ஆற்றலைப் பொறுத்திருக்க வேண்டும்.

கடந்த பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, ஒவ்வொரு வகுப்பிலும் குழந்தைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்திடும்:

அ. பிரார்த்தனைகள் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

ஆ. பாடல்கள் பாடுதல்

இ. பஹாய் திருவாக்குகளிலிருந்து மேற்கோள்களைக் கற்றல் மற்றும் மனனம் செய்தல்

ஈ. கதைகளைச் செவிமடுத்தல்

உ. விளையாட்டுகள் விளையாடுதல்
ஊ. படங்களுக்கு வர்ணம்தீட்டுதல்

எ. முடிவு பிரார்த்தனைகளைக் கூறுதல்

இயல்பாகவே, இந்த நடவடிக்கைகள், அவற்றுக்குத் தேவைப்படும் ஆற்றல் மற்றும் நடமாட்டங்களின் அளவில் வேறுபடும்.

இந்த ஏழு நடவடிக்கைளில் எதற்கு அதிகமான நடமாட்டம் தேவைப்படும்? ________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

இவற்றுள் எந்த நடவடிக்கைகள் அமைதியானவை? ______________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

ஓர் ஒழுங்கான சூழ்நிலையைப் பராமரிப்பதானது ஆசிரியர் மீது குறிப்பிட்ட சில கோரிக்கைகளைச் சுமத்தும். பின்வருவனவற்றுள் எவை விரும்பப்படும் சூழ்நிலைக்குப் பங்களிக்கும் மற்றும் எவை அதற்குத் தடங்கலாக இருந்திடும்? அவற்றை ‘ப’ எனவும் ‘த’ எனவும் குறிப்பிடவும்.

___ இடத்தை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருத்தல்

___ எந்த சூழ்நிலையிலும் அமைதியாகவும் பொறுமையாகவும் இருத்தல்

___ குழந்தைகள் சொல்பேச்சைக் கேட்காத போது பொறுமையிழத்தல்

___ ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தேவைப்படும உபகரணங்களை முன்கூட்டியே தயாரித்தல்

___ குழந்தைகளைக் காத்திருக்க வைத்துவிட்டு ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்குத் தேவைப்படும் பொருள்களை எல்லாவிடங்களிலும் தேடுதல்

___ ஒவ்வொரு நடவடிக்கைக்கும் குழந்தைகள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குதல்

___ விரைவாகத் தங்களின் வேலைகளை முடிக்கும் குழந்தைகளைச் சும்மா இருக்கவிடாமல் வேறு நடவடிக்கைகளைத் தயாராக வைத்திருத்தல்

___ குழந்தைகள் ஒரு நடவடிக்கையிலிருந்து மற்றொரு நடவடிக்கைக்கு ஒழுங்குடன் மாறுவதற்கு உதவுதல்

___ நூலிலுள்ள கதைகளை குழந்தைகளுக்குப் படித்தல்

___ குழந்தைகளுக்குக் கதைகளை உற்சாகத்துடன் எளிதாகவும் கூறுவதற்கு அவற்றை நன்கு கற்றல்.

## பகுதி 16

வகுப்பில் கட்டுப்பாடும், ஒழுங்கும் நிறைந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கும் முயல்வில், நடத்தை குறித்த சில தரமுறைகளை நீங்கள் ஸ்தாபித்திட வேண்டும். குறிப்பாக, இதன் தொடர்பில், முதல் சில வாரங்கள் முக்கியமானவையாக இருந்திடும். இந்த ஆரம்ப காலகட்டத்தில் ஸ்தாபிக்கப்படும் எதிர்ப்பார்ப்புகள் வருடம் முழுவதும் தொடர்ந்து பராமரிக்கப்படுவதாக இருந்திடும். ஆரம்பத்தில், நடத்தை குறித்த பல தரமுறைகளை ஆசிரியர் தேர்ந்தெடுத்து அவற்றை விளக்கிட வேண்டும். அவ்வாறு செய்கையில், எல்லாவற்றையும் ஒரேயடியாக விளக்காமல், ஒரு நேரத்தில், மூன்று அல்லது நான்கை தேர்ந்தெடுத்து அவற்றை எளிமையான வார்த்தைகளில் விளக்கிட வேண்டும். தரமுறைகள் குறித்து பொதுவாக, “நாம் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும்” என்பன போன்ற சொற்கள் அவர்களுக்கு அதிகம் உதவியாக இருக்காது, மாறாக, “நாம் பேசும் போது ஒவ்வொருவராகப பேச வேண்டும்” போன்ற சொற்கள் சுலபமாக விளங்கிக்கொள்ளக்கூடியவை. பின்வரும் உரைக்கூற்றுகளில் உள்ள தரமுறைகளை உங்கள் குழுவினருடன் விவாதிக்கவும்; பட்டியலுக்கு மேலும் சிலவற்றைச் சேர்க்கவும்.

அ. விளையாடும் போது நாம் ஒருவர் மற்றவருக்கு உதவிட வேண்டும்.

ஆ; நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் சன்டையிடக் கூடாது.

இ. புதிய நண்பர்களை நாம் வகுப்பிற்கு வரவேற்க வேண்டும்.

ஈ. பேசும் போது, நாம் ஒருவர் மற்றவரையும் ஆசிரியர் பேசும் போதும் அவர்களை நன்றாகச் செவிமடுக்க வேண்டும்.

உ. நாம் ஒருவர் மற்றவருடன் அன்பான நாவுடன் பேசவேண்டும்.

ஊ. பேசுவதற்கு நமது வாய்ப்புக்காகக் காத்திருக்க வேண்டும்.

எ. நமது கிரேயான்களை ஒருவர் மற்றவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

ஏ. நாம் நமது வேலைகளைப் பூர்த்தி செய்ய முயலவேண்டும்.

ஐ. ____________________________________________

ஒ. ____________________________________________

ஓ. ____________________________________________

ஔ. ____________________________________________

நடத்தை குறித்து எதிர்ப்பார்ப்புகள், இவற்றைப் போன்ற எளிய வாக்கியங்களாக அமைக்கப்படும் போது, அவை குழந்தைகளுடன் விவாதிக்கப்படலாம், மற்றும் அவ்வுரைக்கூற்றுகள் வாடிக்கையாக அவர்களுடன் சேர்ந்து ஒப்புவிக்கப்படலாம். இவ்வழியில், குழந்தைகள் இலட்சியம் கொள்ளும் தரமுறைகளாக இவ்வுரைகூற்றுகள் உள்வாங்கப்பட்டும் அவை முரட்டுத்தனமாக தினிக்கப்படும் விதிகளாக கருதப்படாது. குழந்தைகள் குறிப்பிட்ட சில தரமுறைகளுடன் பழக்கமாகிடும் போது, ஆசிரியர் வேறு சிலவற்றை அறிமுகப்படுத்தலாம், அப்போது, ஒரேயடியாக அதிகமானவற்றை சேர்த்திடாமல் இருக்க வேண்டும் என்பதை நினைவில்கொள்ள வேண்டும். வகுப்பின் போது, ஒரு குறிப்பிட்ட சிரமம் எழும்போது, அதைக் குறித்துரைக்க சில எளிய வாக்கியங்களை அமைத்திட குழந்தைகளுக்கு உதவலாம். அவ்வேளைகளில், ஆசிரியர் கண்டிப்பாகவும் சீராகவும் இருக்க வேண்டும், அதே சமயம் சினேகத்துடனும் மென்மை நிறைந்துமிருக்க வேண்டும்.

## பகுதி 17

பகுதி 8'இல், கிரேட் 1 பாடங்களின் பல்வேறு அம்சங்களின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக ஆராய்ந்தும் அவை ஒரு பாராட்டுக்குரிய நடத்தைக்கு எவ்வாறு பங்களித்திட முயல்கின்றன என்பதையும் விவாதித்தோம். இந்தப் பகுதி மற்றும் அடுத்து வரும் ஏழு பகுதிகளிலும் மனனம் செய்வதுடன் ஆரம்பித்து பரிந்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவது குறித்து உங்களால் எடுக்கப்படக்கூடிய சில அணுகுமுறைகளை நாம் பரிசீலிப்போம்.

பிரார்த்தனைகளையும் மேற்கோள்களையும் மனனம் செய்தல் நீங்கள் கற்பிக்கப் போகும் பாடங்களுக்கு நடுமையமாக இருக்கும் மற்றும், ஒவ்வொரு வகுப்பு நேரத்தின் போதும், பிரார்த்தனைகளை மனனமாகக் கூறுதல், ஒரு புதிய மேற்கோளை மனனம் செய்தல் ஆகியவற்றில் உங்கள் மாணவர்களின் முயற்சிகளுக்கு நீங்கள் உதவுவீர்கள். இந்த நடவடிக்கையில் அவர்களை எவ்வாறு ஈடுபடுத்துவது என்பது குறித்து நாம் விவாதிக்கும் முன்,

திருவாக்குகளை மனனம் செய்வதில் குழந்தைகளுக்கு உதவிடும் முயல்வில் தவிர்க்கப்பட வேண்டிய பொதுவான ஒரு தப்பபிப்பிராயத்தைப் பற்றி சில வார்த்தைகள் கூறப்பட வேண்டும்.

நீங்கள் கற்பிக்க ஆரம்பிக்கும் போது, “குழந்தைகள் எதையும் அப்படியே ஒப்புவிக்கக் கூடாது”, “அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துகளை வெளிப்படுத்தக் கற்க வேண்டும்,” “அவர்கள் கிளிப் குழந்தைகள் போன்று பொருண்மைகளையும் தகவல்களையும் ஒப்புவிக்கக்கூடாது”, என செவிமடுத்திருப்பீர் அல்லது செவிமடுக்கவிருகின்றீர். உண்மையில், மனனமுறை கற்றல் எனக் கூறப்படுவது குறித்த குற்றங்காணல் அத்தகைய தீவிரமாக இருப்பதானது, இத்தகைய எண்ணங்கள் உலகில் எல்லா பாகங்களிலும் மேன்மேலும் பரவலாகி வருகின்றன. ஒருவர், கணிதப்பாடத்தில் ஒரு சமன்பாட்டை (equation), பௌதீகத்தில் ஒரு சட்டத்தின் வரையறையை, அல்லது இலக்கியத்தில் ஒரு செய்யுளை அது குறித்த விளக்கம் ஏதுமின்றி மனனம் செய்திடலாம் என்பது உண்மையே. ஆனால், நீங்கள் உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இதுவே: ஓர் ஆழமான கூற்றுரையை மனனம் செய்தலும் அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்தலும் ஏன் எதிரும் புதிருமாக இருக்க வேண்டும்? புரிதல், சிந்தனை, கற்பனை ஆகிய சக்திகள் போன்று ஞாபக சக்தியும் மனித மனதின் ஒரு சக்தியாகும். அவை அனைத்தும் ஒன்று மற்றொன்றை நிரப்பம் செய்து வலுப்படுத்துகின்றன. மனித இதயத்தையும் சிந்தனையையும் மறு உருவாக்கம் செய்வதற்கான அதன் முடிவற்ற ஆற்றலுடன், கடவுள் திருவாக்கை மனனம் செய்தலானது, எந்த அளவுக்கு குழந்தைகளுள் அறிவாற்றலையும் புரிதலையும் மேம்படுத்தக்கூடியது என்பதை நாம் கற்பனை மட்டுமே செய்திட இயலும். பின்னாளில், வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை அவர்கள் கடக்கும் போது, அவர்கள் மனனம் செய்துள்ள உரைப்பகுதிகளிலிருந்து அவர்கள் புத்தம் புதிய அகப்பார்வைகளைப் பெற்றும், தங்கள் வாழ்நாள் முழுவதும் கடவுள் திருவாக்கின் படைப்பாற்றல்மிக்க, மறுஉருவாக்கம் செய்யக்கூடிய, தன்மைமாற்றும் சக்திகளிலிருந்து பயன்பெற இயலும்.

உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன், காலப்போக்கில் வளர்ச்சியுற்று, தெவிட்டாத கனிகளை ஈன்றிடக்கூடிய வித்துகளை, ஆன்மீக அறிவெனும் விதைகளை குழந்தைகளின் மனதிலும் இதயங்களிலும் உறுதியாக விதைத்திட கடவுள் திருவாக்கின் மனனம் உதவிடும் என்பதில் ஆசிரியர்கள் திடநம்பிக்கை கொள்வது ஏன் முக்கியம் என்பதை விவாதிக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 18

மேற்கண்ட பிரதிபலிப்பை நினைவில் கொண்டு, பாடம் 1'இல் உள்ள மேற்கோளை ஓர் உதாரணமாக எடுத்துக்கொண்டு, உங்கள் மாணவர்கள் திருவாக்குகளிலிருந்து உரைப்பகுதிகளை மனனம் செய்திட நீங்கள் எவ்வாறு உதவக்கூடும் என்பது குறித்து சிந்திப்போமாக. முதலில், அந்தப் பாடம் கவனம் செலுத்தும் ஆன்மீகப் பண்பின் முக்கியத்துவம் பற்றி சில ஆரம்ப அகப்பார்வைகளைப் பெற்றிட அவர்களுக்கு நீங்கள் உதவிட விரும்புவீர். இந்த நோக்கத்திற்கு உதவியாக, நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு சுருக்கமான அறிமுகக் கூற்றுரை வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் முதலில் அந்த மேற்கோளின் ஓர் அடிப்படை புரிதலைப் பெற அவர்களுக்கு உதவும்படி ஊக்குவிக்கப்படுகின்றீர். இதை, அந்த மேற்கோளில் உள்ள கடின சொற்களைத் தேர்ந்தெடுத்தும் குழந்தைகள் சுலபத்தில் அடையாளங் காணக்கூடிய சூழல்களில் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் செய்வீர். தூய்மை எனும் பண்பினைக் குறித்துரைக்கும், பாடம் 1'இன் இந்த அணுகுமுறையைப் பரிசீலியுங்கள்.

நமது உள்ளங்கள் கண்ணாடிகளைப் போன்றவை. அவற்றை நாம் எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் மீது விரோதம் பாராட்டுவது, ஒருவர் மீது பொறாமை கொள்வது, மற்றும் ஏதாவது ஒரு காரணத்திற்காக ஒருவரிடம் அன்பில்லாமல் இருப்பது—இவை யாவும் நமது இதயங்கள் எனும் கண்ணாடியை மூடிடும் தூசியைப் போன்றவை. நம் இதயங்கள் தூய்மையாக இருக்கும் போது அவை கடவுளின் ஒளியையும் – கருணை, அன்பு, மற்றும் வள்ளன்மை போன்ற -- அவரது பண்புகளையும் பிரதிபலிப்பதுடன் நாம் பிறரின் அகமகிழ்வுக்கான காரணமும் ஆகின்றோம். நமது இதயங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு உதவியாக, பஹாவுல்லாவின் இந்த மேற்கோளை மனனம் செய்வோமாக:

**“ஆவியின் புத்திரனே! எனது முதல் அறிவுரை இதுவே: தூய்மையும், அன்பும், பிரகாசமும் நிறைந்த உ ள்ளத்தினைக் கொண்டிருப்பாயாக...”**

*அறிவுரை*

1. ஒருநாள், ஜெரார்ட் மற்றும் மேரி இருவரும் சில படங்களுக்கு வர்ணம் தீட்டிக்கொண்டிருந்தனர். ஜெரார்டுக்கு மஞ்சள் கிரேயான் தேவைப்பட்டது, ஆனால் மேரி அதை அவனிடம் கொடுக்க விரும்பவில்லை. மேரி அதைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென ஆசிரியர் கூறுகிறார். ஆசிரியர் மேரிக்கு நல்ல அறிவுரை வழங்கினார்.

2. பேட்ரீஷியா, தன்னிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு மிட்டாய் வாங்குவதா அல்லது ஒரு கதைப் புத்தகம் வாங்குவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அவளது பெற்றோர் அவர் கதைப் புத்தகத்தை வாங்குமாறு அறிவுரை வழங்கினர். அவளது பெற்றோர் அவளுக்கு நல்ல அறிவுரை வழங்கினர்.

*பெற்றிருத்தல்*

1. தினேய் தூங்கச் செல்வதற்கு முன் பிரார்த்தனை செய்திட விரும்புவாள். அவ்வாறு செய்வதற்கு அவளிடம் ஒரு சிறு பிரார்த்தனை புத்தகம் உள்ளது. தினேய் ஒரு சிறிய பிரார்த்தனை புத்தகத்தைப் பெற்றுள்ளாள்.

2. நாங்கள் எங்கள் தோட்டத்தில் நிறைய காய்கறிகளை பயிரிட்டுள்ளோம். எங்களுக்கு பல பசுமையான காய்கறிகளை வழங்கும் ஒரு நல்ல நிலத்தை நாங்கள் பெற்றுள்ளோம்.

*தூய உள்ளம்*

1. கேத்தி ஆத்திரமடைந்து ஆகொட்'டிடம் அன்பில்லாமல் பேசினாள். ஆகொட் கவலையுற்றான், ஆனால் கேத்தியை மன்னித்தான். ஆகோட் தூய உள்ளத்தைப் பெற்றுள்ளான்.

2. குஸ்தாவோ தனது பிஸ்கட்களை, பிறருடன் எதையுமே பகிர்ந்துகொள்ளாத ஜோர்ஜ உட்பட, எல்லா குழந்தைகளுடனும் பகிர்ந்துகொள்கிறான். குஸ்தாவோ ஒரு தூய உள்ளத்தைப் பெற்றுள்ளான்.

*அன்பான உள்ளம்*

1. மிங் லின்'னின் பெற்றோர் தங்கள் நண்பர்களை அவர்களின் இல்லத்திற்கு அழைக்கும் போது, மிங் லின் அவர்களுக்கு மனமகிழ்ச்சியுடன் உணவு பரிமாறுகிறாள். மிங் லின் ஓர் அன்பான உள்ளத்தை பெற்றுள்ளாள்.

2. திரு ரோபர்ட்சன்'னுக்கு வயதாகிவிட்டது. அவர் தமது பழ அறுவடைகளை சந்தைக்குக் கொண்டுசெல்ல ஜிம்மி உதவுகிறான். ஜிம்மி ஓர் அன்பான உள்ளத்தைப் பெற்றுள்ளான்.

*பிரகாசமான உள்ளம்*

1. நான் கவலையாக இருக்கம் போது, என் தாயார் எப்போதுமே என்னை ஊக்குவித்து மகிழ்ச்சியூட்டுவார். என் தாயாருக்கு ஒரு பிரகாசமான உள்ளம் உள்ளது.

2. ஒபுயா நோயுற்றும் சதா படுக்கையில் இருக்கவும் வேண்டியதாயிற்று. அவன் பல பிரார்த்தனைகளைக் கூறியும் கவலையில்லாமலும் இருந்து, தொடர்ந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். ஒபுயா'வுக்கு ஒரு பிரகாசமான உள்ளம் உள்ளது.

நிச்சயமாக, புத்தகத்தில் உள்ள அறிமுக கூற்றுரை மற்றும் விளக்கமளிக்கும் வாக்கியங்களை நீங்கள் வெறுமனே படிக்க மாட்டீர்கள். எனவே, அவற்றை இயற்கையான முறையில் முன்வைக்க நீங்கள் முன்கூட்டியே தயார் செய்துகொள்ள வேண்டும்.

குழந்தைகள் மனனம் பிரார்த்தனைகளைப் பொறுத்த வரை, நீங்கள் அதே போன்ற ஓர் அணுகுமுறையைப பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது, ஆனால் எந்த சொற்கள் அல்லது சொற்றொடர்களுக்கு விளக்கம் தேவை என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளலாம். இதன் தொடர்பில் நீங்கள் சற்று கவனமாக இருந்திட விருப்புவீர். சில நேரங்களில், சொற்களின் அர்த்தங்களை குழந்தைகள் பிரார்த்தனைகளிலிருந்தே படிப்படியாகப் புரிந்துகொள்ள அனுமதிப்பது போதுமாக இருந்திடும். உதாரணத்திற்கு, பாடம் 1'இல் குழந்தைகள் கற்க ஆரம்பித்த கீழ்க்காணும் பிரார்த்தனையைப் பார்க்கவும். அவர்கள், “தூய உள்ளம்”, “முத்து” இரண்டும் விலைமதிப்பற்றவை என்பதை உடனடியாகக் கண்டுணர்வார்கள். ஆனால், இறுதியில், ஒரு தூய உள்ளம் என்பது நமக்கு கடவுளால் வழங்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக, அவர்கள் “வழங்கப்படுகிறது” எனும் சொல்லின் அர்த்தத்தை அவர்கள் கற்க வேண்டுமாய் இருந்திடும். இதற்காக நீங்கள் என்ன வாக்கியங்களை உருவாக்குவீர்?

> **“அவரே கடவுள்!, கடவுளே என் கடவுளே! ஒரு முத்தைப் போன்ற, ஒரு தூய உள்ளத்தை எனக்கு அருள்வீராக.”[37]**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 19

உங்கள் மாணவர்கள் பிரார்த்தனைகளையும் மேற்கோள்களையும் மனனம் செய்வதற்கு உதவக்கூடிய ஓர் அணுகுமுறையை இப்பொழுது பரிசீலிப்போம். நீங்கள் மேற்கோளைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து, மாணவர்கள் அவற்றை ஒவ்வொன்றாகக் கற்கும்படி செய்யலாம். முதல் பகுதி மனனம் செய்யப்பட்ட பிறகு, அடுத்த பகுதியையும் மற்ற பகுதிகளையும் முழு மேற்கோள் அல்லது பிரார்த்தனையும் முற்றிலும் மனனம் செய்யப்படும் வரை ஒவ்வொன்றாகச் சேர்க்கலாம். சில நேரங்களில் தனியாகவும் மற்ற நேரங்களில் குழுவாகவும் பகுதிகள் ஒவ்வொன்றையும் உங்களுடன் சேர்ந்து உச்சரிக்கும்படி குழந்தைகளைக் கோரலாம்.

உதாரணத்திற்கு, பாடம் 1'இல் உள்ள மேற்கோளை உங்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு, நீங்கள் “ஆவியின் புத்திரனே!” எனும் சொற்றொடருடன் ஆரம்பித்து, அதை அவர்கள் திரும்பச் சொல்ல வைக்கலாம். பின்னர், “ஆவியின் புத்திரனே” என்பதுடன் “எனது முதல் அறிவுரை இதுவே” என்னும் சொற்றொடரைச் சேர்க்கலாம், பின்னர் அவ்விரண்டு சொற்றொடர்களையும் ஒன்றாக உச்சரிக்கும்படி கூறலாம். இறுதியாக, “தூய்மையும், அன்பும், பிரகாசமும் நிறைந்த உ ள்ளத்தினைக் கொண்டிருப்பாயாக” எனும் சொற்களைச் சேர்க்கலாம்

குழுவினர் இவ்வழியில் இந்த மேற்கோளை கற்றுக்கொண்ட பிறகு, அதை மனனமாகக் கூறும்படி சில குழந்தைகளைக் கோரலாம். நிச்சயமாகவே, குழந்தைகள் கவனம் செலுத்தவும் ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலை பராமரிக்கப்படவும் இப்பயிற்சி மிகுந்த உற்சாகத்துடன் செய்யப்படுவதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அவர்களின் திறனாற்றல் படிப்படியாக அதிகரிக்கும் போது, அவர்கள் பிரார்த்தனைகளில் நீண்ட பகுதிகளையும் முழு மேற்கோள்களையும் ஒரேயடியாக மனனம் செய்திட இயலும்.

வகுப்பின் இப்பகுதியை நீங்கள் மேற்கொள்ளும் போது, எதிர்பார்க்கவியலாத குறிப்பிட்ட சில சூழ்நிலைகள் எதிர்படலாம், மற்றும் அவற்றை நேரடி அனுபவத்தின் மூலம் எப்படி எதிர்கொள்வது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும், சில சூழ்நிலைகளுக்கு உங்களை தயார் செய்துகொள்வது குறித்து நீங்கள் பரிசீலனை செய்யலாம். பின்வரும் கேள்விகளை உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் விவாதிக்கவும்:

- உங்கள் வகுப்பில் அதிகமான குழந்தைகள் இருப்பின், அவர்கள் மேற்கோளை மனனம் செய்வதற்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்?
- சில குழந்தைகள் மற்றவர்களைவிட விரைவாக மனனம் செய்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
- சில குழந்தைகள் மனனம் செய்வதற்குச் சிரமப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்?
- வகுப்பில் ஒரு குழந்தை ஒரு மேற்கோளை முழுமையாக மனனம் செய்திட இயலாவிட்டால், அக்குழந்தையின் மனதில் ஒரு சாதனை உணர்வை நீங்கள் எவ்வாறு உறுதிப்படுத்தக்கூடும்?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## பகுதி 20

மேற்கோள்களை மனனம் செய்வதற்கு முன்பாக வரும், நடவடிக்கையான பாடல்கள் பாடுதல் குழந்தைகளுக்கு மிகவும் பிரியமானதும் மகிழ்ச்சிமிக்கதுமான ஒரு நடவடிக்கையாகும். இதில் வெற்றியடைவதற்கு பயிற்சி முக்கியமாகும். அப்பாடல்களைத் தெரிந்வர்களுடன் சேர்ந்து நீங்களும் பாடவேண்டும். பாடும் போது, அதன் லயம் மற்றும் இசைக்கு விசேஷ கவனம் செலுத்த

வேண்டும். பாடல்களின் ஒலிப்பதிவை செவிமடுக்க இயலுமானால், அப்பாடல்களை நீங்கள் விரைவாகக் கற்றுக்கொள்வீர். குழந்தைகளுடன் சேர்ந்து அப்பாடல்களை அவர்கள் நன்றாகக் கற்கும் வரை நீங்கள் மீண்டும் மீண்டும் பல முறை பாட வேண்டும். மேற்கோள்களை மனனம் செய்தது போன்றே பாடல் வரிகளையும் கற்றுக்கொள்ளலாம். ஆனால், இம்முறை வார்த்தைகள் இசையுடன் சேர்ந்து பாடப்படுகின்றன. உங்கள் மாணவர்களின் திறனாற்றலைப் பொறுத்து, சில பாடல்களைப் பாடுவதற்கு அவர்கள் மிகவும் சிரமப்படக்கூடும் அத்தகைய சூழல்களில், நீங்களே அப்பாடல்கள் வரிகளைப் பாடவும், பல்லவிகளின் போது உங்கள் மாணவர்கள் உங்களுடன் சேர்ந்து பாடவும்கூடும்.

## பகுதி 21

கதை சொல்வதே நாம் பரிசீலிக்கவிருக்கும் அடுத்த நடவடிக்கையாகும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, முதல் கிரேட்'டின் பெரும்பாலான கதைகள், அப்துல்-பஹாவின் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்டவை. இக்கதைகள் ஒரு மிகவும் விசேஷ நோக்கத்தைக் கொண்டுள்ளன. குழந்தைகள் அடைய முயலும் ஆன்மீகப் பண்புகள், எவ்வாறு நமது பரிபூரண உதாரணபுருஷரின் உலக வாழ்நாள்கள் முழுவதும் பூரணமாக வெளிப்படுத்தப்பட்டன என்பதைக் காண இக்கதைகள் அவர்களுக்கு உதவுகின்றன. இந்த விவரங்களை மொழிகின்ற ஆசிரியர் வெளிப்படுத்தும் மரியாதையானது அவர்களின் மென்மையான இதயத்தில் தெய்வீக உணர்வுகளைக் கிளறிவிட்டு, அவர்களின் ஆன்மீக உணர்திறன்களை வெளிப்படச் செய்கின்றது.

குழந்தைகளுக்கு நீங்கள் கூறவிருக்கும் அப்துல்-பஹா பற்றி கதைகள் சுருக்கமானவை எனினும், அவை வழங்கிடும் ஆன்மீக அகப்பார்வைகள் ஆழமானவை. உங்கள் மாணவர்கள் ஆன்மீக மெய்ம்மையின் நுண்காட்சிகளைப் பெறுவதற்கு உதவியாக, கதைகளில் விவரிக்கப்படும் நிகழ்வுகளுக்கும் அப்பால் அவர்களைக் கொண்டு செல்ல நீங்கள் விரும்புவீர்கள். பாடம் 1'இன் கதையை இதன் அடிப்படையில் நாம் ஆராய்வோமாக.

> ஒரு முறை, ஓர் இரவு விருந்தின் போது அப்துல்-பஹாவின் விருந்தினராக இருக்கும் கௌரவத்தை ஒரு பெண்மணி பெற்றிருந்தார். அப்துல்-பஹாவின் விவேகம் மிக்க சொற்களை அப்பெண்மணி செவிமடுத்து வந்தபோது, அவர் தம்முன் இருந்த ஒரு கண்ணாடிக் குவளையில் உள்ள நீரைப் பார்த்து, "ஆஹா! இந்தக் குவளை நீரை எவ்வாறு காலி செய்ய முடியுமோ அதே போன்று, அப்துல்-பஹா மட்டும், என் இதயத்திலிருந்து எல்லா உலக ஆசைகளையும் காலி செய்து, அதில் தெய்வீக அன்பையும் புரிந்துணர்வையும் மறுபடியும் நிரப்பக்கூடுமானால்."
>
> இந்த எண்ணம் அப்பெண்ணின் மனிதில் விரைவாகத் தோன்றி மறைந்தது; அது பற்றி அவர் ஏதும் சொல்லவில்லை. ஆனால் விரைவில், தான் என்ன சிந்தித்துக்கொண்டிருந்தார் என்பது பற்றி அப்துல்-பஹா அறிந்திருந்தார் என்பதை அவர் உணரும் வன்னம் ஒரு நிகழ்வு நடந்தது. அப்துல்-பஹா தமது உரையில் நடுவில், சற்று தாமதித்து, தமது உதவியாளர் ஒருவரை அழைத்து அவரிடம் மெதுவாக ஏதோ சொன்னார். அந்த உதவியாளர் அந்தப் பெண்

உட்கார்ந்திருந்த மேஜைக்கு வந்து, அவரது குவளையை எடுத்து அதிலிருந்து நீரைக் காலி செய்து அதை அப்பெண்ணின் முன் வைத்துவிட்டச் சென்றார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, தொடர்ந்து உரையாற்றுகையில், மேஜை மீதிருந்த ஒரு ஜாடி நீரை எடுத்து, மிகவும் இயல்பான முறையில் அப்பெண்ணின் குவளையை நிரப்பினார். அந்த நிகழ்வை யாரும் கவனிக்கவில்லை, ஆனால், தமது இதயத்தின் ஆவலை அப்துல்-பஹா நிறைவேற்றுகின்றார் என்பதை அப்பெண்மணி உணர்ந்தார். அவர் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. அப்துல்-பஹாவைப் பொறுத்தவரை இதயங்களும் மனங்களும் அப்துல்-பஹா பெரும் அன்புடனும் கருணையுடனும் படிக்கின்ற திறந்த புத்தகங்கள் போன்றவை என்பதை அப்பெண் இப்பொழுது உணர்ந்தார்.

தெளிவாகவே, தூய்மை எனும் அன்மீகப் பண்பின் மீதே கதை—உண்மையில் பாடும் முழுவதுமே—கவனம் செலுத்துகின்றது. இப்பண்பு குறித்த மாணவர்களின் புரிதலையும் அதற்காக முயல்வதென்பது என்ன பொருள்படுகின்றது என்பதையும் பற்றி உங்கள் மொழிதல் எவ்வாறு ஆழப்படுத்துகின்றது என்பதைப் பற்றி சிந்திப்பதற்குப் பின்வரும் கேள்விகள் உங்களுக்கு உதவிடும்.

1. குழந்தைகள், அப்துல்-பஹாவின் விருந்தினர் தூய்மையான இதயத்திற்காக ஆவல் கொண்டிருந்தார் என்பதைக் கண்டுணர்வது முக்கியமாகும். கதையில் வரும் இந்த ஆவலுறுதலுக்கும் விருந்தினர் முன்பிருந்த கண்ணாடிக் குவளை நீருக்கும் இடையில் என்ன தொடர்பு?

2. கடவுள், அன்பு, வள்ளன்மை, கருணை1. ஆகிய நற்பண்புகளைக் கொண்டு நமது உள்ளங்களை ஒளிபெறச் செய்வதற்கு, ஒரு கண்ணாடிக் குவளை நீர் கீழே கொட்டப்பட்டு அது மீண்டும் நிரப்பப்படுவது போன்று, தூய்மையை அடைவதற்கு, நாமும் மதிப்பற்ற சிந்தனைகள், உணர்வுகள் ஆகியற்றை நம்மிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் இக்கேள்விகளை விவாதித்த பிறகு, உங்கள் எண்ணங்களில் சிலவற்றை கீழே எழுதவும்.

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

இந்த கிரேட்'டில் உள்ள சில கதைகள், அப்துல்-பஹா வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்காவிட்டாலும் அவை ஆன்மீகப் பண்புகளின் முக்கியத்துவத்தைச் சித்தரிக்கின்றன. அவற்றில் இத்தகைய பண்புகளை வெளிப்படுத்துவதனால் கிட்டும் வெகுமதிகளையும் அவற்றைப் புறக்கணிப்பதனால் ஏற்படும் பின்விளைவுகளயும் குழந்தைகளால் பார்க்க முடிகின்றது. உதாரணத்திற்கு, பாடம் 4'இல் பல கலாச்சாரங்களில் நன்கு அறியப்பட்ட ஓநாய் எனக் கூக்குரலிட்ட இடையனின் கதை, பொய் சொல்வதால் ஏற்படும் பின்விளைவுகளை வெளிப்படுத்துகின்றது மற்றும், இவ்வழியில், வாய்மை எனும் நற்பண்பு குறித்து அகப்பார்வைகளை வழங்குகின்றது. இந்தக் கதைகளில் வழங்கப்படும் செய்திகளின் மூலம் குழந்தைகள் பெரிதும் பயன் பெறுவதுடன், அவர்கள் நடத்தைகளின் உருவாக்கத்தில் அவை மிகவும் மதிப்புடையவையாகவும் இருந்திடும்.

## பகுதி 22

கதை சொல்வது ஒரு கலையாகும். ஒரு கதையை விளைவுத்திறத்துடன் கூறுவதற்கு அக்கதையைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். இந்தப் பகுதியில், ஓர் ஆசிரியர் பாடம் 1'இன் கதையை எவ்வாறு கூறவேண்டும் என்பதை அறிவதற்கு, அதை மேலும் அதிக விரிவாகப் படிப்பாய்வு செய்வோம்.

கண்ணாடி குவளையின் உதாரணத்தின் மூலம் ஆராயப்பட்ட இதயத்தின் தூய்மை எனும் ஆன்மீகப் பண்பே கதையின் மைய கருப்பொருள் என்பதை உறுதிப்படுத்திவிட்டோம். ஆதலால், இந்தப் பிரதான கருப்பொருளுடன் நேரடியாக தொடர்புகொண்டுள்ள கதைப் பகுதிகள் எவை என்பதே உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டிய முதல் கேள்வியாகும். அப்துல்-பஹாவின் விவேக வார்த்தைகள், அந்தப் பெண்மணி தனக்கு முன்பிருந்த கண்ணாடி குவளை போன்று, எந்த அளவுக்கு உலக ஆசைகளிலிருந்து தனது இதயத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டுமென சிந்தித்திட செய்தன என்பது ஒரு முக்கிய விஷயமாகும். அப்துல்-பஹா அந்த குவளையில் இருந்த நீரை கீழே கொட்டும்படி தமது உதவியாளரிடம் கூறியதும் பின்னர் அவர் அதே குவளையில் நீரை நிரப்பியதும் மற்றொரு விஷயமாகும். அப்துல்-பஹா அந்த உதவியாளரிடம் அந்த பெண்மணியின் குவளையை காலி செய்யும்படி கூறியதை நீங்கள் குறிப்பிடவில்லையெனில் என்னவாகும்?

கதையின் முக்கிய பகுதிகளை நாம் இப்போது ஆராய்ந்துவிட்டிருந்தாலும் அதன் மற்ற விவரங்கள் மறக்கப்பட முடியாது. அப்துல்-பஹாவின் விருந்தினர் ஒருவர், இரவு உணவுக்காக அமர்ந்திருக்கும் போது, ஒரு காலி கண்ணாடி குவளையை ஒருவர் காலி செய்வது போன்று தனது இதயமும் தூய்மைப்படுத்தப்பட விரும்பினார் என நீங்கள் வெறுமனே, கூறினால் அது ஒரு கதையாகுமா? ஒரு கதைக்கு அதிக உணர்வூட்டி மனதை ஈர்க்கவைக்கும் விவரக்கூறுகள் அதற்கு எப்போதுமே உண்டு. அவை எவை?

- அப்துல்-பஹா தமது ஞானத்தைப் பகிர்வதைச் செவிமடுத்துக்கொண்டிருந்த போது, ஒரு காலி கண்ணாடி குவளையின் எண்ணம் விருந்தினருக்குத் தோன்றியது, ஆனால் அவர் தமது எண்ணத்தை உறக்க வெளியிடவில்லை.

- இரவு உணவின் போது கூடியிருந்தோரிடம் பேசிக்கொண்டிர்ந்த போதும், அந்த பெண்மணியின் உச்சரிக்கப்படாது சிந்தனையைக் குறித்துரைக்க அப்துல்-பஹா சற்று தாமதித்தார்.

- என்ன நடந்தது என்பதை வேறு எவரும் கவனிக்கவில்லை.

- தனது இதயத்தின் ஆவலை அப்துல்-பஹா உண்ர்ந்திருந்தார் என்பதை அறிந்த அந்த விருந்தினர் பெரும் மகிழ்ச்சியுற்றார்.

கிரேட் ஒன்றில் உள்ள கதைகளுக்கு, அவை வழங்க முற்படும் ஆன்மீக உண்மைகளிலிருந்து குழந்தைகளின் கவனத்தைத் திசைத்திருப்பும் கூடுதல் விவரங்களையும் பிற அம்சங்களையும் கொண்டு அழகு சேர்ப்பதிலிருந்து ஆசிரியர் ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

ஆதலால், உங்கள் கதைகூறல் முழுவதும், கதை கூறுவதன் நோக்கமே குழந்தைகளுக்கு முக்கியமான ஒன்றைக் கற்பிப்பதே என்பதை நினைவில் வைத்திருக்க விரும்புவீர்கள். நீங்கள் கதையை களிப்புடனும் உணர்வுடனும் கூறும்போது, அவர்கள் அதை நன்றாகப் புரிந்துகொள்வார்கள். சலிப்பாக கூறப்படும் கதையில் குழந்தைகள் ஆர்வம் காட்டப்போவதில்லை. நீங்கள் மகிழ்ச்சி, துக்கம், ஏமாற்றம், அச்சம், துணிச்சல் ஆகியவற்றை உங்கள் குரலில், முகபாவனையில் மற்றும் சைகைகளில் வெளிப்படுத்திட கற்றுக்கொள்ள வேண்டும். கதையின் வளர்ச்சிக்கு ஏற்ப உங்கள் குரலின் தொனியும் அளவும் மாறவேண்டும், மற்றும் உங்கள் சைகைகள், எளியனவாக இருந்தாலும் அவை ஒவ்வொரு பகுதிக்கும் ஒத்ததாக இருக்கவேண்டும். உங்கள் மொழிவின் லயம் மற்றும் வேகம் குறித்தும் நீங்கள் சிந்திக்க வேண்டும். நீங்கள் மிகவும் மெதுவாகப் பேசினால், குழந்தைகள் சலிப்படைந்துவிடுவார்கள்; விரைவாகப் பேசினால், அவர்கள் கதையைப் பின்பற்ற முடியாது. யாவற்றுக்கும் மேற்பட்டு, நீங்கள் நடிக்கவில்லை என்பதையும் உங்கள் உணர்வுகள் நேர்மையுடன் இருப்பதையும் நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும். நேர்மையின்மையை குழந்தைகள் எளிதில் கண்டுகொள்வார்கள். இங்கு விரும்பப்படுவது யாதெனில், குழந்தைகளின் உள்ளங்களுடன் இணைதலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, மனிதகுலத்தால் பெறப்பட்ட ஞான சேமம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டுவந்துள்ள கதைகூறும் நீண்டகால பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லலும் ஆகும்.

## பகுதி 23

கதைகூறலை அடுத்து வரும் இரண்டு நடவடிக்கைகளைப் பரிசீலிப்போம் – விளையாடல்களும் வர்ணமடித்தலும். இந்தப் பகுதியில் விளையாடல்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நேரத்தை எவ்வாறு அணுகுவது என்பதைப் பற்றி கலந்துரையாடுவோம், வர்ணமடித்தலை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போன்று, கிரேட் 1'இல் உள்ள விளையாடல்கள் இயல்பில் ஒத்துழைப்பு சார்ந்தவை. விளையாட்டுகள் சவால்கள் மிக்கவையாக இருப்பதற்கு, குழந்தைகள் ஒருவர் மற்றவருடன் போட்டியிட வேண்டுமென பல மக்கள் நினைக்கின்றனர். நாம் உணர வேண்டிய விஷயம் யாதெனில், குழந்தைகள் போட்டியிட வேண்டிய சூழ்நிலைகள்

ஏற்படும்போது, சில விரும்பத்தகாத மனப்பான்மைகளும் பழக்கங்களும் விளையாட்டிற்குப் பிறகும் நீடிக்கும் என்பதாகும். மேலும், போட்டியிடுதலின் மூலமாக மட்டுமே சிறப்புயர்வு பெற இயலும் எனும் ஓர் எண்ணமுண்டு. இந்த எண்ணத்தின் வாய்மையை நாம் அணுக்கமாக ஆராய வேண்டும். ஒத்துழைப்பின் மூலம் சிறப்புயர்வை அடைய முடியாது என்பது உண்மையா? போட்டியில், சிலர் வெல்கின்றனர், சிலர் தோற்கின்றனர்; (ஆனால்), ஒத்துழைப்பில், அனைவருமே சாதனையாளர் எனும் உணர்வைப் பெறுகின்றனர்.

முதல் கிரேட்'டில் உள்ள விளையாட்டுகள், குழந்தைகளில், செவிமடுத்தல் மற்றும் கீழ்ப்படிதல் திறன்களை மேம்படுத்திட முயல்கின்றன. ஒவ்வொரு விளையாட்டும் வகுப்பு முழுவதற்கும் ஒரு பொது இலக்கை ஸ்தாபிப்பதுடன் அவர்களின் முயல்வுகளை ஒருங்கிணைப்பதில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்குள்ளது என்பதை அவர்கள் காண்பார்கள். யாவற்றுக்கும் மேலாக, அவர்கள் ஒருவர் மற்றவரின்பால் வெளிப்படுத்தும் அக்கறையின் அளவை அதிகரிப்பர், விடாமுயற்சியை கற்பர், மற்றும் அவர்களை இணைத்திடும் நட்பின் பந்தங்களை வலுப்படுத்திக்கொள்வர். மேலும், ஒரு வெற்றியுணர்வைப் பெறுவதற்கு அவர்கள் ஒரு விளையாட்டை பூரணமாக விளையாட வேண்டியதில்லை என்பதை நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, பாடம் 1'இல் பரிந்துரைக்கப்படும் விளையாட்டைப் பார்க்கவும். விரும்பப்படும் குறிக்கோள்களுக்கு அது எவ்வாறு பங்களிக்கின்றது?

**அடுத்து வரும் நடவடிக்கைக்கு, தரையில் ஒரு காரின் டயரைக் கிடத்தவும். பின்னர், அதில் ஒரே நேரத்தில் எத்தனை குழந்தைகள் நிற்க முடியும் என்பதை அவர்களின் கேளுங்கள். ஒரு டயர் கிடைக்கவில்லையெனில், ஒரு சிறு பாய் அல்லது ஒரு துண்டு துணியை அல்லது அது போன்று வேறு ஒரு பொருளைப் பயன்படுத்தவும். நீங்கள் எதைத் தேர்ந்தெடுத்தாலும், வகுப்பிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் அது ஒரு சவாலாக இருப்பதற்கு சிறிதாக இருக்க வேண்டும்.**

ஆசிரியர் ஒரு விளையாட்டை அறிமுகப்படுத்தும் முறையானது குழந்தைகள் அதை எவ்வாறு விளையாடுகின்றனர் என்பதை பாதிக்கின்றது. அதன் குறிக்கோள் தெளிவாக விளக்கப்பட வேண்டும். மேலும், குழந்தைகளுக்கு விதிமுறைகளை வழங்கும் போது, ஆசிரியர் அதை எவ்வாறு விளையாடுவது என்பதை எடுத்துக்காட்டி, அதைக் குழந்தைகளுடன் பயில வேண்டும்.

## பகுதி 24

குழந்தைகளின் படைப்பாற்றல் மற்றும் மன திறன்களை வளர்ப்பதற்குக் கலை நடவடிக்கைகள் முக்கியமாகும். மேலும், சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு ஃப்ரீஸ்டைல் வரைதல் மற்றும் பிற கலை வெளிப்பாடுகள் மூலம் அவர்களின் கற்பனைத்திறனைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இருப்பினும், உலகின் பல பகுதிகளில், குழந்தைகள் ஐந்து அல்லது ஆறு வயதிற்கு முன்பே சித்திரம் வரைவதற்கான வாய்ப்பை அரிதாகவே பெற்றிருப்பார்கள், மற்றும் மிகக் குறைவாகவே க்ரேயான்களுக்கான அணுகலும் இருந்திருக்கும். அவர்களைப் பொறுத்தவரை, முதல் கிரேட்'டில் பாடங்களுடன் வழங்கப்பட்ட

படங்களுக்கு வர்ணம்தீட்டுதல் வகுப்பின் மிகவும் உற்சாகமான நேரங்களில் ஒன்றாகும், மேலும் இது அடுத்தடுத்த கிரேட்களில் மிகவும் பலக்கியமான கலை நடவடிக்கைகளுக்குச் செல்ல தேவையான நம்பிக்கையை உருவாக்குகிறது. இது அவர்களின் திறன்கள் மற்றும் கட்டுப்பாட்டுணர்வை வளர்ப்பதற்கான ஒரு வழியும் ஆகும். பின்வரும் திறமைகள், திறன்கள் மற்றும் மனப்பான்மைகள் வர்ணம்தீட்டுதல் மூலம் குழந்தைகளில் எவ்வாறு மேம்படுத்தப்படுகின்றன?

- ஒழுங்கு மற்றும் அழகை மதித்துணர கற்பது
- விவரக்கூறுகளுக்கு கவனம் செலுத்தல்
- இருக்கும் பணியில் கவனம் செலுத்தல்
- பிறருடன் உபகரணங்களைப் பகிர்ந்துகொள்ளல்
- பிறரை மதித்தல்

சில திறன்களையும் மனப்பான்மைகளையும் வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், வர்ணம்தீட்டுதலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பு நேரம் ஆசிரியருக்குத் தனது மாணவர்களுடன் கிரேட் 1'இன் பாடங்களில் கவனம் செலுத்தப்பட்ட பண்புகளைப் பற்றி விவாதிக்க மற்றொரு வாய்ப்பை வழங்குகிறது. படங்களில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி கேட்கும்போது ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு (அதில் வரும்) யோசனைகள் பற்றி பேசவும், அவர்களின் மனதில் இணைப்புகளை ஏற்படுத்தவும் வாய்ப்பளிக்கலாம். முதல் பாடத்திற்கான வர்ணம் தீட்டும் தாளைப் பாருங்கள். அதை எப்படி குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவீர்கள் என்பதை உங்கள் குழுவுடன் ஆராயுங்கள். உங்கள் எண்ணங்களைக் கீழே எழுதவும்.

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

இந்த நடவடிக்கைக்கு ஓர் ஆசிரியர் போதுமான அளவு தயார் செய்ய வேண்டும். குழந்தைகள் எப்போதும் வர்ணம் தீட்ட அதிக விருப்பம் காட்டுவார்கள்; இருப்பினும், வகுப்பின் இந்த பகுதி ஒழுங்காக ஒழுங்கமைக்கப்படாவிட்டால் குழப்பமாகிவிடும். குழந்தைகள் வர்ணம் பூசுவதற்கான இடம் அடையாளம் காணப்பட வேண்டும், மேலும் ஒவ்வொரு பாடத்திற்கும் வர்ணம்தீட்டுவதற்கான தாள்களின் நகல்கள் முன்பே தயாரிக்கப்பட வேண்டும். குறிப்பாக முதல் சில பாடங்களில், குழந்தைகள் எப்படி கிரேயான்களைப் பயன்படுத்துவது என்பது குறித்து ஒரு முறையை ஏற்படுத்தி, அவர்களுள் ஒழுக்கம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு ஆசிரியர் ஒரு முறையை உருவாக்க வேண்டும். ஆரம்பத்தில், ஒவ்வொரு குழந்தையும் ஆசிரியர் வைத்திருக்கும் பெட்டியில் இருந்து ஒரு க்ரேயானைத் தேர்ந்தெடுக்கும்படி கோரப்படலாம். அவர்கள் நிறங்களை மாற்ற விரும்பும் போது, அவர்கள் கிரேயானைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மற்றொண்டை மாற்றிக்கொள்ளலாம். பல

வகுப்புகளுக்குப் பிறகு, ஒரே நேரத்தில் ஒரே ஒரு நிறத்தை மட்டும் கொண்டிருப்பதை அவர்கள் பழக்கமாக் கொண்டுள்ளபோது, கிரேயான் பெட்டியை ஒரு மைய இடத்தில் விட்டுவைக்கலாம்.

பின்வரும் சூழல்களை கவனிக்கவும். ஒவ்வொரு ஜோடியிலும் எந்தச் சூழல் இந்த நடவடிக்கையின் விளைவுத்திறத்திற்குப் பங்களித்திட இயலும்?

___ ஒரு குழந்தை நன்றாக வர்ணம் தீட்டும்போது, அக்குழந்தை கோட்டிற்கு வெளியே வர்ணம் தீட்ட ஆசிரியர் அனுமதிக்கிறார்.

___ எல்லா குழந்தைகளுமே கோடுகளுக்கு உள்ளே மட்டும் வர்ணம் தீட்ட கோரப்படுகின்றனர்.

___ குழந்தைகள் வர்ணம் தீட்டும் போது, ஆசியர் அவர்களுக்கிடையே நடந்து, அவர்களுக்கு உதவியும் ஊக்கமும் வழங்குகிறார்.

___ குழந்தைகள் வர்ணம் தீட்டும்போது, ஆசிரியர் அமர்ந்துகொண்டு தமது சொந்தப் பணிகளில் சிலவற்றில் ஈடுபடுகின்றார்

___ வர்ணம் தீட்டுவதற்குக் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில், தங்கள் வேலைகளில் குழந்தைகள் கவனம் செலுத்துகின்றனர்.

___ வர்ணம் தீட்டுவதற் வர்ணம் தீட்டுவதற்கான நேரத்தில், குழந்தைகள் ஒருவர் மற்றவரை தொந்திரவு செய்கின்றனர்.

___ வர்ணம் தீட்டும்போது குழந்தைகள் மிகவும் அமைதியாக இருக்கின்றனர்.ியாக இருக்கின்றனர்.

___ வர்ணம் தீட்டும்போது, குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பரஸ்பரமாக செயல்பட்டும், ஒருவர் மற்றவரை ஊக்குவிக்கவும் செய்கின்றனர்.

# பகுதி 25

பல ஆசிரியர்கள், தாங்கள் போதிக்கும் சிறுவர் குழு குறித்த சில அடிப்படை தகவல்கள் எழுதி வைப்பதற்கு ஒரு நோட்புக்கை வைத்திருப்பது பயனுடையாதாக இருந்திட காண்கின்றனர். இதன் தொடர்பில் இரண்டு பட்டியல்கள் உதவியாக இருக்கும். ஒன்றில் மாணவர்கள் வகுப்பில் ஆஜராவதைக் குறிப்பதற்கு அவர்களின் பெயர்கள் மற்றும் வயதை எழுதி வைப்பதற்கும் மற்றது, மேற்கோள்களை மனனம் செய்வதில் அவர்களின் மேம்பாட்டைக் குறிப்பதற்குமாகும். பிந்தைய இந்தப் பட்டியல், உதாரணத்திற்கு, குழந்தைகளின் பெயர்களை இடதுபுறமும் பாட எண்களை மேற்புறமும் வரிசையாகக் கொண்டிருக்கலாம். பின்னர், ஆசிரியர் எந்த மாணவர் எந்த மேற்கோள்களை மனனம் செய்துள்ளார் என்பதை பொருத்தமான இடத்தில் குறித்து வைக்கலாம்.

குறிப்பிட்ட நோட்புக்கில், பாடங்களுக்கென ஒரு பகுதி அர்ப்பணிக்கப்படலாம். அதில் பாடங்கள் குறித்த தங்களின் பகுப்பாய்வையும் அவற்றை எவ்வாறு போதிப்பது என்பது குறித்தும் பின்னர், மாணவர்களுடனான தங்கள் அமர்வுகள் எவ்வாறு மடிப்பவிழ்ந்தன என்பது குறித்தும் தங்களின் பிரதிபலிப்புகளை ஆசிரியர்கள் பதிவு செய்யலாம்

மற்றொரு பகுதியில், ஒவ்வொரு குழந்தையின் மேம்பாட்டையும், அக்குழந்தையின் பெற்றோருடன் பகிரந்துகொள்ளக்கூடிய வேறு ஏதாவது விஷங்களையும் குறித்து வைக்கலாம். சில ஆசிரியர்கள், இதே பகுதியில் குழந்தைகளின் பெற்றார் மற்றும் உடன்பிறப்புகளின் பெயர்களையும் அவர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தபோது அவர்களுடன் பேசப்பட்ட சில கருப்பொருள் பற்றியும் குறித்து வைப்பது உதவியாக இருந்திடும்.

## பகுதி 26

ஒரு குழந்தைகள் வகுப்பின் ஆசிரியர் எனும் முறையில், குழந்தைகள் ஒவ்வொருவரின் பெற்றோர்களுடனும் ஓர் அணுக்கமானதும் அன்பானதுமான உறவை நீங்கள் உருவாக்கிக்கொள்ள வேண்டும்; அவர்கள் குழந்தையின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து கலந்துரையாட அவர்களை வழக்கமாக சந்தித்து அவர்களின் ஆதரவை நாட வேண்டும். நீங்கள் நூல் 2'ஐ முடித்த பிறகு, உங்கள் சமூகத்தில் குழந்தைகள் வகுப்புகளில் பங்கேற்கும் குழந்தைகளின் குடும்பங்களை நீங்கள் ஏற்கனவே சந்தித்திருப்பீர்கள் உங்கள் சிந்தனையை மீண்டும் தூண்டுவதற்கு, அந்த நூலின் பகுதி 15'ஐ மீண்டும் காண்பதற்கு நீங்கள் விரும்பலாம். அந்த பிரிவில், குழந்தைகள் வகுப்புகளின் ஆசிரியரான மாரிபெல், எம்மாவின் தாயாரிடம் தனது இரண்டாவது விஜயத்தின் போது தான் என்ன சொல்லப்போகிறார் என்பதைப் பற்றிய தனது எண்ணங்களை எவ்வாறு ஒன்றுதிரட்டுகிறார் என்பதைப் பார்க்கிறோம். வகுப்பில் எம்மாவின் இருப்பு தனது இதயத்தில் ஏற்படுத்தும் மகிழ்ச்சியை அவரிடம் சொல்லி, அவர் மகளிடம் தான் கண்டுபிடித்த அற்புத குணங்களை அவரிடம் குறிப்பிடுவதன் மூலம் ஆரம்பிக்க மாரிபெல் முடிவு செய்கிறாள். ஓர் ஆசிரியர் எத்தகைய மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்துடன் சமூகத்தின் குழந்தைகளுக்கு சேவை செய்கிறார் என்பதைப் பெற்றோர்கள் பார்ப்பது எவ்வளவு முக்கியமாகும்? பெற்றோரின் இதயங்களை ஈர்க்கும் மற்றும் அவர்களுடன் நம்பிக்கைக்கான பிணைப்புகளை உருவாக்கும் வேறு சில பண்புக்கூறுகள் யாவை?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

ஓர் ஆசிரியர், ஒரு பெற்றோரின் குழந்தை தனக்குள் உருவாக்கி வரும் ஆன்மீகப் பண்புகளை அதன் பெற்றோரின் கவனத்திற்குக் கொண்டுவருதல் ஏன் முக்கியமாகும்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இந்த கிரேடின் பிரிவு 3'இல் நீங்கள் படித்த மேற்கோளை எம்மாவின் தாயாரிடம் பகிர்ந்து கொள்ளவும், குழந்தைகளின் கல்விக்கான அதன் தாக்கங்களை அவருடன் ஆராயவும் மாரிபெல் முடிவு செய்கிறாள். நீங்கள் பெற்றோருடன் ஈடுபடும் பல உரையாடல்களில், குழந்தைகள் வகுப்பு திட்டத்திற்கு வடிவம் கொடுத்த கல்வி யோசனைகளை விளக்கும் வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும். இந்தப் பிரிவில் நீங்கள் பரிசோதித்த சில கருத்துகள் கீழே உள்ளன. தங்கள் குழந்தைகளின் ஆன்மீகக் கல்வியின் சூழலில் பெற்றோரிடம் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் நீங்கள் என்ன சொல்வீர்கள்? பெற்றோர்களுடனான உங்கள் உரையாடல்களில் நீங்கள் பகிர்ந்து கொள்ளும் ஒன்று அல்லது மற்றொரு கருத்துடன் தொடர்பான திருவாக்குப் பத்திகள் ஏதேனும் உள்ளனவா?

ஒரு பாராட்டுக்குரிய நடத்தையின் உருவாக்கம்: ______________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

ஆன்மீகப் பண்புகளை அடைதல்: __________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

குழந்தகைளின் உள்ளங்களில் பிரார்த்தனைகளின் தாக்கம்: ______________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இறைவாக்குகளை மனனம் செய்வதன் முக்கியத்துவம்: ________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

குழந்தைகளிடம் அப்துல்-பஹா வாழ்வு பற்றிய கதைகளின் மேம்படுத்தும் செல்வாக்கு: ___

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

கடவுளிடம் அன்பும் கடவுளிடனு பயமும்: ______________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

ஒழுக்கமும் சுதந்திரமும்: ______________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

மேரிபெல், எம்மா'வின் தாயார் தமது எண்ணங்களை வெளிப்படுத்திட அவரை அழைப்பதற்காக, தனது வழங்கலை சிறிது நேரம் நிறுத்துவதற்க முடிவு செய்தாள். காலப்போக்கில் ஆசிரியர் மற்றும் குழதைகளின் பெற்றோருக்கிடையில் ஓர் ஆழமான உரையாடல் உருவாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆசிரியர்கள், பெற்றோருடனான முதல் சந்திப்பிலிருந்து, அவர்களிடமிருந்து தற்போது பரிசீலிக்கப்படும் கருப்பொருள்கள் பற்றிய விமர்சனங்கள், சிந்தனைகள், யோசனைகள் ஆகியவற்றை வருவிப்பது ஏன் முக்கியமாகும்?

ஆன்மீகப் பண்புகள் குறித்த பொது கருத்தாக்கத்தை பெற்றோருடன் விவாதிப்பதற்கும் கூடுதலாக, அவர்களின் பிள்ளைகளுள் பாடங்கள் பேணிட முயலும் குறிப்பிட்ட பண்புகளைப் பற்றி உரையாடுவதற்கு, வருடம் முழுவதும் ஏற்படும் வாய்ப்புகளை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பாடம் 1'இல் குறித்துரைக்கப்பட்ட தூய்மையான உள்ளம் பற்றிய பண்பு குறித்து நீங்கள் அடைந்துள்ள அகப்பார்வைகளை மனதில் கொண்டு, உங்கள்

படிப்பாய்தல் குழுவின் உறுப்பினருடன் இத்தகைய ஓர் உரையாடலை நீங்கள் எவ்வாறு அணுகுவீர் என்பதை ஆராயவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

எம்மா கலந்துகொள்ளும் வகுப்புகளின் முழு பயனையும் எம்மா பெற வேண்டுமானால் தனக்கும் எம்மாவின் தாயாருக்கிடையிலும் ஒரு பரஸ்பர பரிதலும் ஆதரவும் தேவை என்பது குறித்து மேரிபெல் அறிவாள். உதாரணத்திற்கு, வகுப்பில் கற்றுக்கொள்ளப்படும் பிரார்த்தனைகளும் மேற்கோள்களும் வீட்டில் பெற்றோரின் உதவியுடன் கூறப்படலாம். இவ்வழியாக, குழந்தைகள் தங்கள் உள்ளங்களிலும் ஆன்மாக்களிலும் ஊடுருவி தங்களின் நடத்தைகூறுகளை வடிவமைக்கவிருக்கும் திருவாக்குகளை மேலும் சிறப்பாக உள்வாங்கிட இயலும். உங்கள் குழு உறுப்பினர்களுடன், ஆசிரியர்களின் முயற்சிகளை பெற்றோர் எவ்வழிகளில் மறுவலுப்படுத்தவும் ஆதரிக்கவும் இயலும் என்பதை விவாதிக்கவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

குழந்தைகளுள் உள்ளம் மற்றும் மனம் சார்ந்த, விரும்பப்படும் மனப்பான்மைகள், நீண்டகாலத்தினூடே முறையான கல்வியின் மூலம் மட்டுமே பேணப்பட முடியும் பெற்றோர்களுடனான உங்களின் கிரமமான சந்திப்புகளில், அவர்கள் குழந்தைகளின் முன்னேற்றமே வலியுறுத்தப்பட வேண்டுமென்பது இன்னேரம் உங்களுக்குத் தெளிவாக இருக்கும். உங்கள் உரையாடல்கள் மேம்பாடு காண்கையில், இந்த சாதனைகளின் அடிப்படையில் மேலும் முன்னேற்றங்களை எவ்வாறு அடைவது என்பதைப் பெற்றோருடன் ஆராயலாம். இத்தகைய ஒரு நேர்மறை தொடர்புமுறை ஸ்தாபிக்கப்பட்டவுடன், பெற்றோரின் குழந்தைகளில் ஆசிரியர்கள் அவதானிக்கும் சிரமங்கள் எதாகிலும் இருப்பின் அவற்றை வெகு கவனத்துடன் அப்பெற்றோருடன் பகிர்ந்துகொள்ளலாம். ஒரு குழந்தை தனது சிரமங்களை எதிர்கொள்வதற்கு உதவிடும் ஓர் உடனுழைத்தல் வழியைக் காண்பதே இதன் நோக்கமாக இருக்கவேண்டும். பெற்றோருடன் இத்தகைய ஓர் ஆணித்தரமான தொடர்புமுறையை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றி உங்கள் குழுவினருடன் கலந்துரையாடவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

---

---

## பகுதி 27

பாடப்பிரிவின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இப்பயிற்சியில் பங்கேற்கும் அனைவருமே ஒரு குழந்தை வகுப்பை ஆரம்பிக்கப் போவதில்லை. அவ்வாறு ஆரம்பிக்கும் சிலர், சில காலத்திற்கு ஒரு வகுப்பை நடத்திவிட்டு, அதன் பின்னர் வேறொரு சேவையை நாடிச் சென்றுவிடுவர். மேலும் சிலர், இந்த சேவைக்குத் தங்களை அர்ப்பணித்து, நீண்டகாலத்திற்கு வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி, குழந்தைகளை கடவுள் அன்பில் பேணிவருவர். இருப்பினும், பங்கேற்பாளர்கள் மேற்கொள்ளவிருக்கும் பாதைக்கும் அப்பால், அனைவருமே தங்கள் சமூகத்தின் இளைய உறுப்பினர்களுடன் பரஸ்பரமாகத் தொடர்புகொள்வதற்கான வாய்ப்புகள் நேரிடும். அது, தங்கள் அண்டையர்களுக்கு விஜயம் செய்யும் போதோ கூட்டங்களிலும் ஒன்றுகூடல்களிலும் கலந்துகொள்ளும் போதோ அல்லது குழந்தைகளின் சகோதரர்களும் பெற்றோர்களுமாக இருக்கலாம். எவ்விதமான சூழ்நிலையாக இருப்பினும், இப்பாடப்பிரிவில் ஆராயப்படும் கருத்தாக்கங்களும் யோசனைகளும், உலக நீதிமன்றம் கூறுவது போன்று, ஒரு சமூகத்தின் "மிக விலைமதிப்பற்ற பொங்கிஷங்களை" பாதுகாப்பது குறித்து பங்கேற்பாளர்களுக்கு அகப்பார்வைகள் வழங்கிடும். மானிடத்தின் பிரகாசமான எதிர்காலத்தை நம்பிக்கை நிறைந்த கண்களுடன் பார்க்கும் போது, அதிலிருந்து உத்வேகம் மற்றும் ஊட்டத்தை பின்வரும் மேற்கோள்களிலிருந்து நாம் அனைவரும் பெறுவோமாக.

> **கடவுளின் ஊழியர்களிடையே கடவுள் திருவாக்கு ஆராதிக்கப்படுவதற்கும் படைப்புலகின் முன்னேற்றம் ஆன்மாக்களின் மேம்பாடு ஆகியவற்றிற்கும் வழிவகுத்திடுவதை யாம் மனிதர் அனைவருக்கும் பரிந்துரைக்கின்றோம். குழந்தையின் கல்வியே இதை அடைவதற்கான மகத்தான வழிமுறையாகும்"[38]**

> **குழந்தைகளுக்கான கல்வியும் பயிற்சியும் மனுக்குலத்தின் மிக மெச்சத்தகுந்த செயல்களாகும்; அவை சகல கருனைமிக்கவரின் கிருபையையும் அருளையும் கவர்ந்திழுக்கும்; ஏனெனில், கல்வியே எல்லா மனித சிறப்புகளுக்கும் இன்றியமையாத அடித்தளமாகும்; மனிதனை என்றும் நிலையான பேரொளியின் சிகரங்களை நோக்கி முன்னேற்றம் காண்பதற்கு வழிவகுத்திடும். அதன் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு குழந்தை பயிற்றுவிக்கப்பட்டால், புனித தோட்டக்காரரின் கனிவான கவனிப்பின் கீழ்,**
> **வழிந்தோடும் ஓடைகளுக்கிடையிலுள்ள ஓர் இளமரத்தை போன்று, அது ஆவி, அறிவு ஆகியவற்றின் தெளிந்த நீர்களைப் பருகிடும். மேலும், நிச்சயமாக அக்குழந்தை உண்மை எனும் சூரியனின் பிரகாசமான ஒளிக்கதிர்களைத் தனக்கென திரட்டிக்கொண்டு, அதன் ஒளி, வெப்பம் ஆகியவற்றின் மூலம் வாழ்வென்னும் பூங்காவில் என்றும் பசுமையாகவும் சிறப்பாகவும் வளர்ந்திடும்.**

> **"இந்த மகத்தான காரியத்தில், ஒரு மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால், மானிட உலகமானது, பிற அனிகலன்களுடன் பிரகாசித்து, மிகுந்த வெள்ளொளியையும் பொழிந்திடும். அதன் பிறகே இந்த இருள்சூழ்ந்த இடம் ஒளிபெற்று, இந்த உலகம் என்னும் உறைவிடம் சொர்க்கமாக மாறிடும்."[39]**

# குறிப்புகள்


1. From a message dated 21 April 2000, published in *Messages from the Universal House of Justice, 1986–2001: The Fourth Epoch of the Formative Age* (Wilmette: Bahá'í Publishing Trust, 2010), no. 331.26, p. 727.
2. Bahá'u'lláh, in "A Compilation on Bahá'í Education", compiled by the Research Department of the Universal House of Justice, published in *The Compilation of Compilations* (Maryborough: Bahá'í Publications Australia, 1991), vol. 1, no. 576, p. 251.
3. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing, 2010, 2015 printing), no. 106.1, p. 187.
4. 'Abdu'l-Bahá, in "A Compilation on Bahá'í Education", published in *The Compilation of Compilations*, vol. 1, no. 614, pp. 273–74.
5. *Gleanings from the Writings of Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing Trust, 1983, 2017 printing), CXXII, par. 1, p. 294.
6. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 108.1, p. 188.
7. Ibid., no. 110.2, p. 190.
8. Ibid., no. 100.2, p. 179.
9. Ibid., no. 99.1, pp. 178–79.
10. Ibid., no. 103.5, p. 183.
11. Ibid., no. 122.1, pp. 198–99.
12. Words of 'Abdu'l-Bahá, cited in *Star of the West*, vol. 8, no. 4 (17 May 1917), p. 41.
13. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CXXXVI, par. 2, p. 334; also in *Bahá'í Prayers: A Selection of Prayers Revealed by Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 2002, 2017 printing), p. iii.
14. From a talk given on 5 August 1912, published in *The Promulgation of Universal Peace: Talks Delivered by 'Abdu'l-Bahá during His Visit to the United States and Canada in 1912* (Wilmette: Bahá'í Publishing, 2012), par. 6, p. 345.
15. 'Abdu'l-Bahá, in *Prayer and Devotional Life: A Compilation of Extracts from the Writings of Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá and the Letters of Shoghi Effendi and the Universal House of Justice*, compiled by the Research Department of the Universal House of Justice (Wilmette: Bahá'í Publishing, 2019), no. 24, p. 7.
16. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, XLIII, par. 9, p. 109.
17. From a talk given by 'Abdu'l-Bahá on 24 April 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 1, p. 71

18. Bahá'u'lláh, *The Hidden Words* (Wilmette: Bahá'í Publishing Trust, 2003, 2012 printing), Arabic no. 3, p. 4.
19. Ibid., Arabic no. 12, p. 6.
20. Ibid., Arabic no. 11, p. 6.
21. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CXXVIII, par. 6, p. 313.
22. *The Call of the Divine Beloved: Selected Mystical Works of Bahá'u'lláh* (Haifa: Bahá'í World Centre, 2018), no. 2.43, p. 31.
23. *The Hidden Words*, Arabic no. 59, p. 17.
24. From a talk given by 'Abdu'l-Bahá on 26 May 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 1, p. 204.
25. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 129.2, p. 204.
26. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, CLV, par. 4, pp. 376–77.
27. Ibid., CLIII, par. 5, p. 369.
28. *The Hidden Words*, Arabic no. 9, p. 5.
29. From a talk given by 'Abdu'l-Bahá on 24 April 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 4, p. 73.
30. Bahá'u'lláh, *Epistle to the Son of the Wolf* (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2016 printing), p. 27.
31. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas* (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2005 printing), no. 8.53, p. 126.
32. 'Abdu'l-Bahá, *The Secret of Divine Civilization* (Wilmette: Bahá'í Publishing, 2007, 2016 printing), par. 74, p. 53.
33. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 111.1, p. 191.
34. Ibid., no. 95.2, pp. 176–77.
35. Ibid., no. 111.4, pp. 191–92.
36. Ibid., no. 124.1, p. 200.
37. 'Abdu'l-Bahá, in *Bahá'í Prayers*, p. 29.
38. From a Tablet revealed by Bahá'u'lláh, in *Social Action: A Compilation Prepared by the Research Department of the Universal House of Justice* (Wilmette: Bahá'í Publishing Trust, 2020), no. 178, p. 107.
39. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 103.1–3, p. 182.



# குழந்தைகள் வகுப்புகளுக்கான பாடங்கள்

## நோக்கம்

பிரார்த்தனைகளையும் மேற்கோள்களையும் மனனம் செய்தல், பாடல்கள், கதைகள், விளையாட்டுகள், வர்ணம் தீட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய, நடத்தையைச் செம்மைப்படுத்தல் மீது கவனம் செலுத்தும், ஐந்து அல்லது ஆறு வயதுடைய குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்கான திறனாற்றலை உருவாக்கிக்கொள்வத

## பகுதி 1

கடைசி அலகில், முதல் வகுப்பில் உங்கள் கற்பித்தல் முயற்சியின் தன்மையைப் பற்றி நீங்கள் சிந்தித்து, ஒரு பாடத்தை உருவாக்கும் பல்வேறு கூறுகளை ஆய்வு செய்தீர்கள். இந்த இரண்டாவது அலகு இருபத்தி நான்கு பாடங்களைக் கொண்டுள்ளது, இது உங்களுக்குத் தெரிந்தபடி, ஆன்மீப் பண்புகளின் வளர்ச்சியைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆரம்பப் பிரிவுகளில், பாடங்களின் உள்ளடக்கத்துடன் உங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளவும், அவற்றை நடத்துவதைப் பயிற்சி செய்யவும் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். நாம் என்ன செய்வோமென்றால், ஒரு நேரத்தில் நான்கு பாடங்களை எடுத்து, ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மீகப் பண்புகளைப் பற்றி பிரதிபலிப்போம். அடுத்த நான்கு பாடங்களுக்குச் செல்வதற்கு முன், முறைகள் எடுத்துக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளைச் செய்து உங்கள் பங்கேற்பாளர்களுடன் பாடங்களை விரிவாகப் படிப்பதற்கு ஊக்குவிக்கப்படுவீர்கள்.

## பகுதி 2

தரம் 1 இல் உள்ள ஒவ்வொரு வகுப்புக் காலகட்டமும் ஆசிரியரால் வாசிக்கப்படும் தொடக்க பிரார்த்தனையுடன் துவங்க வேண்டும். ஒரு உதவியாக, மொத்த எண்ணிக்கையான ஆறு பிரார்த்தனைகளில் ஒவ்வொரு நான்கு பாடங்களுக்கும் ஒரு புதிய பிரார்த்தனை பரிந்துரைக்கப்படும், இந்த பிரார்த்தனைகளை உங்களால் நினைவுபடுத்த முடிந்தால், அது குழந்தைகளை அவர்களின் சொந்த மனனம் செய்யும் முயற்சியில் பெரிதும் ஊக்குவிக்கும். 1 முதல் 4 வரையிலான பாடங்களுக்கு, பின்வரும் பிரார்த்தனை பரிந்துரைக்கப்படுகிறது:

> **“கடவுளே! இக் குழந்தைகளுக்குக் கல்வியளிப்பீராக. இக் குழந்தைகள் உமது பழத் தோட்டத்தின் செடிகள்; உமது புல் வெளியின் மலர்கள்; உமது தோட்டத்தின் ரோஜாக்கள். உமது மழை அவர்கள் மீது பொழிந்திடுமாக; மெய்ம்மைச் சூரியன் உமது அன்பினைக் கொண்டு அவர்கள் மீது பிரகாசித்திடுமாக; உமது தென்றல் அவர்களுக்குப் புத்துணர்ச்சி அளித்திடுமாக, அதனால் அவர்கள் பயிற்சி பெற்று, வளர்ந்து, முன்னேற்றமடைந்து, பூரண அழகுடன் தோற்றம் அளிக்கக் கூடும். வழங்குபவர் நீரே; இரக்கமுடையவர் நீரே.”[1]**

மேலே உள்ள பிரார்த்தனையைச் செய்த பிறகு, சில குழந்தைகளுக்கு மனப்பாடமாகத் தெரிந்த ஒன்றைச் சொல்ல நீங்கள் ஊக்குவிப்பீர்கள். ஆரம்பத்தில், அனைத்து இளைஞர்களும் வகுப்பின் இந்த பகுதிக்கு பங்களிக்க முடியாது. எவ்வாறாயினும், படிப்படியாக, மேலும் அதிகமானோர்அவ்வாறு செய்ய முடியும், ஏனெனில் அவர்கள் இந்த வகுப்பில் கற்றுக் கொள்ளும் பிரார்த்தனைகளை நினைவில் வைத்துக் கொள்வார்கள். முந்தைய அலகினைப் பற்றிய உங்கள் ஆய்விலிருந்து, கீழே உள்ளதை நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறீர்கள், இந்த முதல் சில பாடங்களில் அவர்கள் தங்கள் முயற்சிகளை ஒருமுகப்படுத்துவார்கள்.

> **“அவரே கடவுள்! கடவுளே, என் கடவுளே! ஒரு முத்தைப் போன்ற ஒரு தூய உள்ளத்தை எனக்கருள்வீராக.”[2]**

ஆரம்ப பிரார்த்தனைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட காலம் மிகவும் முக்கியமானது; அது இறை பக்தியின் சூழ்நிலையை, கற்றலுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும். குழந்தைகளை ஒன்று சேர்ப்பது மற்றும் அவர்களுக்கு பிரார்த்தனைகளை கற்பிப்பது அவர்களின் இதயங்களுக்கு "மகிழ்ச்சியைத் தருகிறது" என்று 'அப்துல்-பஹா கூறுகிறார். கடவுளுடனான உரையாடல் "உயர்ந்த புத்திசாலித்தனத்தின் சாத்தியக்கூறுகளை உருவாக்குகிறது".

கடவுள் மீது ஆழ்ந்த பயபக்தியை வளர்த்துக்கொள்வதற்கும், பிரார்த்தனை செய்யும் போது அதற்கேற்ப நடந்து கொள்வதற்கும் குழந்தைகள் உதவப்பட வேண்டும். அவர்கள் தாங்களாகவே ஜெபிக்கிறார்களோ அல்லது மற்றொரு குழந்தை வாசிக்கும் பிரார்த்தனையைக் கேட்கிறார்களோ, அவர்களுடைய இதயங்களையும் மனதையும் புனித வார்த்தையின் மீது மையப்படுத்த அவர்களுக்கு உதவி தேவைப்படலாம். பிள்ளைகள் எவ்வாறு பயபக்தியைக் காட்டலாம் -உதாரணமாக, அவர்கள் எப்படி உட்கார வேண்டும், அவர்கள் கவனச்சிதறல் கொள்ளாமல் இருக்க தங்கள் கைகளை என்ன செய்ய வேண்டும், அவர்களது கண்கள் அலைவதைக் கண்டால் அவற்றை என்ன செய்ய வேண்டும் என்று ஆசிரியர் அவர்களிடம் கேட்கலாம்.அவர்கள் எவ்வாறு பிரார்த்தனைக்குத் தங்களைத் தயார்படுத்துகிறார்கள் என்பதை ஆசிரியர் அவர்களை செய்துகாட்ட வைக்க முடியும். சத்தமும் அசைவும் இருக்கும்போது, ஒவ்வொரு குழந்தையும் ஒரு பிரார்த்தனையை ஓதுவதை விட  ஒரு ஆன்மீக சூழலில் மூன்று அல்லது நான்கு குழந்தைகள் பிரார்த்தனை செய்வது சிறந்தது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, ஒவ்வொரு வகுப்புக் காலத்தின் தொடக்கத்திலும் பிரார்த்தனை செய்யும் குழந்தைகளை முன்கூட்டியே தேர்ந்தெடுப்பது நல்லது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு வகுப்புகளுக்கு ஒரு முறையாவது ஒரு பிரார்த்தனையை வாசிக்க வாய்ப்பு வழங்கப்படுவதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

ஆண்டு முழுவதும், பிரார்த்தனையின் தன்மை மற்றும் நாம் ஏன் பிரார்த்திக்கிறோம் என்பதைப் பற்றி உங்கள் மாணவர்களுடன் அவ்வப்போது பேசுவது உங்களுக்கு முக்கியமானதாக இருக்கும். முதல் சில வாரங்களில் நீங்கள் அவர்களிடம் என்ன சொல்லலாம் என்பதை கீழே உள்ள இடத்தில் விவரிக்கவும்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## பகுதி 3

இப்போது உங்கள் குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து முதல் நான்கு பாடங்களை கவனமாக வாசிக்கவும். அறிமுகக் கருத்துகள் மற்றும் மாணவர்கள் மனனம் செய்யும் மேற்கோள்களுக்கு நீங்கள் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். நிச்சயமாக, முதல் பாடம் தூய்மையின் கருப்பொருளில் கவனம் செலுத்துகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அடுத்த மூன்று பாடங்களில் ஒவ்வொன்றும் சுற்றிவரும் ஆன்மீகப் பண்பினை எழுதுங்கள்.

பாடம்1: தூய்மை ______________________________________________

பாடம் 2: ______________________________________________

பாடம் 3 ______________________________________________

பாடம் 4: ______________________________________________

இந்தப் பாடங்களைக் கற்பிக்கத் தயாராகும்போது, முதல் அலகில் இதயத் தூய்மையைப் பற்றி நீங்கள் ஏற்கனவே செய்ததைப் போல, ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள பண்பினைப் பற்றி பிரதிபலிப்பதற்கு சிறிது நேரம் செலவிட வேண்டும். மற்ற மூன்று குணங்கள் தொடர்பான புனிதவாசகங்களில் இருந்து சில மேற்கோள்கள் கீழே உள்ளன. உங்கள் மாணவர்கள் மனனம் செய்யும் மேற்கோளை மனதில் வைத்து, ஒவ்வொரு தொகுப்பையும் உங்கள் குழுவுடன் பல முறை படித்து, பத்திகளை ஒன்றாக சேர்ந்து பிரதிபலிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. அதன்பிறக, தனிநபரின் வாழ்க்கை மற்றும் குறிப்பாக ஒரு ஆசிரியராக உங்கள் முயற்சிகளிலும் பண்பின் முக்கியத்துவம் குறித்து உங்கள் கருத்துக்கள் சிலவற்றை எழுதுங்கள். இந்த மேற்கோள்கள் உங்கள் வகுப்பில் உள்ள இளைஞர்களுக்காக அல்ல, உங்கள் சொந்த பிரதிபலிப்பிற்காக என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நீதியைப் பற்றி நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

**மனிதரின் அறிவொளி நீதியே. அதனைக் கொடுமை, கொடுங்கோன்மை ஆகிய எதிர்மாறான காற்றைக் கொண்டு அணைத்து விடாதீர். மனிதரிடையே ஒற்றுமையின் தோற்றமே நீதியின் குறிக்கோள்.**[3]

**“நீதியின் பிரகாசத்தைவிட வேறெந்தப் பிரகாசமும் அதனுடன் ஒப்பிடப்பட முடியாது. உலகின் ஒழுங்கமைப்பும் மனுக்குலத்தின் சாந்தியும் அதனைச் சார்ந்துள்ளன.”**[4]

**“தெய்வீக விவேகம் என்னும் சுவர்க்கமானது, கலந்துரையாடல், பரிவிரக்கம் என்னும் இவ்விரண்டு தீபங்களினின்று ஒளிபெறுகின்றது. உலக அமைப்பு என்னும் திருக் கூடாரமானது, சன்மானம், தண்டனை என்னும் இரு தூண்களின் மீது எழுப்பப் பட்டுள்ளது.”**[5]

**“ஆவியின் புத்திரனே! எனது பார்வையில் யாவற்றுக்கும் மேலாக அதி நேசிக்கத் தகுந்தது நீதியே; நீ என்னை விரும்பினால் அதனை விட்டு அப்பால் திரும்பிடாதே; அதனைப் புறக்கணிக்கவும் செய்யாதே; அதனால் யான் உன்னில் நம்பிக்கை வைக்கக்கூடும். அதன் துணையைக் கொண்டு, மற்றவர்களின் கண்களைக் கொண்டல்லாது, உனது சொந்தக் கண்களைக் கொண்டே காணலாம், உனது அண்டையரின் அறிவின் மூலமல்லாது உனது சொந்த அறிவின் மூலமாகவே அறியலாம். இதனை உனது உ ள்ளத்தினில் சிந்தித்துப்பார்; அது உனக்கு எத்துணைப் பொருத்தமானது! மெய்யாகவே, நீதியே யான் உனக்கு வழங்கியு ள்ள பரிசு; அதுவே எனது அன்புக் கருணையின் அடையாளமுமாகும். ஆகவே அதனை உனது கண் முன் வைப்பாயாக.”[6]**

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அன்பு எனும் பண்பினைப் பற்றி புனிதவாசகங்கள் நமக்குக் கூறுவது:

**“அன்பின் சாரம், மனிதன், அன்புக்குப் பாத்திரமானவரின்பால் இதயத்தைத் திருப்பி, அவரைத் தவிர மற்றதனைத்திலிருந்தும் தொடர்பறுத்துக்கொண்டு, தனது பிரபுவானவர் விரும்பியதைத் தவிர வேறெதனையும் நாடாதிருத்தல்.”[7]**

**“இந்நாளில், கடவுள் சமயத்திற்குச் சேவை செய்வதென்பது அவரது நண்பர்களிடையே அன்பு, தோழமை ஆகியவற்றை உருபெறச் செய்வதாகும்.”[8]**

**மானிட உலகில் தோழமை, அன்பு ஆகியவற்றை ஸ்தாபிப்பதே என்றென்றும் புனித அவதாரங்கள் வருகையின் நோக்கமாக இருந்துவந்துள்ளது.”[9]**

**அன்பே கடவுளின் புனித அருட்பணிக்காலத்தின் இரகசியம் என்பதையும், சர்வ கருணைமிக்கவரின் அவதரிப்பு என்பதையும், ஆன்மீகப் பொழிவுகளின் நீரூற்று என்பதையும் நீங்கள் உறுதியாக அறிவீர்களாக. அன்பே சொர்க்கத்தின் கருணைமிகு ஒளி, மனித ஆன்மாக்களை உயிர்பெறச் செய்யும் பரிசுத்த ஆவியின் நித்திய சுவாசக் காற்று.”[10]**

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

வாய்மை தொடர்பாக நாம் இவ்வாறு அறிவுறுத்தப்படுகிறோம்:

**கூறுவீராக: வாய்மையும் பணிவன்பும் உங்களின் அலங்காரமாகட்டும்."[11]**

**"வாய்மையின்றி, எந்த ஆன்மாவும் இறைவனின் எல்லா உலகங்களிலும் முன்னேற்றும் வெற்றியும் அடையவே முடியாது."[12]**

**"வாய்மையே அனைத்து நற்பண்புகளிலும் மிகச் சிறந்ததாகும், ஏனெனில், அது மற்ற அனைத்து நற்பண்புகளையும் தன்னில் உள்ளடக்கியுள்ளது. ஒரு வாய்மைமிக்க மனிதன் எல்லா தார்மீக பாதிப்புகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவான், எல்லா தீய செயல்களிலிருந்தும் ஒதுங்கிக்கொள்வான், எல்லா கொடிய செயல்களிலிருந்தும் காக்கப்படுவான். ஏனெனில், எல்லா தீமைகளும் தப்புகளும் வாய்மைக்கு எதிர்மாறானவையாகும்; ஒரு வாய்மைமிக்க மனிதன் அவையனைத்தையும் வெறுத்தொதுக்கிடுவான்."[13]**

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இப்போது, இந்தப் பாடங்களில் குழந்தைகள் மனப்பாடம் செய்யும் மேற்கோள்களை மனப்பாடம் செய்வதோடு, ஒவ்வொரு தொகுப்பிலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு பத்தியையாவது நினைவில் வைத்துக் கொள்ள நீங்கள் விரும்பலாம்.

## பகுதி 4

மேலே உள்ள பிரதிபலிப்பை மனதில் கொண்டு, முதல் நான்கு பாடங்களில் உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் கூறப்போகும் கதைகளை மீண்டும் படிக்கவும். நீங்கள் அவதானித்தது போல், நான்கில் மூன்று கதைகள் உயர்ந்த மனித இலட்சியங்களின் உருவகமான 'அப்துல்-பஹா'வின் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்டவை ஆகும். நீங்கள் தரம் 1 இல் கற்பிக்கும் சில பிள்ளைகள் இன்னும் 'அப்துல்-பஹா'வின் ஆளுமையை அறிந்திருக்காமல் இருக்கலாம், எனவே நீங்கள் அவரை அவர்களுக்கு சுருக்கமாக அறிமுகப்படுத்த வேண்டும். நூல் 2 இன் மூன்றாவது அலகில் நீங்கள் கற்றுக்கொண்டது அவருடைய தனித்துவமான நிலையத்தைப் பற்றிய உங்கள் சொந்த விழிப்புணர்வை அதிகப்படுத்தியுள்ளது, மேலும் இந்த வரிசையில் உள்ள பயிற்சிகளின் படிப்பில் நீங்கள் முன்னேறும்போது, 'அப்துல்-பஹா' வின் உருவில் இறைவன் மனிதகுலத்திற்கு வழங்கிய விலைமதிப்பற்ற பரிசுக்காக நீங்கள் அவருக்கு நன்றி செலுத்துவீர்கள்.. 1 ஆம் வகுப்பில் முதல் பாடத்தைத் தொடங்கும் குழந்தைகளுக்கு அவரைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

முதல் அலகின் உங்கள் ஆய்வில் இருந்து, குழந்தைகளுடன் கதைகளை தொடர்புபடுத்துவதில், நீங்கள் அவர்களை நிகழ்வுகளுக்கு அப்பால் அழைத்துச் செல்ல விரும்புவீர்கள் மற்றும் ஆன்மீக யதார்த்தத்தின் ஒரு பார்வையைப் பெற உதவுவீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். பாடம் 1ல் உள்ள 'அப்துல்-பஹா'வின் விருந்தினரின் கதை, தூய்மை எனும் பண்பின் முக்கியத்துவத்தையும், அதற்காகப் பாடுபடுவதன் அர்த்தம் என்ன என்பதையும் உங்கள் மாணவர்களுக்கு புரிந்துகொள்வதற்கு எப்படி உதவும் என்பதைப் பற்றி சிந்திக்க உங்களுக்கு ஏற்கனவே ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் அடுத்த மூன்று பாடங்களில் உள்ள கதைகளை ஆராய்வோம்.

நீங்கள் பார்த்திருப்பீர்கள், பாடம் 2ல், பாடத்தின் கருப்பொருளான ‘அப்துல்பஹாவின் நீதி குறித்த கவலையை விளக்கும் ஒரு கதையை நீங்கள் கூறுவீர்கள். ‘அப்துல்-பஹா ஒரு நாள் ‘அக்காவிலிருந்து ஹைஃபாவுக்குப் பயணம் செய்யும் போது நடந்த ஒரு சம்பவத்தை இது விவரிக்கிறது. கதையைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், குழந்தைகள் கிரகித்துக் கொள்ள வேண்டிய சில விவரங்கள் உள்ளன-உதாரணத்திற்கு, ஒரு வழக்கமான வண்டியில் உள்ள இருக்கைக்கும் ஒரு தனி வண்டியில் உள்ள இருக்கைக்கும் உள்ள வித்தியாசம். தேவைப்படுபவர்களுக்கு ஆன்மீக மற்றும் பொருள் சார்ந்த வாழ்வாதாரத்தை வழங்குவதற்காக ‘அப்துல்-பஹா தனது தனிப்பட்ட சௌகரியத்தை விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதை இது அவர்களுக்குப் புரிய வைக்கும். 'அப்துல்பஹாவின் வாழ்க்கை முறையானது - தேவையில்லாமல் தனக்காக செலவழிக்காமல், தேவைப்படுபவர்களுக்கு வழங்குவது- நீதியின் ஆன்மீக பண்பை வெளிப்படுத்தியது என்பதை உங்கள் மாணவர்களுக்கு எப்படி உறுதிப்படுத்துவீர்கள்? நீங்கள் கதையைச் சொல்வதற்கு முன் உங்கள் மனதில் தெளிவாக இருக்க வேண்டிய சில விவரங்கள் யாவை?

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

உண்மைத்தன்மையின் தரத்தை மையமாகக் கொண்ட பாடம் 4, ஓநாய் என்று கூவும் மேய்ப்பனின் பரவலாக அறியப்பட்ட கதையை உள்ளடக்கியது. இளம் மேய்ப்பனின் பொய்களின்

விளைவுகளை கதை விவரிப்பதை குழந்தைகள் உடனடியாக புரிந்துகொள்வார்கள். ஆனால் அவர்கள் மேலும் முன்னேறிச் சென்று உண்மையாக இருப்பதன் வெகுமதியை அங்கீகரிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள். இந்த வெகுமதி என்றால் என்ன, கதையிலிருந்து குழந்தைகள் இதைப் பெறுவதை எப்படி உறுதிப்படுத்துவீர்கள்?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

## பகுதி 5

இந்தப் பிரிவுகளில், தரம் 1 இன் முதல் நான்கு பாடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மீகப் பண்புகளைப் பற்றி நீங்கள் சிந்தித்துள்ளீர்கள், அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய உங்கள் சொந்த புரிதலை ஆழமாக்குகிறது. இந்த வகுப்பில் உங்கள் மாணவர்கள் மேலும் வளர்ச்சியடைவார்கள் என்று நீங்கள் நம்பும் பண்புகளின் தன்மையைப் பற்றி கதைகள் எவ்வாறு ஒரு பார்வையை வழங்குகின்றன என்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

அடுத்த நான்கு பாடங்களுக்குச் செல்வதற்கு முன், இந்த முதல் நான்கு பாடங்களைக் கற்பிக்கத் தயாராகும் உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் சிறிது நேரம் செலவிட வேண்டும். முந்தைய அலகில் விவாதிக்கப்பட்ட அணுகுமுறைகளின் அடிப்படையில். மனனம் செய்ய வேண்டிய பிரார்த்தனையை அறிமுகப்படுத்தி, , நினைவில் நிறுத்த வேண்டிய மேற்கோளுடன் சேர்த்து, ஒவ்வொரு பாடத்திலும் விவாதிக்கப்பட்ட ஆன்மீகப் பண்பினையும் வழங்கிட அவர்களுடன் முறைகள் எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் ஒருவருக்கொருவர் கதைகளைக் கூறிக்கொண்டு, விளையாட்டுகளை விளையாட வேண்டும் மற்றும் ஓரளவு தன்னம்பிக்கையோடு சொல்லிக் கொடுக்க முடியும் வரையில் ஒன்றாக சேர்ந்து பாடல்களைப் பாட வேண்டும். வண்ணத் தாள்களை நீங்கள் எவ்வாறு அறிமுகப்படுத்துவீர்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். இந்தப் பயிற்சியைத் தொடங்கும் முன், முதல் அலகில் உள்ள பிரிவுகள் 17 முதல் 24 வரை மதிப்பாய்வு செய்வது உதவியாக இருக்கும். பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு கூறுகளைப் பயிற்சி செய்த பிறகு, உங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களைக் கற்பிக்கும்படி கேட்கப்படலாம், மற்றவர்கள் மாணவர்களாக செயல்படுவார்கள். உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து, மூன்று அல்லது நான்கு குழந்தைகளை ஒன்றாகக் கூட்டி, அவர்களுடன் பாடம் நடத்துவது கூட சாத்தியமாகலாம்.

மேற்கூறிய நடைமுறையைச் செயல்படுத்தும்போது, ஒவ்வொரு பாடத்தைப் பற்றிய குறிப்புகளையும் எடுத்து, அதை எப்படிக் கற்பிப்பது என்பது குறித்த உங்கள் எண்ணங்களைப் பதிவுசெய்ய விரும்புவீர்கள். மேலும், சில விளையாட்டுகளுக்கு, பாடத்திற்கு முன்கூட்டியே பொருட்களை தயார் செய்ய வேண்டியிருக்கும். பல ஆசிரியர்கள் முதல் அலகில்

விவரிக்கப்பட்டுள்ள குறிப்பேட்டின் ஒரு பகுதியை அத்தகைய ஆயத்தங்களுக்காக அர்ப்பணிக்கிறார்கள்.

இந்த புத்தகத்தையும் உங்கள் குறிப்பேட்டினையும் உங்களுடன் வகுப்பிற்கு எடுத்துச் செல்லும்போது, அவற்றை வெறுமனே வாசிக்க விரும்பவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எந்த அளவிற்கு உங்களால் உள்ளடக்கத்தை எளிதாகவும் ஆர்வத்துடனும் முன்வைக்க முடியுமோ அந்த அளவிற்கு உங்கள் மாணவர்களால் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அப்படியானால், பயிற்சியும் தயாரிப்பும் இன்றியமையாததாக இருக்கும்.

## பகுதி 6

முதல் 8 வரையிலான பாடங்களுக்கு, ஒவ்வொரு வகுப்புக் காலத்தையும் துவக்க பின்வரும் பிரார்த்தனையை நினைவிலிருந்து ஓதுமாறு பரிந்துரைக்கப்படுகிறது:

**அன்புமிக்கப் பிரபுவே! இவ்வழகிய குழந்தைகள் உமது வலிமை என்னும் விரல்களின் கைவண்ணமும், உமது மேன்மையின் அற்புத அடையாளங்களுமாவர். கடவுளே! இக் குழந்தைகளைப் பாதுகாத்து, அவர்கள் கல்வியளிக்கப்பட கிருபையுடன் உதவி, மானிட உலகிற்கு அவர்கள் சேவை ஆற்றிடச் சக்தி அளிப்பீராக. கடவுளே! இக் குழந்தைகள் முத்துக்கள்; அவர்களை உமது அன்புப் பரிவு எனும் சிப்பியினுள் பேணி வளர்த்திடுவீராக.**

**நீரே கொடைவள்ளல், அன்புடையவர்.”**[14]

உங்கள் கற்பித்தல் முயற்சிகளின் அடிப்படையில் இந்த வார்த்தைகளைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு வகுப்புக் காலத்தையும் நீங்கள் அணுகும் விதத்தை அவை எவ்வாறு பாதிக்கும்? குழந்தைகளின் கனிவான இதயங்களில் கடவுளின் அன்பை அவை எவ்வாறு பலப்படுத்தும்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இந்தப் பாடங்களில், உங்கள் மாணவர்கள் அதன் முக்கியத்துவத்தைப் பற்றி ஓரளவு புரிந்து கொண்டால் அவர்கள் அதைச் செய்வது எளிதாக இருக்கும் என உங்களுக்குத் தெரிந்தபடியால் கீழே உள்ள பிரார்த்தனையை நினைவாற்றலுக்கு உட்படுத்த உதவுவீர்கள். இது சம்பந்தமாக உங்களின் சில எண்ணங்களை கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதலாம். அவர்கள் எந்த வார்த்தைகளை புதியதாகவோ அல்லது அறிமுகமில்லாததாகவோ உணரலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், மேலும் குழந்தைகள் எளிதில் அடையாளம் காணக்கூடிய சூழ்நிலைகளின் மூலம் அவற்றை எவ்வாறு விளக்குவது? அத்தகைய வார்த்தைகள் மட்டுமன்றி, ஒரு விளக்கு

மற்றும் நட்சத்திரம் இரண்டும் ஒளியைத் தருகின்றன என்பதையும், ஒளி இல்லாமல் இருள் இருக்கிறது என்பதையும், நம்மால் பார்க்க முடியாது, தொலைந்து போகக்கூடும் என்பதையும் புரிந்துகொள்ள நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டியிருக்கலாம். அப்படியானால், பிரார்த்தனையில், நாம் ஆன்மீக ஒளியுடன் பிரகாசிக்க வேண்டும் என்று கடவுளிடம் கேட்டுக்கொள்கிறோம், மேலும் அவர் விரும்பியபடி செய்ய அவருடைய வல்லமை மற்றும் சக்திக்கு நாம் சாட்சியமளிக்கிறோம்.,

> **“கடவுளே எனக்கு நல்வழிகாட்டி, என்னைப் பாதுகாத்து, என்னை ஓர் ஒளிமிக்க விளக்காகவும் சுடர்விடும் விண்மீனாகவும் ஆக்கிடுவீராக. வல்லவரும் சக்திமிக்கவரும் நீரே ஆவீர்.”[15]**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

# பகுதி 7

இப்போது 5 முதல் 8 வரையிலான பாடங்களை ஒவ்வொன்றாக வாசிக்கவும், மாணவர்களுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ளும் அறிமுக யோசனைகள் மற்றும் அவர்கள் நினைவாற்றலுக்கு வழங்கும் மேற்கோள்கள் ஆகியவற்றில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். ஒவ்வொரு பாடத்திலும் விவாதிக்கப்பட்ட ஆன்மீகப் பண்பினை இங்கே குறிப்பிடவும்:

பாடம் 5____________________________________

பாடம் 6 ____________________________________

பாடம் 7: ___________________________________

பாடம் 8: ___________________________________

இந்த நான்குபண்புகளைப் பற்றிய அகப்பார்வையை வழங்கும் புனிதவாசகங்களில் இருந்து சில மேற்கோள்கள் கீழே உள்ளன. நீங்கள் முன்பு செய்ததைப் போலவே ஒவ்வொரு தொகுப்பையும் பிரதிபலித்து, கொடுக்கப்பட்ட இடத்தில் உங்கள் எண்ணங்களில் சிலவற்றை எழுதுங்கள்.

தாராள மனப்பான்மை எனும் பண்பு குறித்து நாம் வாசிப்பது:

**“செல்வச் செழிப்புக் காலத்தில் தாராளமாகவும், இழப்பு வேளைகளில் பொறுமையாகவும் இருத்தல் வேண்டும்.”[16]**

**“பெருந்தன்மைக்கு ஆரம்பம் என்பது, மனிதன் தனது செல்வத்தினைத் தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும், சமயத்திலுள்ள சகோதரர்களின் மத்தியில் இருக்கும் ஏழைகளுக்காகவும் செலவு செய்தலேயாகும்.”[17]**

**“அவர்கள் மேலும் அதிகமான பகைமையை சந்திக்க நேர்ந்தால், அவர்கள் தங்களின் உறுதியான நம்பிக்கையை அதிகமாக காட்டடுமாக; அவர்கள் மேலும் அதிகமான வேதனைகளையும் துயரங்களையும் எதிர்கொள்ள நேர்ந்தால், அருள்பாளிப்பெனும் கோப்பையை அவர்கள் மேலும் தாராளமாக பகிர்ந்து கொள்ளட்டுமாக. இதுவே உலகின் உயிராக ஆகவிருக்கும் ஆற்றலாகும், இதுவே பரவிடும் ஒளியின் இதயமாகும்; இவற்றைவிட வேறெதனையும் செய்யக்கூடிய எவரோருவருமாயின், ஆண்டவனின் புனித சந்நிதானத்தில் சேவகம் செய்திட தகுதியற்றவனாவான்.”[18]**

**“தாராளத்தன்மை எனும் பகலூற்றுகலாகவும், வாழ்வின் மர்மங்களின் உதயப் பீடங்களாகவும், அகத்தூண்டல் இதயமாகும் ஸ்தலங்கலாகவும், பேரொலிகள் உதயமாகும் இடங்களாகும், பரிசுத்த ஆவியால் ஆதரிக்கப்படும் ஆன்மாக்கலாகவும், பிரபுவின்பால் பரவசம்கொண்டும், அவரைத்தவிர மற்றனைதிளிருந்து பற்றற்றும், மனுக்குல பண்புகளுக்கு அப்பால் புனிதமாக உயர்ந்தும், சொர்கத்தின் தவகனங்களின் இயல்புகளால் அணிவிக்கப்பட்டவர்களாகவும் ஆகுங்கள்; அதனால் நீங்கள் இந்த புதிய காலத்தில், இந்த அருபுத யுகத்தில், அனைத்திலும் அதி உயர்வான அருட்கொடையை உங்களுக்கென வென்றிடக் கூடும்.”[19]**

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

தன்னலமற்ற தன்மையைப் பற்றி, றாம் அறிவுறுத்தப்படுவதாவது:

**“…நீங்கள் ஒருவர் மற்றவர் மீது எல்லையற்ற அன்பு செலுத்திட வேண்டும்; ஒருவர் தன்னைவிட மற்றவரையே அதிகம் நேசித்திட வேண்டும்.”[20]**

**“பிரபுவே! தன்னலமின்மை என்னும் கிண்ணத்திலிருந்து என்னைப் பருகச் செய்வீராக; அதன் அங்கியினைக் கொண்டு எனது உடலைப் போர்த்துவீராக; அதன் சமுத்திரத்தில் என்னை மூழ்கச் செய்வீராக. அதி உயர்விலுள்ள ஒளியின் அதிபரே, உமது அன்பர்களின் பாதையில் என்னைத் தூசாக்கி, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு, உமது வழியில் நடப்போரின் பாதங்கள்பட்டு, அதனால் உயர்வடைந்துள்ள நிலத்திற்கு, நான் எனதான்மாவை அர்ப்பணிக்க அருள் புரிவீராக.”[21]**

**பிறருக்காகத் தனது சொந்த நலன்களை மறப்பவனே மனிதனாவான். எல்லாரின் பொதுநலனுக்காக அவன் தன் சொந்த சுகத்தை மறுக்கின்றான். இல்லை, மாறாக, மனுக்குலத்தின் வாழ்வுக்காக அவன் தன் சொந்த வாழ்க்கையையே தியாகம் செய்திட**

**முன்வரவேண்டும். அத்தகைய மனிதனே மானிட உலகின் நன்மதிப்பாவான். அத்தகைய மனிதனே மனிதவுலகின் கீர்த்தியாவான். அத்தகைய மனிதனே நித்திய பேரின்பத்தை வெல்பவனாவான். அத்தகைய மனிதனே கடவுள் திருவாசலின் அண்மையில் உள்ளவன். அத்தகைய மனிதனே நித்திய ஆனந்தத்தின் வெளிப்பாடாவான்.”[22]**

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

பின்வரும் மேற்கோள்களில், மகிழ்ச்சியின் இயக்கவியலின் ஒரு பார்வையைப் பெறுகிறோம்:

**“மகிழ்வெனும் சிறகுகளுடன் இறைவனின் அன்பெனும் வெளிதனில் உயரப்பறந்திடுவீர்.”[23]**

**அவரது முன்னிலையை எய்திய, அவரது அழகைக் கண்ணுற்ற, அவரது கீதங்களைச் செவிமடுத்த, புனிதமானதும் மேன்மையானதுமான அவரது மகிமைமிக்க, மிளிர்கின்ற உதடுகளிலிருந்து வெளிப்படும் திருவாக்கினால் உயிர்ப்பிக்கப்பட்டோருக்கு எல்லா மகிழ்ச்சியும் உரித்தாகும்!!”[24]**

**“மகிழ்ச்சி நமக்கு இறக்கைகளை வழங்குகின்றது! மகிழ்ச்சிமிக்க நேரங்களில் நமது பலம் மேலும் வலிமைபெறுகிறது, நமது அறிவாற்றல் கூர்மையடைகிறது, நமது புரிதல் மேலும் தெளிவு பெறுகிறது.”[25]**

**“உங்களால் இயன்ற அளவிற்கு, ஒவ்வொரு கூட்டத்திலும் அன்பெனும் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிடுவீராக; ஒவ்வொரு இதயத்திற்கும் மென்கனிவுடன் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஊட்டுவீராக.”[26]**

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

கீழே உள்ள பகுதிகள் நமக்கு நேர்மையைப் பற்றிக் கூறுகின்றன:

**“கூறுங்கள்: பாலுண்ணும் சேய் தன் தாயின் மார்புக்கு ஏங்குவது போன்று, நேர்மையான ஆன்மா, கடவுளின் அண்மைக்கு ஏங்குகின்றது, அல்ல அல்ல, உங்களால் அறியமுடியுமானால், அதன் ஆவல் இன்னும் அதிக தீவிரமானது! மீண்டும்**

**(கூறவேண்டுமானால்), கிருபையெனும் உயிர்நீர்களுக்காகப் பெருந்தாகத்துடன் தவித்திருக்கும் ஒருவரின் மேல்மூச்சைப் போன்று அல்லது மன்னிப்பு, கருணை ஆகிவற்றிற்கான ஒரு பாவியின் ஏக்கம் போன்றது அவரது ஆவல்."[27]**

**"இக்காலத்தில், வாய்மையும் மெய்ம்மையும், பொய்ம்மையின் பிடியில் கடும் வேதனைக்கு ஆளாகிக் கிடக்கின்றன; நீதியோ, அநீதியென்னும் உபத்திரவத்தினால் சித்திரவதைப் பட்டுக்கொண்டிருக்கின்றது."[28]**

**"ஒவ்வொருவரும், இக்குறுகிய காலம் கொண்ட வாழ்க்கையை நேர்மையுடனும், நியாயத்துடனும் கடப்பது பொருத்தமாகும்."[29]**

**"நீங்கள் தெய்வீக அருட்கொடைகளின் பெறுனர்களாக இருக்க வேண்டுமானால், உங்கள் இதயங்கள் தூய்மையாகவும் நோக்கங்கள் நேர்மையாகவும் இருக்கவேண்டும்."[30]**

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

மேலே உள்ள ஒவ்வொரு தொகுப்பிலிருந்தும் குறைந்தது ஒரு பகுதியையாவது மனப்பாடம் செய்ய முயற்சிக்கவும்.

## பகுதி 8

இப்போது 5 முதல் 8 வரையிலான பாடங்களில் உள்ள கதைகளுக்குத் திரும்புவோம், மேலும் அவர்கள் ஆராய்ந்துவரும் ஆன்மீக குணங்களைப் பற்றிய நுண்ணறிவைப் பெற குழந்தைகளுக்கு அவை எவ்வாறு உதவும் என்பதைப் பற்றி சிந்திப்போம். ஒவ்வொரு கதையையும் மீண்டும் படித்த பிறகு, கீழே உள்ள கேள்விகளைக் கவனியுங்கள்.

தாராள மனப்பான்மை என்பது பாடம் 5 இல் உள்ள கதையின் முக்கிய கருப்பொருள், இது 'அப்துல்-பஹாவின் குழந்தைப் பருவத்தில் அவரது தந்தையின் ஆட்டு மந்தை சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை விவரிக்கிறது. கதையின் எந்த பகுதிகள் முக்கிய கருப்பொருளுடன் தொடர்புடையவை? எந்த சில விவரங்கள், விடுபட்டால், கதையைத் தொடர்ந்து கவனிப்பதில் குழந்தைகளுக்கு கடினமாக இருக்கும்? மிக முக்கியமானது, பஹாவுல்லா மேய்ப்பர்களின் பாலான தனது மகனின் தாராள மனப்பான்மையை அறிந்தவுடன் அவர் காட்டிய மகிழ்ச்சியாகும். அவரது கருத்துக்கள், 'அப்துல்-பஹா எவ்வாறு மனிதகுலத்தின் நன்மைக்காக தம்மிடம் உள்ள அனைத்தையும், லௌகீக உடைமைகள் மட்டுமல்ல, அவருடைய முழுமையான மெய்யுருவையே வழங்கிடும் ஒருவராக வளருவார் என்பதை முன்னறிவித்தது. 'அப்துல்-பஹாவின் எல்லையற்ற பெருந்தன்மையின் அளவை குழந்தைகள் அங்கீகரிப்பதை எவ்வாறு உறுதி செய்வீர்கள்?

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

பாடம் 6 இல் உள்ள கதை குழந்தைகளுக்கு தன்னலமற்ற வழிகளைப் பற்றிய ஒரு பார்வையை வழங்குகிறது. 'அப்துல்பஹா, விலையுயர்ந்த அங்கியை ஏற்க மறுத்து, தன்னைவிட மற்றவரின் தேவைக்கு எவ்வாறு முன்னுரிமை அளித்தார் என்பதைக் காட்டினார். உங்கள் கதையிலிருந்து குழந்தைகள் இந்த முடிவுக்கு வருவதை எப்படி உறுதிப்படுத்துவீர்கள்? நீங்கள் கதையைச் சொல்வதற்கு முன் உங்கள் மனதில் தெளிவாக இருக்க வேண்டிய சில விவரங்கள் யாவை?

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

பாடம் 7 இன் கருப்பொருள் மகிழ்ச்சி, மேலும் சிறு குழந்தையாக இருந்தபோது அப்துல் பஹாவைச் சந்தித்த லெராய் அயாஸ் பற்றிய ஒரு கதையை நீங்கள் கூறுவீர்கள், மேலும் அவர் தனது வாழ்க்கையை கடவுளின் சமயத்திற்காக அர்ப்பணித்துள்ளார். கதையில், லெராய், ‘அப்துல்-பாஹாவுக்கு தான் வாங்கிய பூங்கொத்தை கொடுக்க வேண்டாம் என்று முடிவு செய்கிறார்; அதற்கு பதிலாக அவர் தனது இதயத்தை அவருக்கு வழங்க விரும்புகிறார். லெராய் இதை ஏன் செய்தார் என்பதை குழந்தைகள் புரிந்து கொள்ள, மனித இதயம் எந்தவொரு லௌகீகப் பொருளைக் காட்டிலும் அதிக மதிப்புவாய்ந்தது என்பதை நீங்கள் அவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பது முக்கியமாகிறது. கதையின் அந்தப் பகுதியக் கூறும்போது உங்கள் குரலுக்கு அழுத்தம் கொடுத்தால் போதுமா? குழந்தைகள் சிந்தனைகளின் வரிசையைத் தொடர்ந்து கவனித்து வரவேண்டுமெனில், உங்கள் கதையில் என்ன விவரங்கள் வலியுறுத்தப்பட வேண்டும்? லெராய்க்கு தனது மேலங்கியில் இருந்து சிவப்பு ரோஜாவைக் வழங்கிய ‘அப்துல்-பஹாவின் சைகை அந்தச் சிறுவனுக்கு ஏன் இவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்தது?

அவரது வாழ்நாள் முழுவதும், 'அப்துல்-பஹா தனது முன்னிலைக்கு வந்த அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தார். இந்த வகையில், லெராய் ‘அப்துல் பஹாவின் இதயத்தை மகிழ்விப்பதைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை என்பதை நாம் காண்கிறோம். மகிழ்ச்சியின் மிகப்பெரிய ஆதாரங்களில் ஒன்று மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவது என்பதை குழந்தைகள் புரிந்துகொள்வது ஏன் அவசியமாகிறது?

________________________________________________________________

________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

நேர்மையே பாடம் 8ன் மையமாகும், மேலும் கதையை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதில், சிலசமயங்களில், ஒரு பண்பினைக் கொண்டிருப்பது எந்தளவுக்கு முக்கியம் என்பதை அது இல்லாதபோது நடக்கும் ஒரு கதையைக் கேட்கும்போது நாம் இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும். பக்கத்து வீட்டுக்காரனை தன் மரத்தை வெட்டச் சொல்லும் மனிதனின் கதை ஒரு உதாரணம். வெளித்தோற்றம் சில சமயங்களில் ஏமாற்றக்கூடியது என்பதன் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? கதையை விவரிக்கையில், நேர்மையற்ற அண்டை வீட்டுக்கார்க்குர உண்மையில் வெகுமதி கிடைத்ததாக நினைத்து குழந்தைகள் வெளியேறாமல் இருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். நேர்மையின்மையின் எதிர்மறை விளைவுகளைப் புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு உதவ நீங்கள் என்ன கூறுவீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## பகுதி 9

இப்போது நீங்கள் 5 முதல் 8 பாடங்களில் விவாதிக்கப்பட்ட ஆன்மீகப் பண்புகளைப் பற்றிய சில அகப்பார்வைகளைப் பெற்றுள்ளீர்கள், முதல் நான்கில் செய்ததைப் போலவே, பாடங்களையும் அவற்றின் பல்வேறு கூறுகளையும் உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் செயல்படுத்துவதைப் பயிற்சி செய்ய நீங்கள் இங்கே இடைநிறுத்த வேண்டும். உங்கள் குறிப்பேட்டில், ஒவ்வொரு பாடத்தைப் பற்றியும் நீங்கள் வைத்திருக்க விரும்பும் எந்த விவரங்களையும் எழுதலாம் மற்றும் அதை எவ்வாறு கற்பிப்பது என்பது குறித்த உங்கள் எண்ணங்களையும் பதிவு செய்யலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## பகுதி 10

9 முதல் 12 வரையிலான பாடங்களுக்குக் கீழ்காணும் பிரார்த்தனையைக் கூறுவதன் மூலம் நீங்கள் வகுப்பினைத் துவங்க ஆலோசிக்கப்படுகிறது, இதை நீங்கள் உங்கள் நினைவாற்றலுக்கு உட்படுத்தவும் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்:

**“என் பிரபுவே ! உந்தன் அழகையே என் உணவாகவும் , உந்தன் பிரசன்னத்தையே என் பானமாகவும் , உந்தன் மகிழ்ச்சியையே என் நம் பிக்கையாகவும் , உம்மைப் புகழ்வதையே என் செயலாகவும், உம்மை நினைத்தலையே என் தோழனாகவும் , உந்தன் இறைமை சக்தியையே என் உதவியாகவும் , உந்தன் வாசஸ்தலமே என் இல்லமாகவும் , உம்மிடமிருந்து ஒரு திரையைப் போ ன் று, மறைக்கப் பட்டோருக்கு விதிக்கப்பட்ட வரையறைகளிலிருந்து நீர் புனிதப்படுத்தியுள்ள ஆசனத்தை என் இருப்பிடமாகவும் ஆக்கிடுவீராக.**

**மெய்யாகவே , சர்வவல்லவரும், சர்வ ஒளிமிக்கவரும், அதிசக்திமிக்கவரும் நீரே ஆவீர்.”[31]**

இந்த நான்கு பாடங்களில் உங்கள் மாணவர்களுக்கு கீழே உள்ள பிரார்த்தனையை மனப்பாடம் செய்ய உதவுவீர்கள். பிரார்த்தனையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு என்ன வார்த்தைகள் அல்லது சொற்றொடர்களை நீங்கள் விளக்க வேண்டும்?

**“கடவுளின் நாமம் மொழியப்பட்டு, அவரது புகழ் பாடப்படும் ஸ்தலமும், இல்லமும், இடமும், நகரமும், இதயமும், மலையும், புகலிடமும், குகையும், பள்ளத்தாக்கும், தேசமும், கடலும், தீவும், புல்வெளியும் ஆசி பெற்றதாகும்.”[32]**

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

## பகுதி 11

நீங்கள் முன்பு செய்தது போல், 9 முதல் 12 வரையிலான பாடங்களை வாசித்துப்பார்த்து, அறிமுக குறிப்புகள் மற்றும் மனப்பாடம் செய்வதற்கான மேற்கோள்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துங்கள். ஒவ்வொரு பாடமும் கவனம் செலுத்தும் ஆன்மீகப் பண்பினை கீழே குறிப்பிடவும்.

பாடம் 9: ________________________________________________

பாடம் 10: ________________________________________________

பாடம் 11: ________________________________________________

பாடம் 12: ________________________________________________

மேற்கூறிய நான்கு பண்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய உங்கள் சொந்த புரிதலை ஆழப்படுத்த, ஒவ்வொன்றிற்கும் தொடர்புடைய மேற்கோள்களின் தேர்வைப் பற்றி சிந்தியுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, உங்கள் மாணவர்கள் மனப்பாடமாகக் கற்றுக் கொள்ளும் பத்தியை மனதில் கொள்ளுங்கள். அதன் பின்னர், தனிநபரின் வாழ்க்கையிலும் சிறு

குழந்தைகளின் ஆசிரியர் என்ற வகையிலும் பண்பின் முக்கியத்துவம் பற்றிய உங்கள் எண்ணங்களை எழுதுங்கள்.

பணிவுடைமை குறித்து, புனிதவாசகங்கள் நமக்குக் கூறுவதாவது:

**“பணிவுடைமை மனிதனைப் பேரொளி, சக்தி ஆகியவற்றின்பால் உயர்த்திடும்; தற்பெருமையோ அவனை அவலமும், இழிவுமாகிய, பாதாளத்தில் தள்ளிவிடும்.”[33]**

**“இந்நாளில் பணிவுடன் தனது ஆண்டவனுடன் நடந்தும், அவரைப் பற்றிக் கொண்டுமுள்ள ஒவ்வோர் ஆன்மாவும் பாராட்டத்தக்க நற்பெயர்கள், ஸ்தானங்கள் ஆகியவையின் பெருமதிப்பு, புகழ், ஆகியவை வழங்கப் பட்டிருப்பதைக் கண்டிடும்."[34]**

**"கடவுளின் நேசர்கள் எங்கெல்லாம் ஒன்றுகூடினும், எவரையெல்லாம் சந்தித்திடினும், இறைவன்முன் அவர்களின் மனோபாவமும், அவரது புகழையும் மேன்மையையும் போற்றிப் பாடிடும் விதம், அவர்களின் பணிவையும் பவ்வியத்தையும் புலப்படுத்துவதாய் இருக்கவேண்டும்; அதனால், அவர்களின் பாதத்தினடியில் கிடக்கும் ஒவ்வோர் அணுத்துகளும் அவர்களின் பக்தியின் ஆழத்திற்கு ஆதாரமளிப்பதாய் இருத்தல் வேண்டும்."[35]**

**"தன் பிரபுவின் ஆணைகளுக்குக் கட்டுப்படுதல் என்பதாகும்." மனிதனின் அதிவுயர்ந்த தனிச்சிறப்பே தன்னுடைய கடவுளின் முன் பணிவுகொள்வதிலும் அவருக்குக் கீழ்ப்படிதலிலும் உள்ளது என்பது உறுதி.”[36]**

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

நன்றியுணர்வின் முக்கியத்துவம் பற்றி, நாம் வாசிப்பது:

**“தெய்வீகம் என்னும் நறுமணங்கள் அனைத்தையும் நான் உன்மீது வீசச் செய்துள்ளேன் என்பதையும், எனது திருமொழியினை உனக்கு முழுமையாக வெளிப்படுத்தியுள்ளேன் என்பதையும், உன் மூலம் எனது வள்ளன்மையைப் பூரணமடையச் செய்து, நான் எனக்காக விரும்பியுள்ளதனையே உனக்காகவும் விரும்பியுள்ளேன் என்பதையும் நீ அறிவாயாக. ஆகவே என் விருப்பத்தினில் மனநிறைவு பெற்று என்னிடம் நன்றி உடையவனாய் இருப்பாயாக.”[37]**

**“இறைவனே உங்களுக்கு முற்றிலும் போதுமானவராய் இருக்கட்டும். அவரது ஆவியுடன் நெருங்கியத் தொடர்புக் கொண்டு, நீங்கள் நன்றியுடையோராவீராக."[38]**

**“ஆகவே, உங்களை அவரது சமயத்திற்கு உதவிட வலுப்பெறச் செய்தமைக்காகவும், உங்களின் உள்ளமெனும் பூங்காவில் அறிவு, புரிந்துணர்வு ஆகிய மலர்களைத்**

**தோற்றுவித்தமைக்காகவும், இறைவனிடம் நன்றியுடையோர் ஆகிடுங்கள். அவ்வண்ணமே, அவரது அருள் உங்களைச் சூழ்ந்துள்ளது; படைப்பு முழுவதையும் சூழ்ந்துள்ளது."[39]**

**"உண்மை யாதெனில், மனிதன் உயர்த்தப்பட்டும், தனிச்சிறப்புறவும் மேம்பட்டவனாகவும் திகழ்வதற்குக் கடவுள் மனிதனுக்கு நல்லொழுக்கங்கள், சக்திகள் மற்றும் பொருத்தமான -- இயற்கைக்கு அறவே இல்லாத ஆற்றல்களை -- வழங்கியுள்ளார். இந்த அருட்பொழிவுகளுக்காக, அவர் நமக்கு வழங்கியுள்ள இந்த சக்திகளுக்காக, நமது சிரசுகளின் மீது அவர் சூட்டியுள்ள இந்த மகுடத்திற்குாக, நாம் கடவுளுக்கு நன்றி நவில வேண்டும்."[40]**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

கீழே உள்ள மேற்கோள்கள் மன்னிப்பைப் பற்றி நம்மிடம் பேசுகின்றன:

**"அவர் பாவியை மன்னிக்க வேண்டும்; என்றுமே அவனது தாழ்ந்த நிலையை இழித்துரைக்கலாகாது; ஏனெனில், தனது சொந்த முடிவு எவ்வாறிருக்கும் என்று யாருக்குமே தெரியாது."[41]**

**"பொருள்கள் அனைத்தின் அதி உள்ளார்ந்த சாரமானது எல்லாப் பொருள்களினுள்ளும் சான்றுக்குரல் எழுப்புகின்றது; "இந்நாளில், எவருடன் யாருமே ஒப்பிடப்படாரோ, எவருடனும் யாருமே பங்காளியாகிட வியலாதோ, எவர் மனிதரனைவரின் ஒப்புயர்வற்ற பாதுகாப்பாளராகவும், அவர்களின் பாவங்களை மறைப்பவராகவும் உள்ளாரோ, அந்த இறைவனிடமிருந்தே, மன்னிப்பனைத்தும் பெருகி வருகின்றது!"[42]**

**"ஆதலால், எவருடைய குறைபாடுகளையும் கண்ணுறாதீர்; மன்னிப்பு என்னும் பார்வையின் மூலம் பாருங்கள்; நிறைவற்ற கண்கள் நிறைவிண்மைகளையே கண்ணுறும்; குறைகளை மறைக்கும் கண் எல்லா ஆன்மாக்களின் படைப்பாளரை நோக்கித் திரும்பிடும்."[43]**

**"உங்கள் இதயம் எவராலும் புண்படாதிருக்கட்டுமாக. எவராவது உங்கள்பால் ஒரு தவறையும் பிழையையும் இழைத்துவிட்டால், நீங்கள் அவரை உடனடியாக மன்னித்துவிட வேண்டும்."[44]**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

இந்த எடுபகுதிசாரங்கள் நாம் விரும்பும் நேர்மையின் தரத்தை விவரிக்கின்றன:

“வாய்மை, ஒழுக்கம், விவேகம், புனிதத் தன்மை ஆகியவை, மனிதனை மேன்மையடையச் செய்திடும்; மாறாக, நேர்மையின்மை, நடிப்பு அறியாமை, போலித்தனம் ஆகியவை அவனை இழிநிலைக்குக் கொண்டு சென்றிடும்.”45

**“அவரது நகரங்களில் வாழும், அவரது நாடுகளில் உள்ள கடவுளின் நண்பர்களே! இத்தவறிழைக்கப்பட்டோன் உங்களுக்கு வாய்மை, பக்தி ஆகியற்றை உத்தரவிடுகின்றான். அவற்றின் ஒளியால் பிரகாசிக்கும் நகரம் ஆசிபெற்றதாகும். அவற்றின் மூலம் மனிதன் உயர்வுகாண்கின்றான்; பாதுகாப்பு என்னும் கதவு எல்லா படைப்புகளுக்கும் முன் (பூட்டுத்) திறக்கப்பட்டுள்ளது. அவற்றை இருகப் பற்றிக்கொண்டு, அவற்றின் மதிப்பை உணர்ந்தவன் மகிழ்வெய்துவான். அவற்றின் ஸ்தானத்தை மறுப்பவன் துன்பத்தை அனுபவிப்பான்.”[46]**

**“நம்பகத்தன்மை, விவேகம், வாய்மை ஆகியன, உண்மையில் கடவுளின் படைப்புகளுக்கான அவரது அழகிய அனிகலன்களாகும். இவ்வழகிய ஆடைகள் ஒவ்வொரு உடலுக்கும் பொறுத்தமான மேலங்கியாகும். புரிந்துகொண்டோர் மகிழ்வெய்துவர்; இத்தகைய நல்லொழுக்கங்களை அடைவோர் நலமடைவர்.”[47]**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

மேலே உள்ள ஒவ்வொரு தொகுப்பிலிருந்தும் குறைந்தது ஒரு பகுதியையாவது மனப்பாடம் செய்ய முயற்சிக்கவும்.

## பகுதி 12

இப்பொழுது, இந்த நான்கு பாடங்களிலும் உள்ள கதைகள் உங்கள் மாணவர்களுக்கு மேற்கண்ட ஆன்மீகப் பண்புகள் குறித்து எவ்வாறு நுண்ணறிவுகள் வழங்குகின்றன என்பதைப் பார்ப்போம்

பாடம் 9-இல் உள்ள கதை, அப்துல்-பஹா சில பணக்கார வருகையாளர்களைச் சந்தித்தபோது நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்கின்றது; அது குழந்தைகளுக்கு அவரது பணிவைச் சித்தரிக்கும். அதாவது, அப்துல்-பஹா ஆடம்பரம், படாடோபம் ஆகியவற்றுடன் நடத்தப்பட விரும்பவில்லை என்பது அதன் மைய கருத்தாகும். இது எவ்வகையில் அவரது பணிவை எடுத்துக்காட்டுகின்றது? நிச்சயமாக, கிண்ணம், தண்ணீர் மற்றும் வாசனைத் துண்டு

ஆகியவற்றின் குறிப்பிட்ட ஆடம்பர வடிவம் ஒரு சுவாரஸ்யமான விவரம் மட்டுமே; அது நீங்கள் கதையைச் சொல்லும்போது கதையின் மையக் கருப்பொருளிலிருந்து திசைதிருப்பிவிடக்கூடாது. மாறாக, கதையின் முடிவே வலியுறுத்தப்பட வேண்டும். 'அப்துல் பஹாவின் பணிவையும் மற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் அவருடைய விருப்பத்தையும் பற்றிய குழந்தைகளின் புரிதலை அது எவ்வாறு மேலும் விரிவுபடுத்தும்?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

பாடம் 10'இன் கருப்பொருள், நன்றியுடைமை பற்றியதாகும். குழந்தைகள் அப்துல்-பஹாவை சந்திக்க வந்து, அவருடன் தமது துன்பங்களையும் இன்னல்களையும் பகிர்ந்து கொண்ட ஒரு பெண்ணைப் பற்றிய கதையைச் செவிமடுப்பர். பின்னர், அப்துல்-பஹா அப்பெண்ணை வாழ்வில் பெரும் சிரமங்களை அனுபவித்த போதும், கடவுளிடமிருந்து தாம் பெற்ற ஆசிகளுக்காக குறையாத நன்றியுணர்வுடைய மிர்ஸா ஹைதர்-அலியிடம் அறிமுகம் செய்து வைப்பார். இக்கதையைச் சொல்லும் போது, அப்துல்-பஹா ஹைதர்-அலியை தற்செயலாக அப்பெண்ணிடம் அறிமுகம் செய்துவைக்கவில்லை என்பது மாணவர்களுக்கு தெளிவாகத் தெரிய வேண்டும். அவருடனான பெண்ணின் சந்திப்பிலிருந்து அவர் என்ன கற்றுக்கொண்டார் என நினைக்கின்றீர்கள்? கதை, இப்பாடத்தை எவ்வாறு சொல்ல முயல்கின்றது?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

மன்னித்தல் என்பது பாடம் 11'இன் கருப்பொருளாகும். நாம் மன்னிப்போர் மீது அம்மன்னிப்பு கொண்டிருக்கும் விளைவு குறித்த அப்துல்-பஹாவின் கதை ஒன்று நீங்கள் உங்கள் மாணவர்களுக்குக் கூறுவீர்கள். கதையில் வரும் யோசனை வரிசையை குழந்தைகள் விடாது பின்பற்ற வேண்டுமானால், நீங்கள் தெளிவாகக் கூறவேண்டிய பல விவரங்கள் அக்கதையில் உள்ளன. அது, அக்காநகரில் அப்துல்-பஹாவுக்கும் அவரது சகாக்களுக்கும் பெரும் தீங்கு விளைவிக்க முயன்ற ஓர் ஆளுனரைப் பற்றியதாகும். கதையில், அப்துல்-பஹா அந்த ஆளுனரின் செயல்களை மன்னித்தது மட்டுமின்றி, எல்லாவற்றையும் இழந்துநின்ற அந்த ஆளுனரைக் கனிவுடன் நடத்தி, அவரது கடும் துன்பத்தின் போது அவருக்கு உதவியும் நல்குகின்றார். இக்கதையிலிருந்து அப்துல்-பஹா வெளிப்படுத்திய மன்னிக்குந்தன்மை என்பது நமக்கு தவறிழைப்போர்பால் கெட்ட உணர்வுகள் கொள்ளாதிருப்பதற்கும் அப்பால் செல்வது பற்றியதாகும் என்பதைக் குழந்தைகள் கதையிலிருந்து புரிந்துகொள்வார்கள் என்பது உங்கள்

எதிர்ப்பார்ப்பாக இருக்க வேண்டும். அவர்கள் இந்த யோசனையைப் புரிந்துகொண்டார்களா என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

பாடம் 12'இன் கதையில், குதிரை வண்டி பிராயணத்திற்கு அநியாய விலை கோரிய ஒரு வண்டிக்காருக்கு அப்துல்-பஹா எவ்வாறு விடையிறுத்தார் என்பதைக் குழந்தைகள் பார்ப்பார்கள். தாம் அருளிரக்கம் மற்றும் மரியாதையின் சாரமாக இருந்தபோதும், எவருமே தம்மிடமோ பிறரிடமோ நேர்மையற்ற அல்லது வஞ்சகமாக நடந்துகொள்வதை அப்துல்-பஹா ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அப்துல்-பஹாவின் விடையிறுப்பிலிருந்து அந்த வண்டி ஓட்டுனர் என்ன கற்றுக்கொண்டார் என நினைக்கின்றீர்கள்? நேர்மையற்ற முறையில் நாம் நடந்துகொள்ளும் போது நாம் உண்மையில், அந்த வண்டிக்காரர் இழந்த கூடுதல் பணத்திற்கும் மேல் பேரதிகமாகவே இழக்கின்றோம் என்பதைக் குழந்தைகள் புரிந்துகொள்ள நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 13

உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் பாடங்கள் 9 – 12'இல் உள்ள நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொண்டுவிட்ட பிறகு அடுத்த நான்கு நடவடிக்கைகளுக்கு நீங்கள் செல்லலாம். பாடங்கள் 13 – 16'க்கு பின்வரும் பிரார்த்தனையை மனனமாகக் கூறுவதன் மூலம் ஒவ்வொரு வகுப்பையும் நீங்கள் ஆரம்பிக்கலாம்:

> **"இரக்கமிக்க இறைவா! இது உமது நல்விருப்பம் என்னும் தோட்டத்தில் மலர்ந்துள்ள செந்நீல மலராகும். உண்மை அறிவென்னும் தோப்பில் உதித்துள்ள ஒரு சிறுகிலையுமாகும். அருட்கொடையின் பிரபுவே, உமது உயிர்ப்பூட்டும் தென்றல்களினால் அது எல்லா நேரங்களிலும் தொடர்ச்சியாகப் புத்துணர்வூட்டப்பட்டு, எல்லா நேரங்களிலும் உமது தயவுகள் என்னும் மேகங்களின் பொழிவுகளின் மூலம் அதைப் பசுமையாகவும்**

**புத்துணர்ச்சியுடனும் செழிப்பாகவும் வைத்திருப்பீராக, பரிவிரக்கம் மிக்க பிரபுவே! மெய்யாகவே, நீரே சர்வ மகிமை மிக்கவர்.”[48]**

பாடங்கள் 13 முதல் 16 வரையில் உங்கள் மாணவர்கள் மனனமாகக் கூற கற்றுக்கொள்ளவிருக்கும் பிரார்த்தனை கீழே உள்ளது. அதன் முக்கியத்துவத்தின் புரிதலைப் பெற அவர்களுக்கு உதவிட, அதில் காணப்படும், உங்கள் மாணவர்களுக்கு புதிதான அல்லது அறிமுகமில்லாத சொற்கள் அல்லது சொற்றொடர்களை அடையாளம் கண்டு அவற்றை விளக்குவதற்குப் பொருத்தமான வாக்கியங்களை உருவாக்கவும். நிச்சயமாகவே, அப்பிரார்த்தனையில் காணப்படும் உருவகங்களை அவர்கள் சுலபத்தில் கிரகித்துக்கொள்வதுடன், நீங்கள் இந்தப் பாடங்களில் மனனமாகக் கூறவிருக்கும் பிரார்த்தனையுடன் அது எதிரொலித்திடும்.

**பிரபுவே! இவ்விளம் செடியை உமது எண்ணிறந்த அருட்கொடைகள் என்னும் தோட்டத்தில் நட்டுவித்து, உமது தயவு மற்றும் கிருபை என்னும் பொழிவுகளின் மூலம் அது ஒரு நல்ல செடியாக வளர்ந்திட, உமது அன்புப் பரிவிரக்கம் என்னும் நீரூற்றுகளிலிருந்து அதற்கு நீர் பாய்ச்சுவீராக.**
**நீரே வலிமைமிக்கவரும் சக்திவாய்ந்தவரும் ஆவீர.”[49]**

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

## பகுதி 14

உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் எப்போது போல் ஒவ்வொன்றையும் நீங்கள் படித்த பின், பாடங்கள் 13 – 16 வரை குறிப்பிடப்பட்டுள்ள குணங்களை எழுதவும்.

பாடம் 13: ______________________________________

பாடம் 14: ______________________________________

பாடம் 15: ______________________________________

பாடம் 16: ______________________________________

முன்பு நீங்கள் செய்தது போன்றே, இப்பாடங்களில் நீங்கள் கலந்துரையாடிய ஆன்மீக குணங்கள் மீது மேற்கொண்டு பிரதிபலிப்பதற்குப் பின்வரும் மேற்கோள்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

பிரிவிரக்கத்தைக் காண்பிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் பின்வருமாறு படிக்கின்றோம்:

**“உமது உறுதிப்பாடுகளிலிருந்து ஒரு பங்கையும் பகுதியையும் எடுத்துக்கொள்ள இதயங்கள் சுத்தமாகிடவும் தூய்மையாகிடவும் கருணை என்னும் ஒளியைப் பிரகாசிப்பீராக.”[50]**

**“கருணையுடன் நடந்துகொள்ளுங்கள், அதன்மூலம் உங்கள் செயல்கள் ஒரு விளக்கிலிருந்து வீசும் ஒளியைப் போன்று பிரகாசித்திடும்.”[51]**

**“நீங்கள் ஒரே மரத்தின் கனிகளும், ஒரே கிளையின் இலைகளும் ஆவீர்; மனித இனம் முழுவதின்பாலும் இரக்கமும் கருணையும் காட்டுவீராக.”[52]**

**“இப்பொழுது, கடவுளின் அன்பர்கள் அவரது இந்த ஆணைகளை நிறைவேற்ற முன்னெழ வேண்டும்: மனித இனத்தின் குழந்தைகளிடம் அவர்கள் கனிவான தந்தைகளாக இருக்கட்டும்; இளைஞர்களிடம் இரக்ககுணமுள்ள சகோதரராகவும், வயோதிகரிடம் தன்னலம் கருதாதாத குழந்தைகளாக இருக்கட்டும்.”[53]**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

பற்றின்மை குணத்தைப் பற்றி பின்வருமாறு அறிவுறுத்தப்படுகின்றோம்:

**“என்னைத் தவிர மற்றதனைத்திலிருந்தும் உங்களைப் பற்றறுத்துக் கொண்டு, உங்கள் முகங்களை எனது வதனத்தின்பால் திருப்புங்கள்; ஏனெனில், இதுவே நீங்கள் கொண்டிருப்பவற்றை விட நன்மையானதாகும்.”[54]**

**“உலகிலும் அதன் பயனற்ற அணிகலன்களிலும் மகிழ்ச்சியுறாதீர்; மேலும், அவற்றின்மீதே உங்கள் நம்பிக்கையையும் வைத்திடாதீர். அதி உயரிய, அதி மேன்மையான, இறைவனை நினைத்தலிலேயே இருக்கட்டும் உங்களின் நம்பிக்கை.”[55]**

**“பற்றின்மையின் சாரம், மனிதன், தன் முகத்தினை இறைவனின் அவையின்பால் திருப்பி அவரின் முன்னிலையை அடைந்து, அவரது வதனத்தைக் கண்ணுற்று, அவர் முன் சாட்சியாக நிற்பதே.”[56]**

**“பற்றின்மை கதிரவனைப் போன்றது. அது எந்த உள்ளத்தில் பிரகாசிக்கன்றதோ அது தகாவிருப்பு மற்றும் தன்னலம் என்னும் நெருப்பினை அணைத்திடும். எவர் ஒருவரது பார்வை, புரிந்துணர்வு என்னும் ஒளியினால் பிரகாசமடைகின்றதோ அவர் நிச்சயமாக இவ்வுலகிலிருந்தும் அதன் வீண் பெருமைகளிலிருந்தும் பற்றறுத்திடுவார்... உலகமும்**

**அதன் இழிவுகளும் உங்களைத் துக்கப்படுத்த விடாதீர். செல்வங்களால் வீண்பெருமை பெறாத, வறுமையினால் துக்கமடையாத ஒருவர் மகிழ்வெய்துவார்.”[57]**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

பின்வரும் உரைப்பகுதிகள் மனநிறைவு என்னும் பண்பு குறித்து உரைக்கின்றன:

**“மனிதனின் புத்திரனே! எல்லையிலா பரவெளியினில் விரைந்து சென்று, விண்ணுலகின் பரப்பினையே கடந்திடினும், எமது கட்டளைகளுக்கு அடிபணிதலிலும், எமது வதனத்தின் முன்னால் பணிவிலுமல்லாது வேறெதனிலும் நீ அமைதி காண இயலாது.”[58]**

**“உணர்ச்சியின் சாராம்சமே! பேராசைகள் அனைத்தையும் அப்பால் வைத்துவிட்டு, மனநிறைவைத் தேடு; ஏனெனில் பேராசையுடையோர் எப்போதுமே இழப்புக்கு ஆளாகியுள்ளனர்; மனநிறைவுடையோரோ எப்போதும் நேசிக்கப்பட்டும் புகழப்பட்டும் வந்திருக்கின்றனர்.”[59]**

**“விட்டுக்கொடுத்தல், பற்றின்மை என்னும் பாதையில் நடப்பீர். கஷ்டங்கள் உன் உள்ளத்தை கவலைக்கு ஆளாக்க விடாதே, அல்லது எந்த லௌகீகப் பரிசுகளின் மீதும் உனது நம்பிக்கையை வைத்திடாதே. இறைவன் விதித்துள்ளவற்றில் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவாயாக; அதன்மூலம் உனது உள்ளமும் ஆன்மாவும் மனச்சாந்தி கண்டும் உனது அகமும் மனசாட்சியும் உண்மையான மகிழ்ச்சியை அனுபவித்திடக்கூடும்.”[60]**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

பின்வரும் எடுபகுதிகள், பரிவு பற்றிய நமது புரிதலுக்கு ஒளிர்வூட்டுகின்றன:

**“எல்லா வேளைகளிலும் நீங்கள், எனது நல்விருப்பம் என்னும் சுவர்க்கத்தினுள், சமாதானத்துடனும் இணக்கத்துடனும் சகவாசிப்பதையும், உங்களின் நடத்தையிலிருந்து நட்புடமை, ஒற்றுமை, அன்புப்பரிவு, சகோதரத்துவம் ஆகியவையின் நறுமணத்தினை முகர்வதையும் கண்ணுற விரும்புகின்றேன்.”[61]**

**“வெறும் தோற்றத்தில் மட்டுமின்றி, உன்மையான அன்புடன் இருங்கள். கடவுளின் அன்புக்குரியவர்கள் ஒவ்வொருவரும் தன் கவனத்தை இதன் மீது செலுத்தட்டுமாக: மனிதனுக்குக் கடவுளின் கருணையாய் இருப்பது; பிரபுவின் கிருபையாக இருப்பது. தான் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் அவன் ஏதேனும் நன்மை செய்து, அவனுக்கு ஏதேனும் ஒரு வகையில் நன்மை புறியட்டுமாக.”[62]**

**…மனிதர்கள் ஒருவர் மற்றவரிடம் ஏன் அநீதியாகவும் கருணயற்றும் நடந்துகொள்ள வேண்டும், கடவுளுக்குப் புறம்பான ஒன்றை ஏன் வெளிப்படுத்த வேண்டும்? கடவுள் நம்மை நேசிப்பதால், நாம் ஏன் பகைமைபாராட்டவோ, வெறுப்புணர்வுகொள்ளவோ வேண்டும்? கடவுள் எல்லாரையும் நேசிக்காவிடில், அவர் எல்லாரையும் படைத்திருக்கோ பயிற்றுவித்திருக்கோ வேண்டியவற்றை வழங்கியிருக்கவோ மாட்டார்.”[63]**

**"வார்த்தைகளால் மட்டுமே நட்பினைக் காட்டுவதில் மனநிறைவு பெறாதீர். உங்கள் பாதையில் சந்திக்கும் அனைவருக்காகவும் உங்கள் உள்ளம் அன்புக் கருணை எனும் தீயினைக் கொண்டு எரியட்டும்."[64]**

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

மேற்கண்ட தொகுப்புகளிலிருந்து ஒரு மேற்கோளையாவது மனனம் செய்ய முயலவும்.

## பகுதி 15

பாடங்கள் 13 முதல் 16 வரை குறிப்பிடப்பட்ட ஆன்மீக குணங்கள் பற்றிய உங்கள் புரிதலை ஆழப்படுத்திக்கொண்ட பிறகு, நான்கு கதைகளையும் மறுபடியும் படித்து, கீழ்காணும் கேள்விகளை உங்கள் குழுவுடன் கலந்துரையாடவும்.

பரிவிரக்கம் பாடம் 13-இன் கருப்பொருளாகும். நீங்கள் கூறப்போகும் கதை, அப்துல்-பஹாவைச் சந்திக்கும் நம்பிக்கையுடன் அப்துல்-பஹா தங்கியிருந்த இல்லத்தின் கதவைத் தட்டிய போது திருப்பியனுப்பப்பட்ட ஒரு பெண்ணைப் பற்றியதாகும். கதையின் எந்தப் பகுதி அப்பெண்ணின்பாலான அப்துல்-பஹாவின் பரிவிரக்கத்தைச் சித்தரிக்கின்றது? இந்தக் கதையைப் பின்தொடர்வதற்கும், இரக்கமுள்ள இருதயம், எல்லாரிடமும் சமமாக அக்கறை கொண்டிருந்தாலும், கஷ்டம், துன்பம் அல்லது துக்கத்தில் இருப்பவர்களுக்குக் குறிப்பாக உணர்திறன் உடையது என்பதைப் புரிந்துகொள்ளவும் குழந்தைகளுக்கு என்ன விவரங்கள் உதவும்?

________________________________________________

________________________________________________

________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

பாடம் 14 பற்றின்மை என்னும் ஆன்மீக குணத்தின் மீது கவனம் செலுத்துகின்றது. அக்கதை, புனித நிலத்திற்குச் செல்ல தீர்மானிக்கும் இரண்டு நண்பர்கள் பற்றியது. அவர்களுள் ஒருவர் செல்வந்தர், மற்றவர் செல்வந்தர் அல்ல. நிச்சயமாகவே, பற்றின்மை குணம் குறித்து அகப்பார்வை பெற, புனித நிலத்திற்கான பயணம் கடவுளிடம் அணுக்கம் பெறுவதின் அடையாள குறி என்பதைக் குழந்தைகள் கண்டுணர்வது அவசியமாகும். பற்றின்மை என்பது நம்மிடம் எவ்வளவு அதிகமாக அல்லது குறைவான செல்வம் உள்ளது என்பதைப் பொறுத்தது அல்ல எனவும், நாம் பெற்றிருக்கும் செல்வம் நாம் இறைவனை அணுகுவதிலிருந்து நம்மைத் தடை செய்கின்றனவா என்பது குறித்து குழந்தைகள் புரிதல் பெறுவதை நீங்கள் விரும்புவீர்கள். இந்தப் புரிதலைப் பேணுவதில் கதை எவ்வாறு உதவுகின்றது?

_________________________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

பாடம் 15-இல் உள்ள கதை, மனநிறைவு என்னும் குணம் குறித்து குழந்தைகளுக்கு அகப்பார்வை வழங்கிடும் அப்துல்-பஹா, தாம் அக்காநகர் சிறையில் இருந்த போது மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தார் என தமது சகாக்களிடம் கூறினார், ஏனெனில் அவர் அந்நாள்களை சேவை பாதையில் கடத்தினார். இந்தக் கூற்று மனநிறைவு குறித்த குழந்தைகளின் புரிதல் மீது என்ன தாக்கம் கொண்டிருக்கும் என நினைக்கின்றீர்கள்? அப்துல்-பஹா உடலளவில் சிறைப்பட்டிருந்த போதும், அவரது ஆன்மா சிறைப்படுத்தப்படவே முடியாது என்பதை அவர்கள் எவ்வாறு உணர்வார்கள்?

_________________________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

_________________________________________________________________

பாடம் 16-இல், கோபம், வெறுப்பு ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்ட அக்காநகர் மனிதர் ஒருவரைப் பற்றிய கதையைக் கூறுவதில், சில விவரங்களை நீங்கள் வலியுறுத்துவது அவசியமாகும்; இல்லையெனில் அன்புக்கருணை என்னும் முக்கிய கருப்பொருளுடன் அது எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதைக் குழந்தைகள் தவறவிட்டுவிடுவர். இந்த விவரங்கள் யாவை? தனது கோபம், வெறுப்பு ஆகியவற்றில் நீண்டகாலமாக ஆழ்ந்திருந்த அம்மனிதனுக்கு என்ன பாடத்தை அப்துல்-பஹா போதிக்கின்றார்?

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

## பகுதி 16

பாடங்கள் 13 – 16 குறித்த உங்கள் பகுப்பாய்வு பயனுடையதாக இருந்திருக்கும் எனவும் அதிலுள்ள பல்வேறு அம்சங்களை நீங்களும் உங்கள் சக பங்கேற்பாளர்களும் மகிழ்ச்சியுடன் பயிற்சி செய்திருப்பீர்கள் எனவும் நம்புகின்றோம். ஒவ்வொரு வகுப்பின் ஆரம்பத்திலும் 17 முதல் 20 வரைக்குமான பாடங்களுக்கு பின்வரும் பிரார்த்தனையை மனனமாக நீங்கள் கூறலாம்.

**“என் கடவுளே! என் கடவுளே! உமது இவ்வூழியன், உமது அன்பெனும் பாலைவனத்தில் அலைந்து திரிகின்றான்; உமது சேவை எனும் பாதையில் நடந்து செல்கின்றான்; உமது ஆதரவை எதிர்ப்பார்க்கின்றான், உமது அருட்கொடையை நம்பி இருக்கின்றான்; உமது இராஜ்யத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளான்; உமது பரிசு என்னும் மதுரசத்தால் மதிமயங்கியுள்ளான். என் கடவுளே, உம்மீதுள்ள அவனது நேசம் எனும் உணர்வெழுச்சியையும், உம்மைப் போற்றும் அவனது சீர்மையையும், உம்மீதான அவனது அன்பின் ஆர்வத்தையும் அதிகரிப்பீராக.**

**மெய்யாகவே, அதி தாராளமானவரும், பொங்கிவழிந்திடும் அருள்நிறை பிரபுவும் நீரே. மன்னிப்பவரும், கருணைமிக்கவருமான கடவுள், உம்மையன்றி வேறிலர்.”[65]**

இந்தப் பாடங்களில், குழந்தைகள் கீழேயுள்ள பிரார்த்தனையை மனனமாகக் கூற கற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துவார்கள். மற்றவர்களுக்குச் செய்ததை போலவே, அவர்கள் மனனம் செய்ய வேண்டிய வார்த்தைகளைப் பற்றிய சிறிது புரிதலை அவர்கள் எவ்வாறு பெறுவார்கள் என்பதை எப்படி உறுதி செய்வீர்கள் என்பதை நீங்கள் குறித்து வைக்க வேண்டும். இந்தப் பிரார்த்தனை இதற்கு முன் வந்தவற்றைவிட நீளமானது, மற்றும் இந்த பிரார்த்தனையை அல்லது வேறு எந்தப் பிரார்த்தனையையும் ஒதுக்கப்பட்ட நான்கு பாடங்களுக்குள் மனனம் செய்வது ஒரு சவாலாக இருக்கும் பட்சத்தில், நீங்கள் அதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்திட வேண்டும்.

**“என் கடவுளே, உந்தன் நாமமே என்னைக் குணப்படுத்தும், உந்தன் நினைவே எனது சிகிச்சை. உமதருகாமையே எனது நம்பிக்கை, நின்றன்பால் அன்பே எனது தோழன். என் மீதுள்ள உமது இரக்கமே இம்மையிலும் மறுமையிலும் எனக்குச் சிகிச்சையும் உதவியுமாகும். மெய்யாகவே, வள்ளன்மையே உருவானவரும், எல்லாம் அறிந்தவரும், சர்வ விவேகியும் நீரே ஆவீர்.”[66]**

___________________________________________________________________________

___________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

## பகுதி 17

17 – 20 வரையிலான பாடங்களை ஆய்வு செய்ய ஆரம்பிப்பதில், எப்போதும் போன்று ஒவ்வொரு பாடமாக படித்தும் குழந்தைகளுடன் அவற்றில் நீங்கள் ஆய்வு செய்யவிருக்கும் ஆன்மீக குணங்களை எழுதிவைக்கவும்.

பாடம் 17: ______________________________________________________________

பாடம் 18: ______________________________________________________________

பாடம் 19: ______________________________________________________________

பாடம் 20: ______________________________________________________________

மேலே உள்ள குணங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய அகப்பார்வைகளைப் பெற உங்களுக்கும் உங்கள் சக பங்கேற்பாளர்களுக்கும் உதவும் சில மேற்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. தனிநபர் வாழ்க்கையின் கண்ணோட்டத்தில் மட்டுமே அவற்றைப் பற்றி விவாதிக்காமல் இருப்பதை நினைவில் கொள்ளுங்கள்; உங்களைப் போன்ற இளம் குழந்தைகளின் ஆசிரியருக்கு அவை எதை அர்த்தப்படுத்துகின்றன என்பதைப் பற்றியும் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

துணிவு என்னும் குணம் பற்றி நாம் பின்வருமாறு ஊக்குவிக்கப்படுகின்றோம்:

**“இராஜ்யத்தின்பால் முழுமையாகத் திரும்புவதற்கு உங்களால் இயன்ற அளவு முயலுங்கள், அதனால் நீங்கள் உள்ளார்ந்த துணிவும் இலட்சிய சக்தியும் பெறக்கூடும்.”**[67]

**“மனமுடைந்தோருக்கு ஆதரவின் மூலாதாரங்களாக இருப்பீராக. அலைந்து திரிபவனுக்கு ஒரு புகலிடமாக இருப்பீராக. அச்சமுற்ற ஒருவனுக்கு தைரியத்தின் மூலாதாரமாக இருப்பீராக. அவ்வாறாக, கடவுளின் தயவு, உதவி ஆகியவற்றின் மூலம் உலகின் மத்தியில் மானிட மகிழ்ச்சி என்னும் பதாகை உயர்த்தப்படவும் சர்வலோக உடன்பாடு எனும் கொடி விரிக்கப்படவும் கூடுமாக.”**[68]

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

நம்பிக்கையுடைமையின் முக்கியத்துவம் பற்றி நாம் பின்வருமாறு படிக்கின்றோம:

**“உனது நம்பிக்கை அனைத்தையும் இறைவனிலேயே வைத்து, அவரது தவறா கருணையை வலுவாகப் பற்றிக்கொள்." அவரைத் தவிர வேறு யாரால் வறியோரை வளம்பெறச் செய்யவும், தாழ்வுற்றோரை இழிநிலையிலிருந்து மீட்டிடவும் இயலும்?”[69]**

**“அசையும் புழுதியின் உருவமே! யான் உன்னுடன் தொடர்பை விரும்புகின்றேன்; ஆனால் நீயோ என்னில் நம்பிக்கை வைக்க மறுக்கின்றாய். உனது புரட்சி என்னும் வா ள் உனது நம்பிக்கை என்னும் விருட்சத்தை வீழ்த்தி விட்டு ள்ளது. எப்பொழுதும் யான் உனதருகே இருக்கின்றேன், இருந்தும் நீ என்னிடமிருந்து வெகு தொலைவில் இருக்கின்றாய். அழிவில்லா மேன்மையினை யான் உனக்காகத் தேர்ந்தெடுத்து ள்ளேன்; ஆயினும் நீயோ எல்லையற்ற அவமானத்தை உனக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ள்ளாய். இன்னும் நேரம் இருக்கும் பொழுதே திரும்பி வந்துவிடு, உனது வாய்ப்பை இழந்து விடாதே.”[70]**

**“எல்லா சூழ்நிலைகளிலும் மனிதன் கடவுளின் ஆசிகள் என்னும் கடலினுள் மூழ்கியுள்ளான். ஆதலால் எந்தச் சூழ்நிலையிலும் நீ நம்பிக்கை இழக்க வேண்டாம், மாறாக உனது நம்பிக்கையில் உறுதியாக இரு.”[71]**

**“இறைவன் வழங்கிடும் ஆசிகளை இதயம் புறக்கணித்துவிடுமானால், அஃது எவ்வாறு மகிழ்ச்சி அடையக்கூடும்? கடவுள் கருணையின்மீது நம்பிக்கையும் நம்பகத்தன்மையும் அதுகொண்டிருக்காவிடில், எங்ஙனம் அஃது ஓய்வு காண இயலும்? அந்தோ, கடவுளை நம்புங்கள்! ஏனெனில், அவரது அருட்கொடை என்றுமே நிலையானது; அவரது ஆசிகளின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள், ஏனெனில் அவை மிகச்சிறப்பானவை!”[72]**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

நம்பகத்தன்மை பற்றி திருவாக்குகள் பின்வருமாறு கூறுகின்றன:

**“மக்களே! கடவுளின் பார்வையில் நம்பகத்தன்மையே மிகச் சிறந்த ஆடையாகும். அனிகலன்களிலேயே அதிஉயர்ந்த இதைக் கொண்டு தன்னை அலங்கரித்துக்கொள்ளும் ஓர் ஆன்மாவுக்கு எல்லா அருட்கொடைகளும் கௌரவமும் உரித்தாகும்.”[73]**

**“மானிடம் என்னும் மாநகரத்திற்கு நம்பகத்தன்மை ஓர் அரணைப் போன்றதும் மனித உடலுக்குக் கண்களைப் போன்றதும் ஆகும். நம்பகத்தன்மையை இழந்த எவனும், அவரது அரியணையின் முன் தொலைநோக்கு அற்றவன் எனக் கருதப்படுவான்.”[74]**

**“எல்லா நாடுகளிலும் கடவுளுடைய நம்பகத்தன்மையின் அவதாரங்களாக இருப்பீர். இப்பண்பை அத்தகைய பூரணத்துவத்துடன் நீங்கள் பிரதிபலிப்பதானது, தங்கத்தால்**

**நிறைந்துள்ள நகரங்களின் வழி நீங்கள் பயணித்தாலும் உங்கள் பார்வை ஒரு கணங்கூட அதன் கவர்ச்சியினால் மதிமயங்கிடாது.”[75]**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இவ்வார்த்தைகள் அகத்தூண்டல் பற்றி நமக்கு உரைக்கின்றன:

**“நண்பர்களே! கடவுளின் அன்பெனும் நெருப்பினால் நீங்கள் அத்தகைய ஜுவாலையிடுவதானது, அதன் வெப்பம் உங்கள் இரத்தநாளங்களிலும் கைகால்களிலும் உடல் உறுப்புகளிலும் வெளிப்பட்டு, அதனால் உலக மக்கள் அதன் வெப்பத்தினால் தீப்பற்றப்பட்டு அதிநேசரின் தொடுவானத்தின்பால் திரும்பக்கூடும்.”[76]**

**"பிரபஞ்சத்தின் பெரும் நீர்ப்பரப்புகளே அதன் சுடரினைத் தணிக்கச் சக்தியற்றுப் போகுமளவு, உனதான்மா, பூமியின் அதி மையத்தில் எரிந்திடும் இவ்வணையா தீச்சுடரினால் கொழுந்து விட்டெரியட்டும்."[77]**

**“படைப்புலகின் நடுமத்தியில் சர்வ இரக்கமிக்கவர் பற்றியெரியச் செய்துள்ள இந்த அணையா நெருப்பின் தீச்சுடரினால் பிரகாசமாக எரிவாயாக. அதனால், அவரது அன்புக்குரியோர் உள்ளங்களில் அவரது அன்பெனும் வெப்பம் உன்மூலமாகத் தூண்டப்படக்கூடும். எல்லாம் வல்லவரும், அதி உயர்ந்தவருமான எமது வழியைப் பின்பற்றி, எம்மை நினைத்தலின் மூலமாக மனிதர்களின் இதயங்கள் பரவசம் பெறச்செய்வாயாக.”[78]**

**“அன்பெனும் நெருப்பை மூட்டிவிட்டு, எல்லாவற்றையும் எரித்திடுவாயாக; பின்னர், அன்பர்களின் தேசத்தில் உனது கால்களைப் பதிப்பாயாக.”[79]**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

மேற்கண்ட தொகுப்புகளில் ஓர் உரைப்பகுதியையாவது மனனம் செய்திட முயலவும்.

# பகுதி 18

இப்பொழுது பகுதி 17 – 20 வரையில் உள்ள கதைகளைப் பார்ப்போம். கதைகள் ஒவ்வொன்றையும் திரும்பத் திரும்பப் படித்த பின், உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் கீழ்க்காணும் கேள்விகளைப் பார்க்கவும்.

பாடம் 17-இல் நீங்கள் அலி அஸ்காரின் கதையைச் சொல்வீர்கள். அவர் ஓர் ஊழல் அதிகாரியால் அச்சுறுத்தப்பட்டாலும் கூட, அவரைப் பொய் சொல்லவும் ஏமாற்றவும் சம்மதிக்க வைக்க இயலவில்லை. கடவுளுடைய பார்வையில் பொய் சொல்வது விரும்பத்தக்கது அல்ல என்பதை குழந்தைகள் ஏற்கனவே நன்கு அறிவார்கள். பாடத்தின் கருப்பொருளான, கடவுளின் போதனைகளுக்குக் கீழ்ப்படிவது எவ்வாறு தைரியத்திற்கு ஆதாரமாக இருக்கிறது என்பதைப் பார்க்க இந்தக் கதை அவர்களுக்கு உதவும், கதையின் எப்பகுதிகள் இந்தத் தொடர்பை உணர வைக்க அவர்களுக்கு உதவிடும் குழந்தைகள் கதையைப் பின்பற்றி, இந்த முக்கியமான விஷயத்தைப் புரிந்து கொள்வதற்கு நீங்கள் நிகழ்வுகளை விவரிக்கும் போது எந்த விவரங்களை வலியுறுத்துவது முக்கியம்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

பாடம் 18 நம்பிக்கையுடன் இருப்பதைச் சுற்றி வலம் வருகிறது. 'அப்துல்-பஹாவினால்' நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்ட, ஒரு மனச்சோர்வடைந்த மனிதனின் கதையை நீங்கள் குழந்தைகளுக்குச் சொல்வீர்கள். அவர் அந்த மனிதன் மீது பரிவிரக்கத்தைப் பொழிந்து, அம்மனிதன் கடவுளின் இராஜ்யத்தில் ஒரு செல்வந்தர் என்பதை அவருக்கு நினைவூட்டுகின்றார். கடவுளின் இராஜ்யத்தில் நாம் செல்வந்தர்களாக இருப்பது என்பது, நமக்கு பெரும் லௌகீக செல்வம் உள்ளதென பொருள்படாது. இதன் அர்த்தமென்ன? அப்துல்-பஹாவின் நினைவூட்டல், கடவுள் அருட்கொடைகளின் மீது அம்மனிதனின் நம்பிக்கையை எவ்வாறு அதிகரிக்கின்றன? கடவுளை நம்பாமல், நம்பிக்கையுடன் இருப்பது கடினம் என்பதைக் கண்டுணர்வதில் பிள்ளைகளுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

நம்பகத்தன்மை பாடம் 19-இன் கருப்பொருளாகும். இந்த குணத்தின் முக்கியத்துவத்தைச் சித்தரிப்பதற்கு பிள்ளைகளுக்கு முகம்மத் தாக்கியின் கதையைக் கூறுவீர்கள். இவர், புனித நிலத்தில் தபால்களைப் பெற்று பட்டுவாடா செய்யும் பணியை அப்துல்-பஹாவினால் வழங்கப்பெற்றிருந்தார். இக்கதையைக் கூறும்போது, குழந்தைகள் முக்கிய கருத்தை

இழந்துவிடாதிருக்க, நீங்கள் பல விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவை என்ன? முகம்மத் தாக்கியை வர்ணிப்பதில், நீங்கள் "நம்பிக்கைக்குப் பாத்திரம்" மற்றும் "நம்பகம்" என்னும் சொற்களைப் பயன்படுத்துவீர்கள். கவனமின்மை, நம்பகத்தன்மை இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்றிருக்க இயலுமா?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

அகத்தூண்டல் பற்றிய பாடம் 20-இல், தோமஸ் பிரேக்வெல் என்னும் அன்பரின் கதை அதன் நடுமையத்தில் உள்ளது. அகத்தூண்டல் என்னும் குணத்தைப் புரிந்துகொள்ள ஓர் ஒளிவீசும் மெழுகுவர்த்தி, ஒளிரும் சுடர், கொழுந்துவிடும் நெருப்பு ஆகியவற்றின் உருவகம், கடவுள் மீது நம் இருதயங்களில் நாம் வைத்திருக்கும் அன்பின் தீவிரத்தை நாம் புரிந்துகொள்ள உதவுவதற்காகத் திருவாக்குகளில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இந்த உருவகத்தின் மூலம், உங்கள் மாணவர்கள் அகத்தூண்டல் பெறுவது என்றால் என்ன என்பது குறித்த உணர்வைப் பெறுவார்கள் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். இளம் வயதிலிருந்தே கருத்தியலாகச் சிந்திக்கும் திறன் குழந்தைகளிடம் உள்ளது, மற்றும் மொழியுடனான அவர்களின் தொடர்பு மேம்பாடு காண்கையில் அத்திறனும் மேம்பாடு காண்கிறது. இந்த எண்ணங்களை மனதில் கொண்டு, தோமஸ் பிரேக்வெல் கடவுள் அன்பெனும் தீயினால் எவ்வாறு சூழப்பட்டார் என்பதைக் கதையின் எந்தப் பகுதிகள் காட்டுகின்றன என்பதை அடையாளம் காணவும். கதையில் மனதை ஈர்க்கும் விவரங்கள் சில யாவை?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## பகுதி 19

நீங்களும் உங்கள் சக பங்கேற்பாளர்களும் 17 முதல் 20 வரையிலான பாடங்களின் அம்சங்களைப் பயிற்சி செய்வதன் மூலம் உத்வேகம் பெற்றீர்கள் எனவும், இப்போது நீங்கள் கிரேட் 1, பாடங்கள் 21 முதல் 24 வரையிலான இறுதி நான்கிற்குச் செல்லத் தயாராக உள்ளீர்கள் எனவும் கருதப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பு காலத்தின் தொடக்கத்திலும் இந்தப் பிரார்த்தனையை நீங்கள் மனனமாக ஒப்புவிக்க விரும்பலாம்:

**என் கடவுளே, என்னில் ஒரு தூய உள்ளத்தை உண்டாக்குவீராக. என் நம்பிக்கையே! என்னுள் ஒரு சாந்தமான மனசாட்சியைப் புதுப்பிப்பீராக. என் அதி நேசரே! சக்தியின்**

**ஆவியின் வழி உமது மார்க்கத்தில் என்னை உறுதிப்படுத்துவீராக. எனது ஆவலின் நோக்கமே! உமது ஒளியின் பிரகாசத்தின் வழி எனக்கு உமது வழியை வெளிப்படுத்துவீராக.என் உயிரின் பிறப்பிடமே, உமது உன்னத சக்தியால், என்னை உமது புனிதத் தெய்வீகத் தன்மைக்கு உயர்த்துவீராக. என் இறைவன் ஆனவரே! உமதுநித்தியம் எனும் தென்றலினால் என்னை மகிழ்விப்பீராக. என் தோழரே, உமது நித்திய கானங்கள் என் மீது அமைதியை ஊதி அருளுமாக; என் பிரபுவே, உமது ஆதி வதனத்தின் செல்வங்கள் என்னை உம்மைத் தவிர மற்றெல்லாவற்றிலிருந்தும் மீட்டருளுமாக; தெளிவானவற்றுள் எல்லாம் அதி தெளிவானவரே, மறைவாய் உள்ளவற்றுள் எல்லாம் அதி மறைவாய் உள்ளவரே! உமது மாசுபடுத்திட இயலா வெளிப்படுத்துதலின் செய்திகள் எனக்கு மகிழ்ச்சி கொண்டு வருமாக.!”[80]**

இந்த கிரேட்டில் குழந்தைகள் மனனம் செய்யவிருக்கும் கடைசிப் பிரார்த்தனை கீழே வழங்கப்பட்டுள்ளது. அதன் முக்கியத்துவத்தில் பெரும்பான்மையை அவர்கள் புரிந்துகொள்வார்கள் எனினும், அவர்கள் காணும் புதிய அல்லது அறிமுகமில்லாத சொற்களை அல்லது சொற்றொடர்களை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள் என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.

**“அன்புமிக்கப் பிரபுவே! நான் ஒரு சிறு குழந்தை; இராஜ்யத்திற்குள் என்னைப் பிரவேசிக்கச் செய்வதன்வழி என்னை மேன்மையடையச் செய்வீராக. நான் உலகப் பற்றுடையவன்; என்னைத் தெய்வீகத் தன்மையுடையவனாக ஆக்குவீராக. நான்கீழுலகைச் சார்ந்தவன்; என்னை மேலிருக்கும் இராஜ்யத்தில் ஒருவனாக ஆக்குவீராக; நான் சோர்வடைந்துள்ளேன்; என்னைப் பிரகாசமடையச் செய்வீராக; நான் லௌகீக இயல்பினன்; என்னை ஆன்மீக இயல்பினனாக ஆக்குவீராக. நான் உமது முடிவிலா வள்ளன்மையினை வெளிப்படுத்திட அருள் புரிவீராக.**

**நீரே சக்திமிக்கவர், அன்பே உருவானவர்.” [81]**

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

## பகுதி 20

கிரேட் 1 இல் நீங்கள் கற்பிக்கப் போகும் கடைசி நான்கு பாடங்களைப் படியுங்கள்; எப்போதும் போல, உங்கள் மாணவர்கள் மனனமாகக் கற்கும் மேற்கோள்களை அறிமுகப்படுத்த நீங்கள் பகிர்ந்து கொள்ளும் யோசனைகளில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். ஒவ்வொரு பாடமும் கவனம் செலுத்தும் குணத்தை எழுதி வையுங்கள்.

பாடம் 21: ________________________________________________

பாடம் 22: ________________________________________________

பாடம் 23: ________________________________________________

பாடம் 24: ________________________________________________

முன்னைய பாடங்களில் நீங்கள் செய்தது போன்றே, பின்வரும் மேற்கோள்கள் உங்களுக்கும் உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுக்கும் இந்தப் பாடங்களில் குறிப்பிடப்பட்ட ஆன்மீக குணங்களின் மீது ஒன்றாகப் பிரதிபலித்திடுவதற்கான வாய்ப்பை வழங்கிடும்.

பிரகாசம் குறித்த முக்கியத்துவத்தை பின்வரும் திருவாக்குகள் நமக்கு கூறுகின்றன:

**"கடவுள் அன்பெனும் தீச்சுடரே! கதிரானது ஒளிவீச வேண்டும் சூரியன் உதித்திட வேண்டும்; முழு நிலவு பிரகாசிக்க வேண்டும் நட்சத்திரம் ஒளிர வேண்டும். நீ ஒரு கதிராக இருப்பதனால், வெளிச்சத்தையும் அறிவொளியையும் கொடுப்பதற்கும் தொடுவானங்களைப் பிரகாசமாக்கவும் கடவுள் அன்பெனும் நெருப்பினால் உலகம் பற்றியெரிந்திடச் செய்யவும் உனக்கு உதவுமாறு இறைவனிடன் மன்றாடுவாயாக."[82]**

**"மனிதர்களே, ஒருவரோடு ஒருவர் பிரகாசத்துடனும் மகிழ்வுடனும் வாழுங்கள்."[83]**

**"ஒளியைப் பரவச் செய்வதற்கும் தனது வார்த்தைகள், செயல் மற்றும் வாழ்வு ஆகியவற்றினால் உலகைப் பிரகாசிக்கச் செய்வதற்கும் சர்வ அன்புமிக்க இறைவன் மனிதனைப் படைத்துள்ளார்."[84]**

**"மானிடத்திற்கான சேவை கடவுளுக்கான சேவையாகும். உங்களைப் பார்க்கும் அனைவரும் அதன் பிரதிபலிப்பினால் ஒளிபெறும் அளவிற்கு இராஜ்யத்தின் அன்பும் ஒளியும் உங்கள் மூலமாக பிரகாசிக்கட்டுமாக. அவற்றின் தெய்வீக ஸ்தானத்தின் உயர்விலிருந்து, பளிச்சிடும், ஜொலித்திடும் விண்மீன்களாக இருப்பீராக."[85]**

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இந்த உரைப்பகுதிகளிலிருந்து நாம் விசுவாசம் என்னும் குணம் குறித்து அகப்பார்வைகள் பெறுகின்றோம்:

**"இறைவனுடைய மகிமை உங்கள் மீதும், பற்றுறுதியும், தடம் மாறாத் தன்மையும் கொண்ட ஒவ்வொரு இதயத்தின் மீதும், இடைவிடா ஸ்திரத்தன்மையும், விசுவாசமிக்க ஒவ்வொரு ஆன்மாவின் மீதும் நிலைப்பதாக."[86]**

**“ஒரு சோதனை மிகவும் வன்மையாகும் போது, அவர்கள் அசையாமலும், பஹாவின் மீதான தங்கள் அன்பில் விசுவாசத்துடனும் இருக்க வேண்டுமென கருனைமிக்கவரின் பணிப்பெண்களிடம் நீங்கள் தெரிவிக்க வேண்டும். குளிர்காலத்தில் புயல்கள் தோன்றும், பலமான காற்றுகள் வீசும்; ஆனால், அதன் பின்னர் காண்பதற்கு அழகான, நறுமணச் செடிகள், செந்நிற பூக்கள் ஆகியவற்றைக் கொண்ட, மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் அலங்கரிக்கும் வசந்த காலம் அதன் எல்லா எழிலோடும் பின்தொடர்ந்திடும்.”[87]**

**இந்நாளில், விசுவாசம் என்னும் கோப்பையை மற்றவருடன் பகிர்ந்துகொள்பவரும்; தமது எதிரிகளுக்குங் கூட, தாராளகுணம் என்னும் இரத்தினத்தை வழங்கி, வீழ்ந்திட்ட தனது விரோதிக்கு, உதவிக் கரங்களை நீட்டும் ஒருவர்தான் கடவுள் திருவாயிலில் அன்பாதரவைப் பெற்றவராவார். அவர்தான் தனது தீவிர எதிரிகளுக்குங்கூட, ஒரு அன்பான நண்பராவார்.”[88]**

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

பின்வரும் உரைப்பகுதிகள் நமக்கு பொறுமை குறித்து எடுத்துரைக்கின்றன:

**“மனிதனின் புத்திரனே! ஒவ்வொன்றிற்கும் ஓர் அடையாளம் உண்டு. அன்பிற்கு அடையாளம் எனது கட்டளையின் கீழ் மன உறுதியும் எனது சோதனைகளின் கீழ் பொறுமையுமே ஆகும்.”[89]**

**“உறுதியுடன் தாங்கிக் கொள்வோர், நோய்களிலும், இன்னல்களிலும் பொறுமையுடன் இருப்போர், தங்களுக்கு நேர்ந்திடுபவைக்காக வருத்தமுறாதிருப்போர், மன அமைதியுடன் இருப்போர் ஆகிய அனைவரும் அருட்பேறு பெற்றோராவர்.”[90]**

**“மாற்றவியலா ஒரு கட்டளையினால் விதிக்கப்பட்டுள்ள அதனுடன் மனநிறைவு அடைந்து, பொறுமையுடன் நிலைத்திருப்போரில் ஒருவராக இருப்பீர்.”[91]**

**“எவரொருவர் தனது முகத்தை அதி விழுமிய தொடுவானத்தை நோக்கித் திருப்புகின்றாரோ, அவருக்குப், பொறுமை என்னும் கயிற்றை இறுகப் பற்றிக்கொண்டு, ஆபத்தில் உதவும் கட்டுப்படுத்தவியலாத இறைவனையே சார்ந்திருப்பது ஏற்புடையதாகும்.”[92]**

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

பின்வருவனவற்றை பற்றுறுதியின் தொடர்பில் நாம் படிக்கின்றோம்:

**“நித்திய மெய்ம்மையாகிய அவரை அறிந்துகொள்வதற்கு அடுத்ததாக, மனிதர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள முதலாவதும் அதிமுக்கியமானதுமான கடமை, அவரது சமயத்தில் உறுதியாயிருத்தல்.”[93]**

**“உலகப்பொருள் எதுவுமே உங்களை உங்களின் கடமையைச் செய்வதைத்தடுக்கச் சக்தியற்றுப்போகுமளவு இருக்கவேண்டும் இறைவனது சமயத்தின்பால் உங்களின் பற்றுறுதி.”[94]**

**“திடப்பற்றுடன் இறைவனின் அன்பினில் நடந்தும், அவரது சமயத்தில் நெறி பிறழாது இருந்தும், உனது நாவின் வலிமையைக் கொண்டு அவருக்கு உதவுவாயாக.”[95]**

**“இவ்வாறாக, திடமான கால்களுடன் நாம் உறுதிப்பாடு என்னும் பாதையில் நடந்திடக்கூடும். அதனால், இறைவனது நல்விருப்பம் எனும் பசும்புல்வெளியிலிருந்து வீசிடும் தென்றலானது தெய்வீக ஏற்பு எனும் சுகந்தமான நறுமணங்களை நம்மீது தெளித்து, மறைவுறவல்ல நம்மை நித்திய மகிமை என்னும் இராஜ்யத்தை அடையச் செய்திடும்.”[96]**

**“தன்னம்பிக்கையுடனும் பற்றுறுதியுடனும் இருப்பீர்; உமது சேவைகள் சுவர்க்கத்தின் சக்திகளினால் உறுதிப்படுத்தப்படுகின்றன; ஏனெனில், உமது குறிக்கோள்கள் மேன்மையானவை, உமது நோக்கங்கள் தூய்மையானவை மதிப்புடையவை.”[97]**

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

மேற்கண்ட தொகுப்புலிருந்து குறைந்த பட்சம் ஒரு மேற்கோளையாவது மனனம் செய்யவும்.

## பகுதி 21

இப்போது உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் விவரிக்கவிருக்கும் கடைசி நான்கு கதைகளைப் பார்ப்போம், அவர்களுடன் நீங்கள் பல அற்புதமான மணிநேரங்களை ஒன்றாக செலவழித்திருப்பீர்கள், அவர்கள் கற்றுக்கொண்ட ஆன்மீக குணங்களை அவர்களுக்குள் வளர்க்க முயல்வீர்கள். ஒவ்வொரு கதையையும் மீண்டும் படித்த பிறகு, கீழே உள்ள கேள்விகளை உங்கள் குழுவுடன் விவாதிக்கவும்.

பாடம் 21-இல், டோரதி பேக்கர் ஒரு இளம் பெண்ணாக இருந்தபோது, 'அப்துல்-பஹாவை முதன் முறையாக சந்தித்தது பற்றிய ஒரு கதையைக் குழந்தைகள் கேட்பார்கள். கதையின் போக்கில், முக்கிய கருப்பொருளான அவரது பிரகாசத்தால் டோரதி எவ்வாறு ஈர்க்கப்படுகிறார் என்பதை அவர்கள் பார்ப்பார்கள். 'அப்துல்' பஹாவின் பிரகாசம் டோரதி மீது என்ன விளைவை ஏற்படுத்துகிறது? இந்தக் கதை 'அப்துல்-பஹாவின்' மீதான குழந்தைகளின் பற்றுதலை அதிகரிக்கும் என நீங்கள் எவ்வாறு நம்புவீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

பாடம் 22-இன் கருப்பொருள் விசுவாசம் குறித்ததாகும், இது இஸ்ஃபாண்டியாரின் கதையால் சித்தரிக்கப்பட்ட ஒரு குணமாகும். கதையின் எந்தப் பகுதிகள் இந்த கருப்பொருளுடன் நேரடியான தொடர்புடையவை? இஸ்ஃபாண்டியார் விசுவாசம் உடையவராக இருக்க அவருக்கு உதவும் வேறு எந்த ஆன்மீக குணங்களை அவர் வெளிப்படுத்துகிறார்? உங்கள் விவரணையில் என்ன விவரங்களைச் சேர்ப்பீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

பாடம் 23 பொறுமை என்னும் குணத்தின் மீது கவனம் செலுத்துகின்றது. கதையில், லீ சின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை--ஒரு சிறிய விதையிலிருந்து இறுதியாக கனிகளைக் கொடுக்கும் ஒரு மரமாகும் வரை--கடந்து செல்லும் தனது பீச் மரத்தைப் பராமரிக்கும் போது பொறுமையைக் காட்டுகிறார் இக்கதை, நீண்ட கால உழைப்பின் போதான பொறுமையின் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை வலியுறுத்துகிறது. நமது உழைப்பின் பலனைக் காண்பதற்கு முன், நாம் எவ்வளவு அதிகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்த வழியில் பொறுமை என்னும் ஆன்மீக குணத்தைக் குழந்தைகள் பார்ப்பது ஏன் முக்கியமாகின்றது? உங்கள் மாணவர்களுக்குக் கதையைச் சொல்லும் போது உங்கள் மனதில் என்ன விவரங்கள் தெளிவாக இருக்க வேண்டும்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

பாடம் 24-இல் 'அப்துல் பஹாவின் சகோதரியான பாஹிய்யா கனும்' வாழ்க்கையைப் பற்றிய ஒரு கதையைக் குழந்தைகளுக்குச் சொல்வீர்கள். பாஹிய்யா கானும் துன்பங்களை எதிர்கொண்டபோது எப்படி பற்றுறுதியை வெளிப்படுத்தினார் என்பதை இது அவர்களுக்கு எடுத்துக்காட்டும். ஆனால் கடவுளுடைய அன்பில் உறுதியாயிருத்தல் எந்த ஒரு குறிப்பிட்ட நெருக்கடியையும் கஷ்டத்தையும் கடப்பதை விட அதிகமான ஒன்றெனும் புரிதலை அவர்கள் பெற்றிட வேண்டும் எனவும் நீங்கள் விரும்புவீர்கள். அவருடைய வாழ்க்கைக் கதை, கடவுளின் சமயத்தில் உறுதியைக் கோரும் வலிமையையும் நிலையுறுதியையும் குழந்தைகளுக்கு எப்படிக் கொடுக்கும்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 22

இந்த அலகில், நீங்கள் முதல் வகுப்பில் உள்ள குழந்தைகளுடன் ஆராயும் ஆன்மீக குணங்களைப் பற்றி சிந்தித்துள்ளதுடன் அவர்கள் நடத்தையின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் நம்பிக்கையில் நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கும் இருபத்து நான்கு பாடங்களின் பல்வேறு கூறுகளை செயல்படுத்த பயிற்சி செய்துள்ளீர்கள். கிரேட் 1-இல் உங்கள் மாணவர்கள் மேம்பாடு காண உதவும் அனைத்து ஆன்மீக குணங்களையும் உங்கள் மனதில் ஞாபகப்படுத்திக்கொள்ள இப்போது சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றில் இருந்து, கடவுளுடைய அன்பில் உறுதியாயிருத்தலே அவர்கள் தங்கள் பாடங்களை முடிக்கும் கருப்பொருளாக இருக்கிறது என்பது பொருத்தமானதாகத் தோன்றுகிறது. முன்பு விவாதித்தபடி, இதயத் தூய்மையில் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்கள் இதைத் தொடங்குவது முக்கியமாகும். நீங்கள் உங்கள் முதல் கற்பித்தல் முயற்சியைத் தொடங்குகையில், கடவுளுடைய அன்பில் பற்றுறுதி உங்கள் கவனிப்பில் உள்ள மாணவர்கள் தங்களுக்குள் மறைந்திருக்கும் ரத்தினத்தைப் போன்ற எல்லா குணங்களையும் வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளில் விடாமுயற்சியுடன் இருக்க எவ்வளவு உதவும் என்பதை நீங்கள் அடிக்கடி சிந்திக்க வேண்டும்.

# குழந்தைகளுக்கான 24 பாடங்கள்

# பாடம் 1

## அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

தெய்வீக அருட்கொடைகளைப் பெறுவதற்காகவும், ஆன்மீக சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்காகவும், பிரிவு 2ல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது போல, உங்கள் நினைவிலிருந்து உங்களுக்கு தெரிந்த ஒரு பிரார்த்தனை கூறி வகுப்பினை தொடங்கலாம். பிறகு குழந்தைகளில் யாருக்காவது ஏதாவது பிரார்த்தனை மனப்பாடமாக தெரிந்திருந்தால், அப்பிரார்தனையை கூறும் படி நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். பிறகு, கீழுள்ள பிரார்த்தனையை அவர்கள் மனனம் செய்வார்கள். அதன் தனிச்சிறப்பை புரிந்துக் கொள்ள அவர்களுக்கு உதவுவதற்காக, திடமான உதாரணகள் கொண்டு விளக்க வேண்டியிருக்கும் என நீங்கள் நினைக்கும் வார்த்தைகளை அடையாளம் காணுங்கள். பெரும்பாலான குழந்தைகள் இதனை எளிதாக கற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் அடுத்த மூன்று வகுப்பு நேரங்களில் இதனை அவர்களுடன் நீங்கள் மீளாய்வு செய்ய வேண்டும், அதன் மூலம் பாடம் 5ல் புதிய பிரார்த்தனையை அவர்கள் கற்று கொள்ள ஆரம்பிக்கும் போது, இந்த பிரார்த்தனை அவர்களின் இதயங்களில் மனங்களிலும் ஏற்கனவே பொறிக்கப்பட்டிருக்கும்.

> **“அவரே கடவுள்! கடவுளே, என் கடவுளே! ஒரு முத்தைப் போன்ற ஒரு தூய உள்ளத்தை எனக்கருள்வீராக!.”[98]**

இந்த முதல் சில பாடங்களில் அவர்கள் மனனம் செய்யும் பிரார்த்தனை சிறியதாக இருப்பதால், பிரிவு 2ல் கொடுக்கப்பட்டுள்ள பயபக்தி மற்றும் பிரார்த்தனையின் இயல்பை பற்றி கொடுக்கப்பட்டுள்ள சில சிந்தனைகளை அவர்களுடன் கலந்துரையாட பல வாய்ப்புகளை இது உங்களுக்கு வழங்கும்.

## ஆ. பாடல்கள்

பிரார்த்தனைக்காக அர்ப்பணிக்கப்பட்ட நேரத்திற்குப் பிறகு, குழந்தைகள் கீழ்வரும் பாடலைப் பாடலாம். இது, பிறகு குழந்தைகள் மனனம் செய்யவிருக்கும், இந்தப் பாடத்தின் கருப்பொருளான, இதயத்தின் தூய்மையுடன் தொடர்புடைய மேற்கோளை இசையுடன் பொருத்தப்பட்டுள்ள பாடலாகும்.

<u>முதல் அறிவுரை இதுவே</u>

ஆவியின் புத்திரனே! ஆவியின் புத்திரனே!
எமது முதல் அறிவுரை இதுவே.
ஆவியின் புத்திரனே! ஆவியின் புத்திரனே!
எமது முதல் அறிவுரை இதுவே.
தூய்மையும் அன்பும் பிரகாசமும் நிறைந்த
உள்ளத்தினைக் கொண்டிருப்பாயாக.
அதனால் தொன்மையும் அழியாத
தன்மையும் வாய்ந்த என்றும் நிலையான
ராஜ்ஜியம் உமக்கே உரித்தாகுமாக.
ஆவியின் புத்திரனே! ஆவியின் புத்திரனே!
எமது முதல் அறிவுரை இதுவே.

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

அடுத்த நடவடிக்கை பஹாய் புனித வாசகங்களிலிருந்து மேற்கோளை மனப்பாடம் செய்வதாகும். பாடத்தின் கருப்பொருளையும், மனனம் செய்வதற்கான மேற்கோளையும் பின்வரும் முறையில் நீங்கள் அறிமுகப்படுத்தலாம்:

> நமது உள்ளங்கள் நிலைக்கண்ணாடிகள் போன்றவை. நாம் எப்போதும் அவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். யாரையாவது வெறுப்பது, வேறொருவர் மீது பொறாமை கொள்வது, எந்த ஒரு காரணத்திற்காகவும் யாரிடமாவது அன்பில்லாமல் நடந்து கொள்வது - போன்றவை நமது இதயங்கள் எனும் கண்ணாடி பிரகாசிப்பதை தடுக்கும் தூசுகள் போன்றவை. நமது உள்ளங்கள் தூய்மையாக இருக்கும் போது, அவை இறைவனது ஒளி மற்றும் அவரது பண்புகளான கருணை, அன்பு, ஈகை போன்ற பண்புகளை பிரதிபலிக்கின்றன, மேலும், நாம் பிறருடைய மகிழ்ச்சிக்கு காரணமாய் அமைகிறோம். நமது உள்ளங்களைத் தூய்மையாய் வைத்திருக்க பஹாவுல்லாவின் இம்மேற்கோளினை மனப்பாடம் செய்வோம்:
>
> **“ஆவியின் புத்திரனே! எனது முதல் அறிவுரை இதுவே: தூய்மையும், அன்பும், பிரகாசமும் நிறைந்த உ ள்ளத்தினைக் கொண்டிருப்பாயாக…”[99]**

குழந்தைகள் மேற்கோள்களை நன்றாக புரிந்துக்கொண்டார்கள் என்றால், அவர்கள் அதனை எளிதில் மனப்பாடம் செய்துவிடுவார்கள். ஆகவே, நீங்கள் வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் பொருள் குறித்து அவர்களுடன் கலந்துரையாட சில நேரம் செலவழிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. அவ்வாறு செய்ய உங்களுக்கு உதவும் சில வாக்கியங்கள் இங்கே உள்ளன.

*அறிவுரை*

1. ஒரு நாள் ஜெரார்ட் மற்றும் மேரி சில படங்களுக்கு வண்ணம் தீட்டிக் கொண்டிருந்தனர். ஜெரார்டுக்கு மஞ்சள் எழுதுகோல் தேவைப்பட்டது, ஆனால் மேரி அவனுக்கு அதைக் கொடுக்க விரும்பவில்லை. ஆசிரியர் மேரியிடம் அதைப் பகிர்ந்து கொள்ளுமாறு சொன்னார். ஆசிரியர் மேரிக்கு நல்ல அறிவுரையை வழங்கினார்.

2. பாட்ரிசியா தன்னுடைய காசைத் திண்பண்டங்களுக்குச் செலவு செய்வதா அல்லது கதை புத்தகங்களுக்குச் செலவு செய்வதா என்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது. அவளது பெற்றோர்கள் அவளுக்குக் கதைப் புத்தகங்கள் வாங்குமாறு புத்திமதி வழங்கினர். அவளது பெற்றோர்கள் பாட்ரிசியாவுக்கு நல்ல அறிவுரையை வழங்கினர்.

*கொண்டிருத்தல்*

1. தினேய் தூங்கச் செல்லுமுன் பிரார்த்தனைகளைப் படிக்க விரும்புகிறாள். அவளிடம் ஒரு சிறிய பிரார்த்தனை புத்தகம் உள்ளது. தினேய் ஒரு சிறிய பிரார்த்தனைப் புத்தகத்தைக் கொண்டிருக்கிறாள்.
2. வெள்ளம் வந்தபோது பெரும்பாலான மக்கள் தமது உடைமைகள் அனைத்தையும் இழந்தனர், ஆனால் நண்பர்கள் எல்லோரும் அவர்களுக்கு உதவி செய்தனர்.

விரைவிலேயே அவர்கள் தமக்குத் தேவையானவற்றை மீண்டும் பெற்றுக் கொண்டிருந்தனர்.

*தூய உள்ளம்*

1. கேத்தி கோபமடைந்து சூசனிடம் கத்தினான். சூசன் சோகமடைந்தாலும் உடனடியாக கேத்தியை மன்னித்து விட்டாள். சூசன் தூய உள்ளத்தைக் கொண்டிருக்கிறாள்.
2. ஜார்ஜ் தனது திண்பண்டங்களைப் பிற சிறுவர்களுடன் பகிர்ந்துண்ண விரும்புகிறான், தன் மீது கற்களை வீசியெறிந்த குஸ்தவாவுடனும் பகிர்ந்து கொள்வான். ஜார்ஜ் தூய உள்ளத்தைக் கொண்டிருக்கிறான்.

*அன்பு உள்ளம்*

1. உதவியை நாடி தன் வீட்டிற்கு வருபவர்களை, மிங் லிங் எப்போதும் நன்றாக கவனித்து கொள்கிறார். மிங் லிங் அன்பான உள்ளத்தைக் கொண்டிருக்கிறாள்.
2. திரு. ராபர்ட்சன் ஒரு முதியவர். அவரது தோட்டத்தில் விளைந்த பழங்களை விற்க ஜிம்மி அவற்றை அங்காடிக்கு எடுத்துச் செல்கிறான். ஜிம்மிக்கு அன்பு உள்ளம் இருக்கிறது.

*பிரகாசமான உள்ளம்*

1. நான் கவலையுடன் இருக்கும்போது என் தாய் என்னை தேற்றுகிறார் மற்றும் என்னை மகிழ்ச்சியடைய செய்கிறார். என்தாய் ஒரு பிரகாசமான உள்ளத்தைக் கொண்டிருக்கிறார்.

2. ஒபுயா நோயுற்ற போது எந்நேரமும் படுக்கையிலேயே இருக்க வேண்டியிருந்தது. அவன் பல பிரார்த்தனைகள் கூறினான், அவன் கவலை கொள்ளவில்லை, அவன் தொடர்ந்து மகிழ்ச்சியாகவே இருந்தான். ஒபுயா ஒரு பிரகாசமான உள்ளத்தைக் கொண்டிருந்தான்.

**ஈ. கதை**

குழந்தைகள் மேற்கோளை மனனம் செய்த பிறகு, தூய்மையான உள்ளத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் அப்துல் பஹாவின் கதை ஒன்றை அவர்களுக்கு கூறலாம். உங்கள் வகுப்பிலிருக்கும் சில சிறுவர்களுக்கு அப்துல் பஹா பற்றி பரிட்சயமில்லாமல் இருந்தால், கதை கூற தொடங்குவதற்கு முன் அவரை பற்றி சில வார்த்தைகளை கூற நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

*ஒருவரின் மனதில் இருப்பதை அப்துல் பஹாவினால் எப்போதும் சொல்ல முடிந்தது. தூய்மையும் பிரகாசமும் பொருந்திய உள்ளமுடையவர்களை அவர் பேரன்புடன் நேசித்தார். ஓர் இரவு விருந்தின் போது அப்துல்பஹாவின் விருந்தினராக இருக்கும் வாய்ப்பு ஒரு பெண்மணிக்கு கிடைத்தது. ஞானம் நிறைந்த அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த போது, தன் முன் இருந்த தண்ணீர் டம்ளரை பார்த்து, "இத்தண்ணீர் டம்ளரை பயன்படுத்துவது போலவே, அப்துல்பஹா என்னுள்ளத்தை எடுத்து அதிலுள்ள இவ்வுலக ஆசைகளை நீக்கிவிட்டு, பின் அதனை தெய்வீக அன்பு மற்றும் புரிந்துணர்வு ஆகியவைகளைக் கொண்டு நிரப்பினால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.*

*இந்த எண்ணம் அவள் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தது. அதைப் பற்றி அவள் யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவள் என்ன நினைக்கிறாள் என்பது அப்துல்பஹாவுக்கு தெரிந்துவிட்டது என்பதை உணரும் வகையில் அங்கு ஒரு நிகழ்வு அரங்கேறியது. அப்துல்பஹாவிற்கு அவள் என்ன யோசிக்கிறாள் என்பது தெரிந்துவிட்டது. அவர் பேசிக்கொண்டிருந்த வேளையில், தமது பணியாளர் ஒருவரை அழைப்பதற்காக தனது உரையாடலை நிறுத்தி, அந்த பணியாளரிடம் பாரசீக மொழியில் சில வார்த்தைகள் கூறினார். அப்பணியாளர், அப்பெண்மணி இருந்த மேசை அருகே வந்தார், அவளது தண்ணீர் டம்ளரை எடுத்தார், காலி செய்து மீண்டும் டம்ளரை அவள் முன் வைத்து விட்டார்.*

*சிறிது நேரம் சென்ற பின், அப்துல்பஹா தமது உரையாடலைத் தொடர்ந்து கொண்டே, மிகவும் இயல்பான முறையில், மேசையில் இருந்த நீர் சொம்பை எடுத்து, அப்பெண்ணின் காலி டம்ளரை நிரப்பினார். என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியாது, ஆனால் அப்துல்பஹா எவ்வாறு தம் மன விருப்பத்திற்கு விடையளித்தார் என்பது அந்த பெண்ணிற்கு புரிந்தது. அவள் மகிழ்ச்சியால் நிரம்பினாள். உள்ளங்களும் மனமும் அப்துல்பஹாவுக்கு திறந்த புத்தகங்கள் என்றும் அவற்றை அவர் பேரன்புடனும் பெரும் பரிவுடனும் வாசிக்க இயலும் என அவள் அறிந்து கொண்டாள்.*

### உ. விளையாட்டு: “பகிர்தல்”

அடுத்த செயல்பாட்டிற்காக, காரின் டயர் ஒன்றை தரையில் வைத்த பிறகு, ஒரே நேரத்தில் எவ்வளவு பேர் அதன் மீத நிற்க இயலும் என்பதை முயற்சிக்குமாறு குழந்தைகளிடம் கேட்டு கொள்ளுங்கள். காரின் டயர் இல்லையென்றால், ஒரு பாய் விரிப்பு அல்லது டவல், அல்லது அது போன்றதொரு பொருளை, தரை மீது வைக்கலாம். நீங்கள் எந்த பொருளை தேர்ந்தெடுத்தாலும், அது வகுப்பில் உள்ள அணைத்து குழந்தைகளும் நிற்பதற்கு சவாலாக இருக்கும் வகையில், சிறியதாக இருக்க வேண்டும்..

### ஊ. வண்ணமிடல்: வரைபடம் 1

விளையாட்டிற்கு பிறகு, அணைத்து குழந்தைகளையும் ஒன்று கூட்டி, ஒவ்வொருவருக்கும் வரைபடம் 1ன் நகல் ஒன்றை வண்ணமிடுவதற்காக கொடுக்கவும், அந்த பக்கத்தின் கீழே அவர்கள் மனனம் செய்த மேற்கோள் இருப்பதை விளக்கி, நீங்கள் முன்னதாக தயார்படுத்திக்கொண்ட வார்த்தைகளை கொண்டு, எவ்வாறு அந்த வரைபடம் பாடத்தின் கருப்பொருளுடன் தொடர்புள்ளது என்பதை கூறலாம்

### எ. முடிவு பிரார்த்தனை

வகுப்பை முடிவிற்கு கொண்டு வர, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை அவர்கள் மனனம் செய்த மேற்கோள் அல்லது அவர்களுக்கு தெரிந்த பிரார்த்தனையை கூறுமாறு கேட்டுக் கொள்ளலாம். பிறகு நீங்கள் முடிவு பிரார்த்தனையை கூறலாம்.

## பாடம் 2

### அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

இந்த வகுப்பையும் மற்றும் அடுத்த இரண்டு வகுப்புகளையும் பாடம் 1ன் ஆரம்பத்தில் நீங்கள் வாசித்த பிரார்த்தனையை கூறி ஆரம்பிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. நீங்கள் முன்னதாகவே தேர்ந்தெடுத்த சில குழந்தைகளை, அவர்களுக்கு தெரிந்த ஒரு பிரார்த்தனையை கூறுமாறு கேட்டுக் கொள்ளலாம். பிறகு, சென்ற பாடத்தில் அறிமுகப்படுத்திய பிரார்த்தனையை தொடர்ந்து மனனம் செய்ய உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் உதவலாம்.

### ஆ. பாடல்கள்

அடுத்த செயல்பாட்டிற்கு, குழந்தைகள் இரண்டு பாடல்களை கூறலாம் - சென்ற பாடத்திலிருந்து ஒன்றும், இந்த பாடத்தின் கருப்பொருளாக நீதி தொடர்பான கீழுள்ள புதிய பாடல் மற்றொன்றாகும்.

<u>ஓர் உயர் வழி</u>

நீதியே உயர் வழி
நீதி தந்திடும் பேரொளி
நற்செயல்களின் மூலம் ஒளிர்ந்திடும்
வழிதேடுவோருக்கு அது ஜோதி
(ஓ........ நீதியே வழி)
(ஓ........ நீதியே வழி)
அப்துல் பஹாவை நாமறிவோம்
அடுத்தவரோடு பகிர்வதில்
அன்பும் அக்கறையும் காட்டிச் சென்றார்
அன்பும் அக்கறையும் காட்டிச் சென்றார்
ஆனந்தமாய் வாழ்வதற்கு
அளவான உடைமையில் திருப்தி கொண்டார்
அளவான உடைமையில் திருப்தி கொண்டார்
(ஓ........ நீதியே வழி)
(ஓ........ நீதியே வழி)

### இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இரண்டு பாடல்களையும் தொடர்ந்து, பஹாவுல்லாவின் திருவாசகங்களில் இருந்து ஒரு மேற்கோளை மனனம் செய்ய குழந்தைகளை நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டும். பாடத்தின் கருப்பொருளையும் மற்றும் மேற்கோளை வழங்க கீழே சில யோசனைகளை பரிந்துரைக்கப்பட்டுள்ளன:

இறைவன் நீதியை நேசிக்கிறார். நீதி இருக்குமானால், அனைவரும் வாழ்வின் நற்பொருள்களை அனுபவிக்க முடியும். ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கு செல்ல முடியும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான வீடு கிடைக்கும், மற்றும் இருப்பவர்கள் இறைவனிடமிருந்து தாங்கள் பெட்ரா கொடைகளை மற்றவர்களின் நலனிற்காக மகிழ்ச்சியுடன் கொடுப்பார்கள். நாம் மற்றவர்களை சமமாகவும் நீதியுடனும் நடத்தும் போது இறைவன் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். எவரேனும் தவறாக நடத்தப்படுவதை பார்த்தல், நாம் அவர்களுக்காக முன்னின்று உதவ வேண்டும். நமது நண்பர்கள் அல்லது அண்டையர்களுக்கு சொந்தமானதை நாம் அவர்களிடம் இருந்து எடுக்க கூடாது. ஏதாவதொன்றை பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றால், யாரும் விடுபடாமல், அனைவருக்கும் நீதியுடனான பங்கு கிடைப்பதை நிச்சயிக்க வேண்டும். நாம் நீதியுடன் இருப்பதற்கு உதவியாக, பஹாவுல்லாவின் கீழ்கண்ட மேற்கோளை மனப்பாடம் செய்வோம்:

**“நீதியின் பாதையைப் பின்பற்றுங்கள்; ஏனெனில், மெய்யாகவே, இதுவே நேர் வழி.”[100]**

குழந்தைகள் இதனை மனனம் செய்வதற்கு முன், மேலுள்ள மேற்கோள் அடிப்படை புரிந்துணர்வை அவர்கள் பெற்றிருப்பதை நிச்சயிப்பது மிகவும் முக்கியமாகும். குழந்தைகளுக்கு புதிதாக இருக்கும் வார்த்தைகளை விளக்க உங்களுக்கு உதவும் சில வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*நடந்து செல்லுதல்*

1. காட்டில் மரங்களின் இலைகள் விழுந்து பாதையை மூடியுள்ளன. ஃபியுமிகொ காட்டின் வழியே நடந்து சென்றாள். அவள் இலைகளால் மூடப்பட்ட வழியில் நடந்து சென்றாள்.

2. பெட்ரொ நண்பர்களுக்கெல்லாம் உதவி செய்து சந்தோஷமாக சேர்ந்து விளையாட விரும்புகிறான். பெட்ரொவும் அவனது நண்பர்களும் மிகவும் ஒற்றுமையாக இருக்கின்றனர். பெட்ரொ ஒற்றுமையெனும் பாதையில் நடந்து செல்கிறான்.

*பாதை*

1. லூயிசிடம் கழுதை ஒன்று இருந்தது. புல்வெளியில் மேய அழைத்து சென்று அதைத் தனியே விட்டு விட்டான். கழுதை தானே வீட்டிற்கு திரும்புவதற்கான பாதையைக் கண்டுபிடித்து விட்டது.

2. பள்ளிச் செல்லும் பாதைகள் இரண்டு இருந்தன. மில்லி எப்போதும் தன் பாட்டி வீட்டின் வழியே செல்லும் பாதையில் தான் பள்ளிக்கு செல்வாள்.

*நீதி*

1. பாடவேளையின் போது கார்லோசிடம் சில எழுதுகோல்கள் பகிர்ந்தளிக்கத் தரப்பட்டன. பத்து எழுதுகோல்களும் ஐந்து சிறுவர்களும் இருந்தனர். கார்லோஸ் ஒவ்வொரு சிறுவனுக்கும் இரு எழுதுகோல்களைத் தந்தான். கார்லோஸ் நீதியுடன் எழுதுகோல்களைப் பகிர்ந்தளித்தான்.

2. அன்னத்தின் கிணற்றில் நீர் நிறைந்து இருந்தது, ஆனால் சில சமயம் அவளது பக்கத்து வீட்டாரின் கிணறு வற்றிவிடும். அன்னம் பக்கத்து வீட்டு காரர்களை ஒருபோதும் துன்பப்படவிடுவதில்லை, அவள் அவர்களை அன்புடன் வரவேற்று நீர் எடுத்துச் செல்ல அனுமதிப்பாள். அன்னம் நீதியை விரும்புகிறாள்.

**ஈ. கதை**

மேற்கோளை சிறுவர்கள் மனப்பாடமாக கூற கற்றுக் கொண்ட பிறகு, அவர்களுக்கு அப்துல்பஹா எவ்வாறு நீதியை நிலை நாடினார் என்பது பற்றிய கீழ்கண்ட கதையைக் கூறுங்கள்.

*ஒரு நாள் அப்துல்பஹா அக்கா நகரிலிருந்து ஹைஃபா நகர் செல்ல விரும்பினார். அவர் சாதாரண வண்டியில் விலைக் குறைவான பயண சீட்டை வாங்க சென்றார். இதைக் கண்ட ஓட்டுனர் ஆச்சரியப்பட்டு, இந்த மலிவான வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு ஏன் அப்துல்பஹா இவ்வளவு எளிமையாக இருக்கிறார் என தமக்குத் தாமே கேட்டிருப்பார். "மாட்சிமை பொருந்திய தாங்கள் விரும்பினால் நிச்சயம் ஒரு தனிப்பட்ட வண்டியில் பயணம் செய்யலாமே," என ஆச்சரியத்துடன் அவர் கேட்டார். அதற்கு "இல்லை" என பதிலளித்த மாஸ்டர், மேலும் கூட்டம் நிரம்பிய அந்த வண்டியில் ஹைஃபா நகர் வரை பயணித்தார். ஹைஃபா நகரில் வண்டியை விட்டு இறங்கும் போது வருத்தமுற்ற மீனவப் பெண் ஒருத்தி அவரிடம் வந்து அவரின் உதவியை நாடினாள். நாள் முழுவதும் அவருக்கு ஒரு மீனும் அகப்படவில்லை, பசியோடுள்ள அவளது குடும்பத்திற்கு அவள் பணத்துடன் திரும்ப வேண்டும். அப்போது அப்துல்பஹா ஒரு கணிசமான தொகையை அவருக்குக் கொடுத்தார், பிறகு அவர் ஓட்டுனர் பக்கம் திரும்பி "பலர் பசியால் வாடும் போது, நான் ஏன் ஆடம்பரமான வண்டியில் பயணம் செய்ய வேண்டும்?" என்றார்.*

**உ. விளையாட்டு: "தனியா தாகம்"**

கதைக்காக அர்ப்பணிக்கப்பட்ட நேரத்தை தொடர்ந்து, குழந்தைகள் விளையாட்டு விளையாடுவதற்காக ஆவலாக இருப்பார்கள். முழங்கையை மடக்க இயலா வண்ணம் சிறுவர்களின் கைகளைக் குச்சிகளை கொண்டு கட்ட வேண்டும், பாலைவனத்தில் மிக மிக அதிக தாகம் கொண்டவர்களை போல சிறுவர்கள் நடிக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறுங்கள். சிறுசிறு டம்பளர்களில் உள்ள நீரிடம் நெருக்கும் போது, அதனை பருக அவர்கள் வழி கண்டுபிடிக்க வேண்டும். ஒருவருக்கு மற்றவர் உதவுவது தான் ஒரே வழி என்பதை அவர்கள் கண்டு கண்டு பிடிப்பார்கள், ஒருவரை ஒருவர் ஈரமாக்கிவிடாமல் விழிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 2**

விளையாட்டிற்கு பிறகு, அனைத்து குழந்தைகளையும் ஒன்று கூட்டி, ஒவ்வொருவருக்கும் வரைபடம் 2-இன் நகல் ஒன்றை வண்ணமிடுவதற்காக கொடுக்கவும், அந்த பக்கத்தின் கீழே அவர்கள் மனனம் செய்த மேற்கோள் இருப்பதை விளக்கி, நீங்கள் முன்னதாக தயார்படுத்திக்கொண்ட வார்த்தைகளை கொண்டு, எவ்வாறு அந்த வரைபடம் பாடத்தின் கருப்பொருளுடன் தொடர்புள்ளது என்பதை கூறலாம்.

### எ. முடிவு பிரார்த்தனை

குழந்தைகள் வண்ணமிட்டு முடித்த பிறகு, ஒரு சில குழந்தைகளை பிரார்த்தனை அல்லது இந்த பாடத்திலும் சென்ற பாடத்திலும் அவர்கள் மனனம் செய்த மேற்கோள்களை கூறுமாறு கேட்டுக் கொள்ளலாம். பிறகு நீங்கள் முடிவு பிரார்த்தனையை கூறலாம்.

## பாடம் 3

### அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

நீங்கள் முன்னதாகவே தேர்ந்தெடுத்த சில குழந்தைகளை, அவர்களுக்கு தெரிந்த ஒரு பிரார்த்தனையை கூறி வகுப்பை தொடங்கலாம். பிறகு, பாடம் 1ல் அவர்கள் கற்க ஆரம்பித்த பிரார்த்தனையை உங்கள் மாணவர்களுடன் மீளாய்வு செய்ய உங்கள் நேரத்தை பயன்படுத்தலாம்.

### ஆ. பாடல்கள்

முந்தைய பாடங்களில் கற்றுக் கொண்ட இரு பாடல்களை சிறுவர்கள் பாட அடுத்த செயல்பாட்டை துவங்கலாம். பிறகு, இன்றைய பாடத்தின் கருப்பொருளான, அன்பு, என்றதுடன் தொடர்புடைய கீழுள்ள பாடலை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம்.

**<u>அன்பு செய்</u>**

அன்பு செய் அன்பு செய் சக மனிதரை
அன்பே இந்த உலகத்தின் ஆரம்பமே
ஆண்டவர் படைப்பை நேசித்தார்
ஆகவே உன்னைப் படைத்திட்டார்
அவரையும் அனைவரையும் அன்பு செய்யவே
அன்பு செய் நிலையான நன்மையினை
அன்பு செய் சகோதர தன்மையினை
ஆண்டவர் படைப்பை நேசித்தார்
ஆகவே உன்னைப் படைத்திட்டார்
அவரையும் அனைவரையும் அன்பு செய்யவே
அருகில் தொலைவில் இருக்கும்
இறைவன் படைப்பையெல்லாம்
அன்பு செய்து மனிதரை ஒளிரும்
நட்சத்திரமாய் பார்
படைப்பையெல்லாம் அன்பு செய்
அதற்குன்னைப் படைத்தார்
அவரையும் அனைவரையும் அன்பு செய்யவே
அன்பு செய் அன்பு செய்

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

மனனம் செய்வதற்கான மேற்கோளை வழங்குவதற்காக, இந்த பாடத்தின் கருப்பொருளுடன் தொடர்புடைய சில கீழுள்ள சிந்தனைகளை உங்கள் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்:

> கதிரவனின் ஒளிக்கதிர்கள் போல் இறைவனின் அன்பு மனித குலத்தின் மீது ஒளியை வீசுகிறது. கதிரவனின் ஒளிக்கதிர்கள் பாலைவனத்தின் மீதும் புல்வெளிகளின் மீதும் ஒரே மாதிரி தான் வீசுகிறது. அதன் கதகதப்பான வெப்பத்தில், செழுமையான நிலத்தில் பயிரிடப்பட்ட விதைகள் வளர்ந்து மதிப்புமிக்க கனிகளை கொடுக்கின்றன. நமது இதயங்கள் எனும் தூய மண்ணில் இறையன்பு எனும் விதைகளை நாம் பயிரிட்டால், இறைவனது அன்பு கவனிப்பு எனும் வெப்பத்தில் அவை வளர்ந்து மலர்விடும். அப்போது நமது அன்பு பறந்து விரியும், மற்றும் நாம் அனைவரிடமும் அன்பு செலுத்த இயலும், நம்மிடம் கனிவின்றி நடப்பவர்களாக இருந்தாலும் சரி. நாம் மனிதகுலம் முழுமையையும் நேசிக்க உதவும் பொருட்டு, பஹாவுல்லாவின் கீழ்காணும் மேற்கோளை மனப்பாடம் செய்வோம்:
>
> **“நண்பனே! உனது உள்ளமெனும் பூங்காவில் அன்பெனும் ரோஜாவைத் தவிர வேறெதனையும் பயிரிடாதே...”[101]**

இந்த மேற்கோளில் நாம் விளக்கம் செய்ய வேண்டியிருக்கும் ஒரே சொல் வேறெதனையும் என்பதாக தான் இருக்கும், அது “மற்ற எதுவும் இல்லாத” என்று பொருள் படும்.

1. டினியோ சூரியனையும் மலர்களையும் பற்றி மட்டுமே பாட விரும்புகிறான், மற்ற எதை பற்றியும் பாட விரும்பவில்லை. அழகன் சூரியனையும் மலர்களையும் பற்றி தவிர வேறெதனையும் பாடவில்லை.

2. டா ஜென் ஆற்றங்கரைக்குச் செல்ல விரும்பினான், ஆனால் அவன் தனது வீட்டு பணிகளை முடிக்கவில்லை. வேலைகளைச் செய்யாமல் வெளியில் செல்லக்கூடாது என்று அவனது அப்பா சொன்னார், இதனால் டா ஜென் கோபமடைந்தான். ‘தந்தைக்கு கீழ்படிவதைத் தவிர வேறெதுவும் உன் திட்டங்களை வெற்றி பெறச் செய்யாது,’ என்று அவனது பாட்டி சொன்னார்.

## ஈ. கதை

மனனம் செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், நீங்கள் உங்கள் மாணவர்களுக்கு கீழ்வரும் கதையை கூறலாம்:

> *அப்துல்பஹா அக்கா நகரில் சிறைக் கைதியாக இருந்தபோது, அந்நகரின் மனிதன் ஒருவன் அவரை மிகவும் மோசமாக நடத்தி வந்தான். அவன் அப்துல்பஹா ஒரு நல்ல மனிதர் அல்ல என நம்பி, பஹாய்களை மோசமாக நடத்துவதைப் பற்றி இறைவன் கவலைப்படவில்லை என்றும் நினைத்துக் கொண்டார். பஹாய்களிடம் வெறுப்புடன் நடப்பதால் இறைவனிடம் தாம் அன்பு காட்டுவதாக அவன் உண்மையிலேயே நம்பினான். அவன் அப்துல்பஹாவை முழு மனதுடன் வெறுத்தான். அவ்வெறுப்பு நாளுக்கு நாள்*

*வளர்ந்து அவனது உள்ளத்தை அரித்துக் கொண்டு, உடைந்த பானையிலிருந்து நீர் வெளியே சிந்துவது போல, அவனிடமிருந்து சில வேளைகளில் அவ்வெறுப்பு வெளிப்படும்.*

*பள்ளிவாசலுக்கு மக்கள் தொழுவதற்கு வரும் போது , இம்மனிதன் அப்துல்பஹாவுக்கு எதிராக கூச்சலிடுவான், அவரைப் பற்றி கடுமையாக விமர்சனம் செய்வான். வீதியில் அப்துல்பஹாவை கடந்து செல்லும் போது அவன் தனது அங்கியினால் தன் முகத்தை அவரைப் பார்க்காதவாறு மூடிக் கொள்வான். அப்போது அம்மனிதன் மிகவும் ஏழையாக இருந்தார் மற்றும் உண்பதற்கு போதுமான உணவோ, உடுத்துவதற்கு போதுமான தகுந்த உடைகளோ அவனிடம் இல்லை. அப்துல்பஹா அவனை என்ன செய்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவனிடம் பரிவு காட்டினார், அவனுக்கு உணவை அனுப்பி வைத்தார், அவன் பராமரிக்கப்படுவதை நிச்சயித்தார். உதாரணத்திற்கு, ஒரு நாள் அவன் நோய்வாய்ப்பட்ட போது, அப்துல்பஹா அவனிடம் மருத்துவர் ஒருவரை அனுப்பி வைத்தார், அவனது மருந்துக்கும் உணவுக்கும் காசு கொடுத்தார், அவனுடைய செலவுக்கும் காசு கொடுத்தார். அவன் அப்துல்பஹா கொடுத்தனுப்பிய பரிசுப் பொருட்களை எல்லாம் ஏற்றுக் கொண்டான், ஆனால் அவருக்கு நன்றி சொல்லவில்லை. உண்மையிலேயே அவன் மருத்துவர் நாடிப்பிடித்து பார்க்க ஒரு கையை நீட்டி, மறு கையால் தன் முகத்தை முழுவதுமாக மூடிக் கொள்வான், அதனால் அவன் அப்துல்பஹாவின் முகத்தைக் கூட பார்க்க வேண்டியிருக்காது. இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. இறுதியாக, ஒரு நாள், அவன் மனம் மாறியது. அவன் அப்துல்பஹாவின் வீட்டிற்கு வந்து, அவரது கால்களில் விழுந்து வணங்கினான், அவனது மனம் துன்பத்தினால் கனத்திருந்தது, அவனது முகத்தில் இரு ஆறுகள் போல கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. "ஐயனே, என்னை மன்னித்து விடுங்கள்! கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக தங்களுக்கு நான் தீமையையே செய்து வந்துள்ளேன். இருபத்து நான்கு ஆண்டுகளாக தாங்கள் எனக்கு நன்மையே செய்துள்ளீர்கள். நான் எனது தவறை உணர்ந்து வருந்துகிறேன். தயவு கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்!" இவ்வாறு அப்துல்பஹாவின் உயர்ந்த அன்பானது, வெறுத்தவர் மனதை வென்றது.*

### உ. விளையாட்டு: “பாலம்”

அடுத்த நடவடிக்கைக்காக, பெஞ்சுகள், பலகைகள், கற்கள், அல்லது டைல்ஸ், ஆகியவை கொண்டு தரையில் ஒரு வரிசையை உருவாக்கவும். இது “பாலம்” என்றழைக்கப்படும். ஒரே நேரத்தில் குழந்தைகளின் இரு குழுக்கள், எதிரெதிராக பாலத்தை கடக்க வேண்டும், பாலத்தை விட்டு யாரும் கீழே விழாதபடி கடக்க வேண்டும். ஒவ்வொருவராக இடத்தை மாற்றி, ஒருவர் ஒருவராக கடக்க குழந்தைகள் தங்களுக்குள் உதவி கொள்ள வேண்டும் என்பதை குழந்தைகள் கண்டறிவார்கள்.

அவர்களுக்கு உதவி புரிய, நீங்கள் குழந்தைகளை முதலில் அவர்களின் ஆரம்ப இடத்திலிருந்து ஒவ்வொரு அடியாக செல்ல குழந்தைகளுக்கு வழிகாட்டலாம். அனைத்து சிறுவர்களையும் ஒரே நேரத்தில் பாலத்தை கடக்க வைப்பதற்கு பதிலாக, முதலில் சிலரை வைத்து பழகலாம், உதாரணத்திற்கு ஒரே நேரத்தில் இரண்டு பேர் மட்டும் கடக்கலாம். பலமுறை இதனை காண்பித்த பிறகு, அனைவரும் பங்கேற்கும் வரை, பாலத்தில் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்தலாம்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 3**

விளையாட்டை தொடர்ந்து, இறுதி செயல்பாடாக, ஒவ்வொரு குழந்தைக்கும் வரைபடம் 3ன் நகல் ஒன்றை வண்ணமிடுவதற்காக வழங்க வேண்டும். எவ்வாறு அந்த வரைபடம் பாடத்தின் கருப்பொருளுடன் தொடர்புள்ளது என்பதை சில வார்த்தைகளில் கூறுவதை நினைவில் வைத்து கொள்ளுங்கள்.

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

வகுப்பை முடிப்பதற்காக, உங்கள் குழந்தைகளை அமைதியாக அமர ஊக்குவித்து, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை பிரார்த்தனை அல்லது அவர்கள் மனனம் செய்த மேற்கோள்களை கூறுமாறு கேட்டுக் கொள்ளலாம். பிறகு நீங்கள் அல்லது குழந்தைகளில் ஒருவர் முடிவு பிரார்த்தனையை கூறலாம்.

## பாடம் 4

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

வழிபாட்டு பகுதியை ஆரம்பித்த பிறகு, கடந்த சில பாடங்களாக உங்கள் மாணவர்கள் மனனம் செய்துகொண்டிருக்கும் பிரார்த்தனையை அவர்களுடன் மீளாய்வு செய்யவும்.

**ஆ. பாடல்கள்**

அடுத்த நடவடிக்கைக்காக, இந்த பாடத்தின் கருப்பொருளாக வாய்மையுடன் தொடர்புடைய புதிய பாடலை கற்றுக் கொடுப்பதற்கு முன், சென்ற பாடங்களில் குழந்தைகள் கற்ற பாடல்கள் பாட வைக்கவும்.

<u>வாய்மையான சொற்கள்</u>

தூசாலே நிறைந்த கண்ணாடி
வீசாது கதிரொளி வாங்கி
சேறு கொண்ட சிறகுள்ள பறவை
செல்லாதே வானம் நோக்கி மேலே
நம் வார்த்தைகள் வாய்மையாக
நம் ஆன்மாவும் முன்னேறிச் செல்ல
மனித நற்பண்புகளின் அஸ்திவாரம்
அது வாய்மையென அறிவோமே.
கிழிந்திட்ட பாய் கொண்ட கப்பலுக்கு
கிடைக்காது காற்று அதை செலுத்துதற்கு
திரையாலே மறைத்திட்ட கண்களுக்கு – திசை
தெரியாது பாதையது என்னவென்று
நம் வார்த்தைகள் வாய்மையாக

நம் ஆன்மாவும் முன்னேறிச் செல்ல
மனித நற்பண்புகளின் அஸ்திவாரம்
அது வாய்மையென அறிவோமே
தூசாலே நிறைந்த

### இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இந்த பாடத்தின் கருப்பொருள் மற்றும் மனனம் செய்வதற்கான மேற்கோளையும் வழங்குவதற்காக கீழுள்ள வழியை பயன்படுத்துமாறு பரிந்துரைக்கப்படுகிறது::

வாய்மை என்பது ஒவ்வொரு மனிதனும் கொண்டிருக்க வேண்டிய மிக அவசியமான ஆன்மீகப் பண்புகளில் ஒன்றாகும். எவரும் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்ற போதிலும், நாம் எப்போதும் ஒரு சிறிய பொய்கூட சொல்லக்கூடாது. சில சமயம் மக்கள் பொய் பேசுகின்றனர் ஏனெனில் அவர்கள் உண்மை பேசுவதற்கு பயப்படுகிறார்கள். எனினும் இறைவன் நமது செயல்கள் அனைத்தையும் விழிப்புடன் கண்காணிக்கிறார் என்பது நமக்கு தெரிந்ததே மற்றும் நாம் எதையும் அவருக்குத் தெரியாமல் மறைக்க இயலாது. நாம் வாய்மையை நேசிக்க வேண்டும். நாம் வாய்மையோடு இல்லையென்றால், நீதி, அன்பு, இரக்கம் போன்ற மற்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்வது நமக்கு மிகவும் சிரமமாகிவிடும், மற்றும் இறைவனது அருகில் நாம் செல்ல இயலாது. அப்துல்-பஹாவின் கீழ்காணும் மேற்கோளை நாம் மனப்பாடம் செய்வோம்:

**“மனித நற்பண்புகள் அனைத்திற்கும் அஸ்திவாரம் வாய்மையே”**[102]

கீழுள்ள சில வாக்கியங்கள் மேலுள்ள மேற்கோளில் குழந்தைகளுக்கு கடினமாக இருக்கக்கூடிய வார்த்தைகளுக்கு அர்த்தத்தை விளக்க உங்களுக்கு உதவியாக இருக்கும்.

*வாய்மை*

1. சஞ்சய் ஒரு கண்ணாடிக் குவளையைக் கீழே போட்டு உடைத்து விட்டான். என்ன நடந்தது என்று அவனது தாய் கேட்ட போது, பொய் சொல்வதற்குப் பதிலாக அவரிடம் உண்மையை சொன்னான். சஞ்சய் வாய்மையென்னும் நற்பண்பை பிரதிபலித்தான்.
2. ஒரு நண்பன் கீதாவுடன் விளையாட விரும்பினான், அவளைத் தேடி அவள் வீட்டிற்கு சென்றான். கீதா வீட்டுப் பாடம் செய்ய வேண்டியிருந்தது, அவளால் வெளியே வந்து விளையாட முடியவில்லை. அவளது தம்பி அவள் வீட்டில் இல்லை என சொல்லப்போவதாக அவளிடம் சொன்னான், ஆனால் கீதா தனது தம்பி பொய் சொல்வதை விரும்பவில்லை. கீதா வெளியே வந்தாள், தனது நண்பனிடம் வீட்டுப் பாடம் இருப்பதால் வெளியில் வந்து விளையாட இயலாது என்று கூறினாள். கீதா வாய்மை என்னும் நற்பண்பை பிரதிபலித்தாள்.

*அஸ்திவாரம்*

1. ஆலோக்கின் தந்தை வீடு ஒன்றை கட்டினார். அவர் சுவர்களை எழுப்புமுன் சுவர்களை எழுப்ப வேண்டிய இடத்தின் கீழே கருங்கற்களையும் சிமெண்டையும் கொண்டு நிரப்பினார். கருங்கற்களும் சிமெண்டும் வீட்டின் அஸ்திவாரமாய் அமைந்தன.

2. படிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக் கொள்ளுமுன் எழுத்துக்களின் உச்சரிப்பை நீங்கள் அறிந்துக் கொள்ள வேண்டும். எழுத்துக்களின் உச்சரிப்பை அறிந்து கொள்வது படிப்பதற்கும் எழுதுவதற்கும் அஸ்திவாரமாகும்.

*நற்பண்புகள்*

1. அரோரா அன்புடனும், நட்புடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கிறான். அரோராவிடம் நற்பண்புகள் பல உள்ளன.

2. நீதி, பெருந்தன்மை, இரக்கம் மற்றும் நேர்மை ஆகியவை பற்றி திருமதி படேல் சிறுவர்களுக்கு போதித்தார். இவையனைத்தும் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய சில நற்பண்புகள் ஆகும்.

**இ. கதை**

அடுத்த நடவடிக்கையாக, வாய்மை எனும் பணப்பை பற்றி சிந்திக்க உதவும் கீழ்வரும் கதையை நீங்கள் கூறலாம்.

*தொலைதூரத்தில் இருந்த ஒரு நாட்டில், முன்னொரு காலத்தில் ஓர் இளம் ஆடு மேய்ப்பவன் வாழ்ந்து வந்தான். அவன் தந்தை வயலில் வேலை செய்வதாலும், தாய் வீட்டை பராமரிப்பதாலும், அவனது குடும்பத்தின் ஆட்டு மந்தையை மேய்க்கும் பொறுப்பு அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு நாள், அவனுக்கு மிகவும் சலிப்பு ஏற்பட்டதால், தன்னுடைய அண்டையில் உள்ளவர்களுடன் ஒரு விளையாட்டு விளையாட எண்ணினான். உடனே அவன், "ஓநாய்! ஓநாய்! ஓநாய் ஆடுகளைத் தின்கிறது!" என்று கூக்குரலிட்டான். அவனது நண்பர்கள் எல்லோரும் ஓநாயை விரட்டி அடித்து உதவி செய்ய ஓடி வந்தனர், அவர்கள் வந்த போது இளம் ஆடு மேய்ப்பவன் அவர்களைப் பார்த்து சிரித்தான், உண்மையிலேயே ஓநாய் அங்கு இல்லை. அவர்கள் இப்பையன் மிகவும் மோசமாக நடந்துகொண்டான் என்று சொல்லிக் கொண்டே தங்கள் வேலைக்குத் திரும்பினார்கள்.*

*மறுநாளும், அந்த பையன் தன்னுடைய பைத்தியக்காரச் செயலைத் தொடர்ந்தான். "ஓநாய்! ஓநாய்! உதவுங்கள்! உதவுங்கள்!" என்றான். இம்முறையும் அவனுடைய அக்கம் பக்கத்தினர் சிலர் உதவி செய்ய ஓடி வந்தனர், ஓநாய் அருகில் உள்ளது என்ற பொய்யை நம்பினர், அவர்கள் வந்ததும் அவன் அவர்களை பார்த்து சிரித்துக் கொண்டிருந்ததை தான் பார்க்க முடிந்தது. மூன்றாம் நாள், "ஓநாய்! ஓநாய்! ஓநாய் ஆடுகளைத் தின்கின்றது! ஓடி வந்து உதவி செய்யுங்கள்!" என்று அப்பையன் அழைத்ததை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை, ஏனெனில் அவர்கள் இது இன்னொரு பொய் என நம்பினர். அன்று ஓநாய் வந்து ஆடுகளைத் தின்றது! ஆடு மேய்ப்பவன் மிகவும் கவலையடைந்தான், ஆனால் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டான். நாம் பொய் சொன்னால், நம்முடைய பெற்றோர்களும், நமது சகோதர சகோதரிகளும் அல்லது நமது நண்பர்களும் நம்மை நம்பாத நாள் ஒன்று வரும், நாம் உண்மையே சொன்னாலும் அதைக்கூட நம்ப மாட்டார்கள்.*

### உ. விளையாட்டு: “தொடு தொலைபேசி”

மேலுள்ள கதையை கூறிய பின், குழந்தைகளை நீங்கள் விளையாட வைக்கலாம். குழந்தைகளை ஒரு வரிசையில் நிற்க சொல்லுங்கள். அனைவரும் ஒரே திசையை நோக்கி நிற்க வேண்டும், கடைசியில் இருக்கும் குழந்தை, சுவர் அல்லது மரம் அல்லது கரும்பலகையைப் பார்த்த வண்ணம் நிற்க வேண்டும். அந்த குழந்தைக்கு எழுதுவதற்கு ஏதாவது ஒரு கருவி கொடுக்கப்பட வேண்டும். நிறைய குழந்தைகள் இருந்தால், ஒன்றுக்கு மேற்பட்ட வரிசைகளையும் ஏற்படுத்தலாம்.

இப்போது, நீங்கள் உங்களது விரலால், முதல் குழந்தையின் முதுகில் ஏதாவதொன்றை வரைய வேண்டும். அவன் அதனை இரண்டாம் குழந்தையின் முதுகில் வரைய வேண்டும். இரண்டாம் குழந்தை அதனை மூன்றாம் குழந்தையின் முதுகில் வரைய வேண்டும், இவ்வாறாக ஒவ்வொரு குழந்தையாக வரைந்து, கடைசி குழந்தை அதனை ஒரு தாளில் அல்லது கரும்பலகையில் அதை வரைய வேண்டும். பின் அதன் பக்கத்தில் நீங்கள் முதல் குழந்தையின் முதுகில் வரைந்ததை வரைய வேண்டும். குழந்தைகள் வரையும் வகையில் படம் மிகவும் எளிமையாக இருக்க வேண்டும்.

### ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 4

அடுத்த செயல்பாடாக குழந்தைகள் வண்ணமிடுவதற்காக வழக்கம் போல் வரைபடம் 4ன் நகல்களை அவர்களுக்கு வழங்கலாம்.

### எ. முடிவு பிரார்த்தனைகள்

எப்போதும் போல, மேற்கோள்கள் மற்றும் பிரார்த்தனைகள் கூறப்படும் போது குழந்தைகளை அமைதியாக அமரும் படி கேட்டுக்கொண்டு வகுப்பை முடிக்கலாம்.

## பாடம் 5

### அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

இந்த பாடம் மற்றும் அடுத்த மூன்று பாடங்களில், உங்களுக்கு மனப்பாடமாக தெரிந்த மற்றொரு பிரார்த்தனையை கூறி வகுப்பை தொடங்க வேண்டும், இதற்காக பகுதி 6ல் ஒரு பிரார்த்தனை உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப பிரார்த்தனை பகுதியில் உங்களுடன் சில குழந்தைகள் இணைந்த பிறகு, அவர்கள் மனனம் செய்ய நீங்கள் கீழுள்ள பிரார்த்தனையை அறிமுகப்படுத்தலாம். இந்த வகுப்பில் அவர்கள் இப்பிரார்த்தனையின் ஒரு பகுதியையாவது கற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மற்றும் பாடம் 8ல் அவர்கள் முழு பிரார்த்தனையும் மனப்பாடமாக கூற வேண்டும்.

> **“கடவுளே எனக்கு நல்வழிகாட்டி, என்னைப் பாதுகாத்து, என்னை ஒளி கொடுக்கும் விளக்காக்கி, பிரகாசமிக்க நட்சத்திரமாக்குவீராக. நீரே வலிமையும் சக்தியுமுள்ளவர்.”[103]**

## ஆ. பாடல்கள்

இந்த பாடத்தில், குழந்தைகளுக்கு கீழுள்ள பாடலை கற்றுக் கொடுப்பதுடன் சேர்த்து, அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த மற்ற பாடல்களையும் நீங்கள் அவர்களுடன் சேர்ந்து பாடலாம்.

<u>தாராளமனப்பாண்மை எனும் நீரூற்று</u>

ஊற்றைப் போல் நீரூற்றைப் போலே
  என்றும் வழிந்தோடும் ஒன்றாய் நீ இரு
இந்த வண்ணம் நீ இருக்கும் போதிலே
  வந்திடும் உன்னில் மகிழ்ச்சி உண்மையே
எந்த நாளும் உன் இதயத்தில் தேடு
  தந்திட ஏதும் உண்டா என்பதை
எந்த நாளும் உன் இதயத்தில் தேடு
  தந்திட ஏதும் உண்டா என்பதை
ஊற்றைப் போல் நீரூற்றைப் போலே
  என்றும் வழிந்தோடும் ஒன்றாய் நீ இரு
இந்த வண்ணம் நீ இருக்கும் போதிலே
  வந்திடும் உன்னில் மகிழ்ச்சி உண்மையே
இலக்காய் கொண்டிரு மகிழ்ச்சியை
  நீ இதற்காய் இதயம் ஆன்மா கொடுத்திடு
இந்த வண்ணம் நீ இருக்கும் போதிலே
  இறைவன் உன்னிடம் இருப்பார் உண்மையே
எந்த நாளும் உன் இதயத்தில் தேடு
  தந்திட ஏதும் உண்டா என்பதை
எந்த நாளும் உன் இதயத்தில் தேடு
  தந்திட ஏதும் உண்டா என்பதை
ஊற்றைப் போல் நீரூற்றைப் போலே
  என்றும் வழிந்தோடும் ஒன்றாய் நீ இரு
இந்த வண்ணம் நீ இருக்கும் போதிலே
  வந்திடும் உன்னில் மகிழ்ச்சி உண்மையே

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இந்த பாடத்தின் கருப்பொருள் மற்றும் மனனம் செய்வதற்கான மேற்கோளையும் அறிமுகப்படுத்த கீழுள்ள சிந்தனைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்:

> இறைவன் தம்முடைய படைப்பினங்களிடம் மிகவும் தாராளமாக உள்ளார். அவர் செடிகளுக்கு மழையை கொண்டு நீரளிகிறார், விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உணவையும் சத்தையும் வழங்குகிறார். அவர் நம் அனைவரையும் கவனித்துக் கொள்கிறார். அவர் நமக்கு பல பரிசுகளை வழங்கியுள்ளார்: மலைகள், ஆறுகள், நட்சித்திரங்கள் மற்றும் நம்மை சுற்றியுள்ள அணைத்து அழகையும் பார்க்கக்கூடிய கண்கள்; மெல்லிசை பாடல்கள், பறவைகளின் ஓசைகள், நமது பெற்றோர்களின் அறிவுரைகள் மற்றும் இறைவனின் வார்த்தை போன்றவற்றை கேட்பதற்கான செவிகள்.

இந்த அண்டத்தின் ரகசியங்களை நாம் கற்றுக்கொள்வதற்காக நமக்கு அறிவை வழங்கியுள்ளார், அனைத்திற்கும் மேலாக, இறைவனை அறிந்து அவரை நேசிப்பதற்கான ஆன்மீக சக்திகளை நமக்கு வழங்கியுள்ளார். இறைவன் எவ்வாறு நம்மிடம் தாராளமாக இருக்கின்றாரோ, அதேபோல நாம் ஒருவர் மற்றவரிடம் தாராளமாக இருக்க வேண்டுமென அவர் விரும்புகிறார். நம்மிடம் என்ன இருக்கின்றதோ, அதாவது நமது உணவு, நமது உடைமைகள், நமது நேரம், நமது அறிவு - என மற்றவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய அவற்றை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும். நமது அன்பு, நமது மகிழ்ச்சி, மற்றும் நமது இல்லத்திலும் பள்ளியிலும் நாம் கற்கும் நற்பொருள்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். தாராள மனப்பான்மையுடன் இருந்திட உதவி செய்ய, பஹாவுல்லாவின் இந்த திருவாசகத்தை நாம் மனப்பாடம் செய்வோமாக:

**“கொடுத்தலும் தாராள மனப்பான்மையும் எமது பண்புகள்; எமது பண்புகளை அணிகலனாகக் கொண்டிருத்தல் நன்று.”[104]**

*தாராளமனப்பான்மை*

1. ராம் மற்றும் ராஜேஷ் பணத்தை சேமித்து வைத்தனர். அவர்கள் தங்கள் தம்பி தங்கைகளுக்காக புத்தகங்கள் வாங்க முடிவு செய்தனர். ராம் மற்றும் ராஜேஷ் தாராள மனப்பான்மையுடையவர்கள்.

2. திருமதி மர்ஃபி காலை முழுவதும் அடைகளை சுட்டுக் கொண்டிருந்தார். அவர் அந்த அடைகளை விற்பனைக்காக நகரத்திற்கு எடுத்துச் செல்வதற்கு முன், தன்னுடைய அண்டையருக்கு இரண்டு பெரிய அடைகளை கொடுத்தார். திருமதி மர்ஃபி தாராள மனப்பான்மையுடைவர்.

*பண்பு*

1. ஜோயல் தன்னுடைய ஆசிரியருக்காக ஒரு அழகான ரோஜாவை எடுத்துச் சென்றார். அழகு என்பது ரோஜாவின் ஒரு பண்பாகும்.

2. கல்லானது மிகவும் கெட்டியாக உள்ளது. கெட்டியாக இருப்பது கற்களின் ஒரு பண்பாகும்.

3. “நீங்கள் கடுமையாக உழைக்க தயாராக இருப்பது உங்களுடைய பண்புகளில் ஒன்று,” என ஆசிரியர் சார்லீனிடம் கூறினார்.

அலங்கரித்தல்

1. இன்றிரவு சமூக கூடத்தில் பக்தி கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்ட அறையில் வைப்பதற்காக குழந்தைகள் மலர்களை பறித்தார்கள். கூட்ட அறையை குழந்தைகள் மலர்களால் அலங்கரித்தனர்.

2. லீ ஃபெங் எப்போதும் ஒரு அழகான புன்னகையுடன் இருப்பான். பெரும்பாலான வேளைகளில் புன்னகை அவனது முகத்தை அலங்கரிக்கிறது.

3. வசந்தகாலத்தில் செர்ரி மரங்கள் அழகிய பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

**ஈ. கதை**

இப்போது கீழ்வரும் கதையை நீங்கள் குழந்தைகளுக்கு கூறலாம், இது அவர்களுக்கு தாராளத்தன்மை என்னும் கருத்தாக்கத்தை புரிய வைக்கும்.

ஒரு நாள், அப்துல்பஹாவின் தந்தையான பஹாவுல்லா அவர்களின் ஆடுகளுக்கு பொறுப்பாளராக இருந்த நபர், ஆட்டிடையர்களுடன் கிராமப்புறத்தில் ஒரு நாள் முழுவதையும் கழிப்பதற்காக அப்துல் பஹாவை அழைத்தார். அப்போது அப்துல்பஹா சிறுவராக இருந்தார், பஹாவுல்லா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக துன்புறுத்தல்கள் இன்னும் துவங்காமல் இருந்தன. அப்போது பஹாவுல்லா மலைப்பகுதியில் கணிசமான நிலத்தை வைத்திருந்தார் மற்றும் ஆடுகளின் பெரிய மந்தைகளைக் கொண்டிருந்தார். தனது தாயாரின் சம்மதத்துடன், அப்துல்பஹா ஆட்டிடையர்களுடன் ஒரு அற்புதமான நாளை செலவழித்தார், அவர்கள் பாடி, ஆடி, அருமையான விருந்தையும் தயார் செய்திருந்தனர். அந்த நாள் முடிந்தவுடன், அப்துல்பஹா புறப்படுவதற்கு தயாராக இருந்த போது, ஆட்டிடையர்கள் அப்துல்பஹாவை சூழ்ந்து பேசிக் கொண்டு, அவரிடம் இருந்து ஏதாவது பரிசை எதிர்பார்ப்பதாக ஜாடை மாடையாக கூறினர். அப்துல்பஹாவுடன் சென்றிருந்த நபர், சொந்த நிலத்தையும் ஆட்டு மந்தைகளை வைத்திருப்பவர்களும் அனைவரையும் பார்த்து விட்டு செல்லும் போது ஏதாவது பரிசினை வழங்குவது ஒரு மரபு என்பதை விளக்கினார். அப்துல்பஹாவிடம் அவர்களுக்கு கொடுப்பதற்கு ஏதும் இல்லை, ஆனால் அந்த நபர் ஆட்டிடையர்கள் ஏதாவது எதிர்பார்க்கிறார்கள் என்று வலியுறுத்தினார். பிறகு அப்துல்பஹாவிற்கு ஒரு யோசனை வந்தது: அவர் ஆட்டிடையர்களுக்கு அவர்கள் கண்காணித்து வந்த மந்தையிலிருந்து சில ஆடுகளைக் கொடுத்தார். ஆட்டிடையர்களிடம் அப்துல்பஹா வெளிப்படுத்திய தாராள மனப்பான்மையுடனான எண்ணத்தைப் பற்றி அறிந்த பஹாவுல்லா மிகவும் மகிழ்ந்தார். அனைவரும் அப்துல்பஹாவை கவனமாக பார்த்துக் கொள்ளவேண்டும், ஏனெனில் அவர் ஒரு நாள் தம்மையே கொடுத்து விடுவாரென பஹாவுல்லா நகைச்சுவையுடன் கூறினார். மெய்யாகவே, அப்துல்பஹா அதைத் தான் தமது வாழ்நாட்கள் முழுவதிலும் செய்தார். நம்மை ஒன்றுபடுத்துவதற்காகவும், நமக்கு உண்மையான சந்தோஷத்தை அளிப்பதற்காகவும், அவர் தம்மிடமிருந்த அனைத்தையும், தமது வாழ்க்கையின் ஒவ்வொரு கண நேரத்தையும் மனித குலத்திற்காக கொடுத்தார்.

**உ. விளையாட்டு: “இரட்டையர்கள்”**

கதைகூறும் நேரம் முடிந்த பிறகு, குழந்தைகள் வழக்கம் போல, ஒரு விளையாட்டை விளையாடுவார்கள். முடிந்தளவு ஒரே உயரம் உள்ள குழந்தைகளை ஜோடிகளாக பிரித்து விடவும். ஒவ்வொரு ஜோடியையும் முதுகோடு முதுகாக நின்ற பிறகு, கீழே குந்தி அமர வேண்டும். பிறகு அவர்கள் முழங்கைகளை கொக்கி போல கோர்த்துக் கொண்டு எழுந்து நிற்க முயற்ச்சிக்க வேண்டும். இதை செய்து முடித்த பின், மூன்று அல்லது நான்கு குழந்தைகளாக சேர்த்து மீண்டும் அதனை செய்யவும்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 5**

இறுதி நடவடிக்கையாக, வண்ணமிடுவதற்காக வரைபடம் 5ன் பிரதிகளை நீங்கள் வழங்கலாம்.

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

வழக்கம் போல, நீங்களும் சில குழந்தைகளும் பிரார்த்தனைகள் மற்றும் மேற்கோள்களை கூறி வகுப்பை முடிக்கவும்.

# பாடம் 6

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

நீங்களும் சில மாணவர்களும் ஆரம்ப பிரார்த்தனைகளை கூறிய பிறகு, பாடம் 5ல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரார்த்தனையை தொடர்ந்து குழந்தைகள் கற்றுக் கொள்வதற்கு நீங்கள் உதவ வேண்டும்.

**ஆ. பாடல்கள்**

அடுத்த செயல்பாடாக, கீழுள்ள பாடலை பாட குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கலாம், இது பாடத்தின் கருப்பொருளுடன் தொடர்புடையது. அவர்களுக்கு மிகவும் பிடித்த மற்ற சில பாடல்களையும் அவர்கள் பாடலாம்.

<u>உங்கள் சகோதரரே மேம்பட்டவரென தேர்ந்தெடு</u>

எனக்கும் தாகம் எனக்கும் தாகம்
என் சகோதரன் முதலில் வந்தான்
அவனுக்குத் தண்ணீரைக் கொடுத்திடுவேன்
அவனது தாகம் அடங்கிடுமே
அவனுக்குத் தண்ணீரைக் கொடுத்திடுவேன்
அவனது தாகம் அடங்கிடுமே
உன்னை விட சகோதரருக்கு முதலிடம் தருவதே
நீ பெறும் ஆசி என்றாகும் உனது பரிவது எனக் காட்டும்
உன்னை விட சகோதரிக்கு முதலிடம் தருவதே
நீ பெறும் ஆசி என்றாகும் மென்மேலும் பகிர்வதே செல்வமாகும்
லலலலலா.
எனக்கும் பசிதான் எனக்கும் பசிதான்
என் சகோதரி அவளுக்கும் தான்
எனவே அவளுக்கு என் உணவில் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தேன் அதுவே நன்றாம்
உன்னை விட சகோதரருக்கு முதலிடம் தருவதே

நீ பெறும் ஆசி என்றாகும் உனது பரிவது எனக் காட்டும்
உன்னை விட சகோதரிக்கு முதலிடம் தருவதே
நீ பெறும் ஆசி என்றாகும் மென்மேலும் பகிர்வதே செல்வமாகும்
லலலலலா

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இந்த பாடத்தில், நம்மை தன்னலமில்லாமல் இருக்குமாறு அழைக்கும் பஹாவுல்லாவின் திருவாசகங்களில் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோள் ஒன்றினை கூற குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள். இந்த கருப்பொருளை பின்வரும் வழியில் நீங்கள் வழங்கலாம்:

> இறைவன் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார், மற்றும் இறைவனை அறிந்து அவரை நேசிப்பதற்காக மனித இதயத்தை அவர் படைத்துள்ளார். புனித இதயங்களுடன் இருந்தால், இறைவனின் படைப்பில் அவரது அடையாளங்களை நம்மால் பார்க்க முடியும். இறைவனின் பெருந்தன்மை, அவரது இரக்கம், அவரது கருணையை நம்மால் பார்க்க முடியும். இறைவன் மீது நாம் கொண்ட அன்பின் காரணமாக, நம்மை சுற்றியுள்ள அனைவர்க்கும் - நமது பெற்றோர்கள், நமது சகோதர சகோதரிகள், நமது நண்பர்கள் மற்றும் அண்டையர்களுக்கு - நாம் மகிழ்ச்சி மற்றும் இன்பத்தை கொண்டு வர விரும்புகிறோம். மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை கொண்டு வருவது மற்றும் நமது சௌகரியத்திற்கு முன் மற்றவர்களின் வசதியை வைப்பது போன்றவை நமக்கு மகிழ்ச்சியை கொண்டு வரும் அளவிற்கு நமது அன்பு பெரிதாக இருக்கிறது. அதனால் தான் நம்மை பற்றி சிந்திப்பதற்கு முன் நாம் நமது சக மனிதர்களை பற்றி சிந்திக்கிறோம். பஹாவுல்லாவின் கீழ்வரும் மேற்கோளை நாம் மனனம் செய்யலாம்:
>
> **“தம்முன் தமது சகோதரரே மேம்பட்டவரென தேர்ந்தெடுப்பவர் ஆசி பெறுவாராக”[105]**

*ஆசீர்வதிக்கப்பட்டவர்*

1. கிணறு ஒன்றும் வாளி ஒன்றும் இருக்கிறது. ஆனால் தண்ணீர் பெறுவதற்காக அவ்வாளியை பயன்படுத்துவதற்கான வழியில்லை. எமிலியா தன்னுடைய அறிவு நுட்பத்தை பயன்படுத்தி, ஒரு கயிற்றை கண்டுபிடித்து, அதை வாளியுடன் கட்டி, வாளியை கிணற்றில் இறக்கி, தண்ணீரைப் பெற்றுக் கொள்கிறாள். எமிலியாவின் அறிவுநுட்பம் இறைவனுடைய ஓர் பரிசாகும். இறைவன் எமிலியாவை அறிவு நுட்பத்தை கொண்டு ஆசீர்வதித்துள்ளார்.

2. விக்டரின் குடும்பம் தங்கள் இல்லத்தின் மைய அறையில் தினமும் காலையில் பிரார்த்தனைகள் கூறுகிறார்கள். விக்டர் குடும்பத்தினரின் இல்லம் ஆசிர்வதிக்கப்பட்டதாகும்.

*மேம்பட்டதென தேர்ந்தெடுப்பது:*

1. ஜானிற்கு மிட்டாய் மற்றும் வெனிலா ஐஸ்கிரீம் ஆகியவற்றை சாப்பிட விருப்பம், ஆனால் இவற்றில் அவன் ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதால், அவன் வெனிலா ஐஸ்கிரீம் தேர்ந்தெடுக்கிறான். அவன் வெனிலாவே மேம்பட்டதென தேர்ந்தெடுத்தான்.

2. அனின்டோ வெளியில் சென்று விளையாடலாம், அல்லது தோட்டத்தில் அவளுடைய தந்தைக்கு உதவி புரியலாம். அவள் தோட்டத்தில் தன் தந்தைக்கு உதவி புரிய முடிவெடுக்கிறாள். தன் தந்தைக்கு உதவி புரிவதை ஆனந்தி மேம்பட்டதென தேர்ந்தெடுத்தாள்.

**ஈ. கதை**

அப்துல் பஹா வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம், எவ்வாறு தன்னலமின்மையை செயல்படுத்தும் வழிகளை காண்பிக்கிறார் என்பதை கீழுள்ள கதை எடுத்துக் காட்டுகிறது.

> அப்துல்பஹா தமக்காக விலை குறைந்த ஆடைகளையே விரும்பித் தேர்ந்தெடுத்தார். அவரிடம் கூடுதலான ஆடைகள் இருந்த போதெல்லாம் அவற்றை அவர் எப்போதுமே மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவார். ஒரு நாள் அவர் அக்கா நகரத்தின் ஆளுநருக்கு விருந்தளிப்பதாக இருந்தது. அந்த சம்பவத்திற்காக அவருடைய மேலங்கி பொருத்தமற்றதாயிருந்தது என்று அவருடைய மனைவியார் கருதினார். ஆகவே அவர் முன் கூட்டியே தையற்காரரிடம் சென்று, அப்துல்பஹாவிற்காக ஒரு சிறந்த மேலங்கியை தயாரிக்கும்படி கூறினார். தமது பழைய மேலங்கிக்கு பதிலாக புதியதொரு மேலங்கி வைக்கப்பட்டதை அப்துல்பஹா கவனிக்க மாட்டார் என்று அவர் நினைத்தார்; சற்றும் குறையாத தூய்மையுடன் இருப்பதை மட்டும் தான் அவர் கவனிப்பார் என நினைத்தார். ஆளுநருடைய விஜயத்தின் நாளன்று, அப்துல்பஹாவிற்காக புதிய மேலங்கி தயாராக வைக்கப்பட்டது, ஆனால் அவர் தமது பழைய மேலங்கியை தேடுவதற்காகச் சென்றார். அவர் தமது பழைய மேலங்கியைக் கேட்டார், அங்கிருந்த புதிய மேலங்கி தம்முடையதாக இருக்க முடியாது என்றார். அந்த விசேஷ சந்திப்பிற்காக தான் புதிய மேலங்கியை வாங்கியிருப்பதாக அவரது மனைவியார் அவரிடம் விளக்கம் கூறி அவரை சமாதானப்படுத்த முயற்சித்தார், ஆனால் அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த ஒரு மேலங்கியின் விலையில், தாம் வழக்கமாக உடுத்தும் எளிய மேலங்கியைப் போல் ஐந்து மேலங்கிகளை வாங்கலாம் என்றார். தமக்கென ஒரு மேலங்கி வாங்க இவ்வளவு பணத்தைச் செலவு செய்வதற்கு காரணமே இல்லை என அவர் தன் துணைவியாரிடம் கூறினார். தமக்கு ஒரு புதிய மேலங்கி தேவைப்பட்டால், அவர்கள் இந்த விலையுயர்ந்த மேலங்கியைத் தையற்காரரிடம் கொடுத்துவிட்டு, அந்த பணத்தில் ஐந்து சாதாரண மேலங்கிகளை வாங்குமாறு கூறினார். “பாருங்கள், அப்போது நான் ஒரு புதிய மேலங்கியைப் பெற்றிருப்பதோடு மட்டுமில்லாமல் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக மேலும் நான்கு மேலங்கிகள் இருக்கும்,” என்று கூறினார்.

**உ விளையாட்டு: “நத்தை”**

அடுத்த செயல்பாடாக, குழந்தைகள் இப்போது நத்தையாக போகிறார்கள் என்று கூறுங்கள். அதில் வெற்றிபெற, அவர்கள் ஒரே வரிசையில் நின்று, கைகளை பிடித்து கொண்டு, கைகளை

விடாமல் இருக்க வேண்டும். வரிசையின் ஒரு முனையில் இருக்கும் குழந்தை தான் மையமாக இருக்க வேண்டும், அதனால் அவர் அதே இடத்திலேயே நின்றுக் கொண்டிருக்க வேண்டும். மறு முனையில் இருக்கும் குழந்தை வரிசையில் இருக்கும் அனைவரையும் வழிநடத்தி நடுவில் இருக்கும் குழந்தையை சுற்றி சுழல வேண்டும். சிறிது சிறிதாக அவர்கள் ஒரு நத்தையின் சுருள் போல தங்களை தாங்களே சுழற்றி கொள்ள வேண்டும்.

மேலுள்ள விளையாட்டிற்கு மாற்றாக, குழந்தைகளை மீண்டும் ஒரு வரிசையாக நிற்க சொல்லி கைகளை பிடித்துக் கொள்ள சொல்லுங்கள். பிறகு ஒரு முனையில் இருக்கும் குழந்தையை வட்டமாக சுழல தொடங்க வேண்டும், மெதுவாக மற்றவர்களை தன்னை சுழற்றிக் கொள்ள செய்ய வேண்டும். குழந்தைகள் ஒருவரை ஒருவர் மிதித்துக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளவும்.

நேரம் அனுமதித்தால், மற்றொரு மாறுபாட்டை குழந்தைகளுடன் செய்யலாம். ஒரு நத்தையை உருவாக்கிய பின்னர், நடுவில் நிற்பவர்களை குனிய சொல்லுங்கள், பிறகு நடுவில் இருக்கும் குழந்தை தனது பக்கத்தில் இருப்பவரின் கைக்கு அடியில் புகுந்து செல்ல வேண்டும், இவ்வாறாக ஒவ்வொருவரின் கைக்கடியில் சென்று நத்தையை விட்டு வெளியேற வேண்டும். மற்ற குழந்தைகள் தங்களது கைகளை பிடித்து கொண்டே, அந்த முதல் குழந்தையை பின்தொடர்ந்து ஒருவர் மற்றவரின் கைக்கடியில் புகுந்து அனைவரும் வெளியேறி மீண்டும் ஒரு வரிசையில் வந்து நிற்க வேண்டும்.

**உ. வண்ணமிடுதல்: வரைபடம் 6**

**ஊ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 7

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

நீங்களும் சில சிறுவர்களும் ஆரம்ப பிரார்த்தனைகளை கூறிய பிறகு, பாடம் 5ல் குழந்தைகள் மனனம் செய்ய ஆரம்பித்த பிரார்த்தனையை மீளாய்வு செய்யவும்.

**ஆ. (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)**

<u>மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்</u>

மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்,
மகிழ்ச்சி சிறகு தரும்
மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்,
மகிழ்ச்சி சிறகு தரும்
மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்
மகிழ்ச்சி சிறகு தரும் .

மகிழ்ச்சி வேளையில் நம் பலம் பெருகும்
மகிழ்ச்சி வேளையில் நம் அறிவும் உயரும்
மகிழ்ச்சி வேளையில் புரிந்துணர்வும் ஒளிரும்
மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்,
மகிழ்ச்சி சிறகு தரும்
மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்,
மகிழ்ச்சி சிறகு தரும்
ஆனால், கவலை வரும்போது, ஆனால், கவலை வரும்போது
நாம் பலவீனமாகிறோம், பலம் நம்மை விட்டு ஓடிடும்,
நம் உட்பார்வை மங்கிடும், எண்ணமும் வண்ணமும் மாறிடும்
என்றாலும்

மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்,
மகிழ்ச்சி சிறகு தரும்
மகிழ்ச்சி பறக்க சிறகு தரும்,
மகிழ்ச்சி சிறகு தரும்
மகிழ்ச்சி சிறகு தரும்
மகிழ்ச்சி சிறகு தரும்

**இ. மேற்கோள்களை மனனம் செய்தல்**

இந்த பாடத்தில் குழந்தைகள் மனனம் செய்யவிருக்கும் மேற்கோளை வழங்குவதற்கு பின்வருபவை உங்களுக்கு உதவும், இந்த பாடம் மகிழ்ச்சியெனும் கருப்பொருள் மீது கவனம் செலுத்துகிறது.

மகிழ்ச்சி நமக்கு சிறகுகளைக் கொடுக்கிறது என்றும், மகிழ்ச்சியாக இருக்கும் போது நாம் மேலும் பலமுடையவர்களாக இருக்கிறோம் என்றும், மகிழ்ச்சியாக இருக்கும்போது நாம் விஷயங்களை மேலும் விரைவாகப் புரிந்துகொள்கிறோம் என்றும் அப்துல்பஹா நமக்கு கூறுகிறார். மகிழ்ச்சி என்பது மனித இதயத்தின் ஒரு பண்பாகும். மகிழ்ச்சி நிறைந்த ஓர் இதயத்துடன் இருந்தால், நாம் இறைவனின் ஆசீர்வாதங்களை எல்லா இடங்களிலும் காண முடிகிறது - அன்பான பெற்றோர்கலெனும் ஆசீர்வாதம், நட்பெனும் ஆசீர்வாதம், மற்றும் அனைத்திற்கும் மேலாக, இறைவனை அறிந்து அவரை நேசிக்கும் ஆசீர்வாதம். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருந்து நம்மால் முடிந்தளவு மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை கொண்டு வர வேண்டும். அனைத்து குழந்தைகளும் எல்லா இடங்களிலும் மகிழ்ச்சியெனும் ஒளியை வீசக்கூடிய பிரகாசமான விளக்குகளைப் போல பிரகாசிக்க வேண்டுமென்பது அப்துல்பஹாவின் விருப்பமாக இருந்தது. நாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதை நினைவில் வைக்க நமக்கு உதவிடும் வகையில், பின்வரும் மேற்கோளினை நாம் மனனம் செய்வோமாக:

**“மனிதனின் புத்திரனே! உனது உள்ள மகிழ்ச்சியினால் உவகைப் பெறுவாயாக, அதனால் எம்மைச் சந்திக்க அருகதைப் பெறுவதோடு எமது அழகையும் பிரதிபலிக்கக்கூடும்.”[106]**

*மகிழ்ச்சி*

1. ரோனால்ட். அவனது தாத்தா பாட்டி வசிக்கும் இடத்திலிருந்து வெகு தூரத்தில் வசித்து வந்தான். பள்ளி விடுமுறையின் போது அவர்களை சந்திக்ககூடிய வாய்ப்பை கேள்விபட்டதும் மிகவும் சந்தோஷம் அடைந்தான். அவனுடைய இதயம் மகிழ்ச்சியினால் உந்தப்பட்டது.

2. மொஸ்கன் மிக கடினமாக பள்ளியில் படித்து வந்தாள். இறுதி ஆண்டு பரீட்சையின் முடிவுகளை கண்டவுடன் அவளுடைய இதயம் மகிழ்ச்சியில் துள்ளியது.

*அருகதை*

1. சோஜ்னா வெகு கஷ்டப்பட்டு படித்து நல்ல மார்க்குகள் வாங்கினாள். அவளுடைய கடின உழைப்பிற்காக அவளுடைய ஆசிரியர் அவளை மிகவும் புகழ்ந்தார். அவளுடைய ஆசிரியரின் புகழ்ச்சிக்கு சோஜ்னா மிகவும் அருகதையானவள்.

2. டேவிட் எப்பொழுதும் அவனுடைய சகோதர சகோதரிகளை மிகவும் கவனத்துடன் பார்த்து வந்தான். அவனுடைய பெற்றோர்கள் பிள்ளைகளை பாதுகாக்கும் பொறுப்பில் அவன் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். டேவிட் பெற்றோர்களுடைய நம்பிக்கைக்கு மிகவும் அருகதை உடையவனாக விளங்கினான்.

*(முன்னோக்கி) பிரதிபலிக்க:*

1. அமரி தனக்கு கிடைத்த கல்லை பளபளவென ஆகி ஒளியை பிரதிபலிக்கும் வரை அதனை மெருகேற்றினான(பாலிஷ் செய்தான்)

2. தூய இதயங்கள் இறைவனின் பண்புகளை பிரதிபலிக்கும்.

*அழகு:*

1. இலானாவின் அம்மா வானத்தில் பறவைகள் பார்ப்பதை பார்த்து, மலர்கள் மலர்வதை பார்த்து, கடலின் அலைகள் கரையில் புரளுவதை பார்த்து மகிழ்ச்சியடைகிறார். அவர் இயற்கையின் அழகை பார்க்கிறார்.

2. நேரங்களில் ஒரு பாடலின் அழகு கண்ணில் கண்ணீர் வரவழைக்கும் வகையில் நமது இதயங்களை தொடுகிறது.

3. முனீர் எப்போதெல்லாம் பிரார்த்தனைகளை கூறுகிறாரே, அப்போது அவர் இறைவனின் அழகு, அவரது அன்பு, அவரது பெருந்தன்மை மற்றும் அவரது விவேகம் ஆகியவற்றை காண்கிறார்.

**ஈ. கதை**

அப்துல்பஹா தம்மை சுற்றியிருந்தோர்களின் உள்ளங்களுக்கு. எவ்வாறு மகிழ்ச்சியைக் கொண்டு வந்தார் என்ற உதாரணத்தை பின்வரும் கதையானது எடுத்துக்காட்டும்.

லெராய் ஐயோவாஸ் என்பவர் 1951ல் பாதுகாவலரால் தெய்வ சமயத்தின் திருக்கரமாக நியமிக்கப்பட்ட ஒரு தலைசிறந்த பஹாயாக இருந்தார். 1912ல் மாஸ்டர் அவர்கள் சிகாகோ நகரத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது இவர் ஒரு சிறுவராக இருந்தார். அப்துல்பஹாவின் முன்னிலையில் இருப்பதற்கான வாய்ப்பினைப் பெற்ற இந்த ஆன்மீக சிறுவரின் மனக்கிளர்ச்சியை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? ஒரு நாள் தாமும் தமது தந்தையாரும் மாஸ்டர் அவர்கள் தங்கியிருந்த தங்கும் விடுதியை நோக்கி சென்று கொண்டிருக்கையில் லெராய்க்கு ஒரு யோசனை தோன்றியது: அப்துல்பஹாவிற்கு மலர்கள் சிலவற்றை எடுத்துச் செல்லவேண்டும் என அவர் முடிவெடுத்தார். தம்மிடமிருந்த பணத்தைக் கொண்டு அவர் வெள்ளை ஈரடுக்கான இதழ்களையுடைய மலர்களின் ஓர் அழகிய மலர்ச்செண்டினை வாங்க முடிந்தது. ஆனால் தங்கும் விடுதியைச் சென்றடைவதற்கு முன் அவர் தனது மனதை மாற்றிக்கொண்டார். அவர் மாஸ்டருக்கு அழகிய மலர்கள் உட்பட லௌகீகமான எது ஒன்றையும் வழங்கமாட்டேன் என்று முடிவெடுத்தார். அவருக்கு தமது உள்ளத்தை வழங்க விரும்பினார். அதுவே தான் வழங்கக்கூடிய அதி முக்கியமான ஒன்றாகும். ஆகவே, லெராய் அவர்களின் தந்தை, மலர்களை வாங்கியது யார் என்பதைத் தெரிவிக்காமல், அவற்றை அப்துல்பஹாவிடம் வழங்கினார்.

பிறகு அப்துல்பஹா தம்மை சந்திப்பதற்காக தங்கும் விடுதியில் ஒன்று கூடியிருந்த அனைத்து நண்பர்களுக்கும் சொற்பொழிவாற்றினார். அவரது சொற்பொழிவின் போது, லெராய் அவரது பாதங்களருகே அமைதியாக அமர்ந்து அவரது ஞானம் நிறைந்த அன்பான சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு மாஸ்டர் அவர்கள் எழுந்து, விருந்தினர்களுடன் கரங்களைக் குலுக்கி, தமது அன்பின் காணிக்கையாக ஒவ்வொருவருக்கும் ஒரு வெண்ணிற ஈரடுக்கான இதழ்களையுடைய மலரை வழங்கினார். அப்போது லெராய் மாஸ்டருக்கு பின்னே நின்றுக் கொண்டிருந்தார். “ஓ! அவர் திரும்பி அந்த மலர்களில் ஒன்றினை எனக்கு வழங்க நான் விரும்புகிறேன்,” என அச்சிறுவன் நினைத்தார். ஒருவேளை அந்த அழகிய மலர்களை உண்மையிலேயே வாங்கியது யார் என்பதை மாஸ்டர் அவர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என தமது உள்ளத்தில் இரகசியமாக எண்ணினார் லெராய். ஆனால், ஒவ்வொன்றாக அந்த வெண்ணிற ஈரடுக்கான இதழ்களையுடைய மலர் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன, லெராய் அவர்களுக்கு அவற்றில் ஒன்று கிடைக்காது போன்ற சூழ்நிலை இருந்தது. பிறகு, திடீரென்று மாஸ்டர் அவர்கள் திரும்பி தமது பார்வையை லெராய் ஐயோவாஸின் மீது நிலைநாட்டினார். அவரது முகம் அன்பினால் ஒளிர்ந்து, அவரது கண்கள் கனிவுடன் நிறைந்திருந்தன. அவர் ஒரு வெண்ணிற ஈரடுக்கான இதழ்களையுடைய மலரை லெராய்க்கு வழங்கினாரா? இல்லை. அப்துல்பஹா லெராய்க்கு மேலும் விலைமதிப்புமிக்க ஒன்றை வழங்கினார். அப்துல்பஹா தமது மேலாடையில் ஓர் அழகிய சிவப்பு ரோஜாவை அணிந்திருந்தார், அவர் அதனை எடுத்து அவ்விளைய சிறுவருக்கு வழங்கினார். லெராயின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. தமக்காக வெண்ணிற ஈரடுக்கான இதழ்களையுடைய மலரை கொண்டு வந்தது யார் என்பதை மாஸ்டர் தெரிந்திருந்தார்.

**உ. விளையாட்டு : ட்ராகனின் வாலைப் பிடிப்பது**

அடுத்த நடவடிக்கையைத் தொடங்க, குழந்தைகளை வரிசையாக நின்று, அவர்கள் ஒவ்வொருவரும் தமது கரங்களை தமக்கு முன் இருப்பவரின் தோள்களில் வைக்குமாறு கேட்டுக் கொண்டு விளையாட்டினை ஆரம்பிக்கவும். வரிசையின் முதலில் இருக்கும் குழந்தை ட்ராகன்

விலங்கின் தலை. வரிசையின் கடைசியில் இருப்பவர் ட்ராகன் விலங்கின் வால், தலையிலிருந்து தப்புவதற்காக வலதுபுறமும். இடதுபுறமும் வாலானது ஆடிக்கொண்டிருக்கும். “செல்” என்ற உத்தரவு கொடுப்பதற்கு முன் ட்ராகன் விலங்கு நேர்கோட்டில் இருக்கவேண்டும். ஒரு சிறுவர், “ஒன்று, இரண்டு, மூன்று, செல்!” என கூறுவார், செல் என்ற உத்தரவு கொடுக்கப்பட்டவுடன், தலையானது வாலை நோக்கி ஓடி அதனை பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். முழு உடலும் தலையுடன் நகர்ந்து உடைந்து விடாமல் இருக்கவேண்டும். தலையானது வாலைத் தொடுவதில் வெற்றியடைந்து விட்டால், முன்னால் இருக்கும் குழந்தையே தொடர்ந்து தலையாக இருக்கலாம். அவர் வாலைப் பிடிப்பதற்கு முன் உடல் உடைந்துவிட்டால் தலையானது வாலாகி வரிசையிலுள்ள அடுத்த குழந்தை தலையாகிவிடும். ஒவ்வொரு குழந்தையும் தலையாகவும் வாலாகவும் இருக்க வாய்ப்பளிக்கப்படும் வரை விளையாட்டு தொடரலாம்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 7**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 8

### அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

வழக்கமான வழியில் நீங்களும், முன்னதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாணவர்களும் மனப்பாடமாக தெரியும் பிரார்த்தனையை கூறி வகுப்பை ஆரம்பிக்கலாம். பிறகு பாடம் 5ல் அவர்கள் கற்க ஆரம்பித்த பிரார்த்தனையை மீளாய்வு செய்யலாம்.

### ஆ. பாடல்கள் (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)

**எல்லா வேளையிலும்**

சரணம்:
நாம் எல்லா வேளையிலும்
வாய்மையும் நாணயத்தை
வெளிப்படுத்த வேண்டும்...

நாம் எல்லா வேளையிலும்
வாய்மையும் நாணயத்தை
வெளிப்படுத்தவேண்டும்

பேசும் போது, ஆழ் மனதை பகிர்கின்றேன்
வாய்மை அன்பான வார்த்தை எனது அழகு
நாணயம் என்பதொரு பொக்கிஷமே
நேர்மை தூய்மையின் அழகான கலவை
நாணயம் என்பதொரு பொக்கிஷமே

சேவையின் போது, ஆழ் மனதை கொடுகின்றேன்
சிந்தனையை தூய்மையாக்கி, பிரார்தித்து துவங்குவேன்
இவ்வழி, என் செயல்கள் ஒற்றுமையை கொண்டு வரும்
நாணயம் என்பதொரு பொக்கிஷமே
நேர்மை தூய்மையின் அழகான கலவை
நாணயம் என்பதொரு பொக்கிஷமே

பிரார்திக்கும் போது, ஆழ் மனதிலிருந்து பிரார்த்திக்கிறேன்
கண்ணை மூடி, இறைவனைப் பற்றி யோசிக்கிறேன்
எனதாவலை எண்ணுவதில்லை,
தேவைகளை எண்ணுவதில்லை
எனது செயல்களின் வழி நாணயம் எப்படி மின்னுவதென எண்ணுகிறேன்
நாணயம் என்பதொரு பொக்கிஷமே

சரணம் ( இரண்டு முறை)

**இ. மேற்கோள்களை மனனம் செய்தல்**

மனனம் செய்வதற்கான மேற்கோளை வழங்க, பாடத்தின் கருப்பொருளுடன் தொடர்புடைய கீழுள்ள சிந்தனைகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

நமது உள்ளங்களில் இருக்கின்றவற்றை நமது சொற்களும் சிந்தனைகளும் பிரதிபலிக்கும்போது, நாம் நாணயத்தை வெளிப்படுத்துகிறோம். நாணயமானது மற்றவர்களுடனான நமது தொடர்புகளில் நாம் வாய்மையுடனும், விசுவாசத்துடனும் செயல்பட நமக்கு ஊக்கமளிக்கிறது. உதாரணத்திற்காக, நாம் செய்த ஒன்றிற்காக மன்னிப்பு தெரிவிக்கும்போது, நமது அத்தவறுகளை மீண்டும் செய்யாமலிருக்க அனைத்து முயற்சிகளையும் எடுப்போம் என்று நாம் உள்ளத்தில் தெரிந்துக் கொள்கிறோம், நாம் நாணயமாக இருக்கிறோம். நமது நாணயத்தின் மூலமே, மற்றவர்கள் நமது உள்ளங்களின் தூய்மையைக் கண்டு நம்மீது தங்களின் நம்பிக்கையை வைக்கமுடியும். இந்தப் பண்பின் முக்கியத்துவத்தை நாம் நினைவுபடுத்திக் கொள்ளும் வகையில், அப்துல்பஹாவின் பின்வரும் மேற்கோளை மனனம் செய்வோமாக:

**“நாம் எல்லா வேளைகளிலும் நமது வாய்மையையும் நாணயத்தையும் வெளிப்படுத்தவேண்டும்...”[107]**

*வெளிப்படுத்துதல்*

1. ஆஷா கடற்கரையில் தாம் கண்டெடுத்த சிப்பியின் மீதிருந்த மண்ணை அகற்றி அது மிருதுவாகவும் பளபளப்பாகவும் தோன்றும் வரை அதற்கு மெருகேற்றினார். அவர் அதனை முடித்தவுடன் சிப்பியின் உண்மையான அழகு வெளிப்படுத்தப்பட்டது.
2. சூரியன் உதயமாகி காலைப்பணி விலகிய போது, மலைகளின் அழகு வெளிப்படுத்தப்பட்டது.

*நாணயம்*

1. லியோவின் வகுப்பிலுள்ள மாணவர்கள் அடிக்கடி படிப்பதற்கு பதிலாக விளையாடுகின்றனர். அவர்கள் பள்ளியில் சிறப்பாக முன்னேற மாட்டார்கள் என்று லியோ கவலைப்பட்டு, அவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து படித்து, படிப்பதில் ஒருவர் மற்றொருவருக்கு துணைபுரிந்திடும் பொருட்டு சில வழிமுறைகளைப் பற்றி சிந்திக்க முயற்சி செய்கிறார். தன்னுடைய வகுப்பிலுள்ள சகாக்களிடம் லியோ காட்டும் அக்கறை நாணயமானது.

2. தனது வீட்டுப்பாடத்தை தினமும் செய்வதாக ரோசா தம்முடைய தாயாரிடம் வாக்குறுதியளித்தார். தன்னுடைய பெற்றோர்கள் வெளியில் செல்லும்போதும், ரோசா தனது வீட்டுப்பாடங்கள் முறையாகச் செய்கிறார். ரோசா தனது வாக்குறுதியை நாணயத்துடன் நிறைவேற்றுகிறார்.

**ஈ. கதை**

இந்த பாடத்தில் நீங்கள் கூறவிருக்கும் கதை, நாணயம் என்ற பண்பினை கொண்டிருப்பது என்றால் என்ன என்பதையும், நாணயம் இல்லாததை எவ்வாறு பார்ப்பது என்பதை பற்றியும் சிந்திக்க அவர்களுக்கு உதவும்.

> பல குழந்தைகளைக் கொண்டிருந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோருக்கு சொந்தமான ஒரு வீட்டின் பின்புறத்தில் ஒரு மரம் பல வருடங்களாக இருந்து வந்தது. அம்மரம் வளர்ந்து கொண்டிருக்கையில் அதனுடைய கிளைகள் விரிவாகப் படர்ந்து, அக்குடும்பத்தினுடைய இல்லத்தின் பின்புறம் முழுவதற்கும் நிழல் கொடுத்தது. குளிர்காலத்தில் ஒரு காலைப்பொழுதில், தந்தை அம்மரத்தின் கீழாகச் சென்று கொண்டிருக்கையில் தமது பக்கத்து வீட்டார் ஒருவரைச் சந்தித்தார். கிராமத்தில் நடப்பவைகளைப் பற்றி அவர்கள் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்குப் பின், அந்த அண்டையர் அந்த பெரிய மரத்தைப் பார்த்த பிறகு அம்மனிதரிடம் இவ்வாறு கூறினார் “நீங்கள் இந்தப் பெரிய மரத்தை வெட்டி வீழ்த்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. அது மிகவும் படர்ந்து முரட்டுத்தனமாக உள்ளது. அதனுடைய கிளைகளில் ஒன்று உங்கள் வீட்டின் கூரை மீது விழுந்தால், அல்லது அதன் நிழலில் விளையாடிக் கொண்டிருக்கும் உங்கள் குழந்தைகள் ஒருவரின் மீது விழுந்தால் என்னவாகும்?” இருவரும் பிரிந்து சென்ற பிறகு, அம்மனிதர் தன்னுடைய அண்டையரின் ஆலோசனையைப் பற்றி சிந்தித்தார்! தமது நினைவுக்கெட்டிய காலத்திலிருந்தே அம்மரம் அங்கு இருந்து வந்துள்ளது, அதிலிருந்து தீங்கு ஏதும் வந்ததில்லை. கோடைக்காலத்தில் அது நல்ல நிழலைக் கொடுத்து, குளிர்காலத்தில் கடும் குளிரான வாடைக் காற்றிலிருந்து தனது வீட்டைப் பாதுகாத்து வந்துள்ளது. அது கட்டுறுதியாகவும் பலமாகவும் இருப்பது போல தென்பட்டது, “எனினும், அநேகமாக என் அண்டையரின் கருத்து சரியாக இருக்கலாம்,” என்று அம்மனிதர் தன்னிடமே கூறிக்கொண்டார். “தோற்றங்கள் சில வேளைகளில் ஏமாற்றக்கூடியதாக இருக்கலாம். அது ஒரு வேளை கட்டுறுதியாக தோன்றுவதைப் போல் அவ்வளவு உறுதியாக இல்லையென்றால் என்னவாகும்?” ஆகவே அவர் அதை வெட்டி வீழ்த்திட முடிவெடுத்தார்.

அது ஒரு கடினமான காரியமாக இருந்தது, ஏனெனில் அம்மரம் உண்மையிலேயே ஒரு பெரிய மரமாக இருந்து, பல கிளைகளைக் கொண்டிருந்தது, அவற்றில சில கிளைகள் மிகவும் உயரமாக இருந்தன. அம்மனிதர் மரத்தை வெட்டி முடிக்கும் தறுவாயில், அந்த அண்டையர் தன்னுடைய மகன்கள் இருவருடனும், ஒரு கைவண்டியுடனும் அங்கு வந்தார். பல மரக்கட்டைகள் அடுக்கப்பட்டிருந்ததைக் கண்ட அவர், நீங்கள் மரத்தை வெட்டி வீழ்த்த முடிவெடுத்ததை என்னால் காண முடிகின்றது. அந்த மரத்தின் விறகு குவியலை எடுத்துச் சென்றிட உங்களுக்கு யாராவது தேவைப்படலாம், நாங்கள் உங்களுக்கு உதவ முடியும். நான் எனது கைவண்டியையும், இரண்டு மகன்களையும் கொண்டு வந்துள்ளேன், உங்கள் வீட்டின் பின்புறத்திலிருந்து இவற்றையெல்லாம் அகற்றிடுவதில் நாம் மகிழ்ச்சியடைவோம். பதிலுக்காக காத்திராமல் அவரின் மகன்கள் கைவண்டியில் மரத்தின் விறகுகளை ஏற்ற ஆரம்பித்தனர். அவர்கள் அங்கிருந்து சென்று கொண்டிருக்கையில், அம்மனிதர் தனது இல்லத்தை இவ்வுளவு காலமாக பாதுகாத்து வந்த மரத்தின் துண்டின் மீது அமர்ந்தார். அப்போதுதான் அவர் தமது குடும்பத்தின் பாதுகாப்பில் தமது அண்டையர் அக்கறைக் கொள்ளவில்லை, மாறாக குளிர் மாதங்களில் தனக்கு வெப்பமளிக்கும் விறகுகளைப் பெறுவதிலேயே அக்கறைக் கொண்டிருந்தார் என்பதை உணர்ந்துக் கொண்டார். “தோற்றங்கள் சில வேளைகளில், உண்மையிலேயே, ஏமாற்றக்கூடியதாக இருக்கலாம்” என்று அவர் பெருமூச்சுடன் கூறினார்.

### உ. விளையாட்டு : “சூடு அல்லது குளிர் “

குழந்தைகளில் ஒருவரின் கண்களை கட்டி அவரை குழுவில் இருந்து திரும்பி நிற்குமாறு கூறி தொடங்கலாம். மற்றவர்கள் எழுதுகோல் அல்லது வண்ணக்கோல் போன்ற ஒரு சிறிய பொருளை மறைத்து வைத்தபிறகு, முதல் குழந்தையின் கண்கட்டை கழட்டி விடவும். அக்குழந்தை மறைக்கப்பட்டிருக்கும் பொருளை நெருங்கும்போது மற்றவர்கள் மேன்மேலும் உரக்கமாக கை தட்டுவார்கள். அப்பொருள் மறைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து அக்குழந்தை அப்பால் சென்றுவிடும் போது மற்றவர்கள் மெதுவாக கை தட்டுவார்கள். கை தட்டுவதற்கு பதிலாக தேடும் குழந்தை மறைக்கப்பட்டிருக்கும் பொருளை நெருங்கும் போது, மற்ற குழந்தைகள், “சூடு”, “மிக சூடு”, “கொதிக்குது” என்று கூறலாம். மறைவிடத்தை விட்டு அப்பால் செல்லும் போது “குளிர்”, “மிக குளிர்”, “பனிக்கட்டியின் குளிர்”, என்று கூறலாம். மறைக்கப்பட்டுள்ள பொருளைத் தேடிக் கொண்டிருக்கும் நண்பரை தவறாக வழிநடத்தாதவாறு குழந்தைகள் கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில், அவர் மற்றவர்களில் நம்பிக்கை இழந்து விளையாட்டு வீணாகிவிடும்.

### எ. வண்ணமிடுதல்: வரைபடம் 8

### ஏ. முடிவு பிரார்த்தனைகள்

## பாடம் 9

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

இந்த பாடம் மற்றும் அடுத்த மூன்று பாடங்களை தொடங்கும் போது, பகுதி 10ல் பரிந்துரைக்கப்பட்டது போல, மனப்பாடமாக தெரிந்த ஒரு பிரார்த்தனையை தேர்ந்தெடுத்து கூறவும். இந்த ஆரம்ப பிரார்த்தனைகளை கூற சில மாணவர்களையும் நீங்கள் சேர்த்து கொள்ளலாம், அதன் பிறகு கீழுள்ள மனனம் செய்ய வேண்டிய பிரார்த்தனையை அறிமுகப்படுத்தலாம். குழந்தைகள் மனனம் செய்த கடந்த இரண்டு பிரார்த்தனைகளை விட, இந்த பிரார்த்தனை சற்று நீளமான ஒன்றாகும், ஆனால் புரிந்து கொள்ள கடினமானதல்ல, பாடம் 12ற்குள் இதனை அவர்கள் எல்லோரும் மனனம் செய்ய முடியும்.

> **“கடவுளின் நாமம் மொழியப்பட்டு, அவரது புகழ் பாடப்படும், ஸ்தலமும், இல்லமும், இடமும், நகரமும், இதயமும், மலையும், புகலிடமும், குகையும், பள்ளத்தாக்கும், நிலமும், கடலும், தீவும், புல்வெளியும், ஆசீப்பெற்றதாகும்.”[108]**

**ஆ. பாடல்கள் (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)**

பூமியைப் போல் இரு

பூமியைப் பார்........ அது எத்தனை பணிவாய் உள்ளது
நாம் உயிர் வாழ்ந்திட
நம் இறைவன் தந்த
நல்வளம் யாவுமே தன்னிடம் கொண்டது
ஆயினும் சொல்லக் கேட்டதுண்டோ
நான் உனை விட உயர்ந்தவன்
எல்லா வளங்களும் நிறைந்தவன்
பூமியைப் பார்........ பூமியைப் பார்........×2
மரத்தினைப் பார்......... அது எத்தனை பணிவாய் உள்ளது
கனிகள் மிகுந்திடும் போதும் – தலை
குனிந்தே தரையை நோக்கும்
இதுவே கனியைப் பகிரும்
இனிய முறையும் ஆகும்
ஆயினும் சொல்லக் கேட்டதுண்டோ
நான் உனை விட உயர்ந்தவன்
எல்லா வளங்களும் நிறைந்தவன்
மரத்தினைப் பார்......... மரத்தினைப் பார்.........×2
பூமியைப் போலிரு.... கனி மரத்தைப் போலிரு
பணிவெனும் சிறகைக் கொண்டு – நீ
பறந்திடு ஒளியின் சொர்க்கம்
பணிவெனும் சிறகைக் கொண்டு - நீ
பறந்திடு ஒளியின் சொர்க்கம்
பூமியைப் போலிரு...... கனி மரத்தைப் போலிரு

பூமியைப் பார்...... மரத்தினைப் பார்.......
மரத்தினைப் பார்......
பூமியைப் பார்......
பூமியைப் பார்......

இ. **மேற்கோள்களை மனனம் செய்தல்**

இந்த பாடத்தின் கருப்பொருள் மற்றும் இன்று மனனம் செய்ய வேண்டிய மேற்கோளை அறிமுகப்படுத்த கீழ் வரும் சிந்தனைகள் உங்களுக்கு உதவும்.

பணிவு என்பது ஒரு மிக முக்கியமான பண்பு ஆகும். இறைவனின் முன்னிலையில் பணிவுடன் இருப்பவர் இறைவன் மற்றும் அவரது படைப்பின் மகிமையை உணர்கிறார். இறைவனது உதவி மற்றும் கருணை இல்லாமல், நம்மால் எதனையும் சாதிக்க முடியாது என்பதை அவர்களுக்கு தெரியும். இறைவனே மென்மையானவர், அதி பெரும் சக்தியுடையவர். இறைவன் முன் நாம் பெருமை கொள்ளாமல் இருப்பது போல, நாம் அவரது படைப்பின் முன்னிலையிலும் பணிவாக இருக்கிறோம். பூமி மற்றும் அதன் மீதுள்ள அனைவரையும் உருவாக்கியவர் இறைவன் என்பதையும், படைப்பினங்கள் அவரது அடையாளங்கள் மற்றும் பண்புகளை பிரதிபலிக்கின்றன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் இயற்கையை நேசித்து நம்மை சுற்றியுள்ள அனைவரிடமும் இருந்து நாம் ஏதாவதொன்றை கற்று கொள்ளலாம் என்று நமது இதயங்களில் நாம் நம்புகிறோம். பின்வரும் திருவாசகத்தினை மனனம் செய்யலாம்:

**“மனிதனின் புத்திரனே! எமது முன்னிலையில் பணிவுடன் நடந்து கொள்வாயாக, அதனால் யாம் அன்பு கூர்ந்து உன்பால் வருகைதரக்கூடும்.”**[109]

*பணிவு*

1. ஜினாப் தனது கொடுக்கப்பட்ட கணக்கு வீட்டுப்பாடத்தை கடுமையாக முயற்சித்து சரியாக முடித்து விட்டால். தனது சாதனையை பற்றி பெருமை பேசாமல் அவள் பணிவுடன் நடந்துக் கொண்டாள்.

2. யோங் ஃபூ வின் அண்டைபுரத்தில் உள்ள குழந்தைகள் கற்றுக் கொள்வதற்கு மிகவும் ஆவலாக இருக்கின்றனர், அதனால் அவனை குழந்தைகளுக்காக ஒரு சிறிய வகுப்பை ஏற்பாடு செய்ய கேட்டுக் கொல்லப்படுகிறான். அவனுக்கு குறைந்த அனுபவம் இருந்தாலும், அதனை நடத்த தனக்கு தகுதியில்லை என்று அவன் கருதிய போதிலும், அவன் இறைவன் மீது நம்பிக்கை வைத்து தன்னால் முடிந்ததை செய்கிறான். அவன் தனது பணியை பணிவுடன் அணுகினான்.

*அன்பு கூர்ந்து*

1. கேண்டெஸின் குடும்பம் தங்களின் வீட்டிற்கு விருந்திற்காக சில அண்டையர்களை அழைத்திருந்தார்கள். விருந்தினர்கள் வந்த போது, கண்டெஸ் அவர்களை அன்பு கூர்ந்து குளிர் பணம் வழங்கி அவர்களை வரவேற்றார்.

2. ஜியோவன்னி தனது வயது முதிர்ந்த அண்டையர் மளிகை பையுடன் வீட்டிற்கு நடந்து செல்ல சிரமப்படுவதை காண்கிறான், அதனால் அன்பு கூர்ந்து அதனை தூக்கி செல்ல முன்வருகிறார்.

ஈ. **கதை**

பணிவு என்பது அப்துல்பஹாவின் மிகவும் குறிப்பிடத்தக்க பண்புகளில் ஒன்றாக இருந்தது. நண்பர்கள் அவருக்குப் பல உயர்ந்த பட்டப்பெயர்களை வழங்க விரும்பினர், ஆனால் அவர் தாம் “அப்துல்பஹா” என்று மட்டுமே அழைக்கப்பட வேண்டும் என விரும்பினார், அதன் பொருள் “ஒளியின் ஊழியன்” என்பதாகும். அவர் எளிமையையும் விரும்பினார். ஒருமுறை, மேற்கத்திய நாடுகளிலிருந்து சில செல்வமிக்க நண்பர்கள், உணவிற்கு முன் அவரது கரங்களைக் கழுவ பரந்த திட்டம் ஒன்றைத் தயாரித்தனர். விசேஷ ஆடைகளை அணிந்த ஒரு சிறுவன் “தெளிந்த நீர்” கொண்ட அழகுநயமிக்க ஓர் கிண்ணத்தை ஏந்தி செல்வதற்காக அவர்கள் ஏற்பாடு செய்து, நறுமணம் கொண்ட துண்டையும் அவருக்காக ஏற்பாடு செய்தனர். அந்த நண்பர்கள் அச்சிறுவனுடன், கிண்ணம், துண்டு ஆகியவை பசும்புல் தரையைக் கடந்து தம்மை நோக்கி வரும் காட்சியைக் கண்ட மாஸ்டர், அந்நண்பர்களின் நோக்கத்தைப் புரிந்துக் கொண்டார். அவர் அருகில் நீர் இருப்பதைக் கண்டு, அதனைப் பயன்படுத்தி தமது கரங்களை விரைவில் கழுவிக்கொண்டு, தோட்டக்காரர் வைத்திருந்த ஒரு துணியை எடுத்து தமது கரங்களை உலர்த்திக் கொண்டார். பிறகு அவர் பிரகாசத்துடன், அவரது விருந்தாளிகளின் பால் திரும்பி, அந்த தண்ணீரையும் துண்டையும் தங்கள் சொந்த கரங்களைக் கழுவுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

எ. **விளையாட்டு: “நாங்கள் சில நேரங்களில் உயரமாக இருக்கிறோம்”**

ஒரு குழந்தை கண்மூடப்பட்டு, மற்ற குழந்தைகள் அவனை/அவளை சுற்றி வட்டம் அமைக்கிறார்கள். அவர்கள் ஒன்றாக இவ்வாறு கூறுகிறார்கள்:

“நான் மிகவும் உயராக இருக்கிறேன்.” (அவர்கள் தங்கள் கால்விரங்களில் நின்று, அவர்களால்
முடிந்த அளவிற்கு உயரமாக தங்களை நீட்டிக் கொள்கிறார்கள்)

“நான் மிகவும் குள்ளமாக இருக்கிறேன்.” (அவர்கள் கீழே உட்கார்ந்து தங்களை எவ்வளவு குள்ளமாக்கிக் கொள்ளமுடியுமோ அவ்வளவு குள்ளமாக்கிக் கொள்கின்றனர்.)

“சில நேரங்களில் நான் உயராக இருக்கிறேன்.” (அவர்கள் மீண்டும் தங்களை நீட்டிக் கொள்கின்றனர்)

“சில நேரங்களில் நான் குள்ளமாக இருக்கிறேன்.” (அவர்கள் மீண்டும் கீழே அமர்ந்துக் கொள்கின்றனர்)

ஆசிரியர் குழந்தைகளுக்கு உயரமாக இருக்க வேண்டுமா அல்லது குள்ளமாக இருக்க வேண்டுமா என்று செய்கையின் மூலம் காட்டுகிறார். பிறகு அவர்கள் ஒன்றாக இவ்வாறு கேட்க வேண்டும்க:

“இப்போது நாங்கள் என்னவாக இருக்கிறோம் என்பதை கண்டுபிடிக்கவும்!”

கண்மூடப்பட்ட குழந்தை அவர்களுடைய எந்த உயரத்திலிருந்து அவர்களது குரல் கேட்கிறது என்பதை பொருத்து அவர்கள் குள்ளமாக உள்ளார்களா அல்லது உயரமாக உள்ளார்களா என்பதை கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். இவ்வாறு ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு சுற்றில் கண்மூடப்பட்டு அந்நிலையை கண்டுபிடிக்க வேண்டும்.

**ஏ. வண்ணமிடுதல்: வரைபடம் 9**

**உ. முடிவு பிரார்த்தனைகள்**

# பாடம் 10

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

ஆரம்ப பிரார்த்தனைகளுக்கு பிறகு, சென்ற பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரார்த்தனையை தொடர்ந்து மனனம் செய்யவும்.

**ஆ. பாடல்கள் (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)**

<u>நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே</u>

நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்
எந்தன் சிரசில்
கருணை மகுடத்தை ஏற்றி வைத்ததற்கே
என்றும் அது ஒளி வீசும், நான் நன்றியுடன் வாழ்ந்திடவே
நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்

நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்
எந்தன் இதயத்தில் அன்பையும் அறிவையும் இட்டு வைத்ததற்கே
என்றும் அது வளர்ந்திடுமே. நான் நன்றியுடன் வாழ்ந்திடவே
நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்

நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்
உண்மை ஒளியால்
என் கண்களையே
ஒளிர வைத்ததற்கே
என்றும் உந்தன் அருளாசியே,
நான் நன்றியுடன் வாழ்ந்திடவே
நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்
நன்றியுடன் போற்றுகிறேன் பிரபுவே, நன்றியுடன் போற்றுகிறேன்

### இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

மனனம் செய்யப்படுவதற்கான புதிய மேற்கோள் பின்வரும் வழியில் உங்களுடைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படலாம்:

> பரிசுகளில் மிகச் சிறிய பரிசினை நாம் பெற்றாலும் கூட, நாம் அதனை வழங்கியவருக்கு நன்றி கூறுகிறோம். அப்படியென்றால், நமக்கு எண்ணிலடங்கா பரிசுகள் மற்றும் ஆசீர்வாதங்களான - நம்மி பார்த்துக் கொள்ளும் கவனமிக்க கால்கள், நம்மை நேசிக்கும் இதயங்கள், மற்றும் நாம் வளர்ந்து முன்னேற அவர் நமக்காக உருவாகியிருக்கும் அனைத்தையும் கொடுத்ததற்காக நாம் இறைவனுக்கு எந்தளவு நன்றியுடன் இருக்க வேண்டியிருக்கும். இறைவன் தமது அருட்கொடைகளை நம்மீது பொழிந்தமைக்காகவும், நமது உள்ளங்களை அவரது அன்பினால் வழிந்தோடச் செய்தமைக்காகவும் நாம் அவருக்கு நன்றியுடன் இருக்க வேண்டுமென்று அப்துபல் பஹா நமக்கு கூறுகிறார். கஷ்டமான வேளைகள் உட்பட, நாம் எல்லா வேளைகளிலும் இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இறைவனுக்கு நன்றி செலுத்துவதென்பது நாம் மேன்மேலும் அவரது எல்லையற்ற அருட்கொடைகளைப் பெறச் செய்கின்றது. பின்வரும் மேற்கோளை மனனம் செய்யலாம்:
>
> **“நீங்கள் மனமகிழ்வுடனும், மனநிறைவளிக்கும் திருப்தியுடனும் இருந்து, இறைவனுக்கு நன்றி கூற எழுவீர்களாக, அதனால் நன்றியளிப்பானது அருளின் அதிகரிப்புக்கு உகந்ததாயிருக்கக்கூடும்.”[110]**

*எழு*

1. சல்மா தனது பாட்டி நீண்ட நாள் சுகமின்மைக்கு பிறகு, நடப்பதற்காக படுக்கையில் இருந்து எழுவதை பார்த்து மகிழ்ச்சியடைந்தாள்.

2. குழந்தைகள் ஒவ்வொரு காலையும் பிரார்த்தனைகளை கூறுவதற்காக விடியற்காலை எழுகிறார்கள்.

*உகந்ததாயிரு*

1. நதியா எப்போதும் சுத்தமாக இருப்பார். ஆன்மீக வளர்ச்சிக்கு சுத்தம் முக்கியமானது என்பதை அவர் அறிந்துள்ளார். சுத்தம் ஆன்மீகத்திற்கு உகந்ததாயிருக்கிறது.

2. செஃப் அவர்களுடைய குடும்பம், முக்கியமான குடும்ப விவகாரங்களைப் பற்றி அடிக்கடி பேசுவார்கள். அவர்கள் ஒன்றாக கலந்துரையாடுவதால், அவர்கள் நல்லிணக்கத்துடன் வாழ முடிகின்றது. கலந்துரையாடல். நல்லிணக்கத்திற்கு உகந்ததாயிருக்கிறது.

*அதிகரிப்பு*

1. சென்ற வருடம், மரியாவின் பள்ளியில் ஐந்து ஆசிரியர்கள் மட்டுமே இருந்தார்கள். இந்த வருடம் எட்டு ஆசிரியர்கள் உள்ளனர். பள்ளியின் மூன்று ஆசிரியர்கள் அதிகரித்தனர்.

2. ஷாயான் ஒரு மகிழ்ச்சியான பையன், எப்போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவுகின்றானோ அப்போது அவனது மகிழ்ச்சி வளர்கிறது. அவன் மற்றவர்களுக்கு சேவையாற்றும் போது அவனது மகிழ்ச்சி அதிகரித்தது.

## ஈ. கதை

ஒரு நாள், புனித நிலத்தில் அப்துல் பஹாவை காண்பதற்காக ஓர் செழுமையான பெண்மணி வெகுதொலைவிலிருந்து வந்தார். அவர் தனது சிரு சிரு பிரச்சனைகளை, ஒன்றன்பின் ஒன்றாக, நீண்ட வரிசையில் எடுத்துரைக்க ஆரம்பித்தார். அப்துல் பஹா அதனை பொருமையுடனும் கனிவுடனும், சிரிது நேரம். அடுத்த சந்திப்பிற்க்காக அவர் அழைக்கப்படும் வரை கேட்டார். இருப்பினும், அவர் செல்வதற்கு முன்னால், ஜன்னலுக்கு வெளியே நடந்துகொண்டிருக்கும் ஒரு நன்மனிதரை காண்பித்தார். " அங்கு சென்றுகொண்டிருக்கும் நபரை தங்களை காண்பதற்க்காக உள்ளே வரவழைக்க இருப்பதாகக்" கூறினார். " அவரது பெயர் மிர்சா ஹைதர் அலி. அவர் பூமியின் மீது நடக்கிறார் ஆனால் சொர்க்கத்தில் வாழ்கிறார்," என அப்துல் பஹா விவரித்தார். " அவர் பல பிரச்சனைகளை சந்திதுள்ளார், அவைகளைப் பற்றி உங்களிடம் கூறுவார் என்றார்."

மிர்சா ஹைதர் அலி உண்மையாகவே பல பிரச்சனைகளை சந்திதுள்ளார். அவர் பெர்சியாவிலிருந்து வந்தவர், அங்கு பஹாய்களை நியாயமற்ற முரையிலும் கொடூரமாகவும் நடத்தப்பட்டனர். சிலர் கைதுசெய்யப்பட்டு தவறாக சிறைபடுத்தப்பட்டனர்; மற்றவர்கள் அங்குள்ள மக்களின் வெருப்பினாலும் கோபத்தினாலும் அடிக்கப்பட்டனர். மிர்சா ஹைதர் அலி அவரது வாழ்வில் எதிர்கொண்ட அனைத்து இன்னல்களைப் பற்றியும் நீங்கள் கேள்விப்படுகையில் உங்களது இதயத்தை வறுத்தமுறச் செய்யக்கூடும்.

தற்போது, அப்துல் பஹா வெளியே சென்று அவரது விருந்தினரை சந்திப்பதற்காக மிர்சா ஹைதர் அலி அவர்களை உள்ளே அழைத்து வந்தார். அப்பெண்மணிக்கு அவரை அறிமுகப்படுத்தியபின் அப்துல் பஹா அங்கிருந்து கிளம்பினார். உடனடியாக மிர்சா ஹைதர் அலி மிகுந்த மகிழ்ச்சியுடனும் பணிவுடனும் நாம் வாழும் அற்புதமான தருணங்களையும் மற்றும் வரவிருக்கும் அனைத்து ஆசிர்வாதங்களையும் எடுத்துரைக்க ஆரம்பித்தார். அவ்விருந்தினர் சிறிது நேரம் கவனித்து, பின்பு, பொருமையிழந்து, இடையில் குறுக்கிட்டு இவ்வாறு கூறினார், " ஆனால் அப்துல் பஹா நீங்கள் உங்களது பிரச்சனைகளைப் பற்றி சொல்வீர்கள் எனக் கூறினாரே." மிர்சா ஹைதர் அலி அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்து, " பிரச்சனைகளா?" என பதிலளித்தார். " ஏன் அம்மா, நான் பிரச்சனைகளை சந்தித்தித்ததே இல்லையே, என்ன பிரச்சனைகள் என எனக்கு தெரியவில்லை என்றார். நிச்சயமாக, மிர்சா ஹைதர் அலி மிகுந்த இன்னல்களை அனுபவித்திருந்தாலும், அவைகள் அவரது மகிழ்ச்சியினை தடுத்திராது என்பதும் மற்றும் அவரது வாழ்வில் கடவுள் அவருக்கு கொடுத்த எல்லா ஆசிர்வாதங்களை மட்டுமே அவர் கண்டு அதற்காக நன்றியுடன் இருப்பார் என்பதும் அப்துல் பஹாவிற்கு தெரியும்.

## உ. விளையாட்டு : "விரைவான தூண்டுவிசை"

மாணவர்கள் கைகளை பிடித்துக் கொண்டு வட்டமாக நிற்க சொல்லி அவர்களைக் கேட்டுக் கொள்ளவும். முதலில், அவர்களின் இடது கைகளை அழுத்தி பிறகு அவர்களது வலது கைகளை அழுத்தி பழக்க சொல்லுங்கள். பிறகு, அவர்கள் குழு முழுக்க "தூண்டுவிசையை" அனுப்ப

போவதாக அவர்களுக்கு விளக்குங்கள். ஒரு குழந்தை தமதருகே உள்ள மற்றொரு குழந்தையின் கைகளை அழுத்தி, அடுத்த குழந்தைக்கு சிக்னல் கொடுக்க வேண்டும், அக்குழந்தையும் அடுத்த குழந்தைக்கு அதனை வழங்கி, அடுத்தடுத்து அழுத்தி, இவ்வாறு அது முதல் குழந்தைக்கு திரும்பும் வரை விளையாட்டு தொடர வேண்டும். இதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டது என்பதை குறித்துக் கொண்டு, மேன்மேலும் வேகமாக சிக்னல் அனுப்ப சவாலிடப்படலாம். இந்த அடிப்படை விளையாட்டைக் கற்றுக் கொண்டவுடன் நீங்கள் சிக்னலை மாற்றுத்திசையில் அனுப்ப அல்லது ஒவ்வொரு சிக்னலுக்கும் அழுத்தங்களை அதிகரிக்க நீங்கள் அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 10**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 11

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

**ஆ. பாடல்கள் (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)**

<u>நல்லதை நான் காணுவேன்</u>

சீர்சிறப்பு என்பதே என் இலக்கு – ஆனால் சென்றடையும் தூரமும் நீண்டிருக்கு
செல்லும் நாளில் நல்லவை நான் காண செய்யும் அது உதவி என் வழக்கு – ஆக
நீ செய்யும் தவறை நான் கண்டால்,
அதை நான் இந்த பாடலில் பாட மாட்டேன்
நண்பர்களிடமும் கூற மாட்டேன், நானே அதனை நினைக்க மாட்டேன்
உன்னில் நல்லதை நான் காணுவேன் – 2
எனக்கென்ன செய்ய வேண்டும் நீ என,
நான் நினைப்பது போல்
உனக்கு நான் செய்திட நீ விரும்பும் நிலை நானறிவேன்
என்னில் நல்லதை இறைவன் காண்கிறார் -2
அடுத்தவர் செய்யும் சிறு தவறை,
நான் மறைத்திடும் போது
நான் செய்யும் தவறை இறைவன் மறைப்பார் நம்புகின்றேன்
உன்னில் நல்லதை நான் காணுவேன் – 2
அப்துல்பஹாவின் விவேகம் பெரிது,
அவர் உன் கண்ணுள்ளே இதயத்தைப் பார்ப்பார்
பிழையேதும் அங்கே இருந்திடக் கண்டால் , பலம் தர ஒரு வழி அவரும் காண்பார்

உன்னிடம் தவறை நானும் கண்டால், எனக்கினி தெரியும் நான் செய்வது
யாரிடமும் சென்று அதைக் கூற மாட்டேன்
என்னிடமும் சொல்லிக் கொண்டு இருக்கவும் மாட்டேன்
யாரிடமும் சென்று அதைக் கூற மாட்டேன்
என்னிடமும் சொல்லிக்கொண்டு இருக்கவும் மாட்டேன்
உன்னில் நல்லதை நான் காண்கிறேன் -4

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

பின்வரும் கருத்துக்களை குழந்தைகளுடன் பகிர்ந்துக் கொண்டு, பாடத்தின் கருப்பொருளை, இன்றைய மேற்கோளினையும் அறிமுகப்படுத்துமாறு ஆலோசிக்கப்படுகிறது:

**மன்னிப்பதென்பது இறைவனுடைய பண்புகளில் ஒன்றாகும். ஒருவரை ஒருவர் மன்னித்துக் கொள்ளுமாறு அப்துல்பஹா நமக்கு கூறினார். நாம் மன்னிக்கும் கண்களை கொண்டு பார்க்க வேண்டும், மற்றவர்களின் குறைகளை கண்ணுறக் கூடாது. அப்துல்பஹாவின் உதாரணத்தை நாம் பின்பற்றினால், நாம் நமது நண்பர்கள் தவறு செய்யும் போது மட்டுமல்ல, நம்மிடம் கொடுமையாக நடந்துக் கொள்பவர்களையும் நாம் மன்னிப்போம். மன்னிப்பதில் நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு துணையாக, பின்வரும் மேற்கோளினை நாம் மனனம் செய்வோமாக:**

**“இறைவனுடைய நல்லாதரவினைப் பெற்றவர்களின் உள்ளங்களுக்கு மகிழ்வூட்டக்கூடியதான மன்னிக்கும்தன்மையும் கருணையும் உமது அலங்காரமாக இருக்கட்டும். . .”**[111]

*கருணை*

1. மழை விடாமல் தினம் தினம் பெய்து கொண்டே இருந்தது. முழு கிராமமும் வெள்ளத்தால் மூழ்கியிருந்தும், மழை நிற்கவில்லை. மழை கருணை காட்டவேயில்லை.

2. இறைவனிடம் நாம் பிரார்த்தனை செய்யும் போது, அவர் நமது தவறுகளை மன்னிக்கிறார். அவர் நம்மீது கருணை காட்டுகின்றார்.

*மகிழ்ச்சியுறச்செய்*

1. உர்சுலாவிற்கு உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தது. அவருடைய நண்பர் எல்ஸி அவருக்காக மலர்களைக் கொண்டு வந்து, அவருடன் நீண்ட நேரம் அமர்ந்து, கதைகளைக் கூறி பேசிக் கொண்டிருந்தார். எல்ஸியின் வருகை உர்சுலாவிற்கு சற்று உற்சாகமளித்தது. அவருடைய விஜயம் உர்சுலாவை மகிழ்ச்சியுறச் செய்தது.

2. பணியின் காரணமாக அருகாமையிலுள்ள ஒரு நகரத்திற்கு சென்ற தமது கணவரிடமிருந்து, திருமதி சான்சேஸ் ஒரு நீண்ட கடிதத்தைப் பெற்றார். தமது கணவர் விரைவில் இல்லம் திரும்புவார் என்ற நற்செய்தியை அக்கடிதம் கொண்டு வந்தது. அச்செய்தியை திருமதி சான்சேஸ் அவர்களை மகிழ்ச்சியுறச் செய்தது.

*நல்லாதரவு பெற்ற*

1. ஆசிரியர் தமது மாணவர்கள் அனைவரையும் நேசித்து, ஒவ்வொருவருக்கும் விசேஷ கவனம் கொடுத்தார். அவர்கள் அனைவரும் அவரது நல்லாதரவினைப் பெற்றனர்.

2. ஜேம்ஸ் பள்ளியில் எல்லா பாடங்களிலும் விருப்பம் கொண்டிருந்தார், ஆனால் அறிவியலில் மிகச் சிறந்து விளங்கினார். அவர் அறிவியலிற்கு மிகுந்த நல்லாதரவு காட்டினார்.

**ஈ. கதை**

மாஸ்டர் அக்கா நகரில் வாழ்ந்த நாட்களில், பஹாய்களுக்கு தீங்கு செய்ய அடிக்கடி முயற்சி செய்த ஆளுநர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் அவர் பஹாய்களுடைய வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளையே அழிப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்தார்: பஹாய்களுடைய கடைகள் அனைத்தையும் மூடிவிட்டு அவற்றின் சாவிகளைத் தம்மிடம் கொண்டு வந்து தருமாறு அவர் தமது காவலாளிகளுக்கு உத்தரவிட்டார். ஆனால் அப்துல்பஹா ஆளுனரின் திட்டத்தை அறிந்துக் கொண்டு அடுத்த நாள் தங்களுடைய கடைகளைத் திறக்க வேண்டாம் என்று நண்பர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இறைவன் எதனை விதிக்கவுள்ளார் என்பதைக் காணுமாறு அவர்களைப் பொறுத்திருந்து பார்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

கடைகள் திறக்கப்படாததால் தாம் கேட்டிருந்த சாவிகளை காவலாளிகள் கொண்டு வரமுடியவில்லை என்பதைக் கேட்ட ஆளுநரின் ஆச்சரியத்தைக் கற்பனை செய்து பாருங்கள். ஆனால் தாம் அடுத்து என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்திப்பதற்கு முன் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அந்நகரின் ஆளுனர் பதவியிலிருந்து அவரை பணி நீக்கம் செய்யும் தந்தி ஒன்று அவருடைய மேலதிகாரிகளிடமிருந்து வந்தது. அதனால் பஹாய்களின் கடைகள் பாதுகாக்கப்பட்டன.

அந்த முன்னாள் ஆளுனர் அக்கா நகரை விட்டு டெமாஸ்கஸ் என்ற மற்றொரு நகரத்திற்குச் செல்ல கட்டளையிடப்பட்டார். அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் விரைவாகவும் தனியாகவும் செல்ல வேண்டியிருந்தது. தன்னுடைய குடும்பத்துக்கு என்னவாகும்? அரசாங்கத்தின் ஆதரவினை இழந்த ஒருவருக்கு யார் உதவுவார்? இந்த செய்தியைக் கேட்ட மாஸ்டர் அவரைப் பார்க்கச் சென்றார். சந்தோஷமிழந்த அம்மனிதரின் மீது அவர் எப்போதுமே சமயத்தின் ஓர் எதிரியாக இருந்ததில்லைப் போல் கருதி, மிகுந்த கனிவினைப் பொழிந்தார். அம்மனிதரின் கடந்த கால தவறுகளை அவர் ஒரு போதும் கூறவே இல்லை. மாறாக, சாத்தியமான எந்த வழியிலாவது அவருக்கு உதவி செய்ய முன்வந்தார். முன்னாள் ஆளுனர் தம்முடைய மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுச் செல்வதைப் பற்றி கவலைப்பட்டிருந்தார். இவ்விஷயத்தை தாம் கவனித்துக் கொள்வதாக அப்துல்பஹா அவருக்கு உறுதியளித்தார். பிறகு அவர் ஒரு சவுகரியமான பயணத்திற்காக ஏற்பாடு செய்து, அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் செல்வதற்காக நம்பிக்கை வாய்ந்த ஒரு நபரை அனுப்பி, அனைத்து செலவுகளையும் தாமே ஏற்றுக் கொண்டு, அந்த குடும்பத்தை டெமாஸ்கஸ் நகருக்கு வழியனுப்பி வைத்தார்.

முன்னாள் ஆளுனர் தன்னுடைய குடும்பத்துடன் மீண்டும் இணைந்தபோது மகிழ்வடைந்தார். நன்றி நிறைந்த ஓர் உள்ளத்துடன், அவர் தன் குடும்பத்துடன் பயணம் செய்து வந்தவரிடம் திரும்பி, பயணத்திற்கு ஏற்பட்ட செலவு பற்றி கேட்டார். அது அப்துல்பஹா அவர்களினால் கொடுக்கப்பட்டது என அம்மனிதர் விளக்கினார். பிறகு பயணத்தின் போது அம்மனிதர் காட்டிய கனிவுக்காகவும் தளரா ஊக்கத்திற்காகவும் பரிசு ஒன்றினை வழங்கினார். ஆனால் அவர் அப்பரிசினை ஏற்க மறுத்தார்; தாம் அப்துல்பஹாவிற்கு கீழ்படிந்தே அங்கு வந்ததாகவும் தன்னுடைய சேவைகளுக்காக தாம் எதுவும் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றும் கூறினார். முன்னாள் ஆளுனர் பிறகு அவரை தமது இல்லத்தில் தமது விருந்தினராக அன்றிரவு தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அக்கா நகரத்திற்கு எவ்வித தாமதமுமின்றி திரும்பி வருமாறு கூறிய மாஸ்டர் அவர்களின் கட்டளைகளைப் பின்பற்ற தாம் ஆவலுடன் இருப்பதாக அம்மனிதர் கூறினார். அப்துல் பஹா அவர்களுக்கு தாம் கடிதம் ஒன்றை எழுதும் வரையாவது அங்கு இருக்குமாறு முன்னாள் ஆளுனர் அம்மனிதரைக் கேட்டுக் கொண்டார். இதனை அம்மனிதர் ஏற்று, அக்கா நகரத்திற்குத் திரும்பியதும் அக்கடிதத்தை மாஸ்டர் அவர்களிடம் வழங்கினார். அக்கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: “ஓ அப்துல்பஹா, என்னை மன்னிக்குமாறு உங்களை மன்றாடுகிறேன். நான் புரிந்துக் கொள்ளவில்லை. நான் உங்களை அறியாமலிருந்தேன். நான் உங்களுக்கு பெரிதும் தீங்கிழைத்துள்ளேன். நீங்கள் மிகுந்த நன்மையை எனக்கு பரிசாக அளித்துள்ளீர்கள்.”

**உ. விளையாட்டு: மக்கள் முன் மக்கள்**

குழந்தைகள் கைதட்டிக் கொண்டு, “மக்கள் முன் மக்கள்” என்று கூறிக்கொண்டு இங்கும் அங்குமாக நடந்துக் கொண்டிருக்குமாறு கூறுங்கள். நீங்கள் “முதுகு முன் முதுகு” என்று அழைத்தவுடன், அவர்கள் நடப்பதை நிறுத்திவிட்டு இருவருடைய முதுகுகள் ஒன்றை ஒன்று நோக்கிய வண்ணம் நின்றுவிட வேண்டும். உங்களுடைய சிக்னல் கேட்டதும் அவர்கள் மீண்டும் நடக்க ஆரம்பித்து கைதட்டிக்கொண்டு. “மக்கள் முன் மக்கள்” என்று கூறிக்கொண்டு செல்கின்றனர். “நேருக்கு நேராக” என்று நீங்கள் அழைத்தவுடன் இருவர் இருவராக நேருக்கு நேர் பார்த்து, தலையை குனிந்து நின்று விடுகின்றனர். இந்த இரண்டு விளையாட்டுக் கட்டளைகள் பலமுறை கொடுக்கப்பட்டு விளையாட்டு தொடரலாம். “முட்டி முன் முட்டி”. “முழங்கை முன் முழங்கை” என்பது போன்ற மற்ற விளையாட்டுக் கட்டளைகளும் வழங்கப்படலாம்.

**உ. வண்ணமிடுதல்: வரைபடம் 11**

**ஊ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 12

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

எப்போதும் போல, வகுப்பை ஆரம்ப ப்ரார்தனைகளுடன் தொடங்கலாம். பின்னர் குழந்தைகள் கடந்த மூன்று பாடங்களாக மனனம் செய்து கொண்டிருக்கும் பிரார்த்தனையை

அவர்களுடன் மீளாய்வு செய்யலாம். அனைவரும் இதனை நன்றாக கூறுவதை நீங்கள் நிச்சயிக்க வேண்டும், ஏனெனில் பாடம் 13ல் அவர்கள் மனனம் செய்வதற்கான புதிய பிரார்த்தனையை நீங்கள் அறிமுகப்படுத்தவீர்கள்.

**ஆ. பாடல்கள் (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)**

<u>சூரியனை விட ஒளி மிகுந்தது</u>

வாய்மையது சூரியனை விட ஒளி மிகுந்தது – 2
வாய்மைக் கொண்டு நாவை நன்கு
அழகு செய்யுங்கள் மக்களே
வாய்மைக் கொண்டு நாவை நன்கு
அழகு செய்யுங்கள்
வாய்மையது சூரியனை விட ஒளி மிகுந்தது - 2
நேர்மை ஒவ்வொரு ஆன்மாவையும் அழகு படுத்துமே – 2
நேர்மை அந்த சூரியனை விட ஒளி மிகுந்தது
நேர்மை அந்த சூரியனை விட ஒளி மிகுந்தது
வாய்மை அந்த சூரியனை விட ஒளி மிகுந்தது
நேர்மை ஒவ்வொரு ஆன்மாவையும் அழகு படுத்துமே

**இ. மேற்கோள்களை மனனம் செய்தல்**

இந்த பாடத்தின் கருப்பொருளான, நேர்மை பற்றியும், குழந்தைகள் மனனம் செய்யவிருக்கும் மேற்கோளை வழங்க உங்கள் மாணவர்களுடன் கீழுள்ள சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளலாம்.

> பல்வேறு வடிவங்கள் மற்றும் நிறங்கள் கொண்ட மலர்களால் தோட்டங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இளவேனிற் காலத்தில், நறுமணமிக்க மலர்களால் கனிகொடுக்கும் மரங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நம்மை நாம் தூய கரையில்லா ஆடைகளை கொண்டு அலங்கரித்து கொள்கிறோம். இது போன்ற அலங்காரங்கள் அழகை உருவாக்குகின்றன. எனினும், லௌகீக பொருட்களை காட்டிலும், மனிதர்களை அழகாக்கக்கூடியது, நமது இதயங்கள் மகிழ்ச்சியளிக்கக்கூடியது ஆன்மீக பண்புகளின் பிரகாசமேயாகும். நம் வாழ்வுகளை அலங்கரிக்கக்கூடிய மிகுவும் அழகான பண்புகளின் ஒன்று, நேர்மையாகும். நேர்மையினைக் கொண்டு நம்மை நாம் அலங்கரித்துக் கொள்ளும் போது, மற்றவர்களின் அனுமதியின்றி மற்றவர்களுக்குரிய பொருட்களை நாம் எடுக்க மாட்டோம், நாம் எவரையும் ஏமாற்ற மாட்டோம் அல்லது மற்றவர்களை எதையாவது செய்யவைப்பதற்காக தந்திரமாக செயல்பட மாட்டோம். நேர்மையெனும் இந்த நற்பண்பை நாம் நினைவில் வைத்துக்கொள்ளும் பொருட்டு, பஹாவுல்லாவின் இந்த திருவாசகத்தை மனப்பாடம் செய்வோமாக:
>
> **“மக்களே, வாய்மையினைக் கொண்டு உங்கள் நாவுகளை அழகுபடுத்துவீராக, நேர்மையேனும் ஆபரணத்தைக் கொண்டு உங்கள் ஆன்மாக்களை அலங்கரிப்பீராக.”**[112]

*அழகுபடுத்துதல்*

1. மலித் தோட்டத்தில் அழகிய ரோஜா செடிகளை நட்டான். தோட்டத்தை ரோஜாக்கள் அழகுபடுத்தின.
2. சுனிலுக்கு பொய் பேசும் பழக்கம் இருந்தது, ஆனால் இப்போது அவன் உண்மையை மட்டும் பேசுகிறான். வாய்மையினைக் கொண்டு சுனில் தனது நாவினை அழகுபடுத்தினான்.

**ஈ. கதை**

*அப்துல் பஹா தனது வாழ்நாளின் கடைசி காலகட்டத்தின் போது, உலகின் பல இடங்களுக்கு பயணம் செய்தார். அவர் எங்கு சென்றாலும், வாழ்வின் அணைத்து விதமான மக்களையும் - அதாவது கூலி தொழிலாளர்கள் மற்றும் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் என அனைவரையும் அவர் சந்திப்பார் - மற்றும் அனைவரையும் சவுகரியமாக உணர வைக்க எல்லாவற்றையும் செய்வார். ஒரு நாள் எகிப்தில், ஒரு உயர் அரசாங்க அதிகாரியை மதிய உணவிற்கு அழைத்தார். அந்த அதிகாரியை அழைத்து வர ஒரு வண்டியை வாடகைக்கு எடுத்தார், ஏனெனில் இது மாதிரியான சவுகரியத்திற்கு அந்த அதிகாரி பழக்கப்பட்டிருந்தார்.*
*அந்த பயணம் நெடு தூரமில்லை., விரைவில் அந்த மதிய உணவு இடத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். அந்த வண்டி ஓட்டுநர் தனது ஊதியத்திற்காக அப்துல் பஹாவை அணுகிய போது, அவர் அந்த பயணத்திற்கு நியாயமாக கேட்க வேண்டிய விலைக்கு அதிகமாக கேட்டார். அந்த ஓட்டுநர் நியாயமில்லால் நடப்பதை அப்துல் பஹா தெரிந்திருந்தார். அவருக்கு என்ன கொடுக்க வேண்டுமோ அதை மட்டும் கொடுத்து விட்டு, அவர் கிளம்ப தயாரானார்.*

*அந்த ஓட்டுநர் விவாதிக்க தயாரான போது, அப்துல் பஹா மிகவும் உறுதியுடன் நின்றார். அந்த ஓட்டுநர் நியாயமாக நடந்திருந்தால், அவருக்கு நல்ல ஒரு தொகையை அதிகமாக வெகுமதியாக கொடுத்திருப்பார், என்று அப்துல் பஹா கூறினார்.பிறகு, மாஸ்டர் அந்த இடத்தை விட்டு நடந்து சென்றார், அந்த ஓட்டுநர் தனது செயல்களை எண்ண ஆரம்பித்தார்.*

**உ. விளையாட்டு “சதுரம், வட்டம், முக்கோணம்”**

குழந்தைகளுக்கு சில வடிவங்களின் பெயர்கள் தெரியும் என்று நினைக்கிறோம், உதாரணத்திற்கு "சதுரம்", "வட்டம்", மற்றும் "முக்கோணம்". முதலில் குழந்தைகளுடன் இந்த வடிவங்களை மீளாய்வு செய்து, ஒவ்வொருவரும் அந்தந்த வடிவத்தை சரியாக கண்டுபிடிப்பதை நிச்சயித்து கொள்ளுங்கள். பிறகு ஒரு பலகையில் இந்த மூன்று வடிவங்களின் வரிசை ஒன்றை வரைந்து அதனை குழந்தைகளுக்கு காட்டி, அதனை கவனமாக பார்க்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள், உதாரணமாக வடிவங்களின் வரிசை வட்டம், வட்டம், சதுரம் என்பது போல இருக்கலாம். பிறகு பலகையை கீழே வைத்து விட்டு, அந்த வரிசையை உரக்க கூறுமாறு குழந்தைகளிடம் கூறுங்கள். முன்னதாகவே, நீங்கள் பல வடிவ வரிசைகளை கொண்ட பலகைகளை தயாரித்து, அவற்றை குழந்தைகளிடம் காட்டி, பல முறை இந்த பயிற்சியை செய்ய நீங்கள் முயற்சிக்க வேண்டும். ஒரு வேளை குழந்தைகளுக்கு கடினமாக இருந்தால்,

அவர்களுக்கு இரண்டு வடிவங்கள் கொண்ட பலகையை காண்பியுங்கள், ஒரு வேளை மூன்று வடிவங்கள் மிகவும் எளிமையாக இருந்தால், நான்கு அல்லது ஐந்து வடிவங்களின் வரிசையை கொண்ட பலகையை காண்பியுங்கள்.

பிறகு நீங்கள் வடிவங்களின் வரிசையை பலகையில் காண்பிக்காமல், வாய்வழியாக கூறலாம், உங்கள் மாணவர்களை பொறுத்து இரண்டு, மூன்று அல்லது நான்கு வடிவங்களை கூறி, உங்கள் குழந்தை ஒருவரை திரும்ப கூறும் படி சொல்லலாம். பல முறை பல குழந்தைகளுடன் இதனை செய்த பிறகு, நீங்கள் இந்த விளையாட்டை இன்னும் கடினமாக்க குழந்தைகளை வடிவங்கள் வரைய சொல்லி, நீங்கள் அதனை உரக்க கூறலாம்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 12**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 13

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

இந்த பாடம் மற்றும் அடுத்த மூன்று பாடங்களில், குழந்தைகள் கீழுள்ள பிரார்த்தனையை மனப்பாடமாக கூறுவதற்காக முயற்சிப்பார்கள். பகுதி 13ல் கூறப்பட்டுள்ளபடி, உங்களது நினைவிலிருந்து ஒரு ஆரம்ப பிரார்த்தனையை கூறிய பிறகு, உங்கள் மாணவர்களில் சிலர் பிரார்த்தனையை கூறிய பிறகு இந்த புதிய பிரார்த்தனையை நீங்கள் அறிமுகம் செய்யலாம்.

**“பிரபுவே! இந்த இளம் விதையை தங்களது பன்மடங்கான கொடைகள் எனும் தோட்டத்தில் பயிரிடுவீராக, தங்களது அன்பு கருணையெனும் ஊற்றிலிருந்து நீரளிப்பீராக மற்றும் தங்களது சலுகை மற்றும் கருணை எனும் பொழிவின் மூலம் ஒரு நல்ல செடியாக வளர அதற்கு ஆசீயளிப்பீராக.**

**நீரே வலிமையும் சக்தியுமுள்ளவர்”[113]**

**ஆ. பாடல்கள் (முன்சென்ற பாடல்களின் மீளாய்வை சேர்த்து)**

<u>நியாயமாய் இரு</u>

நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் பிறருடன் நடந்திடும் போது
நம்பிக்கைக் கொள்வார் சகோதரர் எல்லாம்
உலகத்தின் பொருட்களை சமமாய் பகிர்ந்தால்
ஒளிர்ந்திடும் நீதியும் பூமியில் காண

நியாயமாய் பிறருடன் நடந்திடும் போது
நம்பிக்கைக் கொள்வார் சகோதரர் எல்லாம்
உலகத்தின் பொருட்களை சமமாய் பகிர்ந்தால்
ஒளிர்ந்திடும் நீதியும் பூமியில் காண
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நலனும் உதவியும் நீ வழங்க
நடக்கிறாய் நீ குருநாதரின் பாதை
வார்த்தை செயல்களில் நீதி விவேகம்
வரச்செய்யும் மகிழ்ச்சியை இதயத்திலெல்லாம்
நலனும் உதவியும் நீ வழங்க
நடக்கிறாய் நீ குருநாதரின் பாதை
வார்த்தை செயல்களில் நீதி விவேகம்
வரச்செய்யும் மகிழ்ச்சியை இதயத்திலெல்லாம்
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
யாவரும் நலன் பெற பாடுபடு

### இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இந்த பாடத்தில், குழந்தைகள் இரக்கம் என்ற பண்பு தொடர்பான மேற்கோளை கற்கவுள்ளனர், அதனை நீங்கள் கீழ்வரும் வழியில் அவர்களுக்கு வழங்கலாம்:

இறைவன் அதி இரக்கமிக்கவரும், சர்வ கருணைமிக்கவரும் ஆவார். இக்கட்டான வேளைகளில், நாம் நமது உள்ளங்களை அவரிடம் திருப்பி, நமக்கு ஆறுதலளித்து, நமக்கு பலமளிக்குமாறு அவரை மன்றாடி கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறே, நாமும் மற்றவர்களுக்கும் இரக்கம் காட்ட வேண்டும். நமக்கு தெரிந்த ஒருவர் ஒரு பிரச்சனையுடன் இருந்தாலோ அல்லது கவலையுடன் இருந்தாலோ, நாம் அவருடைய நிலையை உணர்ந்து, நம்மால் இயன்ற அளவு அவருக்கு உதவி புரியவேண்டும். தன்னை நோக்கி கற்களை வீசி எரிபவர்கள் உட்பட. எல்லோருக்கும் தனது கனிகளை வழங்கிடும் மரத்தைப் போல், நாம் எல்லா சூழ்நிலைகளிலும் எல்லோரிடமும் இரக்கமும் கனிவும் காட்ட வேண்டும். தன்னுடைய வாழ்வே துன்பங்களால் நிறைந்திருந்த போதிலும், அப்துல் பஹா எல்லா வேளைகளிலும் எல்லா மக்களுக்கும் இரக்கம் காட்டினார். நாம் இரக்கம் காட்டுபவர்களாக திகழ்ந்திட நாம் எடுக்கும் முயற்சிகளில் நமக்கு உதவிட அவரது மேற்கோளை மனனம் செய்வோமாக:

**“இறைவனுடைய அரசவையானது ஒப்புரவு மற்றும் நீதி, மற்றும் ஒவ்வொரு வாழும் ஆன்மாவிடம் காட்டப்படும் கருணை, இரக்கம் மற்றும் கனிவு ஆகியவற்றின் மீதும் நிறுவப்பட்டுள்ளது.”**[114]

*நிறுவப்படு*

1. மருத்துவர் ஒருவர் கிராமங்களிலுள்ள குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பற்றி அக்கறை கொண்டிருந்ததால், அவர்களை கவனித்துக் கொள்வதற்காக குழந்தைகள் மருத்துவமனை ஒன்றைத் திறந்தார். மருத்துவமனையானது குழந்தைகளின்பால் அவர் கொண்டிருந்த அன்பினால் நிறுவப்பட்டது.

2. ஜென்னா மற்றும் மெர்சிடீஸ் ஆகியோர் நீண்ட நாட்களுக்கு நண்பர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் எப்போதும் ஒன்றாக சேர்ந்து படித்து, ஒருவர் கற்றுக் கொள்ளும் பயனுள்ள விஷயங்களை மற்றொருவருடன் பகிர்ந்துக் கொள்வார்கள். அவர்களுடைய நட்பானது கனிவு மற்றும் அன்பு ஆகியவற்றின் மீது நிறுவப்பட்டுள்ளது.

*ஒப்புரவு*

1. இராஜ்ஜியத்திலுள்ள அனைவரும் அதன் வளத்திற்காகக் கடுமையாகப் பாடுபட்டனர். பயிர்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்ட பிறகு, அரசர் தன்னுடைய இராஜ்ஜியத்தின் குடிமக்களுடைய குடும்பங்களின் அளவிற்கேற்ப அதனைப் பிரித்துக் கொடுத்தார். அரசர் தமது குடிமக்களை ஒப்புரவுடன் நடத்தினார்.

2. நகராட்சி மன்றமானது அடுத்த கிராமத்திற்கு செல்வதற்கான சாலை ஒன்றினை கட்ட வேண்டியிருந்தது. வயல் நிலத்தை சுற்றியுள்ள இடத்தில் சாலையை அமைக்க அது முடிவெடுத்தது. இவ்வகையில் அந்த புதிய சாலையினால் பலர் பயனடைந்தேதோடு, விவசாயிகளும் கஷ்டப்படவில்லை. நகராட்சி மன்றமானது தனது முடிவில் ஒப்புரவினை வெளிப்படுத்தியது.

*இரக்கம்*

1. லி யாங் தனது நண்பரான மே அவர்கள் மகிழ்ச்சியற்றிருந்ததைக் கண்டு, அவருக்கு ஏதாவது ஒரு வழியில் உதவ முடியுமா என்பதை கண்டறிய, அவரைப் பார்க்கச் சென்றார். தனது தாயார் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருப்பதாக மே அவரிடம் விளக்கினார். லி யாங் கவனமாக கேட்டு மே அவர்களுக்கு ஆறுதல் கூறி, அடுத்த நாள் அவருடன் மருத்துவமனைக்கு செல்ல முன்வந்தார். லி யாங் மே அவர்களிடம் இரக்கம் காட்டினார்.

2. ஒரு நாள் ஷியோரி கிராமபுரத்தில் நடந்துக் கொண்டிருக்கையில், வேலியில் தனது காலைச் சிக்கிக் கொண்ட சிறு ஆடு ஒன்றைப் பார்த்தார். ஷியோரி அந்த ஆட்டின் காலை வேலியிலிருந்து மென்மையாக எடுத்து, அதில் துணிப்பட்டை ஒன்றினை கட்டினார். ஷியோரி அந்த ஆட்டின் மீது இரக்கம் காட்டினார்.

**ஈ. கதை**

*அப்துல்பஹா அவர்கள் மேற்கத்திய நாடுகளில் பயணம் மேற்கொண்டபோது, அவர் விஜயம் செய்த ஒவ்வொரு நகரிலும், அவரைக் காண்பதற்காகவும், அவருடைய*

*உற்சாகமிக்க சொற்களைக் கேட்பதற்காகவும் பல மக்கள் வந்தனர். இளையவர்கள் மற்றும் முதியவர்கள், செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள், அதிகாரிகள் மற்றும் சாதாரண குடிமக்கள் ஆகிய பலவிதமான மக்களை அவர் இரவும் பகலுமாக சந்தித்தார். சிலர் மாஸ்டரின்பால் கொண்டிருந்த மிகுந்த அன்பிற்காக வந்தனர், மற்றவர்கள் அவர் என்ன கூறுகிறார் என்ற ஆவலால் தூண்டப்பட்டு வந்தனர்.*

*ஒரு நாள் மாஸ்டர் அவர்கள் தங்கியிருந்த இல்லத்திற்கு பெண்மணி ஒருவர் வந்து கதவைத் தட்டினார். அப்துல்பஹாவுடன் சற்று நேரம் செலவழிக்க வேண்டும் என்ற உள்ளத்தின் ஆவலைக் கொண்டிருந்த சாதாரண பெண்மணி அவர். கதவைத் திறந்த மனிதர் "மாஸ்டரை சந்திக்க நீங்கள் முன் அனுமதி பெற்றிருக்கிறீர்களா?" என்று வினவினார். தன்னிடம் அனுமதி இல்லை என்று கூறினார் அப்பெண்மணி. அப்படியானால் அவர் அப்துல்பஹாவை சந்திக்க முடியாது, ஏனெனில் அவர் சில மிக முக்கியமான மக்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார் என்று அப்பெண்மணியிடம் கூறப்பட்டது. அப்பெண்மணி சோகத்துடன் திரும்பி வீட்டின் முன் இருந்த படிகளில் இறங்க ஆரம்பித்தார். அவருடைய உள்ளத்தில் நிரம்பிய ஏமாற்றம் தான் என்ன! ஆனால் திடீரென அப்துல்பஹாவிடமிருந்து தூதர் ஒருவர் ஓடி வந்து, அப்பெண்மணியை திரும்பி வரும் படி கூறினார். மாஸ்டர் அவரை சந்திக்க விரும்பினார். சக்தியுடனும் அதிகாரத்துடனும் அவருடைய குரல் இவ்வாறு கூறுவதைக் கேட்க முடிந்தது, "உள்ளம் ஒன்று காயப்படுத்தப்பட்டுள்ளது. விரைவீர், விரைவீர், அவரை என்னிடம் கொண்டு வாரீர்!"*

### உ. விளையாட்டு: "ஒன்றாக"

குழந்தைகளை இருவர் இருவராக பிரித்து, ஒருவர் மற்றொருவரின் பக்கத்தில் நின்று, ஒருவருடைய இடது கால் மற்றொருவரின் வலது காலுடன் கட்டப்பட்ட வேண்டும். இந்த விளையாட்டில் வெற்றி பெற வேண்டுமென்றால், குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் ஒன்றாக சேர்ந்து பணிபுரிய வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்குங்கள். அவ்விருவரும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டும். கிளைகள் அல்லது கற்கள் போன்ற சிறிய இடையூறுகளை அவர்களின் பாதையில் வைத்து, விளையாட்டினை நீங்கள் மேலும் சவால் மிக்கதாக செய்யலாம். இதை பாதுகாப்பான முறையில் செய்ய வேண்டும். வெறுமென நடப்பதைக் காட்டிலும், அவ்விருவரும் தவளைகளைப் போல் குதிக்குமாறு அல்லது குதிரைகளைப் போல் ஓடுமாறும் கேட்டுக் கொள்ளப்படலாம். ஒரு ஜோடி மற்ற எவருடனும் போட்டியிடுவதில்லை என்பதை குழந்தைகளுக்கு விளக்குவது அவசியமாக இருக்கும்.

### ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 13

### எ. முடிவு பிரார்த்தனைகள்

# பாடம் 14

## அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்

வழக்கமான முறையில், நீங்களும் சில மாணவர்களும் ஆரம்ப பிரார்த்தனைகளை கூறி வகுப்பை தொடங்கலாம். குழந்தைகள் சென்ற பாடத்தில் வழங்கப்பட்ட பிரார்த்தனையை தொடர்ந்து கற்கலாம்.

## ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)

### பற்றின்மை எனும் சிறகு

சரணம் :

ஒரு நாள், பறவை வானத்தில் பறந்தது
மகிழ்ச்சி உறுதி முழுவதுமாய்
அவன் வீடு, அந்த சொர்க்கத்தில் பறந்தது

பறக்கும் போது, அவனுக்கு பசி வந்தது
கீழிருக்கும் நீர் களிமண்ணின் பக்கம் திரும்புச்சு
கீழ் அவன்
பொறியில் சிக்கிட்டான்
அவன் ஆசையால்
சிறகு மண்ணால் மூடிக்கொண்டது
பறக்க கணத்ததால்,
வீட்டிற்கு திரும்ப முடியவில்லை

அப்பறவையை போல், நானும் சொர்க்கத்தின் வாசி தான்
அதனால் நான் பூமியை பற்றிக் கொள்ள மாட்டேன்
செல்வங்களை பற்றிக் கொள்ள மாட்டேன்
ஆசைகளை பற்றிக் கொள்ள மாட்டேன்
இறைவனை தவிர வேறெதையும் பற்றிக் கொள்ள மாட்டேன்

ஆகவே நான் பற்றின்மை என்னும் கால்களை கொண்டு நடப்பேன்
பற்றின்மை சிறகு கொண்டு பறப்பேன்
எல்லா பற்றுக்களில் இருந்து விலகி நிற்ப்பேன்
இறைவனை தவிர (மீண்டும்)

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

குழந்தைகள் இந்த பாடத்தின் மைய கருத்தான பற்றின்மை என்ற பண்பு தொடர்பான மேற்கோளை கற்கவுள்ளனர். இதனை கீழ்வரும் வழியில் அவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம்:

நம்முடைய மகிழ்ச்சிக்காகவே இந்த உலகிலுள்ள ஒவ்வொரு நல்ல விஷயத்தையும் கடவுள் படைத்துள்ளார் - நல்ல ஆரோக்கியம், சுவையான உணவுகள், அன்பு மற்றும் நட்பு, இயற்கையின் அழகு, மதியின் சக்தி போன்றவை தான் நமது வாழ்வை மேம்படுத்தி ஆராய்ச்சிகளை கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் துணைசெய்கின்றன. கடவுள் நமக்கு கொடுத்துள்ள அனைத்து அருட்கொடைகளையும் நாம் பயன்படுத்திக் கொண்டு, வாழும் மகிழ்ச்சிக்காக இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இவ்வுலகின் மீது பற்றுடையவர்களாக மாறிவிடாமல் இருப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நமது ஆன்மாக்கள் அனைத்து நேரங்களிலும் சுதந்திரமாக இருக்க வேண்டும்; சுதந்திர மற்றும் வலுவான பறவையைப் போல, புனிதத் தன்மையெனும சுவர்க்கத்தை நோக்கி பறக்க வேண்டும். அதனைச் சுற்றியுள்ள பொருட்களின் மீது பற்றுவைத்துக் கொண்டு உயர பறக்க முடியாமல் தரையிலே இருந்தால் அந்த பறவை எவ்வளவு சோகமடையும். கீழ்வரும் மேற்கோளை மனைம் செய்வோம்:

**“உங்களுடைய உண்மையான அழகு இறைவனின் அன்பிலும் மற்றும் அவரைத் தவிர மற்ற அனைத்திலிருந்தும் பற்றின்மையை கொண்டிருப்பதில் உள்ளடங்கியுள்ளது என்பதை அறிந்துக் கொள்ளுங்கள்...”**[115]

*கொண்டிருத்தல்*

1. விளாடிஸ்லாவ் உண்பதற்காக ஒரு சிக்கன் துண்டையும், சில உருளைக்கிழங்குகள் மற்றும் பச்சை பட்டாணிகளை வைத்திருந்தான். அவனுடைய உணவு சிக்கன் துண்டு, உருளைக்கிழங்கு மற்றும் பச்சை பட்டாணிகளை கொண்டிருந்தன.

2. இந்த வாக்கியத்தில் ஐந்து வார்த்தைகள் உள்ளன. இது ஐந்து வார்த்தைகளை கொண்டிருக்கிறது.

*பற்றின்மை*

1. ஹெல்கி தனது நண்பர்களுடன் நீச்சல் செல்ல விரும்பினான். ஆனால் அவன் தனது தங்கையுடன் மகிழ்ச்சியாக வீட்டில் தங்கியதால், அவனது அம்மா கடைக்கு செல்ல முடிந்தது. ஹெல்கி தனது சொந்த குடும்பத்திற்கு உதவ விரும்பியதால், தனது சொந்த திட்டங்களின் மீது பற்றின்மையுடன் இருந்தான்.

2. பள்ளி வருடத்தின் முடிவில், அஞ்சலி தனது ஆசிரியருக்கு மலர்கள் கொண்டு சென்றால் நன்றாக இருக்கும் என நினைத்தால். அவளது சகோதரி அதற்கு பதில் கேக் செய்து கொண்டு போகும் படி பரிந்துரைத்தால். அஞ்சலி அது நல்ல யோசனை என நினைத்தால். தனது சொந்த யோசனையில் இருந்து அவள் பற்றின்மையுடன் இருந்தால்.

*தவிர*

1. ஒரே ஒரு படிக்காத குழந்தையை தவிர, மற்ற அணைத்து குழந்தைகளும் பரீட்சை எழுதினார்கள். படிக்காதவனை தவிர அனைவரும் நன்றாக பரீட்சை எழுதினார்கள்.

2. அம்மா தனது குடும்பத்திற்காக விசேட உணவை தயாரிக்க விரும்பினார். அனால் தன்னிடம் ஒரு முக்கிய பொருள் இல்லாததால், அதனை சமைக்க முடியாது என்பதை உணர்ந்தார். அவரிடம் ஒரே ஒரு பொருள் தவிர தேவையான அணைத்து பொருட்களும் இருந்தது.

**ஈ. கதை**

*ஒரு நாள் இரண்டு ஆண்கள், நெடுநாளைய நண்பர்களான இவர்கள், தேநீர் அருந்திக் கொண்டே ஆன்மீக விவகாரங்களை பற்றி கலந்து பேசிக் கொண்டிருந்தனர். இதில் ஒரு மனிதர் தனது வாழ்நாள் முழுவதும் பெரும் செல்வத்தை சேகரித்து வைத்திருந்தார், இதனை தவிர அவர் வேறெதையும் விரும்பியதில்லை. மற்றொரு நபரின் குறைவான செல்வமே இருந்தது. "புனித நிலத்திற்கு பயணம் மேற்கொள்ள நான் விரும்புகிறேன்," என்று அவர் தனது செல்வந்தர் நண்பரிடம் கூறினார். முதல் நபர் எந்தவொரு தயக்கமும் இல்லாமல், "இது அற்புதமான யோசனை! நானும் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன்.," என்று பதிலளித்தார். பிறகு இருவரும் தங்களது தேநீர் கோப்பைகளை கீழே வைத்து விட்டு, ஒரே நேரத்தில் எழுந்து, புனித நிலம் இருக்கும் திசையை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.*

*சிறிது நேரம் நடந்தவுடன் இருட்ட ஆரம்பித்து விட்டது. ஏழை மனிதன் வேகம் குறைத்து நின்ற பிறகு, "என் நண்பரே, இரவை கழிப்பதற்காக நாம் நமது வீட்டிற்கு திரும்பலாம். அது சவுகரியமாக இருக்கும், பிறகு மீண்டும் காலை புத்துணர்ச்சியுடன் நாம் தொடங்கலாம்," என்றார். "ஆனால் ஏன் நாம் திரும்பி செல்ல வேண்டும்?" மற்ற நண்பர் பதில் அளித்தார். "நாம் புனித நிலத்திற்கு செல்லும் வழியில் உள்ளோம்." ஆனால், அந்த மற்ற நண்பர் கேட்பதாக இல்லை. "புனித நிலம் நடந்து செல்வதற்கு வெகு தொலைவில் இருக்கிறது," என்று மீண்டும் கூறினார். "நான் சென்று எனது கழுதையை மட்டுமாவது எடுத்து வருகிறேன், அதனை விட்டு பிரிய எனக்கு மனமில்லை."*

*"அப்படியென்றால், இந்த பயணம் முழுவதும் என்னுடன் வர வேண்டிய நபர் நீங்களாக இருக்க முடியாது. மகிழ்ச்சியுடன், நான் எனது பெரும் செல்வம் - குதிரைகள், நிலங்கள், மற்றும் ஆடம்பர ஆடைகள் ஆகியவற்றை புறக்கணித்து விட்டு, எதையும் இழந்த உணர்வும் இல்லாமல் இருக்கிறேன். ஏனெனில் புனித நிலத்தில் ஒரு நொடி கழிப்பதை விட பெரும் பேறு எதுவும் இல்லை. உன்னால் உன் கழுதையை கூட விட்டு விட்டு வர முடியவில்லை?" தன்னிடம் இருந்த ஒரே ஒரு பொருளை கூட அவரால் விட்டு விட்டு வர முடியவில்லை. அதனால் அந்த நபர் தனது நண்பரை விட்டு விட்டு, ஒரு முறை கூட திரும்பி பார்க்காமல், புனித நிலத்திற்கு தொடர்ந்து பயணித்தார்.*

**உ. விளையாட்டு: "சக்கரம்"**

குழந்தைகளை ஒரு வட்டமாக அருகருகில் நிற்க சொல்லுங்கள். அவர்களது இடது கையை முன்நீட்டி வட்டத்தின் நடுவில் தங்களது கைகளை ஒன்றிணைக்கச் சொல்லுங்கள். அவர்கள் இப்பொழுது ஒரு சக்கரத்தைப் போலவும், அவர்களது கைகள் அதன் கம்பிகளை போல இருக்கவேண்டும். ஒரு சக்கரத்தைப் போல இப்போது வட்டத்தின் நடுமையத்தைச் சுற்றி சுழல சொல்லுங்கள். அவ்வாறு அவர்கள் செய்த பிறகு, அந்த சக்கரம் போன்ற வடிவமைப்பிலிருந்து

விலகி செல்லாமல், வகுப்பு நடைபெறும் அறை முழுக்க சுற்ற சொல்லுங்கள். மேலும் சவால்மிக்கதாக செய்ய, அவர்கள் குதித்தும் தாவியும் அதை செய்யலாம்.

இந்த விளையாட்டை மேலும் சவால்மிக்கதாக மாற்ற, குழந்தைகளை கீழே வட்டமாக அமர வைத்து, அவர்களை கால்களை நீட்டி நடுவில் பாதங்கள் அனைத்தும் தொடுவது போல இருக்கலாம். பிறகு தங்கலாம் உள்ளங்கையை இடுப்பிற்கு பின்னால் தரையில் வைக்க வேண்டும். இப்போது ஒரு சக்கரத்தை போல நகர அவர்கள் தயாராக இருக்கின்றனர். இவ்வாறாக நகர, அவர்கள் தங்களது கைகளை கொண்டு தரையில் அழுத்தி ஒரு ஆதி இடப்பக்கமாக நகர வேண்டும். இவ்வாறாக தங்களது கைகளை கொண்டு ஒவ்வொரு அடியாக அவர்கள் எடுத்து வைக்க வேண்டும், தங்களது கால்களை சக்கரத்தின் மையமாக வைத்து கொண்டு, முழு சுற்று வர வேண்டும்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 14**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 15

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

**ஆ. பாடல் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

எனது பங்கை அருளுவீரே

எனது பங்கை அருளுவீரே என் பிரபுவே
எனது பங்கை அருளுவீரே உங்கள் சித்தப்படி
எல்லாம் நல்லாயிருந்தால் மனநிறைவு சுலபம்தான்
எல்லாம் உள்ள உணர்வில் மனநிறைவு சுலபம்தான்
ஆயினும் அந்நிலை மாறுகையில், மனநினைவே சவால் தான்
இன்னலில் பொறுமை கொண்டிடவே, அந்நிலையிலும் பாடல் பாடிடலாம்
எனது பங்கை அருளுவீரே என் பிரபுவே
எனது பங்கை அருளுவீரே உங்கள் சித்தப்படி
சிறு வயதினிலும் மாஸ்டர் பட்டது அவமானம்
வாழ்வின் துவக்கம் முதல் எந்த வசதியும் கண்டதில்லை
சிறு வயதினிலும் மாஸ்டர் பட்டது அவமானம்
வாழ்வின் துவக்கம் முதல் எந்த வசதியும் கண்டதில்லை
ஆனால் அமைதி நிறைவுடனே, அவர் இருந்தார் வருந்தவில்லை
ஆண்டவனை நம்பி அவர் விருப்பேற்று, என்றும் பொறுமையில் அவர் தொடர்ந்தார்.
எனது பங்கை அருளுவீரே என் பிரபுவே
எனது பங்கை அருளுவீரே உங்கள் சித்தப்படி
எனது பங்கை அருளுவீரே என் பிரபுவே

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

குழந்தைகள் மனனம் செய்ய விரும்பும் மேற்கோள் மற்றும் பாடத்தின் மையக்கருத்து ஆகியவற்றை வழங்க கீழ்வரும் சிந்தனைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

அப்துல்பஹா எல்லா சூழ்நிலைகளிலும் இறைவனுடைய திருவிருப்பத்துடன் மனநிறைவு கொண்டிருந்தார். எல்லா விஷயங்களும் நன்றாக நடக்கும் போதும், ஒருவர் உடல்நலத்துடன் வசதியாக வாழும்போதும் மனநிறைவு கொள்வது சுலபமே என்று அவர் நண்பர்களுக்கு கூறுவார். கஷ்டமான நேரங்களிலும், நோய் மற்றும் இன்னல்கள் நிறைந்த வேளைகளிலும் மகிழ்வுடனும் மனநிறைவுடனும் இருப்பது தான் கடினமான ஒன்று. தம்முடைய வாழ்வை பல துன்பங்கள் நிரப்பிய போதிலும், அப்துல்பஹா ஒருபோதும் மனம் தளரவில்லை. பேரிடர்கள் நிறைந்த மற்றும் கடினமான வேளைகளிலும், அவர் மனநிறைவுடன் இருந்து இறைவனுக்கு நன்றி கூறினார். அவர் எப்போதும் மனமகிழ்வுடன் இருந்து, அனைத்திலும் நன்மையே கண்டார். இறைவனுடைய திருவிருப்பத்தில் மனநிறைவு கொள்வதின் முக்கியத்துவத்தை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள, பின்வரும் மேற்கோளை நாம் மனனம் செய்வோமாக:

**“மேன்மைக்கெல்லாம் தோற்றுவாய் தேவரால் வழங்கப்பட்டவைகள் எவையோ, அவைகளை ஏற்றுக் கொள்ளுதலும் ஆண்டவன் விதித்துள்ளவற்றின்பால் திருப்தியுமாகும்.”**[116]

*மேன்மை*

1. பள்ளியில் அறிவியல் கற்றுக் கொண்ட பிறகு, போ லெங் விஞ்ஞானிகளின் குழுமம் ஒன்றில் சேர்ந்துக் கொண்டார். அவர்கள் பல முக்கிய கண்டுபிடிப்புகளை கண்டுப்பிடித்தனர். அவருடைய பணி குடும்பத்தின் பெயருக்கு மேன்மையை வழங்கியது.

2. ஸ்வீ மலைகள், மரங்கள், கடல் போன்ற இயற்கையை கண்டு களிப்பதை மிகவும் விரும்பினார். உலகின் அழகினை கண்ணுற்றபோதெல்லாம், அனைத்தையும் படைத்தவரான மாண்பைப் பற்றியும் மகிமையைப் பற்றியும் நினைத்தார். ஸ்வீ இயற்கையைப் பார்த்த போது இறைவனுடைய மேன்மையைப் பற்றி அவரை சிந்திக்க வைத்தது.

*வழங்கப்பட்ட*

1. தன்னுடைய அன்பான குடும்பம் தன்னுடைய நல்ல ஆரோக்கியம் மற்றும் இறைவன் தனக்கு கொடுத்துள்ள நன்மைகள் எல்லாவற்றிற்காகவும் பாலோ ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு நன்றி கூறுகிறார். இறைவன் தமக்கு வழங்கியுள்ள பல பரிசுகளுக்காக பாலோ நன்றியுடையவராக இருக்கிறார்.

2. சூரியனின்றி பூமியானது இருண்டு, குளிர்ந்து இருக்கும், எதுவுமே அதன் மீது வாழ முடியாது. சூரியன் உலகிற்கு ஒளியும் வெப்பமும் வழங்குகின்றது.

*விதித்துள்ள*

1. தன்னுடைய பிறந்தநாளன்று எவருமே பணி புரியக்கூடாது என்று அரசர் தன்னுடைய நாட்டு மக்களுக்கு ஆணையிட்டார். அரசர் தன்னுடைய பிறந்த நாளை ஒரு விடுமுறையாக விதித்துள்ளார்.
2. பல மாதங்களாக ஒரு வட்டாரத்தில் மழையே இல்லை, தண்ணீரின் உபயோகத்தைக் குறைத்துக் கொள்ளுமாறு கிராம மன்றம் மக்களுக்கு ஆணையிட்டது. தண்ணீரை சேமிப்பதற்காகவே மன்றம் இந்த வரையறைகளை விதித்துள்ளனர்.

**ஈ. கதை**

*ஒரு மாலை, பிரகாசமான நகரமான லண்டன் மாநகரில் சில பஹாய்களுடன் அப்துல் பஹா நடந்துக் கொண்டிருந்தார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இரண்டு புறமும் மின்னும் விளக்குகள் இருந்த அந்த சாலையின் வழி அவர்கள் நடந்து சென்றனர். அன்பிற்குரிய மாஸ்டர் அவர்களின் உடன் இருந்தவர்கள் அனைவரும் தங்களின் இதயங்கள் வேறொரு உலகிற்கு செல்வது போல உணர்ந்தார்கள்.*

*"இந்த காட்சி எனக்கு மிகவும் களிபளிக்கிறது," என்று அப்துல் பஹா கூறினார். "ஒளி நல்லது, மிகவும் நல்லது. அக்கா சிறையில் எங்கும் இருள் மட்டுமே சூழ்ந்திருக்கும்."*

*அப்துல் பஹாவை நேசித்த, அந்த சிறிய நண்பர்களின் குழு, அக்கா சிறை-நகரத்தின் அவர் அடைபட்டிருந்த நினைவுகளை நினைத்து சோகமடைந்தனர், தனது தந்தையான, பஹாவுல்லாவுடன் பல வருடங்கள் ஒரு சிறை கைதியாக அப்துல் பஹா அந்த நகரத்தில் வாழ்ந்தார். அது இரக்கமில்லாத இடம், குடும்பமும் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். "நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம், நீங்கள் இப்போது விடுதலையாகியுள்ளது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது," என்று அவர்கள் கூறினார்கள்.*

*இதற்கு 'அப்துல்-பஹா, " அந்த சிறையில் நான் மகிழ்ச்சியாகவே இருந்தேன்; அந்த நாட்கள் சேவை என்னும் பாதையில் கழிக்கப்பப்பட்டன. "அதி பெரும் சிறைச்சாலை, தன்னகம் என்னும் சிறை என அவர் அவர்களிடம் கூறினார். நம்மைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றி நினையாமல், நம்மைப் பற்றி மட்டுமே நாம் நினைத்தால் -- நாம் அப்போதான் உண்மையிலேயே சிறையில் அடைக்கப்படுகின்றோம், நாம் உண்மையிலேயே துன்பப்படுகின்றோம்! 'அப்துல்-பஹ எல்லா நேரங்களிலும் மனநிறைவுடன் இருந்தார், ஏனெனில் அவர் கடவுளுக்கும் மனிதகுலத்திற்குமான சேவை என்னும் பாதையில் நடந்தார். ஆதலால் அக்காநகரில் ஒரு கைதியாக இருந்த இருளடைந்த நாள்களில் கூட, அவரது அழியா ஆவியின் ஒளி பிரகாசித்தது; மற்றவர்களுக்கு அரவணைப்பையும் ஆறுதலையும் அளித்தது.*

**உ. விளையாட்டு: "சிற்பி"**

உங்களை ஒரு "சிற்பி" யாக நினைத்து கொள்ளுங்கள், நீங்கள் ஒரு கலைப்பொருளை உருவாக்க குழந்தைகள் அனைவரும் உங்களுக்கு உதவ போகிறார்கள். ஒரு சிறுவனை வகுப்பிற்கு முன் வந்து நீங்கள் காட்டும் ஒரு நிலையில்(pose) நிற்க சொல்ல வேண்டும்,

உதாரணத்திற்கு குனிந்த நிலையில் கைகளை விரித்து நிற்பது. மற்ற சிறுவர்களும், ஒருவர் ஒருவராக அல்லது ஒரே நேரத்தில் சிலர் ஒன்றாக அழைக்கப்பட்டு, ஒவ்வொருவரும் நீங்கள் காண்பிக்கும் நிலையை பின்பற்ற வேண்டும். ஒவ்வொருத்தருக்கும் தங்களது நிலை நன்றாக தெரிந்த பிறகு, அவர்கள் அனைவரையும் ஒன்றாக வரவழைத்து ஓர் கலைப்பொருளை உருவாக்கவும். பிறகு இறுதி பகுதியாக உங்களை அந்த கலைப்பொருளுடன் இணைத்து கொள்ளுங்கள்.

உங்கள் மாணவர்களை இரு ஜோடிகளாக பிரித்து இந்த விளையாட்டை தொடரலாம். ஒரு ஜோடி சிற்பியை போலவும், மற்றொரு ஜோடி நிலைகளில் நிற்குமாறு கேட்டுக் கொண்டு இதனை தொடரலாம்.

இந்த விளையாட்டின் மற்ற பல மாற்றங்களை பற்றியும் நீங்கள் சிந்திக்கலாம். உதாரணத்திற்கு, “உங்களால் ஒரு வேலியாக முடியுமா?” அல்லது “உங்களால் ஒரு தோட்டமாக முடியுமா? என்பது போன்ற கேள்விகளை எழுப்பலாம். அதற்கேற்றவாறு குழந்தைகள் தங்களை அடுக்கி கொள்வார்கள்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 15**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 16

**அ. பிரார்த்தனைகளைக் கூறுதல் மற்றும் மனனம் செய்தல்**

இந்த வகுப்பிற்குள், குழந்தைகள் பாடம் 13ல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரார்த்தனையை மனப்பாடமாக கூற வேண்டும், ஆரம்ப பிரார்த்தனைகளுக்கு பிறகு அவர்களுடன் இதனை மீளாய்வு செய்யலாம்.

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

<u>நாங்கள் துளிகள்</u>

சமுத்திரத்தின்
சமுத்திரத்தின்
துளிகள் நாங்கள்
துளிகள் நாங்கள்

ஒரு கடலின்
ஒரு கடலின்
அலைகள் நாங்கள்
அலைகள் நாங்கள்

ஒற்றுமைக்கான எமது தாகத்தில்

ஒன்றை சேர்வோம் வாரீர்

உனக்கும் எனக்கும் இதுவே வாழும் வழி

ஒரு தோட்டத்தின்
ஒரு தோட்டத்தின்
மலர்கள் நாங்கள்
மலர்கள் நாங்கள்
ஒரு மரத்தின்
ஒரு மரத்தின்
இலைகள் நாங்கள்
இலைகள் நாங்கள்

ஒற்றுமைக்கான எமது தாகத்தில்
ஒன்றை சேர்வோம் வாரீர்
உனக்கும் எனக்கும் இதுவே வாழும் வழி

பூமி முழுவதும்
பூமி முழுவதும்
ஒரே நாடு தான்
ஒரே நாடு தான்

மனிதன் ஒன்றே
மனிதன் ஒன்றே
தெரியவில்லையா
தெரியவில்லையா

ஒற்றுமைக்கான எமது தாகத்தில்
ஒன்றை சேர்வோம் வாரீர்
உனக்கும் எனக்கும் இதுவே வாழும் வழி

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இந்த பாடத்தின் கருப்பொருளான, கருணை பற்றியும், குழந்தைகள் மனனம் செய்ய வேண்டிய மேற்கோளையும் அறிமுகப்படுத்த கீழுள்ள சிந்தனைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

இறைவன் முழு மனிதகுலத்தை ஒரே குடும்பமாக ஒன்றாகியே வாழ படைத்துள்ளார். இதனை சாதிக்க வேண்டுமென்றால், நமக்கிடையே வேறுபாடுகள் வருவதை நாம் அனுமதிக்க கூடாது. அதற்கு பதிலாக, நமது இதயங்களில் அன்பு மற்றும் கருணையுடன் அணைத்து மதம், இனம், நாடு மற்றும் வகுப்பிலிருந்து வரும் மக்களுடன் நாம் ஒன்று கலக்க வேண்டும். இதனை நினைவில் வைத்துக் கொள்ள, பஹாவுல்லாவின் கீழ்வரும் மேற்கோளை நாம் மனனம் செய்யலாம்:

**“மனிதர்கள் அனைவருடனும் பரிபூரணமான கனிவுடனும் அன்புடனும் பழகுபவர் ஆசிபெறுவாராக.”[117]**

*பழகுதல்*

1. எக்ரெட் மற்றும் கோழை ஆகிய இரண்டு விதமான பறவைகள் புல்வெளிகளில் வாழ்பவை. அவை அடிக்கடி சேர்ந்து காணப்படுகின்றன. இவ்விரண்டு வித பறவைகளும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பழகுகின்றன.

2. பக்தி கூட்டத்தில், பல்வேறு இன மக்கள் அனைவரும் தங்களை ஒரே குடும்பமாக உணரும் அளவிற்கு ஒன்று சேர்ந்து பழகினர்.

**ஈ. கதை**

நாம் ஆரம்பத்தில் கேட்ட கதைகளிலிருந்து, அப்துல் பஹா அக்கா நகருக்கு முதலில் வந்தடைந்த போது மக்கள் அவரை மிகவும் மோசமாக நடத்தினர் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். பஹாய்களிடம் அவர்கள் மிகவும் மோசமாக நடந்துக் கொண்டார்கள் மற்றும் அவர்களுடன் பேச கூட விரும்பவில்லை. எனினும், விரைவில், பஹாய்கள் அன்பானவர்கள் மற்றும் கருணையுள்ளவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்து, மெதுவாக நகரத்தில் இருந்தவர்கள் பஹாய்கள் மீது அன்பு காட்ட ஆரம்பித்தனர். ஆனால் சிலர் தொடர்ந்து கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தார்கள்.

> ஒரு நாள், அப்துல் பஹா மீது மிகவும் வெறுப்பு கொண்டிருந்த ஒரு நபர், மற்றவர்கள் அப்துல் பஹாவின் மேன்மை மற்றும் குணத்தை பற்றி மற்றவர்கள் புகழ்ந்துக் கொண்டிருப்பதை கேட்டார். அந்த மனிதர் மிகவும் கோபமடைந்தார். அவர்கள் அனைவரும் பக்தியுடன் நடத்தும் அந்த அப்துல் பஹா மிகவும் நல்லவர் இல்லை என்பதை அவர்களுக்கு நான் காண்பிப்பேன், என்று கோபத்தில் கூறினார். இதயத்தில் கோபத்தீயுடன் அங்கிருந்து சென்றார். அந்த நேரத்தில் அப்துல் பஹா பள்ளிவாசலில் பிரார்த்தனை செய்துக் கொண்டிருப்பார் என்பது அவருக்கு தெரியும், அதனால் அங்கு சென்று அன்பிற்குரிய மாஸ்டரை அடிப்பதற்காக வெறியுடன், அங்கு விரைந்து சென்றார். ஆனால் அப்துல் பஹா அந்த மனிதரை மரியாதையுடன் புன்சிரிப்புடனும் பார்த்தார். அன்புடன், நம்மை விட வேறுபட்டிருந்தாலும், நம்முடைய விருந்தாளிகள் மீது நாம் தாராளத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற இறைவனின் போதனைகளை அந்த மனிதருக்கு நினைவூட்டினார். அப்போது அந்த மனிதர், உண்மையில் தனது இல்லமான, அக்கா நகருக்கு வந்திருக்கும் அப்துல் பஹா மற்றும் பஹாய்கள் அனைவரும் தன்னுடைய விருந்தாளிகள் போன்றவர்கள் என்பதை உணர்ந்தார். ஒரு தாராள விருந்தளிப்பவர் போல, அவர்களை அன்புடன் வரவேற்று கனிவுடன் நடத்த வேண்டும் என்பதை உணர்ந்தார்.

**உ. விளையாட்டு “மறைந்துள்ள பண்பு”**

குழந்தைகள் அனைவரும் ஒரு வட்டமாக தங்கள் கைகளை தங்கள் முன் நீட்டிக்கொண்டு நிற்க சொல்லவும். ஆசிரியர் தமது கையில் ஒரு கல் அல்லது நாணயத்தை வைத்துக் கொண்டு

நடுவில் நிற்க வேண்டும். அந்த நாணயம் ஒரு பண்பை குறிக்கும், உதாரணத்திற்கு "கனிவு" என்ற பண்பினைக் குறிக்கின்றது. ஆசிரியர் நடந்துக் கொண்டிருக்கையில், தனது கைகளை ஒவ்வொரு குழந்தையின் கைகள் மீதும் வைத்து ஜான் கனிவு மிக்கவன், மார்த்தா கனிவு மிக்கவள், தெர்வி கனிவு மிக்கவன் என கூறிக்கொண்டு, ஒவ்வொடுவரிடமும் செல்ல வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஆசிரியர் அவரிடம் நாணயத்தை கொடுத்தது போல கையை மூடிக் கொள்ள வேண்டும். ஆசிரியர் அந்த நாணயத்தை ஒரு குழந்தையின் கைகளில் விட்டுவிட வேண்டும், ஆசிரியர் முழு வட்டத்தையும் சுற்றி வந்த பிறகு, ஒரு குழந்தை யாரிடம் நாணயம் உள்ளது என்பதை கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும். "கென்ஜி கனிவுமிக்கவன்" என்று அக்குழந்தை கூறி கண்டு பிடிக்க முயற்சிக்க வேண்டும். பிறகு கென்ஜி தனது கைகளை காட்டி. தம்மிடம் அந்த நாணயம் உள்ளதா என்பதை காட்ட வேண்டும். எவரிடம் நாணயம் உள்ளது என்பதை சரியாக கண்டுபிடிக்க அக்குழந்தைக்கு மூன்று வாய்ப்புகள் அளிக்கப்படும். அதற்கு பிறகு மற்றொரு பண்பினைக் கொண்டு மீண்டும் விளையாட்டு ஆரம்பிக்கப்படும்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 16**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 17

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

அடுத்த நான்கு பாடங்களில், குழந்தைகள் கீழுள்ள பிரார்த்தனையை மனனம் செய்ய கற்றுக் கொள்வார்கள், பகுதி 16ல் பரிந்துரைக்கப்பட்டது போல, ஒவ்வொரு வகுப்பையும் நீங்கள் மனனம் செய்த ஓர் புதிய பிரார்த்தனையுடன் தொடங்கும் போது, அது குழந்தைகளுக்கு உற்சாகத்தின் மூலாதாரமாக இருக்கும். ஆரம்ப பிரார்த்தனைகளை, உங்களுடன் சேர்ந்து சில குழந்தைகள் கூறிய பிறகு, வழக்கமான வழியில் இந்த பிரார்த்தனையை அறிமுகப்படுத்தலாம்.

> **"உந்தன் நாமமே என்னைக் குணப்படுத்தும், என் இறைவா, உம்மை நினைத்தலே எனக்குச் சிகிச்சை. உமதருகாமையே எனது நம்பிக்கை, உந்தன் பால் அன்பே எனது தோழன். என் மீதுள்ள உமது இரக்கமே இம்மையிலும் மறுமையிலும் எனக்குச் சிகிச்சையும் உதவியுமாகும். மெய்யாகவே, எல்லாமறிந்தவரும், சர்வஞானியும், கொடைவள்ளலும் நீரே ஆவீர்."[118]**

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

<u>துணிவின் தோற்றுவாய்</u>

துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய் இறைமொழி உயர்த்துதலே
துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய் அவரன்பில் உறுதியதே
உங்களை மறுத்து உண்மையில் நின்று
உதவியற்றோரை காக்க அவர்பலம் சாருங்கள்
இறைமொழி போதிக்க செயல்களில் துணியுங்கள்

அவர் வழி சென்றிட ஆனந்தம் நமக்கதே
துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய் இறைமொழி உயர்த்துதலே
துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய் அவரன்பில் உறுதியதே
இறைமொழி உயர்த்துதலே அவரன்பில் உறுதியதே
இறைமொழி உயர்த்துதலே அவரன்பில் உறுதியதே

### இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

பாடத்தின் கருப்பொருள் மற்றும் மனனம் செய்யவேண்டிய மேற்கோள் ஆகியவற்றை வழங்குவதற்கு கீழ்வரும் வாக்கியம் உங்களுக்கு உதவும்:

> துணிவு கொள்வது என்றால், எது சரியோ அதற்கு துணை நிற்பதும், நம்மை ஆபத்துக்குள்ளாக்கினாலும் கூட நம்முடைய உதவி தேவைப்படுவோரை காப்பதுமாகுமாகும். தெரியாத இடங்களுக்குச் செல்வதற்கும், புதிய சூழ்நிலைகளை சந்திப்பதற்கும், நமக்கு முன்பிருந்தவர்கள் செய்யாதவற்றை செய்வதற்கும் துணிவு தேவைப்படுகிறது. வாழ்க்கையில் சந்திக்கும் கடினங்களை சாந்தத்துடனும் நளினத்துடனும் சந்திக்க துணிவு தேவை. நாம் கடவுளின் மீது கொண்ட அன்பில் இருந்தும் மற்றெல்லோரைக் காட்டிலும் அவரை மகிழ்விப்பதற்கான ஆவலில் இருந்து நாம் துணிவை ஈர்க்கின்றோம். நம்முடைய வாழ்வில் உள்ள ஒவ்வொரு சூழ்நிலையையும் துணிவுடன் சந்திக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளும்படி நமக்கு உதவுவதற்காக நாம் பின்வருகின்ற மேற்கோளை மனப்பாடம் செய்வோமாக:
>
> **“துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய் கடவுளின் திருச்சொல்லை மேம்படுத்துவதும் அவரது அன்பில் பற்றுறுதியாக இருத்தலுமாகும்.”**[119]

*தோற்றுவாய்*

1. கியோங்மி என்பவர் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு கிராமத்தில் வசிக்கின்றார். அந்த கிராமத்திற்கான தண்ணீர் அருகில் உள்ள மலைகளின் மேலே உள்ள கரைந்த பனிக்கட்டியில் இருந்து வருகிறது. அந்த கிராமத்தின் தண்ணீருக்கான தோற்றுவாய் அந்த மலைகளில் உள்ள பனிக்கட்டியாகும்.

2. திருமதி பட்டர்ஸ் அவர்களுக்கு நல்ல மரியாதையான மற்றும் அன்பான மூன்று குழந்தைகள் உள்ளனர். அவருடைய குழந்தைகள் அவருடைய மகிழ்ச்சிக்கும் சந்தோஷத்துக்குமான தோற்றுவாயாக உள்ளனர்.

*மேம்பாடு*

1. ஷோவா அவர்களுடைய இரண்டு நண்பர்கள் வாக்குவாதத்தை தொடங்கி ஒருவர் மீது ஒருவர் கோபம் கொண்டனர். ஷோவா ஒவ்வொருவரும் மற்றவருடைய கண்ணோட்டத்தை பார்க்க செய்து அமைதியை உருவாக்க உதவினார். ஷோவா அவர்கள் எப்போதும் நண்பர்களின் மத்தியில் அமைதியையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துகிறார்.

2. ஹேலி அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு செல்கையில், நகரில் திரையிடப்படுகின்ற ஒரு புதிய திரைப்படம் பற்றிய அறிவிப்பை வானொலி வழியாக செவியுற்றார். அந்த திரையரங்கின் உரிமையாளர்கள் அந்தப் படத்தை வானொலி வழியாக மேம்படுத்தினர்.

பற்றுறுதியாக இருத்தல்

1. தாம் மருத்துவராக வேண்டும் என்பது பற்றி புரோமில்லா அவர்கட்குத் தெரியும். தாம் பள்ளிக்கூடத்தில் எப்பொழுதும் கடினமாகப் படித்து, தம்முடைய ஓய்வு நேரத்தில் மருத்துவமனையில் தன்னார்வளராக சேவையாற்றினார். தாம் மருத்துவராக வேண்டும் என்ற தமது முடிவில் அவர் பற்றுறுதியைப் புலப்படுத்தினார்.

2. சுகோண்டாய் அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தை தொடங்குவதற்காக தொலைவிலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றார். தாம் தம்முடைய குடும்பத்தில் இருந்து தனித்திருந்து பல இன்னல்களைச் சந்தித்தாலும் கூட., தாம் பற்றுறுதியைப் புலப்படுத்தி, அந்த கிராமத்தில் பல ஆண்டுகள் தங்கி ஆசிரியர்களைப் பயிற்றுவித்து குழந்தைகளுடன் பணியாற்றினார்.

ஈ. **கதை**

*அலி அஸ்கர் அவர்கள் பாரசீகத்தில் ஒரு வணிகராவார். தாம் பஹாய் சமயத்தை ஏற்றுக் கொண்ட போது, சமயத்தை எதிர்த்தோர்களின் கரங்களில் அவர் பல சிரமங்களைச் சந்தித்தார். குறுகிய காலகட்டத்திற்குள்ளாக, தம்மிடம் இருந்த அனைத்தையும் அவர் இழந்துவிட்டார். இருந்தபோதும் அலி அஸ்கர் அவர்கள் மனம் தளரவில்லை. தம்முடைய தாய்நாட்டில் தம்மால் பிழைப்பு நடத்தமுடியாது என்பதை உணர்ந்த அவர், அண்டைநாட்டு நகராகிய ஏட்ரியநோப்பில் நகருக்குப் போவதாக முடிவு செய்தார்.*

*ஏட்ரியநோப்பில் நகரில் அவரிடம் கொஞ்சமான கையிருப்பு மட்டுமே இருந்தபோதும், ஒரு சிறிய அளவிலான வணிகப் பொருட்களை அவரால் வாங்கிட முடிந்தது. ஒரு பொருளை விற்பதற்கு முன்பே, திருடர்கள் அவரை தாக்கி, அவரிடம் இருந்த அனைத்தையும் எடுத்துக் கொண்டனர், மீண்டும் அவரிடம் எதுவுமே இல்லாமல் போனது.*

*சில நாட்களில் திருடர்கள் கைது செய்யப்பட்டனர், அவர்கள் அபகரித்த பெரும் செல்வங்களும் கைப்பற்றப்பட்டன. அந்த செல்வங்களினால் தூண்டப்பட்ட உள்ளூர் அதிகாரிகளில் ஒருவர் அந்த செல்வத்தினைத் தாமே வைத்துக் கொள்வதற்கான யோசனையோடு முன்வந்தார், அவர் அலி அஸ்கார் அவர்களைத் தம்முடைய அலுவலகத்திற்கு அழைத்து விளக்கினார்.*

*அவர் இவ்வாறு கூறினார், “அலி அஸ்கர், இந்தத் திருடர்கள் மிகவும் பணக்காரர்கள், அரசாங்கத்திற்கு நான் கொடுத்த அறிக்கையில் திருடப்பட்ட தொகை மிகப் பெரிது என எழுதியிருந்தேன். ஆகவே, நீங்கள் விசாரணைக்கு நேரில் தோன்றி நான் எழுதியதற்கு சாதகமாக சாட்சியம் அளிக்கவேண்டும்.” இந்த வழியில் எல்லா பணமும் அலி அஸ்கர் அவர்களிடம் திரும்பி ஒப்படைக்கப்பட்டு, அதனை இருவரும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளலாம் என அந்த அதிகாரி நினைத்தார்.*

*இதுபோன்றதொரு திட்டத்திற்கு தாம் உடந்தையாக இருக்கவே முடியாது என்பதை அறிந்த அலி அஸ்கர் இவ்வாறு பதிலளித்தார். “மாண்புமிகு கான் அவர்களே. திருடப்பட்ட பொருட்களின் விலையோ மிகக் குறைவு. உண்மையில்லாத ஒன்றை நான் எப்படி அறிவிக்க முடியும்? அவர்கள் என்னிடம் கேள்விகள் கேட்கும்போது, உண்மையான நிலவரங்களை உள்ளபடியே நான் வழங்குவேன். இதையே, இதை மட்டுமே என் கடமையாகக் கருதுகிறேன்.”*

*அவ்வதிகாரி மீண்டும் அலி அஸ்கர் அவர்களை நம்ப வைக்க முயற்சி செய்தார். “நமக்கு இங்கே பொன்னான வாய்ப்பு ஒன்று உள்ளது,” என்று கூறினார் அந்த அதிகாரி, “நீங்களும் நானும் இதனால் பயனடைய முடியும். வாழ்க்கையில் ஒரே ஒரு முறை தோன்றும் இத்தகையதொரு வாய்ப்பினை உங்கள் கைகளிலிருந்து நழுவ விடாதீர்கள்.”*

*ஆனால் அலி அஸ்கர் மீண்டும் மறுத்து, இவ்வாறு கூறினார், “கான் அவர்களே, இதனை நான் கடவுளிடம் எவ்வாறு நேர் செய்யப்போகிறேன்? என்னை விட்டு விடுங்கள். நான் உண்மையைத் தவிர வேறு எதனையும் சொல்லப் போவதில்லை.”*

*இப்பொழுது அந்த அதிகாரி கோபம் அடைந்தார். தம்முடைய சதியோடு அலி அஸ்கர் துணைப்போகவில்லையானால், அவருடைய திட்டங்கள் யாவுமே தோல்வியடைந்து, தம்முடைய பிடியில் இப்பொழுது இருக்கின்ற மாபெரும் சொத்தினை இழந்துவிடுவார். ஆகவே அலி அஸ்கர் அவர்ளை மிரட்டி ஒத்துழைக்குமாறு செய்யலாம் என்ற நம்பிக்கையில், அவர் அலி அஸ்கர் அவர்களை மிரட்டத் தொடங்கினார், “நான் உன்னை சிறைவைப்பேன், உம்மை நாடு கடத்துவேன், உன்னை எந்தக் கொடுமையில் இருந்தும் விட்டு வைக்க மாட்டேன்,” என்று மிரட்டினார். பிறகு அலி அஸ்கர் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் தாம் அவரை மீண்டும் பாரசீகத்திற்கே அனுப்பி வைப்பதாகச் சொன்னார்.*

*அலி அஸ்கர் அவர்கள் புன்னகைத்துக் கூறினார், “மதிப்புக்குரிய கான் அவர்களே, தாங்கள் விரும்பியப்படி என்னை நடத்தவும்; எது சரியோ அதனை செய்வதிலிருந்து நான் திரும்பப் போவதில்லை.”*

**இ. விளையாட்டு: “ஆமாம் - இல்லை”**

குழந்தைகளை ஒரு பரந்த வட்டத்தை உருவாக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள், நடுவில் நீங்கள் நின்று கொள்ளுங்க. இப்போது நீங்கள் பல வாக்கியங்களை உருவாக்க போகிறீர்கள் என்று குழந்தைகளுக்கு விளக்குங்கள். அவற்றில் சில சரியாக இருக்கும்; மற்றவை தவறானதாக இருக்கும். வாக்கியம் சரியானதாக இருந்தால், அவர்கள் “ஆம் என்று கத்தி வட்டத்தின் நடுப்பகுதியை நோக்கி ஒரு முறை தாவ வேண்டும். வாக்கியம் தவறானதாக இருந்தால், “இல்லை” என்று கத்தி பின்புறம் தாவ வேண்டும்.

நீங்கள் உருவாகும் அனைத்து வாக்கியங்களும் குழந்தைகள் எளிதில் அவதானிக்க கூடியதாக இருக்க வேண்டும். “ஆம்” வாக்கியங்களுக்கு உதாரணங்கள் கீழுள்ளன: “சூரியன் ஒளியை வழங்குகிறது.” “மரங்கள் விதைகளில் இருந்தே வருகின்றன.” “மலைகள் உயரமானவை.” குழந்தைகள் உடுத்திருக்கின்றனர் என்பதை விவரிக்கும் சில வாக்கியங்களையும் நீங்கள் உருவாக்கலாம், உதாரணத்திற்கு, “சேர ஒரு நீல சட்டையை

அணிந்துள்ளார்," அல்லது தங்களை சுற்றியுள்ள இடத்தில் என்ன பார்க்கிறார்க்ளோ, அதனையும் கூறலாம், உதாரணத்திற்கு "அங்கு இரண்டு பெஞ்சுக்கள் உள்ளன."

"இல்லை" வாக்கியங்களுக்கு சில உதாரணகள்: "மழை தலைகீழாக பொய்யும்." "மீன்கள் பறக்கும்." "கற்கள் நடக்கும்." மீண்டும், உங்களுடைய சுற்றுப்புறத்தை கவனித்து தவறான வாக்கியங்களை உருவாக்கலாம். உங்களிடம் தவறான வாக்கியங்களை காட்டிலும், அதிகமாக சரியான வாக்கியங்களே உருவாக்க வேண்டும், அதனால், விளையாட்டின் முடிவிற்கும், குழந்தைகள் அனைவரும் வட்டத்தின் நாடு மையத்தை சேர்ந்து விட வேண்டும்.

**ஊ. வண்ணமிடுதல்: வரைபடம் 17**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 18

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

ஆரம்ப பிரார்த்தனைகளுக்கு பிறகு, கடந்த பாடத்தில் அறிமுகப்படுத்திய பிரார்த்தனையை மனப்பாடமாக கூற சில நேரம் செலவழிக்க வேண்டும்.

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

நம்பிக்கை கொண்டிருங்கள்

நாளை நடப்பது என்னவென்று நமக்கு எதுவும் புரிவதில்லை
ஆயினும் ஆசிகள் குறைவதில்லை, ஆக்கு உம் பாதையை இரையை நம்பி
நம்பிக்கை நம்பிக்கை நாளும் கொண்டிருங்கள், நாடெங்கும்
இறைவனின் ஆசியை கண்டிடுங்கள்
சூரியன் எழுந்திடும், வானத்தை நிறைத்திடும், கண்களில்
எதிர்ப்பார்ப்புடன் – அவரை
காணுவோம் நம்பிக்கையாய்.
வளர பாடுபடு நம்பிக்கையாய், வழிவிடும் குளிர்காலம் வசந்தத்திற்கே
அவரின் ஆசிகள் குறைவதில்லை, அதுவே உயிர்தரும் அனைத்துக்குமே
நம்பிக்கை நம்பிக்கை..........
அமைதி மகிழ்ச்சியின் ஊற்றாயிரு, ஆன்ம ஒளிர்வுக்கு சேவையாற்று
ஆசி ஓய்வதில்லை அகமேற்று, அடுத்த நாளை நீ நம்பி போற்று
நம்பிக்கை நம்பிக்கை..........

இ. **மேற்கோள்களை மனனம் செய்தல்**

குழந்தைகள் இந்த வகுப்பில் மனப்பாடம் செய்யவுள்ள மேற்கோளை அறிமுகம் செய்வதற்காக கீழே சில கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

> கடவுளுடைய அன்பு நிச்சயம் எப்பொழுதுமே நம்முடன் உள்ளது. அவர் நம்மைத் தனியே விட்டுவிடமாட்டார், நம்முடைய வாழ்வு முழுவதும் நமக்கு உதவுவதாக அவர் வாக்குறுதி அளிக்கிறார். ஒரு நாளுக்கும் அடுத்த நாளுக்கும் இடையில் என்ன தான் நடக்கப்போகிறது என்பது நமக்குத் தெரியாவிட்டாலும்கூட. கடவுளுடைய அருட்கொடைகளும் நல்லாசிகளும் எங்கும் நிறைந்துள்ளன என்பதை நாம் நினைவில் வைத்துள்ளோம். ஆகையினால் நாம் வருங்காலத்தைக் காணும்போது நம்பிக்கையுடன் இருக்கிறோம், இறைவனின் முடிவில்லா நல்லாசிகளின் ஒரு பங்கையும் பெறுவோம் என்பதில் நாம் நம்பிக்கைக் கொள்கிறோம். நம்பிக்கை நிறைந்த இதயங்களுடன் நாம் கடவுளுடைய வள்ளன்மைகளின் பொழிவை தொடர்ச்சியாக எதிர்பார்க்கின்றோம். நம்பிக்கை எனும் பண்பின் முக்கியத்துவத்தை நினைவில் வைப்பதில் நமக்கு உதவுவதற்காக, நாம் அப்துல்பஹா அவர்களின் இந்த வார்த்தைகளை மனப்பாடம் செய்வோமாக:
>
> **“இறைவன் மீதுள்ள உங்களது நம்பிக்கையை எப்போதும் இழந்து விடாதீர்கள். நீங்கள் எப்பொழுதுமே நம்பிக்கையுடன் இருப்பீர்களாக, ஏனெனில் கடவுளுடைய கொடைவளங்கள் கிருபைகள் மனிதன் மீது பொழிவது நின்றுவிடுவதே இல்லை.”**[120]

*நம்பிக்கையுடனிருத்தல்*

1. மிங் என்பவர் சூரிய ஒளி நிறைந்த ஓரிடத்தில் ஒரு விதையை நட்டு, அதற்கு நாள்தோறும் தண்ணீர்விட்டார். அது வளர்வதைக் காண்பதற்காக ஆவலுடன் இருந்தார். அந்த விதை ஒரு நாள் பலமான செடியாக உருவாகிடும் என மிங் நம்பிக்கையுடன் இருந்தார்.

2. மாட் அவர்களுடைய நல்ல நண்பர் அன்டோனியோ இன்னொரு நகருக்குச் சென்றுவிட்டார். மாட் தம்முடைய நண்பரைக் காணாது தவித்தார், ஆனால் அவர்கள் விரைவில் மீண்டும் ஒருவரையொருவர் சந்திப்பர் என அவர் நம்பிக்கையுடன் இருந்தார்.

*கொடைவளங்கள்*

1. ஒவ்வொரு இரவும் பிரார்த்தனை கூறும் போதும் தமக்குக் கிடைத்த பல அதிர்ஷ்டங்களை லிலியன் நினைத்துப் பார்ப்பார். தம்முடைய பெற்றோர்கள், தம் நண்பர்கள், ஆசிரியர்கள், தான் உறங்கும் படுக்கையையும் கூட அவர் நினைத்துப் பார்ப்பார். தமக்குக் கிடைத்த கொடைவளங்களுக்கு அவர் எப்பொழுதும் நன்றியுடனிருப்பார்.

2. தம் மீது அன்பைப் பொழிந்து தம்மை வளர உதவிய பல நண்பர்களும் உறவினர்களும் ராஜேஷ் அவர்களுக்கு உள்ளனர். அவர்களுடைய அன்பு மற்றும் ஆதரவின் கொடைவளங்களுக்காக ராஜேஷ் நன்றியுடனிருக்கிறார்.

*நின்றுவிடுவது*

1. தாஹிர் குழாயை அடைத்தவுடன், தண்ணீர் வெளியேறவில்லை; தண்ணீர் வழிவது நின்றுவிடுகிறது.

2. மேகம் மூடிய நாட்களிலும் கூட, சூரியனின் கதிர்கள் பூமியை வெப்பமாக்குகின்றன. சூரியனின் கதிர்கள் பூமியை அடைவது நின்றுவிடுவதே இல்லை.

**ஈ, கதை**

*ஒரு நாள் வசிப்பதற்கு இல்லமே இல்லாத ஒரு மனிதர் இருந்தார், அவர் லண்டனில் தேம்ஸ் நதியின் கரைகளில் தனியாக வசித்து வந்தார். அவர் மிகவும் கவலையுற்று வாழ்வில் எல்லா மகிழ்ச்சியும் இழந்து காணப்பட்டார். ஒரு நாள் அவர் ஒரு கடையைக் கடக்கும் போது ஒரு செய்தித்தாளில் இருந்த ஒரு புகைப்படம் அவருடைய கண்ணைக் கவர்ந்தது. அது அப்துல்பஹா அவர்களின் முகமாகும். அந்த மனிதர் அந்த முகத்தைப் பார்த்தவாறு உரைந்து போய் நின்றார். இதற்கு முன்பு அவர் அப்துல்பஹா அவர்களைக் கண்டதே இல்லை, அவர் யார் எனவும் இவருக்குத் தெரியாது, ஆனால் தாம் அவரை நிச்சயமாகக் காணவேண்டும் என உறுதியாக இருந்தார். ஓர் இல்லத்தின் முகவரி அந்த செய்தித்தாளில் கொடுக்கப்பட்டிருந்தது, ஆகையினால் அவரை அங்கே காணமுடியும் என்ற எதிர்பார்ப்போடு அந்த மனிதன் நடக்கத் தொடங்கினார். அது நீண்டதூரமாகும், முப்பது மைல்கள், ஆனால் இல்லத்தைச் சென்று அடைகின்ற வரைக்கும் அவர் தொடர்ந்து நடந்தார்.*

*கடைசியில் வந்து சேர்ந்த போது அந்த மனிதர் களைப்பாகவும் பசியோடும் இருந்தார், அந்த இல்லத்து பெண்மணியும் அவரை உள்ளே அழைத்து கொஞ்சம் உணவு கொடுத்து சற்று நேரம் இளைப்பாற வைத்தார். அவர் ஓய்வு எடுக்கையில் தம்முடைய கதையை அவர் அந்த அம்மையாரிடம் சொல்லி அப்துல்பஹா அங்கே இருக்கிறாரா எனக்கேட்டார்.*

*“அவர் என்னைப் பார்ப்பாரா? என்னையும் கூட பார்ப்பாரா?” என அவர் கேட்டார்.*

*அப்துல்பஹா அவரை நிச்சயமாக பார்ப்பார் என அந்த அம்மையார் பதிலுரைத்தபோது, மாஸ்டர் அவர்களே கதவருகே தோன்றினார். அந்த மனிதர் எழுந்து நின்றார், அப்துல்பஹா அவர்களும் அவரை வாழ்த்துவதற்காகத் தம் கரங்களை நீட்டினார். அப்துல்பஹா நீண்டநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு பழைய நண்பரை போல் அம்மனிதர் தெரிந்தார். அந்த மனிதரை அன்போடும் இரக்கத்தோடும் வரவேற்று தமக்குப் பக்கத்தில் அமரும்படி அவரைக் கேட்டுக்கொண்டார்.*

*பிறகு இழந்த மகிழ்வை மீண்டும் மக்களின் இதயங்களுக்கு எவ்வாறு கொண்டு வருவது என எப்பொழுதுமே தெரிந்துள்ள அப்துல்பஹா அந்த மனிதரோடு பேசத் தொடங்கினார். தம்முடைய கவலையை விடுவிக்குமாறு அவர் ஊக்கம் தந்து, அவர் கடவுளுடைய இராஜ்ஜியத்தில் செல்வந்தர் என அவருக்கு நினைவுபடுத்தினார். அந்த மனிதன் மீது அப்துல்பஹா இரக்கத்தைப் பொழிந்தபோது, அவரது ஆறுதல் தரும் வார்த்தைகள் அந்த நபருடைய இதயத்தை குணப்படுத்தத் தொடங்கி அவருக்கு பலத்தையும் தந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய கவலை மிதந்துச் சென்றது. தாம் பிரிவதற்கு முன்பு, தம்முடைய வறுமை தமக்கு இனிமேல் கவலையைக் கொண்டுவர தாம் அனுமதிக்கப்*

*போவதில்லை என அந்த மனிதர் அப்துல்பஹா அவர்களிடம் கூறினார்; அதற்கு மாறாக தாம் நகரங்களில் வேலைத்தேடி பணத்தைச் சேமித்து கொஞ்சம் நிலத்தை வாங்கி சந்தையில் விற்பதற்கான கருநீலப்பூக்களை வளர்க்க முடிவெடுப்பதாகக் கூறினார். அவருடைய நம்பிக்கையின்மை நம்பிக்கையாக மாறியது.*

**உ. விளையாட்டு: "மழை செய்வோன்"**

உங்களைச் சுற்றி குழந்தைகள் ஒரு வட்டத்தை உருவாக்கும்படிச் செய்யுங்கள். விளையாட்டை அறிமுகம் செய்வதற்காக, பாலைவனத்தில் இருந்துக் கொண்டு புயல்மழையை எதிர்பார்ப்பது போல கற்பனைச் செய்யும்படிச் சொல்லுங்கள். பிறகு உங்களுடைய கைகளை நன்றாகத் தேய்த்து, குழந்தைகளும் அதனையே செய்யும்படி கேட்டுக் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் யாரை திரும்பிப் பார்க்கிறீர்களோ அவர்கள் மட்டுமே அவ்வாறு செய்யவேண்டும். முழுமையாக ஒரு சுற்று முடிந்தவுடன் குழந்தைகள் யாவரும் தங்களுடைய கைகளைத் தேய்த்ததும், நீங்கள் ஒரு புதிய செய்கைக்காக அவர்களைக் காணும்வரைக்கும் அவ்வாறே செய்துக் கொண்டே இருக்கும் படி அவர்களிடம் கூறுங்கள். அடுத்த செய்கைக்காக, உங்கள் விரலை நீங்கள் சுண்டி அடிக்கலாம், பின்னர் கைகளைத்தட்டலாம், உங்கள் தொடையை அறையலாம், உங்கள் பாதங்களை தரையில் வேகமாக மிதிக்கலாம். எல்லாக் குழந்தைகளினாலும் உருவாக்கப்படுகின்ற ஓசை, தொடக்கத்தில் மழையின் சிறுதூரல்களைப் போலவும் பின்னர் இறுதியில் பெருத்த மழை போலவும் அமைந்திடவேண்டும்.

**ஊ. வண்ணமிடுதல் : வரைப்படம் 18**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 19

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

வழக்கம் போல, பிரார்தனைகளுடன் வகுப்பை ஆரம்பிக்கவும். பின்னர் பாடம் 17-இல் அறிமுகப்படுத்திய பிரார்த்தனையை தொடர்ந்து மனனம் செய்யவும்.

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

செயற் கரங்கள்

மகிழ்ச்சியான குழந்தைகளாய் ஆக்கும் செயல் கரங்களே
மகிழ்ச்சியான குழந்தைகள் – பிறரை மகிழ வைப்பதில் காணலாம்
தம்மைச் சுற்றி அன்பும் அமைதியும் தவழ வைப்பதில் காணலாம்
செயல் புரியும் கரங்கள் சேர்ந்து புது உலகை அமைக்குமே
சேரும் பங்கு ஒவ்வொருவருக்கும் சீக்கிரம் இலக்கை எட்டுவோமே
இவ்வாய்ப்புக்கு நன்றி கூறுவோம்.
புது உலகமைக்க கடவுளும் உதவ ஒருவருக்கொருவர் நாமும் உதவ

நம் மீது கொள்ளும் அன்பை விடவும் அண்டையர் மீது அன்பு கொள்வோம்
மகிழ்ச்சியான குழந்தைகளாய் ஆக்கும் செயற் கரங்களே
மகிழ்ச்சியான குழந்தைகள் – பிறரை மகிழ வைப்பதில் காணலாம்
தம்மைச் சுற்றி அன்பும் அமைதியும் தவழ வைப்பதில் காணலாம்

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இந்தப் பாடத்தில் குழந்தைகள் நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தல் பற்றி ஒரு மேற்கோளை மனப்பாடம் செய்வர், அதனை நீங்கள் பின்வரும் வழியில் அறிமுகம் செய்யலாம்:

கடவுளுடைய பார்வையில் மிகப்பெரிய பண்புகளில் ஒன்று நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தலாகும். ஒரு நம்பிக்கைக்குரிய நபர் உண்மையானவராகவும், நேர்மையானவராகவும் இருப்பார், தம் வாக்கைக் காப்பாற்றுவார் என நம்பலாம். நாம் ஒன்றைக் கூறிவிட்டு இன்னொன்றைச் செய்யக்கூடாது. நம்முடைய செயல்கள் எப்பொழுதும் நம்முடைய வார்த்தைகளைப் பிரதிபலிக்கவேண்டும். நாம் நம்பிக்கைகுறியவர்களாக இருந்தால், நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றி நம் கடமைகளை நிறைவேற்றுவதில் நாம் மிகச் சிறந்த முறையில் நடந்துகொள்வோம் என மற்றவர்கள் உறுதிக்கொள்வார்கள். இந்த வகையில், அனைவருமே அவரவர் பங்கினை ஆற்றிடுவார் என்ற அடிப்படையில் மக்கள் இணக்கத்துடன் ஒன்றிணைந்து பணியாற்றுவர். நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தலின் முக்கியத்துவம் பற்றி நினைவில் வைத்துக்கொள்ள நமக்கு உதவுவதற்கு, நாம் பின்வரும் மேற்கோளை மனப்பாடம் செய்வோமாக:

**“நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தல் என்பது மக்களின் சாந்தத்திற்கும் பாதுகாப்புக்கும் இட்டுச் செல்லக்கூடிய நுழைவாயிலாகும்.”**[121]

*நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தல்*

1. இரவு உணவைத் தயார் செய்வதில் தம்முடைய தாய்க்கு உதவுவதாக அத்தோஸ் தம்முடைய தாயிடம் வாக்கு கொடுத்தான். அவரை வெளியில் விளையாடுவதற்கு அழைப்பதற்காக அவரது நண்பர்கள் அவருடைய இல்லத்திற்கு வந்தபோது, அத்தோஸ் தம்முடைய தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி நினைத்துப் பார்த்து, வேறொரு நேரத்தில் அவர்களோடு விளையாடுவதாகக் கூறிவிட்டார். அத்தோஸ் அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தல் எனும் பண்பினைப் வெளிப்படுத்தினார்.

2. சுனிதா அவர்களை கைப்பந்தாட்ட அணியில் ஏற்றுக் கொண்டுவிட்டதாக பயிற்சியாளர் சுனிதாவிடம் தெரிவித்தார், ஆனால் அதிகாரபூர்வ அறிவிப்பைச் செய்கின்ற வரைக்கும் எவரிடமும் தெரிவிக்கவேண்டாம் என அவர் சுனிதாவைக் கேட்டுக் கொண்டார். சுனிதா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாலும் கூட, தமக்கு மிக நெருக்கமான நண்பர்களிடமும் இதைப்பற்றி தெரிவிக்கவில்லை. சுனிதா நம்பிக்கைக்கு பாத்திரமாக தன்மையோடு நடந்து கொண்டார்.

*சாந்தம்*

1. ஒரு முக்கியமான முடிவை எடுக்கவேண்டியிருக்கும் போதெல்லாம் எமிலியோ சிந்திப்பதற்கும் தியானம் செய்வதற்கும் ஓர் அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுப்பார். அவர் அருகாமையில் உள்ள பூங்காவுக்கு சென்று, அதன் சாந்தத்தில் தம்முடைய மனதையும் இதயத்தையும் தெளிவுபடுத்த முடிகிறது.

2. பெரும் புயல் ஓய்ந்தபின்னர் அனைத்துமே வழக்கத்திற்கு மாறாக அமைதியாக மாறியது. புயலைத் தொடர்ந்து அமைதியும் சாந்தமும் நிலவியது.

*பாதுகாப்பு*

1. ஒரு விலங்கின் குட்டி பயம் கொள்ளுமேயானால், அது பெரும்பாலும் பாதுகாப்புக்காக தன் தாயிடம் திரும்ப ஓடிவிடும். தாய் தன் குட்டிகளுக்கு பாதுகாப்பு தருகிறது.

2. தபித்தா அவர்கள் மலைகளில் காணாமல் போனபோது, கீழ்ப்பகுதியில் உள்ள கிராமத்தின் வழிகாட்டிகள் அவரைத் தேடுவதற்காக வந்தனர். அவர்கள் அவரைக் கண்டுபிடித்தபோது தான் பத்திரமாக இருப்பதை உணர்ந்தார், ஏனெனில் அவர்கள் தன்னை மீண்டும் பாதுகாப்புக்கு இட்டுச் செல்வர் என அவருக்குத் தெரியும்.

**ஈ. கதை**

*பல ஆண்டுகளுக்கு முன்பு, சமயத்தின் ஆரம்ப நாட்களில், குறைந்த எண்ணிக்கையிலான பஹாய்கள் மட்டுமே பல நாடுகளில் பரவி இருந்தனர். அவர்கள் பல சவால்களைச் சந்தித்தனர், அவர்கள் புனித ஸ்தலத்தில் இருந்த பஹாவுல்லா அவர்களுக்கும், பிறகு அப்துல்பஹா அவர்களுக்கும் அடிக்கடி எழுதி சமயத்தின் வளர்ச்சிப் பற்றிய செய்திகளை வழங்கி பல்வேறு கேள்விகளையும் கேட்டனர். அவர்களுடைய மடல்கள் தங்களின் இலக்கை சென்று அடைவதற்கு முன்பு நீண்ட தூரங்களைக் கடந்தன, பஹாவுல்லாவும் அப்துல்பஹாவும் ஒவ்வொரு கடிதத்துக்கும் மிகுந்த அன்போடும் பரிவோடும் பதில் கொடுத்தனர். அவர்களின் எழுதுகோல்களில் இருந்து பொழிந்த அழகிய செய்யுட்கள் அவற்றைப் பெற்ற நம்பிக்கையாளர்களுக்கு விலைமதிப்பான சன்மானங்களாக அமைந்தன. அவர்களுடைய ஊக்க வார்த்தைகள் அந்த தொடக்க கால பஹாய்களைப் பலப்படுத்தி அவர்களின் இதயங்களுக்கு மகிழ்ச்சி தந்தன. ஆகையினால் இதுபோன்ற தொடர்பு தடைபடாமல் இருப்பது அவசியமாக இருந்தது.*

*சமயத்தின் இருண்ட காலகட்டம் ஒன்றின் போது, அதன் பகைவர்கள் அப்துல்பஹா அவர்களுக்கு எதிராக எழுந்தனர். அவரது வளர்ந்துவரும் செல்வாக்கினால் பொறாமைக் கொண்டதால், அவர்கள் அவருக்கு நாடு கடத்தலைக் கொண்டுவரவேண்டும், அல்லது அதைவிட மோசமாக அவரைத் தூக்கில்போட வேண்டும் என எதிர்பார்த்தனர். அவருடைய இல்லத்தைச் சுற்றி ஒற்றர்கள் அமர்த்தப்பட்டனர், அவரை இடைவிடாத கண்காணிப்பில் வைத்திருந்தனர். அப்துல்பஹா அவர்களுக்கும் அர்ப்பணமித்த நண்பர்களுக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்தையும் தொடர்பையும் அவர்கள் நிறுத்த முடிந்திருந்தால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி கொண்டிருப்பார்கள்; அதைவிட பதவியில் உள்ள அதிகாரிகளை திசைத்திருப்புவதற்காக பயன்படுத்துவதற்கு சில ஆவணங்களை*

*அவர்கள் திருடியிருந்தால் இன்னும் எவ்வளவு மகிழ்ச்சி கொண்டிருப்பார்கள்! எனினும் அப்துல்பஹா அவர்கள் தளரவில்லை. அவர் இரவெல்லாம் நீண்ட நேரம் தம்முடைய விளக்கின் ஒளியின் கீழே எழுதிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது; ஏனெனில் கடிதத்தை பெறுவதற்கும் அனுப்புவதற்கும் அவர் ஒரு பாதுகாப்பான வழிமுறையை உறுதிச் செய்திருந்தார், அப்பணி மிகவும் நம்பத்தக்க நம்பிக்கையாளரிடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டது.*

*அந்த வட்டாரத்தில் சையது முகம்மது தாகி மன்ஷாதி என்ற ஒரு மனிதர் வசித்து வந்தார். அவர் வாலிபராக இருந்தபோதே, பாரசீகத்திலிருந்து வந்து ஹைபா நகரில் ஒரு சிறிய வியாபாரத்தை நிறுவியிருந்தார். அங்கே புனித ஸ்தலத்திற்கு வருகை தந்த பல நண்பர்கைளத் தம் இல்லத்திற்கு வரவேற்றார். பயண ஏற்பாடுகளைச் செய்வதற்கு அவர்களுக்கு அவர் உதவினார், பிறகு தளராத நம்பிக்கைக்குறியவர் என அவர் அறியப்படவந்தார். அவர் மிகவும் நம்பத்தக்கவராக இருந்ததனால் புனித ஸ்தலத்தில் உள்ள பஹாய்களுக்கு வந்த கிட்டத்தட்ட எல்லா கடிதங்களும் கடந்து செல்வதற்கும் அவற்றுக்கான பதில்களும் வெளிநாட்டுக்குச் செல்வதற்கும் அவரது இல்லமே ஒரு மையமாக அமைந்தது. ஒவ்வொரு கடிதமும் துரிதமாகவும் பாதுகாப்போடும் சேர்க்கப்படுவதை உறுதிச் செய்வதற்கு அவர் நம்பப்படலாம் என அனைவருக்கும் தெரியும்.*

*நிச்சயமாக சமயத்தின் பகைவர்களுக்கு இது நன்றாகத் தெரியும், ஆகையினால் சையத் முகம்மது தாகி மன்ஷாதி ஆழ்ந்த ஆபத்துக்குள்ளானார். அவர்கள் சமயத்திற்குத் தீங்கு செய்வதற்காக எல்லா வழமுறைகளையும் கையாள் வார்கள் என அப்துல்பஹா அவர்களினால் காணமுடிந்தது. சந்தேகமின்றி அவர்கள் கடிதங்களை வழிமறிக்க முயல்வார்கள், முகம்மது தாகி அவர்களும் அவர்களுடைய சதிகளின் குறியாக விரைவில் மாறுவார். ஆகவே அப்துல்பஹா என்ன செய்தார் என நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர் முகம்மது தாகி அவர்களின் மீது மிகவும் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்ததனால், அவருடைய விலைமதிப்புள்ள சேவைகளை அப்துல்பஹா இழக்க விரும்பவில்லை. ஆகையினால் அவரை அப்துல்பஹா பாதுகாப்புக்காக எகிப்து நாட்டில் உள்ள போர்ட் செய்ட் என்ற அருகாமை இடத்துக்கு அனுப்பிவைத்து கடிதங்களை தமக்கு கொண்டு வருவதற்காகவும், எடுத்து செல்வதற்காகவும், அப்துல்பஹாவின் பகைவர்கள் சந்தேகம் கொள்ளாத மற்றவர்களை ஏற்பாடு செய்தார். அங்கே போர்ட் செய்ட் என்ற இடத்தில் வழக்கம்போலவே முகமது தாகி அவர்கள் தூரத்து நிலங்களில் இருந்து மடல்களை தொடர்ந்து அனுப்பியும் பெற்றும் வந்தார், அதன் வழி அப்துல்பஹா அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையிலிருந்து தளரவே இல்லை. இவ்வாறாக மிகவும் இருண்ட காலத்திலும் கூட, புனித நிலத்தில் இருந்து மின்னிய வழிகாட்டுதல் எனும் ஒளி மிகவும் தனிமையான இடங்களிலும் உள்ள நண்பர்களைச் சென்று அடைந்தது.*

### உ. விளையாட்டு: “வழிகாட்டி”

மாணவர்களை ஜோடிகளாக பிரிக்கவும். ஒவ்வொரு ஜோடியிலும் உள்ள ஒரு குழந்தையின் கண்ணைக் கட்டவும், மற்றொரு குழந்தை அவரை சுற்றி அழைத்துப் போகச் செய்யவும். பாதையில் அவர் இடறிவிழாமல் இருக்க உறுதிச் செய்யவும். கூடுதல் சவாலுக்காக, கண்கட்டப்பட்ட குழந்தை மரத்தண்டுகள், குழிகள், பாறைகள் மற்றும் சக்கரங்கள் போன்ற தடைகளைச் சுற்றி வழிகாட்டப்படலாம். கட்டளைகளை பிறப்பிப்பதற்கும் பெறுவதற்குமான

உங்களுடைய மாணவரின் திறமையாற்றலை அதிகரிப்பதற்காக, கண் கட்டப்பட்ட குழந்தையின் கையை யாரும் பிடித்துக் கொள்ளாமல், மற்றொரு குழந்தை வெறும் வாய்வழி கட்டளைகளின் மூலம் வழிகாட்டலாம். அக்குழந்தை இடறிவிழுந்தால், அக்குழந்தையை பிடிப்பிப்பதற்காக வழிகாட்டி அருகில் பின்தொடர வேண்டும்.

மேற்கொண்ட விளையாட்டுக்கு மாறாக, அந்த மாணவர்கள் யாவரும் கண்கட்டப்பட்டு, உங்களினால் அல்லது குழந்தைகளில் ஒருவரினால் வழிநடத்தப்படும் படியாக ஒரு ரயிலை அமைக்கலாம்.

**ஊ. வண்ணமிடுதல் : வரைப்படம் 19**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 20

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

நீங்களும் சில மாணவர்களும் ஆரம்ப பிரார்த்தனைகளை கூறிய பிறகு, கடந்த மூன்று பாடங்களாக கற்கும் பிரார்த்தனைகளை மீளாய்வு செய்யவும்.
பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

இறையன்பு எனும் நெருப்பு

எனது இதயத்தில்
ஒரு நெருப்புள்ளது
இறைவன் வைத்தது
விசேஷ நெருப்பது
அந்நெருப்பு
அந்நெருப்பு
இறையன்பின் நெருப்பு

சரணம்:
நான் பிரார்திப்பேன்
இறைவனிடம்

அந்நெருப்பை இதயத்தில் ஏற்றவே
இறையன்பின் நெருப்பு
இறையன்பின் நெருப்பது
அவ்வொளி
இதயத்தில் ஒளிர முயரசிப்பேன்.

ஒவ்வொரு நாளும்
பிரார்த்தித்து
நன்மை செய்து
அந்நெருப்பை தூண்டுவேன்
பிரார்த்தித்து
சேவை செய்யும் போது
அந்நெருப்பு வளரும்

நெருப்பு எரிந்து
அதன் வழி வருபவர்
வெப்பம் உணர்ந்து
அதன் வழி வருபவர்
அனைவரும் வெப்பம் உணர்வார்கள்

சரணம்

**இ. மேற்கோள்களை மனனம் செய்தல்**

இந்த பாடத்தின் கருப்பொருள் தூண்டி எரிய செய்தல், இந்த கருப்பொருளையும், மனனம் செய்வதற்கான மேற்கோளை அறிமுகப்படுத்த கீழ்வரும் வாக்கியங்கள் உங்களுக்கு உதவலாம்:

கடவுளை அறிவதற்கும் அவரை நேசிப்பதற்கும் ஒவ்வொரு மனிதப் பிறவியும் படைக்கப்பட்டார், நாம் அனைவரும் நம்முடைய இதயங்களில் இறைவனின் அன்பின் சுடரை வைத்துள்ளோம். அவரை அன்றாடம் வழிபடுவதன் வழியாகவும் பிறருக்கு சேவை செய்வதன் வழியாகவும் கடவுளின் அன்பு எனும் அணலை நாம் மூட்டுவது அவசியமாகும். இந்த அணல் அதிகமான ஆற்றலுடன் எரிய எரிய, நம்மைக் கடப்போர்களால் அது உணரப்பட்டு அது அவர்களின் மனங்களை பிரகாசிக்கச் செய்யும். நாம் அவ்வாறு தூண்டப்படும் போது, நாம் ஒளிக் கொடுப்பதை நிறுத்த முடியாமல் இருக்கும் மெழுகுவர்த்திகளைப் போலாகிவிடுவோம். பின்வரும் மேற்கோளை நாம் மனப்பாடம் செய்வோமாக:

**“மெய்யாகவே, உமது இதயத்தில் இறைவனின் அன்பெனும் தீயைத் தூண்டி எறியச்செய்யுமாறு நான் கடவுளை வேண்டுகிறேன்…”[122]**

*தூண்டுதல்*

1. இல்லம் குளிராக இருந்தது, ஆகவே எக்சல் அவர்களின் தந்தை நெருப்பை ஏற்றுவதாக முடிவு செய்தார். அவர் அடுப்பில் பெரிய மரக்கட்டைகளை மேலே வைத்து கீழே சில சுள்ளிகளைக் கொளுத்தினார். அந்த விறகு விரைவில் தூண்டப்பட்டு பற்றிக் கொண்டது, அந்த தீயும் அந்த அறையை சூடேற்றியது.

2. விஞ்ஞானி ஒருவர் பள்ளிக்கு வந்து, பிரபஞ்சத்தின் பல்வேறு இயக்கங்களைப் பற்றி பல சுவாரஸ்யமான விஷயங்களை மாணவர்களுக்கு விளக்கினார். அந்த உரைக்குப் பிறகு அவரிடம் பல கேள்விகளைக் கேட்க தொடங்கினர். உலகைப் பற்றி இன்னும் கூடுதலாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை அவர் மாணவர்களுக்குள் தூண்டிவிட்டிருந்தார்.

**ஈ. கதை**

*தாமஸ் பிரேக்வெல் என்பவர் 19ம் நூற்றாண்டின் இறுதியில் வசித்த ஒரு இளம் ஆங்கிலேயராவார். அவர் தென் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பருத்தி ஆலையில் ஒரு முக்கியமான பதவியை வகித்தார், தம்முடைய விடுமுறைகளை ஐரோப்பாவில் கழித்தார். 1901ம் ஆண்டு கோடைக்காலத்தின் போது ஐரோப்பாவுக்குச் செல்லும் வழியில் அவர் கப்பலின் மேலே ஒரு அம்மையாரைச் சந்தித்து அவரிடம் ஆன்மீகத் தலைப்புகளைப் பற்றி பேசத் தொடங்கினார். அவர்கள் பாரீஸ் நகரை வந்து சேர்ந்ததும், அந்த நகரில் வசித்த தம்முடைய தோழியைக் காண்பதற்காக அந்த அம்மையார் அவரை அடுக்கு மாடி வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்றார், அந்த தோழிக்கும் கூட அதுபோன்ற ஆர்வங்கள் உள்ளன என அந்த அம்மையாருக்குத் தெரியும். அந்த இளைய பெண்மணி அவர்களை வரவேற்று, அந்த மூவரும் சிறிது நேரத்துக்கு உரையாடினர். புறப்படுவதற்கு முன்பாக, தாம் மீண்டும் திரும்பி வந்து மேலும் அன்று பேசிய விஷயங்களை போல பேசமுடியுமா என அந்த இல்லத்து பெண்மணியை கேட்டுக் கொண்டார். மறு நாள் காலையில் வரும்படி அவர் அழைக்கப்பட்டார்.*

*அடுத்த நாள் அவர் வந்து சேர்ந்த போது, அவருடைய கண்கள் பிரகாசமாக ஜொலித்ததையும் அவருடைய குரல் உணர்ச்சி நிறைந்து இருந்ததையும் அந்த இளைய பெண்மணி கவனித்தார். அவரை அமரும்படி அந்த பெண்மணி கேட்டுக் கொண்டார். பிரேக்வெல் அந்த பெண்மணியை சற்றுநேரம் உற்று கவனித்து, அந்த அம்மையாரிடம் ஒரு அதிசய அனுபவத்தை விளக்கினார். முந்தைய நாள் அவருடைய இல்லத்திலிருந்து தாம் வெளியேறிய பின்னர், அந்த மாலைப் பொழுதின் வெப்பமும் கனமும் நிறைந்த காற்றினூடே அவர் ஒரு பாதையின் வழியாக தனியே நடந்தார். தம்மைச் சுற்றி ஓர் இலையும் அசையவில்லை. அப்பொழுது திடீரென ஒரு பெரிய காற்று வீசியது, அந்தக் காற்றில் இருந்து அவரால் இனிமையும் ஆற்றலும் கொண்ட ஒரு குரலைக் கேட்டார், அது கடவுளிடம் இருந்து ஒரு புதிய செய்தியின் வருகைப் பற்றி பேசியது.*

*சாந்தமாக இருக்கும்படியாக அந்த இளைய பெண்மணி அவரைக் கேட்டுக் கொண்டார். பிரேக்வெல் குறிப்பிட்ட செய்தியைப் பற்றி அந்த பெண்மணிக்கு தெரிந்திருந்தது, அடுத்த மூன்று நாட்களில், பல மணிநேரம் எடுத்துக் கொண்டு, பஹாய் சமயம் பற்றி தமக்குத் தெரிந்த அனைத்தைப் பற்றியும் அந்த பெண்மணி அவரிடம் கூறினார் - அதன் வரலாறு, அதன் போதனைகள் - புனித ஸ்தலத்தின் அக்கா எனும் சிறை நகரில் வசித்து வந்த அந்தப் போதனைகளின் பரிபூரண உதாரணப் புருஷராகிய அப்துல்பஹா பற்றியும் பேசினார்.*

*மூன்று நாட்களின் இறுதியில், பிரேக்வெல் அவர்களின் இதயம் மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் நிறைந்து இருந்தது, அதனால் அக்கா நகருக்குப் பயணம் செய்து அப்துல்பஹாவைக் காண்பதைத் தவிர அவருக்கு வேறு ஒன்றும் தேவைப்படவில்லை. இந்த நோக்கத்திற்காக புனித ஸ்தலத்திற்குச் செல்லத் திட்டமிட்டிருந்த இன்னொரு*

*வாலிப மனிதர் அங்கே இருந்தார், அவர் பிரேக்வெல் தம்முடன் வருவதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்தார். ஆகவே அவர்கள் வருவதற்காக அனுமதி கோரி அப்துல்பஹாவுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டது, விரைவில் அவர்கள் இருவரும் பயணமானார்கள்.*

*அந்த இருவரும் அப்துல்பஹாவின் இல்லத்தை வந்து அடைந்ததும், மற்ற ஆண்கள் கூடியிருந்த இன்னொரு அறைக்கு அவர்கள் அழைத்துச்செல்லப்பட்டனர். சுற்றிப் பார்த்த பிரேக்வெல், உள்ளுக்குள் ஆழ்ந்த சஞ்சலப்பட்டார். தமது இதயம் ஈர்க்கும்படியாக அந்த அறையில் வேறு எவரும் இல்லை, அவர்கள் மத்தியில் அப்துல்பஹா இருப்பார் என நினைத்துக் கொண்டு, பாரீஸ் நகரில் அவர் கேள்விப்பட்ட அந்த சொர்க்கலோகப் பிறவியை அவர் அடையாளம் காணத் தவறிவிட்டாரோ என அவர் அஞ்சினார். அவர் நம்பிக்கை இழந்து அமர்ந்து கொண்டார். அந்த நேரம் பார்த்து ஒரு கதவு திறந்தது, பிரேக்வெல் நிமிர்ந்து பார்த்தார். அங்கே அவர் ஒரு பிரகாசமான ஒளியையும், அதில் இருந்து அப்துல்பஹா அவர்களின் உருவம் தோன்றுவதையும் கண்டார். உடனடியாக தம்முடைய ஆழ்ந்த ஆவல் நிறைவேறிவிட்டதை அவர் புரிந்து கொண்டார்.*

*அப்துல்பஹா அவர்களின் முன்னிலையில் பிரேக்வெல் அவர்கள் இரண்டு பிரகாசமான நாட்களைக் கழித்தார், அப்போது அவருடைய இதயத்தில் தூண்டப்பட்ட தீ மேலும் மேலும் பலமாக வளர்ந்தது. குழந்தைகள் தொழிலாளிகளாகப் பயன்படுத்தப்படுகின்ற அந்த பருத்தி ஆலையில் தம்முடைய உத்தியோகத்தைப் பற்றி பிரேக்வெல் அப்துல்பஹாவிடம் சொன்னபோது, அந்தப் பதவியில் இருந்து உடனடியாக ராஜினாமா செய்யும்படியாக அப்துல்பஹா அவருக்கு அறிவுறுத்தினார், அவரும் தயக்கமின்றி அவ்வாறே செய்தார். தம் விஜயத்தின் இறுதியில் தம் உணர்வு சுடர்விட்டெரிய அவர் பாரீஸ் நகருக்குத் திரும்பினார். அந்த பருத்தி ஆலையில் நல்ல வருவாய் தந்த உத்தியோகத்தில் இருந்து அவருக்கு ஊதியம் கிடைக்கவில்லை, அவரும் நோயினால் மிகவும் அவதியுற்றார். ஆனால் இவை யாவும் கொஞ்சம்கூட அவருடைய மகிழ்வை மந்தமாக்கவில்லை. அவர் ஒரு பிரகாசமான மெழுதுவர்த்தியைப் போல எரிந்தார், தம்முடைய ஒளியை அவர் கண்ட அனைவருடனும் பகிர்ந்து கொண்டார், இறுதியில் நோயினால் பீடிக்கப்பட்டு அவர் மரணமடைந்தார். அவர் மறைந்தபோது அவர் நற்பெயரில் அப்துல்பஹா ஒரு நிரூபத்தை வெளியிட்டார், அது பின்வரும் செய்யுளை உள்ளடக்கியுள்ளது: “ஓ பிரேக்வெல், என் அன்புக்குறியவரே! மேலுலகக் கூட்டத்தினர் எனும் ஒளிவிளக்கு மத்தியில் நீர் ஒரு தீபத்தை ஏற்றிவிட்டீர், நீர் அப்ஹா விண்ணுலகில் காலடி வைத்துள்ளீர், ஆசீர்வதிக்கப்பட்ட விருட்சத்தின் நிழலில் நீர் புகலிடம் கண்டுள்ளீர், சொர்க்கத்தின் தஞ்சத்தில் நீர் அவருடைய சந்திப்பை அடைந்து விட்டீர்.”*

### உ. விளையாட்டு: “நோயுற்றோருக்கு உதவுதல்”

“நோயுற்ற நோயாளியாக” நடிக்கும்படி குழந்தைகளில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும். இப்பொழுது வேறு இரண்டு குழந்தைகள், ஒருவரின் ஒருவர் முகங்களை பார்த்த வன்னம் நின்று, அவர்களுடைய கைகள் மற்றவரின் முன்னங்கையுடன் கோர்த்து, ஒரு நாற்காலியை உருவாக்கவும். மாறாக, குழந்தைகளின் உயரம் மற்றும் திறனை பொருத்து, வேறு மாதிரி நாற்காலியை உருவாக்கலாம். அதாவது இரண்டு குழந்தைகளும் தங்களின் சொந்த வலது

மணிக்கட்டை இடது கையால் பிடித்து கொள்ள வேண்டும். பிறகு தங்களது வலது கையை கொண்டு இன்னொரு குழந்தையின் இடது மணிக்கட்டை பிடிக்க வேண்டும்.

வகுப்பில் மற்ற குழந்தைகள் இப்போது தங்களது "நோயுற்ற நண்பரை" நாற்காலியில் அமர வைக்க உதவ வேண்டும். ஒரு மரத்தையோ அல்லது வேறொரு இடத்தையோ "சுகாதார நியமாக" தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும், நாற்காலியை தங்களின் கைகளில் உருவாக்கிய குழந்தைகல் "நோயுற்ற" குழந்தையை அந்த இடத்திற்கு எடுத்து செல்ல வேண்டும்.

பெரிய குழுவுடன், நாற்காலிக்கு பதிலாக "படுக்கையை" குழந்தைகள் உருவாக்கலாம், அதாவது குழந்தைகள் இரு வரிசையாக எதிர் எதிராக ஒருவரின் ஒருவர் முகங்களை பார்த்த வண்ணம் நிற்க வேண்டும். பிறகு தங்களது கை முட்டியை மடக்கி, எதிரில் இருப்பவரின் முன்னகையை பிடித்துக் கொள்ள வேண்டும். "நோயுற்ற" குழந்தை பிறகு அந்த படுக்கையில் படுத்து, "சுகாதார நிலையத்திற்கு" எடுத்து செல்லப்பட வேண்டும். “நோயாளியை” பத்திரமாக சுகாதார நிலையத்திற்கு கொண்டு செல்ல ஒவ்வொரு குழந்தையும் ஒன்றிணைந்து பணிபுரிய வேண்டும் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். “நோயாளியை கீழே போட்டுவிட்டால், அவருக்கு அடிபடும், அதனால் நாம் சோகமாகி விடுவோம். ஆனால் எந்த ஒரு பிரச்சனையுமில்லாமல் சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றால், நாம் மகிழ்ச்சியும் தன்னிறைவு கொண்டவர்களாக உணர்வோம், ஏனெனில் நமது நண்பர்களுக்கு நாம் உதவியுள்ளோம்,” என்று நீங்கள் கூறலாம்.

**ஊ. வண்ணமிடுதல் : வரைப்படம் 20**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 21

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

இந்த பாடம் மற்றும் அடுத்த மூன்று பாடங்களில், பகுதி 19ல் பரிந்துரைக்கப்பட்டது போல உங்களுக்கு மனப்பாடமாக தெரியும் பிரார்த்தனையை கூறி வகுப்பை ஆரம்பிக்கலாம். நீங்களும் உங்கள் குழந்தைகளில் சிலரும் ஆரம்ப பிரார்த்தனைகளை கூறிய பிறகு, கீழுள்ள பிரார்த்தனையை அவர்களுக்கு வழங்கலாம், இது தான் குழந்தைகள் இந்த கிரேடில் மனனம் செய்யும் கடைசி பிரார்த்தனையாகும்.

> **“எனது அன்பிற்கினிய பிரபுவே! நான் ஒரு சிறு குழந்தை, என்னை உமது இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கச் செய்து என்னை மேன்மைப்படுத்துவீராக. நான் பூவுலகவாசி, என்னைச் சுவர்க்க வாசியாக மாற்றுவீராக; நான் கீழ் உலகத்தைச் சார்ந்தவன், என்னை உயர்ந்த மேலுலக இராஜ்ஜியத்தைச் சார்ந்தவனாக்குவீராக; நான் துக்கமுள்ளவன், என்னை ஒளிபொருந்தியவனாக்குவீராக; நான் பொருளாசை நிறைந்தவன், என்னை ஆன்மீகப் பண்புள்ளவனாக்குவீராக; தங்களது எல்லையற்ற அருட்கொடைகளை நான் வெளிப்படுத்திடச் செய்வீராக.**

**நீரே வலிமைமிக்கவர், எல்லோரையும் நேசிப்பவர்.”[123]**

ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)

பிரகாசம்

உயர்வின் ஒளியை நாம் பிரதிபலிக்க
உள்ளமும் ஒளிரும் அன்பு கனிவைக் கொண்டே
ஒளிர்ந்து பிராகசத்துடன் மகிழ்ந்திருக்க
ஊராரும் உணர்வார் இறை ஒளியின் வெப்பம்
உருவின் புத்திரனே........ நீயே எந்தன் ஒளிவிளக்கு, என் ஒளியும் உன்னுள் இருக்கிறது

இறைவனின் அன்பு வழிந்தோடுவது
என்றென்றுமே நிலையானதது
எழுந்து நாம் சேவை செய்யும் அளவிலே தான்
வளருமே அதனொளி பிரகாசமும் தான்
தயங்காதீர் ஒளிருவீர் முழுபலத்தில்
உள்ளங்கள் அவர் ஒளியில் நிறையும் வரை
உருவின் புத்திரனே........ நீயே எந்தன் ஒளிவிளக்கு, என் ஒளியும் உன்னுள் இருக்கிறது

இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

இன்றைய வகுப்பில் குழந்தைகள் பிரகாசத்தைப் பற்றிய மேற்கோள் ஒன்றை மனப்பாடம் செய்வார்கள், அதனை நீங்கள் பின்வரும் வழியில் அறிமுகம் செய்யலாம்:

கடவுளுடைய அன்பு எனும் ஒளி நமது இதயங்களை பிரகாசிக்கச் செய்யத் தவறுவதே இல்லை. இந்த ஒளி இன்னும் பிரகாசமாக எரிய எரிய நம்முடைய அன்பு மற்றும் இரக்கம் எனும் வெப்பம் இன்னும் பலமாகிறது. நம்மைச் சுற்றி உள்ளோரும் கூட நம்முடைய மகிழ்ச்சியான மற்றும் இரக்கமுள்ள செய்கைகளினாலும் நம்முடைய பிரகாசம் மற்றும் ஜொலிப்பும் கொண்ட முகங்களினாலும் நம்முடைய அன்பின் வெப்பத்தை உணரமுடியும். நம்முடைய இதயங்களில் விளக்கேற்றி வைக்கும் அந்தப் பிரகாசத்தின்பால் அவர்கள் ஈர்க்கப்படுகின்றனர். பிரகாசமென்ற பண்பின் முக்கியத்துவத்தை நாம் நினைவில் வைக்க உதவுவதற்காக, நாம் பின்வரும் மேற்கோளை மனப்பாடம் செய்வோமாக:

**“உருவின் புத்திரனே! நீயே எந்தன் ஒளிவிளக்கு மற்றும் என் ஒளியும் உன்னுள் இருக்கிறது. அதனிடமிருந்து உமது பிரகாசத்தைப் பெற்று, எம்மைத் தவிர வேறெவரையும் நாடாதே.”[124]**

*பிரகாசம்*

1. சில வேளைகளில் நாம் இருண்ட அறையில் இருந்து வெளியே செல்லும்போது, நமது கண்கள் பிரகாசமான ஒளிக்கு பழக்கமாகும் வரை நாம் நம்முடைய கண்களை மூடிக்கொள்ள வேண்டும். நாம் சூரியனின் பிரகாசத்திலிருந்து நம்முடைய கண்களை காக்கவேண்டும்.

2. திருமதி சண்டோஸ் அனைவரையும் தம்முடைய சொந்த குடும்பத்தைப் போலவே நேசிக்கிறார். அவர் எப்பொழுதுமே தயாளகுணம் உள்ளவராகவும், இரக்கம் நிறைந்தவராகவும், பிறருக்கு உதவக்கூடியவராகவும் இருக்கிறார். அவருடைய இதயத்தில் உள்ள அன்பை அவரை சந்திக்கின்ற எல்லா மக்களாலும் உணரப்படுகிறது, அவர்களுக்கு அது மகிழ்வைக் கொண்டு வருகிறது. அவருடைய பிரகாசத்தினால் அனைவரும் கவரப்படுகின்றனர்.

*நாடுதல்*

1. முட்டையிலிருந்து குஞ்சு பொரித்தவுடன், அது உண்பதற்காக தாய் உணவை தேடும். தாய்ப்பறவை புதிய குஞ்சுக்காக உணவை நாடுகிறது.

2. பள்ளிக்கூடம் ஒரு விசேஷமான சுற்றுலாவிற்காக எல்லா மாணவர்களையும் அழைத்தது. அதில் கலந்துக் கொள்ளும்பொருட்டு, அவர்களுக்கு தங்களின் பெற்றோரின் அனுமதி தேவைப்பட்டது. அந்த சுற்றுலா மேற்கொள்ளுவதற்காக எல்லா மாணவர்களும் தங்களுடைய பெற்றோர்களிடமிருந்து ஒப்புதலை நாடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**ஈ. கதை**

*டோரதி பேக்கர் ஒரு மேன்மையான மற்றும் மிகச் சிறந்த பெண்மணி என்பதோடு பஹாய் சமயத்தின் உயர்வுமிக்க நபர்களில் ஒருவரும் ஆவார். அவர் இளம்பெண்ணாக இருந்தபோது, அப்துல்பஹா மேற்கத்திய நாடுகளுக்கு பயணம் செய்தபோது, அவரைச் சந்திக்கின்ற பாக்கியத்தைப் பெற்றார். அவருடைய பிரகாசத்தினாலும் அன்பினாலும் மிகவும் ஈர்க்கப்பட்டதனால், அந்த பெண்மணி அவருடைய பாதையில் நடந்திட ஆவல் கொண்டார்.*

*டோரதி அவர்களின் பாட்டியாகிய எல்லென் பீச்சர், அப்துல்பஹாவைச் சந்திப்பதற்காக அவரை அழைத்துச் சென்றார். இதுவரை விஜயம் செய்திராத ஒரு இல்லத்தை அடைந்து, அப்துல்பஹா பேசுவதற்காக பலர் மெதுவாகவும் பக்தியோடும் பேசிக்கொண்டிருந்த ஓர் அறைக்குள் டோரதி நுழைந்தார். அவர்கள் அறைக்குள்ளே நுழைந்தவுடன் அப்துல்பஹா திருமதி பீச்சர் அவர்களைப் பார்த்து புன்னகைத்து, டோரதியை தனது அருகில் வந்து அமரும்படி டோரதிக்கு சைகைக் காட்டினார். டோரதி மிகவும் கூச்ச சுபாவம் நிறைந்த சிறுமி. தலையை தூக்கி மேலே பார்க்காதவாறு, அவரிடம் இருந்த இருக்கையை அடைவதற்காக அவரைச் சுற்றி அமர்ந்திருந்த மக்களைக் கடந்து டோரதி அவரது காலருகே இருந்த கால்மனையை சென்றடைய கவனமாக நடந்தார்.*

*அப்துல்பஹா பேசும்போது, அவர் தம்முடைய கண்களை கீழே செலுத்தி தம்முடைய கருப்பு காலணிகளைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார். அப்துல்பஹா டோரதியை*

*காணவில்லை. டோரதியும் அப்துல்பஹாவைப் பார்க்கக்கூடிய தைரியத்தைக் கொண்டிருக்கவில்லை. டோரதி பதற்றம் கொண்டு, தெரியாத ஒன்றுக்கு பயந்தவாறு தொடர்ந்து கீழே பார்த்திருந்தார். ஆனால் அவர் படிப்படியாக சாந்தமடைந்தார், விரைவில் பயம் நீங்கிவிட்டது. ஆழ்ந்த ஆவலுக்கான ஓர் உணர்வு அவரை ஆட்கொண்டது. அப்துல்பஹா அவர்களின் அன்பின் மகத்துவத்தில் தம்முடைய ஆத்மா மறையவேண்டும் என்ற ஆழ்ந்த ஆவலில் அவர் நிரம்பியிருந்தார். அவருடைய பிரகாசத்தில் அவர் கவரப்பட்டு, அவருடைய முன்னிலையின் வெப்பத்தில் அவர் மூழ்கப்பட்டிருந்தார்.*

*டோரதி அவர்களின் பயம் இன்னும் பெரியதோர் ஆற்றலினால் ஈடுசெய்யப்பட்டிருந்தது. அப்துல்பஹாவிடம் இருந்து ஒரு கனம்கூட பிரிந்து இருப்பதை அவரால் கற்பனைச் செய்ய இயலவில்லை. அவருடைய அன்பான கண்கள் கடவுளுடைய ஆன்மீக உலகினை அவருக்குத் தெரிவிக்கும் வகையில் அவரோடு பேசுவது போல் இருந்தன. அவருடைய பிரகாசம் காந்தச் சக்திப் போல இருந்தது. தாம் நகர்ந்துள்ளதைக் கூட உணராதவகையில் அவர் அப்துல்பஹாவின் திசையை நோக்கித் திரும்பி, தன்னுடைய முழங்கைகள் தமது முட்டிகளின் மீதும் தன்னுடைய தாடை தமது கரங்களில் இருந்தவாறு அப்துல்பஹா அவர்களின் பிரகாசமான முகத்தைப் பார்த்தவாறு இருப்பதை உணர்ந்தார்.*

*அந்த நாளில் அப்துல்பஹா என்ன பேசினார் என டோரதிக்கு நினைவிலில்லை. அவருக்கு நினைவில் இருந்ததெல்லாம் அவருடைய இரக்கமான முகமும், அவரது இனிமையான குரலும், அவருடைய முன்னிலையின் வெப்பமும்தான். தம் இதயத்தில் கொண்டிருந்த அன்பு மிகவும் பலமாக இருக்கவே, இறுதியில் அப்துல்பஹா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுத அவர் முடிவெடுத்தார். தம்முடைய கடிதத்தில் அவருக்கும், அவருடைய தந்தையார் பஹாவுல்லாவின் சமயத்திற்கு சேவை செய்வதற்கும் தம்மை அனுமதிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார். தாம் டோரதி அவர்களுக்கு கொடுத்த பதிலில், அப்துல்பஹா அவருடைய குறிக்கோளை போற்றி, அவருக்கு கடவுளுடைய கிருபைகளை உறுதியளித்து, அவர் தம்முடைய ஆவலில் வெற்றி அடைவார் என்ற தம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்தினார். பிறகு உண்மையாகவே, டோரதி தம்முடைய முழு வாழ்வையும் கடவுளுக்கும் மனிதகுலத்துக்கும் சேவை செய்வதற்காக அர்ப்பணம் செய்தார்.*

## உ. விளையாட்டு: “இருவழி பிரதி”

குழந்தைகளை ஜோடிகளாகப் பிரித்து, ஒருவர் தம்முடைய ஜோடியில் உள்ளவரைப் பார்க்கும்படியாகச் செய்யவும். இப்பொழுது ஒவ்வொரு ஜோடியிலும் உள்ள ஒரு குழந்தையை செய்கைகளை செய்யுமாறு கேட்டுக்கொள்ளவும், அதே வேளையில் அடுத்த குழந்தை அதே செய்கையைப் பிரதிபலிக்குமாறு செய்யவும். சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த பங்காளர்கள் தங்களுடைய இடத்தை மாற்றிக்கொள்ளலாம். நீங்கள் செய்கைகளைக் காட்டிலும் அவர்களை முக பாவங்களையும் பிரதிபலிக்குமாறு செய்யலாம். அடுத்தபடியாக, ஒவ்வொரு ஜோடியிலும் ஒரு குழந்தை அடுத்த குழந்தைக்குப் பின்னால் நிற்கும்படிச் செய்யுங்கள். முன்னால் உள்ள குழந்தை நகரும் போது, பின்னால் உள்ள குழந்தை நிழலை போல அதே அசைவினைப் பின்பற்றும்படி செய்யுங்கள்.

**ஊ. வண்ணமிடுதல் : வரைப்படம் 21**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 22

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

ஆரம்ப பிரார்த்தனைகளுக்கு பிறகு, குழந்தைகள் தொடர்ந்து கடந்த பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரார்த்தனையை தொடர்ந்து மனனம் செய்வார்கள்.

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

நான் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்

நீ அறிய ஒன்று உள்ளது, நாமிந்த சமயத்தில் காட்டவே
செயலில் மனிதர் நாம் சொல்லில் அல்ல
நம் வாழ்வினாலே காட்ட வேண்டும் சமயத்தை
நம் நண்பருக்கும் பகைவருக்கும் வழி இதே

மகிழ்ச்சியாய் நான் இருக்க வேண்டும், வாழும் வரை அவர் ஊழியனாக நான்
வாழ உறுதி கொள்ள வேண்டும்,
இதற்கு இறைவனின் சட்டங்களை – நான்
ஏற்று அதன் படி வாழனும். ஆம்.
இதற்கு இறைவனின் சட்டங்களை – நான்
ஏற்று அதன் படி வாழனும்.

நீ அறிய ஒன்று உள்ளது, இவ்வுலகில் வெறும் காட்சியே
வெற்றுப் பேச்சால் களைப்பு மக்களுக்கே
நீ போதித்ததை சாதித்திட நோக்குகின்றார்.
நீ போதித்ததை சாதித்திட நோக்குகின்றார்.

மகிழ்ச்சியாய் நான் இருக்க வேண்டும், வாழும் வரை அவர் ஊழியனாக நான்
வாழ உறுதி கொள்ள வேண்டும், இதற்கு இறைவனின் சட்டங்களை – நான்
ஏற்று அதன் படி வாழனும். ஆம்.
இதற்கு இறைவனின் சட்டங்களை – நான்
ஏற்று அதன் படி வாழனும்.

## இ. மேற்கோள்களை மனனம் செய்தல்

குழந்தைகள் இன்று பின்வரும் மேற்கோளை மனப்பாடம் செய்வார்கள். மேற்கோளை உங்கள் மாணவர்களுக்கு விளக்குவதில் உங்களுக்கு உதவும் வகையில் கீழே சில கருத்துக்கள் உள்ளன:

விசுவாசமுள்ள ஓர் ஆன்மா கடவுள் மீது கொண்ட அன்பை மறக்கவே கூடாது. அவர்மீது நாம் கொள்கின்ற விசவாசத்தினால்தான் நமக்கு சிரமமாக இருந்தாலும் கூட, இறைவனுடைய போதனைகளைப் பின்பற்றுவதற்கும் அவருடைய சட்டங்களுக்கு அடிபணிவதற்கும் நாம் எப்பொழுதும் முயற்சி மேற்கொள்கிறோம். ஆகவே அவருடைய நல் மகிழ்வை எய்தும் சிந்தனையைத் தவிர வேறு எந்த சிந்தனையும் இல்லாமல், நாம் மற்றவர்களுக்கு சேவை செய்யவும் போற்றத்தக்க செயல்களை மேற்கொள்ளவும் நாம் கடினமாக உழைக்கிறோம். விசுவாசமுள்ள ஓர் ஆன்மாவுக்கு இறைவனை மகிழவைக்க கடுமையாக முயற்சி செய்வதைக் காட்டிலும், வேறெந்த பேரானந்தமும் இல்லை. பஹாவுல்லாவின் இந்த மேற்கோளை மனனம் செய்வோமாக:

**“உயரிய முயற்சி எனும் ஆடையினால் அணிவிக்கப்பட்டு, இச்சமயத்திற்கு சேவை செய்ய எழுந்துள்ள ஒரு விசுவாசி மகிழ்வெய்துவாராக”[125]**

*அணிவிக்கப்படுவது*

1. விசேஷமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அணிகின்ற நல்ல ஆடை ஒன்று மே அவர்களிடம் உள்ளது. சமூகக் கூட்டத்திற்காக அவர் அந்த ஆடையை அணிந்தார். மே அவர்கள் தன்னுடைய விசேஷமான ஆடையினால் அணிவிக்கப்பட்டிருந்தார்.

2. அந்த விழாக்கென மன்னர் தம்முடைய வெல்வட் ஆடையை அணிந்திருந்தார். அவர் தம்முடைய மிகவும் சிறப்பான ஆடையினால் அணிவிக்கப்பட்டிருந்தார்.

*ஆடை*

1. சில இடங்களில், நீதி மன்றத்தில் நீதிபதிகள் வெள்ளை டோப்பாவையும் நீண்ட கருப்பு ஆடையையும் அணிய வேண்டும். அவர்கள் நீதிபதிகளுக்கான முழு ஆடையையும் அணிய வேண்டும்.

2. அரண்மனையிலிருந்து புறப்படுவதற்கு முன்பாக, அந்த இளவரசன் தம்முடைய அங்கவஸ்திரத்தையும் கிரீடத்தையும் அணிவார். அவர் அரச ஆடையை அணிகிறார்.

*முயற்சி*

1. பள்ளிக்கூடத்தைச் சுற்றி மரங்களை நடுவதாக மாணவர்கள் முடிவு செய்தனர். விதைகளையும் மண்ணையும் வழங்குவதன் வழியாக சமூகம் அவர்களின் முயற்சிகளை ஆதரித்தது.

2. மலையின் உச்சிக்கு ஏறுவதாக பியேர் அவர்களும் ஆர்லேன் அவர்களும் முடிவெடுத்தனர். இது ஒரு சிரமமான காரியம் என அவர்களுக்கு தெரியும், ஆனால் அவர்கள் முயற்சி எடுப்பதில் உறுதியாக இருந்தனர்.

**ஈ. கதை**

*அப்துல் பஹா சிறுவராக இருந்தபோது, பாரசீக நாட்டின் உயர்க்குடியின் அங்கமாகிய தமது குடும்பத்தில் இஸ்பாண்டியார் என்ற பெயரைக்கொண்ட சேவகர் ஒருவர் இருந்தார். அவர் அக்குடும்பத்திற்கு மிகவும் விசுவாசமாக நடந்து கொண்டார், அவர்களும் அவரை அதிகமாகவே நம்பினர். தப்பெண்ணத்தின் காரணமாகவும் அறியாமையின் காரணமாகவும் அதிகாரத்தில் உள்ளவர்கள் அப்துல்பஹாவின் அன்புக்குரிய தந்தையான பஹாவுல்லாவை கைது செய்தபோது அக்குடும்பத்தின் உடைமைகள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டன. அவர்களுக்கென எதனையும் விட்டுவைக்கவில்லை, பஹாவுல்லாவுக்கு நெருக்கமாக இருந்த அனைவரும் ஆபத்துகுள்ளானர். இருந்தும்கூட, இஸ்பாண்டியார் தொடர்ந்து அக்குடும்பத்தை கவனித்து வந்தார். பல அதிகாரிகள் இஸ்பாண்டியார் அவர்களைத் தேடுவார்கள் என்பதை புரிந்திருந்த அப்துல் பஹாவின் தாயார், அவரை நகரைவிட்டு வெளியேறும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் இஸ்பாண்டியார் வெளியேறுவதாக இல்லை.*

*“நான் போகமுடியாது,” என அவர் கூறி, தாம் கடனாக வாங்கிய பொருட்களுக்காக பல கடைக்காரர்களுக்கு திரும்ப பணம் கொடுக்க வேண்டியுள்ளது என விளக்கினார். “நான் எப்படிச் செல்வது? பஹாவுல்லாவின் சேவகர் பொருட்களை வாங்கி பயன்படுத்திவிட்டு அவற்றிற்கான பணத்தை கடைக்காரர்களுக்கு கொடுக்காமல் சென்றுவிட்டான் எனப் பேசுவார்கள். வாங்கிய அனைத்திற்கும் நான் பணம் செலுத்தும் வரை நான் போக முடியாது. அவர்கள் என்னை அழைத்துச் சென்றால் பரவாயில்லை. அவர்கள் என்னை தண்டித்தால், அதில் தீங்கொன்றும் இல்லை. அவர்கள் என்னைக் கொன்றால், கலக்கமுறாதீர்கள். ஆனால் இங்கிருந்து செல்வது என்பது இயலாத ஒன்று. நான் கொடுக்க வேண்டிய பணத்தைச் செலுத்தும் வரை நான் இங்கே இருந்தாக வேண்டும்.” என அவர் கூறினார்.*

*ஒரு மாத காலத்திற்கு இஸ்பாண்டியார் தெருக்களிலும் சந்தைகளிலும் நடந்து தம்மிடம் இருந்த சிறு பொருட்களை விற்று வந்தார். தாம் கடைசிக் கடனைக் கட்டியதும் அவர் அக்குடும்பத்திற்குச் சென்று அவர்களிடமிருந்து விடைபெற்றார், காரணம் அதற்கு மேல் அவர்களோடு வசிக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். இந்த ஆபத்துமிக்க காலத்தில் அவரை அழைத்து பாதுகாப்பு கொடுத்து காப்பாற்றுவதாக ஓர் அமைச்சர் சம்மதித்தார்.*

*பல மாதங்களுக்குப் பிறகு, பஹாவுல்லா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு, அவரும் அவருடைய குடும்பமும் அதிகாரிகளினால் பாரசீகத்திலிருந்து நாடு கடத்தப்பட்டனர். அண்டை நாட்டின் நகரான பாக்தாத் நகருக்கு அவர்கள் சென்றனர். பஹாவுல்லாவுக்கு என்னென்றும் விசுவாசமாக இருந்த இஸ்பாண்டியார் பஹாவுல்லாவின் இல்லத்தில் மீண்டும் சேவை ஆற்ற முடியுமா எனக் கேட்பதற்காக பாக்தாத் நகருக்குப் பயணம் செய்தார். அவரிடம் பஹாவுல்லா கூறினார். “நீ எம்மை விட்டுச் சென்றதும், வேறு எவரும் உமக்குப் பாதுகாப்புக் கொடுக்க இயலாதபோது அங்கே பாரசீக அமைச்சர் ஒருவர்*

*தங்குவதற்கென உமக்கு ஒர் இடத்தைக் கொடுத்தார். அவர் உமக்கு அடைக்கலம் கொடுத்து உம்மைப் பாதுகாத்ததனால் நீர் அவரிடம் விசுவாசமாக இருக்கவேண்டும். நீர் அங்கிருந்து விலகுவதில் அவர் திருப்தி கொண்டாரேயானால், நீர் எங்களிடம் வரலாம்; ஆனால் நீர் போகக் கூடாது என அவர் நினைத்தால், அவரை விட்டு விலக வேண்டாம்."*

*நிச்சயமாக, இஸ்பாண்டியார் நேர்மையானவராகவும் மிகவும் நம்பிக்கைக்குரியவராகவும் விசுவாசமுடையவராகவும் இருக்கவே, அவரை அனுப்ப அமைச்சர் அனுமதிக்கவில்லை. அவர் சொன்னார். "ஓ இஸ்பாண்டியார். நீர் போவதை நான் விரும்பவில்லை. ஆனால், நீர் போவதாக இருந்தால், அது உம்முடைய விருப்பத்தின்படி இருக்கட்டும்." ஆனால் இஸ்பாண்டியார் பஹாவுல்லாவின் வார்த்தைகளை நினைவுக் கூர்ந்தார். அவர் அந்த அமைச்சர் காலமாகும் வரை அவருடைய சேவையில் இருந்தார். பிறகு இஸ்பாண்டியார் மீண்டும் தாம் அதிகமாக நேசித்த குடும்பத்திற்குத் திரும்பி, தமது கடைசிக்காலம் வரை அப்துல் பஹா அவர்களுக்கு சேவை செய்து வந்தார்.*

**உ. விளையாட்டு: "என் கதவை தட்டுவது யார்?"**

ஒரு குழந்தையின் கண்ணைக் கட்டி, அவருடைய முதுகு, வகுப்பின் பிறரைப் பார்ப்பதாக இருந்து, ஒரு இருக்கையின் மீது அவரை உட்காரவைக்கவும். இப்பொழுது இன்னொரு குழந்தையின் விரலால் சுட்டி காட்டவும். அவர் அந்தக் கண்கட்டப்பட்ட குழந்தையிடம் சென்று அந்த இருக்கையைத் தட்ட வேண்டும். அமர்ந்திருக்கின்ற குழந்தையும் "என் கதவை தட்டுவது யார்?" எனக் கேட்கிறான். நாற்காளியை தட்டிய குழந்தை தன் குரலை மாற்றி, "நான் தான்" என பதில் தர வேண்டும். அமர்ந்துள்ள குழந்தையும் யார் தட்டுகிறார் என யூகிக்க முயல்கிறான். கண் கட்டப்பட்ட குழந்தைக்கு மூன்று வாய்ப்புகள் தரப்படுகின்றன, அதன் பிறகு இன்னொரு குழந்தைக்கு வாய்ப்பு தரப்படுகிறது.

**ஊ. வண்ணமிடுதல் : வரைப்படம் 22**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 23

**அ. பிரார்த்தனைகளை கூறி மனனம் செய்வது**

பிரார்தனைகளுடன் வகுப்பை ஆரம்பித்த பிறகு, பாடம் 21ல் அறிமுகப்படுத்திய பிரார்த்தனைகளை மனனம் செய்யும் குழந்தைகளின் முயற்சிகளில் குழந்தைகள் முன்னேறுவதற்கு உதவி செய்யுங்கள்.

**ஆ. பாடல்கள் (முந்தைய பாடல்களின் மறு ஆய்வு உட்பட)**

பொறுமை

உங்கள் கால்கள் தளர்ந்தன, போகும் பாதை தூரம் தூரம்

உங்கள் முயற்சியும் குறைந்தது,உறைக்கும் வெயிலோ அதிகம் அதிகம்
பொறுமை இழப்பதில் அர்த்தமில்லை, புலம்பி அழுவதில் பயனுமில்லை
அடிமேல் அடியாய் எடுத்து வைத்து, அந்த நேரத்தில் அடைந்திடலாம்
பொறுமை பதிலாம், உங்கள் கவலை சோகத்திற்கு
பொறுமை பரிசாம், மகிழ்ச்சியைக் கொண்டு வருவதற்கு
உன் சகோதரன் ஒன்றை புரியவில்லை – நீ, ஒன்றுக்கு பலமுறை விளக்குகின்றீர்
மீண்டும் ஒருமுறை விளக்கிட முயன்று, இயன்ற நன்மை செய்கின்றீர்
பொறுமை இழப்பதில் அர்த்தமில்லை, கடுமை என்பது வீணாகும்
அன்பை அவரிடம் காட்டினால், அவர் அறிந்திட உதவிகின்றீர்
பொறுமை பதிலாம்.......
இன்னும் சிறப்புக்கு முயலுகின்றீர், எனினும் வெற்றியில்லை
இனியொரு முயற்சி எங்கும் செல்ல, எனவும் எண்ணுகிறீர்
பொறுமை இழப்பதில் அர்த்தமில்லை, குறைவாய் செய்வது சிறப்பு இல்லை
கடுமையாக முயற்சி செய்தால், படிப்படியாய் வெற்றி
பொறுமை பதிலாம்........

## இ. மேற்கோள்களை மனப்பாடம் செய்தல்:

இன்று குழந்தைகள் பொறுமையைப் பற்றிய மேற்கோள் ஒன்றை மனப்பாடம் செய்வார்கள், அதனை நீங்கள் பின்வரும் வழியில் வழங்கலாம்:

பொறுமை என்பது நாம் கொண்டிருக்கக் கூடிய மிகவும் முக்கியமான பண்புகளில் ஒன்று. பொறுமை இல்லாமல் இந்த வாழ்க்கையில் நாம் குறைவானதையே சாதிக்க முடியும். நமது கல்வியிலும், நமது உத்யோகத்திலும், பிறரோடு நாம் கொண்டிருக்கும் தோழமையிலும், ஆன்மீக ரீதியில் வளர்வதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளிலும் பொறுமை அவசியமாகிறது. வாழ்க்கையில் நாம் எல்லாவற்றையுமே விரைவாக செய்துவிட முடியாது. பல விஷயங்களை சிறிது சிறிதாக நாளுக்கு நாள் மட்டுமே செய்திட முடியும். நாம் பொறுமையைப் பயன்படுத்தும்போது நேரத்தை எடுத்துக் கொள்ளும் விஷயங்களை நாம் அவசரப்படுத்த வேண்டியதில்லை. நாம் மற்றவர்களுடனும் நம்மோடும் பொறுமையாக இருக்க வேண்டும், ஏனெனில் நாம் அனைவருமே கற்றக்கொண்டு வளர்ந்து வருகிறோம். பொறுமையைப் பெறுவதற்கான நம்முடைய முயற்சிகளில், நமக்கு உதவுவதற்காக பின்வரும் மேற்கோளை நாம் மனப்பாடம் செய்வோமாக:

**"பொறுமையுடன் தாங்கிக் கொள்வோருக்கு, அவர், மெய்யாகவே வெகுமதியை அதிகரிப்பார்."[126]**

*வெகுமதி*

1. திருமதி ஆண்டர்சன் தனது வகுப்பு மாணவர்கள் தயாரித்துள்ள அறிவியல் செயல்திட்டங்கள் அருமையாக இருந்ததை பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அதற்க்கு வெகுமதியாக, அருகிலுள்ள மீன் பண்ணைக்கு அவர்களை கூட்டி சென்றார்.

2. அலென ஒவ்வொரு நாளும் கிட்டார் வாசிக்க கற்றுக் கொண்டார். தனது தம்பிக்காக ஒரு இனிமையான பாடலை வாசித்த போது, அவனது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியே அவளது முயற்சிக்கு தனக்கு கிடைத்த வெகுமதியாக இருந்தது.

*தாங்கிக்கொள்ளுதல்*

1. ஆலியாவும் அவளுடைய குடும்பமும் தூரத்து இடத்துக்குச் குடி பெயர்ந்து சென்றுவிட்டனர். முதல் சில மாதங்களுக்கு, அவர்களுக்கு பல இன்னல்கள் இருந்தன. ஆனால், அவர்களுடைய இரக்கமான அண்டை வீட்டாரின் உதவியோடு, அவர்களால் இந்த இன்னல்களைத் தாங்கிக்கொள்ள முடிந்ததோடு, புதிய இல்லத்தில் இப்பொழுது மகிழ்வோடு இருக்கின்றனர்.

2. ஹூக் என்பவர் நோயுற்றிருந்தார். அவருக்கு வலி மிகவும் அதிகமாக இருந்தாலும், அவர் குறை கூறவில்லை. அவர் தம்முடைய வலியை பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்

**ஈ. கதை**

*லீ சின் என்பவர் பீச் பழங்களை மிகவும் விரும்பினார். அது அவருக்கு மிகவும் விருப்பமான உணவுகளில் ஒன்றாகும். நாள்தோறும் அவர் ஒரு பீச் பழத்தை பள்ளிக் கூடத்திற்குக் கொண்டு வந்து அதனை மதிய உணவு வேளையில் உண்பார். ஒவ்வொரு கடியையும் அவர் ருசித்து உண்பார், ஆனால் விதையைத் தாங்கிய கொட்டைப் பகுதியை அவர் எப்போதும் வீசிவிடுவார்.*

*ஒரு நாள் லீ சின் தன்னுடைய வகுப்பில் விதைகளைப் பற்றி கற்றுக் கொண்டான். இது லீ சின் அவர்களுக்கு ஒரு யோசனையைக் கொடுத்தது. அவர் தம்முடைய பீச் பழத்தில் உள்ள விதையை நட்டு அது மரமாக வளர்க்க எண்ணினார். மதிய உணவு வேளையில் அவர் அந்த பீச் பழத்தின் கொட்டையை எடுத்து அதனை ஒரு காகிதத்தில் சுற்றினார். பள்ளிக்கூடம் முடிவுற்றதும், அவர் இல்லம் திரும்பி தம்முடைய மரத்தை நடுவதற்காக ஓர் இடத்தைத் தேடித் தருமாறு தன் தந்தையைக் கேட்டுக் கொண்டார். விதையை வெளியே எடுப்பதற்கு முன்பு அந்தக் கொட்டை காயும் வரைக்கும் காத்திருக்க வேண்டும் என அவரின் தந்தை அவருக்கு நினைவுப்படுத்தினார். இருந்தும்கூட லீ சின் அந்தக் கொட்டையை உடனடியாக நட விரும்பினார். அவருடைய தந்தை "லீ சின், அந்தக் கொட்டையைக் காய வைப்பதற்கான பொறுமை உன்னிடம் இல்லாமல் போனால், அந்த விதை முளையிடும் வரைக்கும் காத்திருப்பதற்கான பொறுமை உனக்கு எப்படி வரும்?" என்று கூறினார். ஆகவே அந்தக் கொட்டையை லீ சின் காயவைத்தார்.*

*சில நாட்களுக்குப் பிறகு, லீ சினால் இறுதியில் கொட்டையை உடைத்து விதையை வெளியே எடுக்க முடிந்தது. கொள்ளைப் புறத்தின் ஒரு மூளையில் அந்த மரம் பெரியதாகவும் உயரமாகவும் வளரக் கூடிய இடத்தை அவருடைய தாயார் காண்பித்தார். லீ சின் ஒரு சிறிய குழியைத் தோண்டி, அதற்குள் விதையைப் போட்டு ஈரமான மண்ணைக் கொண்டு அதை மூடினான். அவர் ஆர்வத்துடன் சிரித்தார். தன்னுடைய மரம் வளரும் பாதையில் இருக்கின்றது!*

*ஒவ்வொரு நாளும், லீ சின் அந்த மண் மேடுக்கு சென்று, அந்த விதை முளைந்துள்ளதற்கான அறிகுறி ஏதாவது தென்படுகிறதா எனக் காண்பதற்கு விழைந்தார்.*

*ஆனால் பல வாரங்களாக எந்த முளையும் தென்படவில்லை, அதனால் லீ சின் மனமுடைந்து போனார். லீ சின் அவர்களின் கவலையைக் கண்ட அவருடைய தாயார் என்ன நேர்ந்தது என அவரிடம் கேட்டார். லீ சின் சொன்னார் "என் விதை முளைக்கவில்லை. என்னுடைய மரம் வளராதோ என நான் இப்போது நினைக்கிறேன்." அதற்கு அவருடைய தாயார் இப்படி கூறினார், "இந்த விதை வளர்வதற்கு அதிகமான படிகள் உள்ளன. அந்த வகையில் அது பெரும்பாலும் உன்னைப் போலவே உள்ளது. நீ பிறந்த போது மிகவும் சிறிய குழந்தையாக இருந்தாய், நீ செய்ததெல்லாம் உண்பதும் உறங்குவதும் மட்டுமே. இப்பொழுது உன்னை நீ பார்! நீ இப்போது இளம் சிறுவனாக இருக்கின்றாய், நடக்கின்றாய், பேசுகின்றாய், நீயாகவே சிந்திக்கின்றாய்! இந்த மரம் வளர்வதற்கு பல ஆண்டுகள் ஆகலாம், ஆனால் அதனை நீ நன்கு கவனித்துக் கொண்டால், ஒரு நபர் அதன் நிழலில் அமர்ந்து அதன் கனியை சுவைக்கலாம்." இதனைப் பற்றி சிந்தித்துப் பார்த்த லீ சின் மீண்டும் நம்பிக்கை பெற்றார். ஒரு விதை முளையிடுவதற்கு முன்பு அது பல மாற்றங்களை கடந்து செல்ல வேண்டும் என்பதைப் பற்றி அவர் தம்முடைய வகுப்பின் மூலமும் தெரிந்து கொண்டார்.*

*பிறகு வசந்த காலத்தில் ஒரு நாளில், வழக்கம் போலவே அந்த மண்மேட்டைக் காண்பதற்காக லீ சின் வெளியே சென்றார், அப்பொழுது ஒரு சிறிய பச்சை நிற முளைதளிர் ஒன்று மண்ணைக் குத்தித் தள்ளிக் கொண்டு வெளியே வருவதைக் கண்டு மகிழ்ந்தார்! அவருடைய மரம் வளர்ந்துக் கொண்டிருந்தது! தம்முடைய அண்டை வீட்டாராகிய விவசாயிடம் ஓடி இந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூறினார். அந்தச் செடி சிறிதாகவும் எளிதில் காயம் அடையக் கூடியதாகவும் இருக்கும்போதே, அதற்கு எப்படி கவனத்தைக் காட்ட வேண்டும் என்ற அறிவுரையை பக்கத்து வீட்டு விவசாய பெண்மணி வழங்கினார், அவனும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமுறக் கேட்டு, இயன்றவரை அத்தளிரை சிறப்புற பேணுவதில் ஆவல் கொண்டார். "உங்களுடைய நல்ல அறிவுரைக்கு நன்றி செலுத்துவதற்காக நான் உங்களுக்குப் பல பீச் பழங்களைக் கொடுக்க முடியும்," என லீ சின் கூறினார். ஆனால் அண்டை வீட்டார் புன்னகைத்தவாறு இவ்வாறு "லீ சின், அந்தக் கொட்டை காய்வதற்காக காத்திருந்த வேளையில் நீ எவ்வளவு பொறுமையாக இருக்க வேண்டியிருந்தது என நீ நினைவில் வைத்திருக்கிறாயா?" என்று கேட்டார். லீ சின் தலை அசைத்தார். "உன்னுடைய விதை முளைக்க நீ காத்திருந்த வேளையில் நீ அதனை விட கூடுதல் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டியிருந்ததை நீ நினைவில் வைத்திருக்கிறாயா?" எனவும் கேட்டார். லீ சின் அதனையும் நினைவில் வைத்திருந்தார். அண்டை வீட்டார் "உன்னுடைய சிறிய செடி மரமாக வளர்வதற்கும், பிறகு அது கனி கொடுப்பதற்கும், முன்பைவிட இன்னும் கூடுதல் நேரத்தை எடுத்துக் கொள்ளும். நீ சுவைப்பதற்கான பீச் பழத்தை கொடுப்பதற்குத் தயாராவதற்கு முன்பு இன்னும் பல வருடங்கள் ஆகும்." என கூறினார்.*

*ஆகவே, அந்த மரம் முளையில் இருந்து செடியாகவும், செடியில் இருந்து மரமாகவும் வளரும் வேளையில் லீ சின் அந்த மரத்தை கவனித்துக் கொண்டு அதன் தேவைகளைப் பூர்த்திசெய்தார். அவரைப் போலவே அது சிறிது சிறிதாக உயரமாகவும் அகலமாகவும் வளர்ந்தது. பிறகு ஒரு நாள் லீ சின் பள்ளிக் கூடத்தில் இருந்து திரும்பிய போது, இதற்கு முன்பு வெறும் பூக்கள் இருந்த இடத்திலிருந்து அந்த மரத்தின் முதல் பீச் பழங்கள் உருவானதைக் கண்டார். அந்த விதை முதல் முதலாக முளைத்தபோது பெற்ற அதே மகிழ்ச்சி மீண்டும் அவரது இதயத்தை நிரப்பியது. அவர் மீண்டும் பொறுமையை*

*கடைப்பிடிக்க வேண்டும் என்று அவருக்குத் தெரிந்தது. அந்த பீச் பழங்கள் உண்பதற்கென தயாராவதற்கு மேலும் சில நாட்களாகும்.*

**உ. விளையாட்டு: "தொடக்கி வைப்பவரைக் கண்டுபிடித்தல்"**

அந்தக் குழுமத்தை விட்டு வெளியில் செல்ல ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுக்கவும். அவர் வெளியில் இருக்கும்போது, வகுப்பில் உள்ள மற்றவர்களிலிருந்து "தொடக்கி வைப்பவராக" செயல்படுவதற்காக இன்னொரு குழந்தையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளும் பிறகு அந்த குழந்தையின் செய்கைகளைப் பின்பற்றுகின்றனர். உதாரணமாக, அவர் கை தட்டினால், மற்றவர்கள் அனைவரும் அதனையே செய்கின்றனர். அவர் டாடா காண்பிப்பது போல கை அசைத்தால் மற்றவர்களும் அதனையே செய்கின்றனர். வெளியே அனுப்பப்பட்டவர், அந்த "தொடக்கி வைப்பவரை" கண்டுபிடிப்பதற்காக ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அதே நேரத்தில், மற்றவர்கள் அந்த "தொடக்கி வைப்பவரை" அதிக அனுக்கமாகவோ அதிகமாக பார்க்காமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும், காரணம் அவ்வாறு செய்தால் "தொடக்கி வைப்பவர்" யாரென கண்டுபிடிப்பது எளிதாகிவிடும்.

**ஊ. வண்ணமிடுதல் : வரைப்படம் 23**

**எ. முடிவு பிரார்த்தனைகள்**

## பாடம் 24

**அ. பிரார்த்தனைகளை ஒப்புவித்தல் மற்றும் மனனம் செய்தல்**

எப்போதும் போன்று, வகுப்பைப் பிரார்த்தனையுடன் ஆரம்பித்து, கடந்த சில பாடங்களாக அவர்கள் மனனம் செய்திட கற்றுவந்த பிரார்த்தனையை குழந்தைகளுடன் மறுஆய்வு செய்யவும்.

**ஆ. பாடல்கள் (முன்னைய பாடல்களை மறுஆய்வு செய்தல் உட்பட)**

**இறைவனின் அன்பில் உறுதி**

நடக்கிறோம் நாமெல்லாம்
இறைவனின் வழியிலே -2

இருக்கிறோம் உறுதியாய்
இறைவனின் அன்பிலே -2

இன்னல்கள் வழியிலே எதிர்வரும் போதிலே
இருக்கிறோம் உறுதியாய்
இறைவனின் அன்பிலே நிலைக்கிறோம்
அவரது வழியிலே என்றுமே ( நடக்கிறோம் நாமெல்லாம்..

செய்கிறோம் சேவைகள்
இறைவனின் நெறியிலே நிலைக்கிறோம்
அவரது அன்பிலே என்றுமே இருக்கிறோம் உறுதியாய்
இறைவனின் அன்பிலே இதயத்தில்
மகிழ்ச்சியாய் எம்பங்கை ஆற்றியே
(நடக்கிறோம் நாமெல்லாம்..

நிற்கிறோம் நிற்கிறோம்
இறைவனை நோக்கி இருக்கிறோம் உறுதியாய்
இறைவனின் அன்பிலே நிற்கிறோம் நிற்கிறோம்
இறைவனை நோக்கியே அவர்களும் உதவியில்
அச்சங்கள் இன்றியே அத்தனை கவலையும் மொத்தமாய் மறையவே
(நடக்கிறோம் நாமெல்லாம்..

**இ. மேற்கோள்களை மனனம் செய்தல்**

பற்றுறுதி குறித்த கருப்பொருளின் மீது கவனம் செலுத்தும், இந்தக் கடைசி பாடத்தில் குழந்தைகள் மனனம் செய்திடப் போகும் மேற்கோளை அறிமுகப்படுதத்துவதற்கு பின்வரும் யோசனைகள் உங்களுக்கு உதவும்.

பற்றுறுதியே கடவுள் மீது உண்மையான அன்பு செலுத்தும் ஒரு நபர் பெற்றிக்க வேண்டிய மிக முக்கிய குணங்களில் ஒன்றாகும். வாழ்க்கையில் என்ன நடந்த போதும், நாம் என்றுமே கடவுளையும் அவரது அன்பையும் நினைவுகூர்ந்திடுவோம். ஆதலால், மற்றவர்கள் நமக்குச் சொல்வதும் செய்வதும் அவர்பாலான நமது நம்பிக்கையை பாதித்திட முடியாது. நாம் கடவுள் மீது அன்பு செலுத்துகின்றோம் அவரது சட்டங்களுக்கும் போதனைகளுக்கும் கீழ்ப்படிகின்றோம். நாம் எல்லா நேரங்களிலும் பற்றுறுதியுடன் இருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்திட, பஹாவுல்லாவின் பின்வரும் மேற்கோளை மனனம் செய்வோமாக.

**"உனது பிரபுவின் சமயத்தில் நீ பற்றுறுதியுடன் இருந்தால், உனது ஸ்தானம் விழுமிய மேன்மையுடையதாக இருந்திடும்."**[127]

*விழுமிய*

1. அத்தோட்டங்கள் சேவியர் பார்த்திருந்தவற்றைவிட அதிக அழகுடன் இருந்தன. அவற்றைவிட விழுமிய அழகுடனான தோட்டத்தை அவனால் கற்பனை செய்ய முடியவில்லை.

2. கெலெட்ஸோவின் தாயார் குடும்பத்திற்காக மிகவும் விசேஷமான கேக் ஒன்றை செய்தார். அதை அவர்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சியுடன் உண்டனர், அது ஒப்புயர்வற்ற சுவையுடன் என அனைவரும் கூறினர்.

*மேன்மை*

1. ஒவ்வொரு இரவும் தூங்கச் செல்வதற்கு முன் மார்த்தா பிரார்த்திக்கின்றாள், அவள் கடவுளுடன் தான் நெருக்கமாக இருப்பதாக உணர்கிறாள். அவள் தூங்கச் செல்லும் போது, அவளது ஆன்மா ஒரு மேன்மையான நிலையில் இருக்கின்றது

2. குமார் கூட்டத்தின் போது, உலக அமைதி பற்றியும் மானிடத்தின் நன்மை குறித்தும் உரையாற்றினார். குமார் மேன்மையான யோசனைகள் குறித்து பேசினார்.

*பற்றுறுதியுடன் இருத்தல்*

1. தனது நண்பர்களிடம் நட்சத்திரங்கள் வானத்தில் மிதந்திடும் சிறிய தீபங்கள் என ரோஸ்மேரி கூறி வருகின்றாள். ஆனால், ஒவ்வொரு நட்சத்திரமும் வெகு தூரத்தில் உள்ள ஒரு சூரியனே என ரோஸ்மேரி கற்றுள்ளாள். ரோஸ்மேரி தன் மனதை மாற்றிக்கொள்ளவில்லை. தனது நம்பிக்கை உண்மை என்பதில் அவள் பற்றுறுதியுடன் இருக்கின்றாள்.

2. அனுதினமும் பிரார்த்திப்பது முக்கியமில்லை என யாரோ மோனாவிடம் கூறியிருந்தனர், ஆனால் பிரார்த்திப்பது கடவுளின் சட்டம் என்பதை அவள் அறிந்திருந்தாள். பிரார்த்தனை குறித்த சட்டத்தில் மோனா பற்றுறுதியுடன் இருந்தாள்.

**ஈ. கதை**

*பஹிய்யா காஃனும் 'அப்துல்-பஹாவின் இளைய சகோதரி என்பதை நீங்கள் ஒருவேளை அறிந்திருக்கக்கூடும். அவர்களின் தந்தையான பஹாவுல்லா ஓர் அநீதியான அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டபோது அவருக்கு ஆறு வயது. அவருடைய குடும்பம் பிரபுக்கள் வர்க்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பதை மற்றொரு கதையிலிருந்து நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்கள். ஆனால், அவரது தந்தை கைதுசெய்யப்பட்டதன் காரணமாக, குடும்பத்தின் அனைத்து உடைமைகளும் பறிக்கப்பட்டன. அவர்களுடைய நிலங்கள், அவர்களுடைய வீடுகள், மரச்சாமான்கள், அவர்களுடைய உடமைகள் எல்லாம் பறிபோயின. குடும்பம் கிட்டத்தட்ட எதுவுமே இல்லாமல், சாப்பிட உணவு கூட இல்லாமல் இருந்தது. பாஹிய்யா காஃனுமும் அவரது அன்புக்குரிய மூத்த சகோதரரான 'அப்துல்-பாஹா'வும் பசியுடன் இருந்தபோது, அவர்களுக்குக் கொடுக்க ரொட்டி இல்லை. அதற்கு மாறாக அவர்களின் தாயார் அவர்கள் சாப்பிடுவதற்காகச் சிறிது மாவை அவர்களின் உள்ளங்கைகளில் கொட்டினார்.*

*சிறிது காலத்திற்குப் பிறகு, அவர்களின் தந்தை விடுவிக்கப்பட்டு, தங்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறுமாறு அரசாங்கத்தால் கட்டாயப்படுத்தப்பட்டார். பின்னர் பாஹிய்யா காஃனுமும் அவரது குடும்பத்தினரும் குளிர்காலத்தின் கடுமையான குளிரில் அண்டை நாட்டில் உள்ள ஒரு நகரான பாக்தாத்திற்குப் புறப்பட்டனர். நகரத்தை அடைய, அவர்கள் பனி மூடிய பெரிய மலைகளைக் கடக்க வேண்டியிருந்தது. பயணம் அபாயகரமானதாக இருந்தது. மேலும், அவர்களிடம் இருந்த பயணத்திற்கான பொருட்கள் போதுமானதாக இல்லை. அவர்களுடைய உடைகள் பனியிலிருந்தும் குளிரிலிருந்தும் அவர்களை அவ்வளவாகப் பாதுகாக்கவில்லை. சில கோவேறு கழுதைகளின் உதவியுடன், மலைகளின் உயரமான சிகரங்களின் வழி அவர்கள் மெதுவாகத் தங்கள் பயணத்தை மேற்கொண்டனர். இரவு நேரங்களில் அவர்கள் பெரும்பாலும் கடும் வனாந்தரத்தில்தான் முகாமிட வேண்டியிருந்தது. ஆனால் கடவுள் அவர்களைப் பாதுகாத்தார், அவருடைய இடைவிடா உதவியின் மூலம் அவர்கள் மூன்று மாதங்களுக்குப் பிறகு பாக்தாத்திற்குப் பாதுகாப்பாக வந்து சேர்ந்தனர். பாஹிய்யா காஃனும் இனி ஒருபோதும் தமது தாய்நாட்டிற்குத் திரும்பமாட்டார்.*

*தமது வாழ்நாள் முழுவதும், பாஹிய்யா கானும் தமது தந்தையின் துன்பங்களிலும் நாடுகடத்தல்களிலும் பங்கு கொண்டார். இறுதியில், அரசாங்கம் பஹாவுல்லாவை சிறை நகரான அக்காவிற்கு நாடுகடத்தியது. அங்கு அவரும் அவரது குடும்பத்தினரும் மிகவும் வேண்டத்தகாத குற்றவாளிகளிடையே வாழ்ந்தனர். தாம் மிகவும் நேசித்த தந்தையார் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தபோது, பாஹிய்யா கானும் தமது தந்தையார் சமயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த தனது அன்பு சகோதரரான 'அப்துல்-பஹாவை' விசுவாசத்துடன் ஆதரித்தார். மேலும், பல ஆண்டுகளுக்குப் பிறகு, 'அப்துல்-பஹாவும் கூட, விண்ணேற்றம் அடைந்தபோது, பாஹிய்யா கானும் அப்துல்-பஹாவின் பேரரான, அப்துல்-பஹாவினால்' சமயத்தின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டிருந்த இளம் ஷோகி எஃபெண்டியின் மிகப்பெரிய ஆதரவாளராகவும் உறுதியான காப்பாளராகவும் இருந்தார்.*


*பாஹிய்யா காஃனும் இப்போது ஒரு வயதான பெண்மணி. அவருடைய வாழ்க்கை கொந்தளிப்பாலும் குழப்பங்களாலும் நிறைந்திருந்தது. அது ஒரு கடுந்துன்பத்திலிருந்து மற்றொரு கடுந்துன்பத்திற்கும் ஒரு பேரிடரிலிருந்து மற்றொரு பேரிடருக்கும் நகர்ந்தது. ஆனால், அவரது ஆவி நிலையாக இருந்தது, அவரது இதயம் எப்பொழுதும் கடவுளின் அன்பினால் நிறைந்திருந்தது. அவரது வாழ்க்கையின் இறுதி நாட்கள் வரை அவர் பற்றுறுதியுடனும் உறுதியாகவும் இருந்தார்.*

**உ. விளையாட்டு “ஓர் உதவும் கரம்”**

ஜோடிகளாகத் தங்களைப் பிரித்துக் கொண்டு, தங்கள் ஜோடியுடன் கைகளைக் கோர்த்துக்கொள்ளுமாறு குழந்தைகளைக் கேட்டுக்கொள்ளுங்கள். முதலில் அவர்களைத் தங்கள் கண்களைத் திறந்தவாறு, ஜோடிகளாக அவ்விடத்தைச் சுற்றி நடக்கவிடுங்கள். ஆரம்பத்தில் அவர்கள் சிறிய அடிகளாகத் தொடங்கி பின்னர், படிப்படியாக அவர்களின் காலடிகள் அகன்றதாக மாற வேண்டும். ஒவ்வொரு ஜோடியும் யாருடனும் மோதாமல் இருப்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். பின்னர், ஒவ்வொரு ஜோடியிலும் ஒரு கூட்டாளர் தன் கண்களை மூடிக்கொள்ள வேண்டும், பின்னர் அந்த ஜோடி தங்களின் நடைப்பயிற்சியை மீண்டும் செய்ய வேண்டும். இப்போது அவர்கள் யாரையும் மோதாமல் இருக்கவேண்டுமானால், கண்களை மூடாமல் இருக்கும் குழந்தை தன் ஜோடிக்கு வழிகாட்ட வேண்டும். அவர்கள் தொடுவதன் மூலமான சமிக்ஞைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என அவர்களிடம் கூறுங்கள். அவர்கள் தொடங்குவதற்கு முன்பு தேவைப்படும் சமிக்ஞைகளை வடிவமைக்க நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்-எடுத்துக்காட்டாக, கையை அழுத்துவது என்றால் "நிப்பாட்டுவது", இரண்டு முறை அழுத்தினால் "திரும்பிச் செல்லுவது", மூன்று முறை அழுத்தினால் "வலதுபுறம் திரும்புவது", மற்றும் நான்கு முறை அழுத்தினால் "இடதுபுறம் திரும்புவது".

**ஊ. வர்ணம் தீட்டுதல்: வரைதல் 24**


**எ. முடிவுப் பிரார்த்தனைகள்**



“ஆவியின் புத்திரனே! எனது முதல் அறிவுரை இதுவே: தூய்மையும், அன்பும், பிரகாசமும் நிறைந்த உ ள்ளத்தினைக் கொண்டிருப்பாயாக...”




**“நீதியின் பாதையைப் பின்பற்றுங்கள்; ஏனெனில், மெய்யாகவே, இதுவே நேர் வழி."**



**“நண்பனே! உனது உள்ளமெனும் பூங்காவில் அன்பெனும் ரோஜாவைத் தவிர வேறெதனையும் பயிரிடாதே…”**



“மனித நற்பண்புகள் அனைத்திற்கும் அஸ்திவாரம் வாய்மையே”




"கொடுத்தலும் தாராள மனப்பான்மையும் எமது பண்புகள்; எமது பண்புகளை அணிகலனாகக் கொண்டிருத்தல் நன்று."



"தம்முன் தமது சகோதரரே மேம்பட்டவரென தேர்ந்தெடுப்பவர் ஆசி பெறுவாராக"



“மனிதனின் புத்திரனே! உனது உள்ள மகிழ்ச்சியினால் உவகைப் பெறுவாயாக, அதனால் எம்மைச் சந்திக்க அருகதைப் பெறுவதோடு எமது அழகையும் பிரதிபலிக்கக்கூடும்.”



**“நாம் எல்லா வேளைகளிலும் நமது வாய்மையையும் நாணயத்தையும் வெளிப்படுத்தவேண்டும்…”**



“மனிதனின் புத்திரனே! எமது முன்னிலையில் பணிவுடன் நடந்து கொள்வாயாக, அதனால் யாம் அன்பு கூர்ந்து உன்பால் வருகைதரக்கூடும்.”



“நீங்கள் மனமகிழ்வுடனும், மனநிறைவளிக்கும் திருப்தியுடனும் இருந்து, இறைவனுக்கு நன்றி கூற எழுவீர்களாக, அதனால் நன்றியளிப்பானது அருளின் அதிகரிப்புக்கு உகந்ததாயிருக்கக்கூடும்.”



“இறைவனுடைய நல்லாதரவினைப் பெற்றவர்களின் உள்ளங்களுக்கு மகிழ்வூட்டக்கூடியதான
மன்னிக்கும்தன்மையும் கருணையும் உமது அலங்காரமாக இருக்கட்டும். . .”



“மக்களே, வாய்மையினைக் கொண்டு உங்கள் நாவுகளை அழகுபடுத்துவீராக, நேர்மையேனும் ஆபரணத்தைக் கொண்டு உங்கள் ஆன்மாக்களை அலங்கரிப்பீராக.”



“இறைவனுடைய அரசவையானது ஒப்புரவு மற்றும் நீதி, மற்றும் ஒவ்வொரு வாழும் ஆன்மாவிடம் காட்டப்படும் கருணை, இரக்கம் மற்றும் கனிவு ஆகியவற்றின் மீதும் நிறுவப்பட்டுள்ளது.”




“உங்களுடைய உண்மையான அழகு இறைவனின் அன்பிலும் மற்றும் அவரைத் தவிர மற்ற அனைத்திலிருந்தும் பற்றின்மையை கொண்டிருப்பதில் உள்ளடங்கியுள்ளது என்பதை அறிந்துக் கொள்ளுங்கள்…”




**“மேன்மைக்கெல்லாம் தோற்றுவாய் தேவரால் வழங்கப்பட்டவைகள் எவையோ, அவைகளை ஏற்றுக் கொள்ளுதலும் ஆண்டவன் விதித்துள்ளவற்றின்பால் திருப்தியுமாகும்.”**



**“மனிதர்கள் அனைவருடனும் பரிபூரணமான கனிவுடனும் அன்புடனும் பழகுபவர் ஆசிபெறுவாராக.”**



“துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய் கடவுளின் திருச்சொல்லை மேம்படுத்துவதும் அவரது அன்பில் பற்றுறுதியாக இருத்தலுமாகும்.”




**“இறைவன் மீதுள்ள உங்களது நம்பிக்கையை எப்போதும் இழந்து விடாதீர்கள். நீங்கள் எப்பொழுதுமே நம்பிக்கையுடன் இருப்பீர்களாக, ஏனெனில் கடவுளுடைய கொடைவளங்கள் கிருபைகள் மனிதன் மீது பொழிவது நின்றுவிடுவதே இல்லை.”**



“நம்பிக்கைக்கு பாத்திரமாயிருத்தல் என்பது மக்களின் சாந்தத்திற்கும் பாதுகாப்புக்கும் இட்டுச் செல்லக்கூடிய நுழைவாயிலாகும்.”



“மெய்யாகவே, உமது இதயத்தில் இறைவனின் அன்பெனும் தீயைத் தூண்டி
எறியச்செய்யுமாறு நான் கடவுளை வேண்டுகிறேன்...”




"உருவின் புத்திரனே! நீயே எந்தன் ஒளிவிளக்கு மற்றும் என் ஒளியும் உன்னுள் இருக்கிறது. அதனிடமிருந்து உமது பிரகாசத்தைப் பெற்று, எம்மைத் தவிர வேறெவரையும் நாடாதே."



**“உயரிய முயற்சி எனும் ஆடையினால் அணிவிக்கப்பட்டு, இச்சமயத்திற்கு சேவை செய்ய எழுந்துள்ள ஒரு விசுவாசி மகிழ்வெய்துவாராக”**



"பொறுமையுடன் தாங்கிக் கொள்வோருக்கு, அவர், மெய்யாகவே வெகுமதியை அதிகரிப்பார்."



**“உனது பிரபுவின் சமயத்தில் நீ பற்றுறுதியுடன் இருந்தால், உனது ஸ்தானம் விழுமிய மேன்மையுடையதாக இருந்திடும்.”**

# குறிப்புகள்


1. ‘Abdu’l-Bahá, in Bahá’í Prayers: A Selection of Prayers Revealed by Bahá’u’lláh, the Báb, and ‘Abdu’l-Bahá (Wilmette: Bahá’í Publishing Trust, 2002, 2017 printing), p. 28.
2. Ibid., p. 29.
3. Tablets of Bahá’u’lláh Revealed after the Kitáb-i-Aqdas (Wilmette: Bahá’í Publishing Trust, 1988, 2005 printing), no. 6.25, pp. 66–67.
4. Bahá’u’lláh, cited by Shoghi Effendi, The Advent of Divine Justice (Wilmette: Bahá’í Publishing Trust, 2006, 2018 printing), par. 42, p. 41.
5. Tablets of Bahá’u’lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 3.23, p. 27.
6. Bahá’u’lláh, The Hidden Words (Wilmette: Bahá’í Publishing Trust, 2003, 2012 printing), Arabic no. 2, pp. 3–4.
7. Tablets of Bahá’u’lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 10.5, p. 155.
8. From a Tablet of ‘Abdu’l-Bahá. (authorized translation)
9. Ibid.
10. Selections from the Writings of ‘Abdu’l-Bahá (Wilmette: Bahá’í Publishing, 2010, 2015 printing), no. 12.1, p. 42.
11. Gleanings from the Writings of Bahá’u’lláh (Wilmette: Bahá’í Publishing Trust, 1983, 2017 printing), CXXXIX, par. 8, p. 345.
12. ‘Abdu’l-Bahá, cited by Shoghi Effendi, The Advent of Divine Justice, par. 40, p. 39.
13. ‘Abdu’l-Bahá, in “Trustworthiness: A Cardinal Bahá’í Virtue”, compiled by the Research Department of the Universal House of Justice, published in The Compilation of Compilations (Maryborough: Bahá’í Publications Australia, 1991), vol. 2, no. 2053, p. 338.
14. ‘Abdu’l-Bahá, in Bahá’í Prayers, p. 28.
15. Ibid., p. 29.
16. Tablets of Bahá’u’lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 9.4, p. 138.
17. Ibid., no. 10.15, p. 156.
18. Selections from the Writings of ‘Abdu’l-Bahá, no. 206.13, p. 357.
19. Ibid., no. 199.6, pp. 334–35.
20. From a talk given on 1 July 1912, published in The Promulgation of Universal Peace: Talks Delivered by ‘Abdu’l-Bahá during His Visit to the United States and Canada in 1912 (Wilmette: Bahá’í Publishing, 2012), par. 1, p. 304.
21. Selections from the Writings of ‘Abdu’l-Bahá, no. 237.5, p. 442; also in Bahá’í Prayers, p. 328.
22. From a talk given by ‘Abdu’l-Bahá on 3 September 1912, published in The Promulgation of Universal Peace, par. 29, p. 441.
23. The Tabernacle of Unity: Bahá’u’lláh’s Responses to Mánikchí Ṣáḥib and Other Writings (Haifa: Bahá’í World Centre, 2006), no. 5.7, p. 74.
24. Days of Remembrance: Selections from the Writings of Bahá’u’lláh for Bahá’í Holy Days (Haifa: Bahá’í World Centre, 2016), no. 42.8, pp. 209–10.
25. From a talk given on 22 November 1911, published in Paris Talks: Addresses Given by ‘Abdu’l-Bahá in 1911 (Wilmette: Bahá’í Publishing, 2006, 2016 printing), no. 35.2, p. 135.
26. Selections from the Writings of ‘Abdu’l-Bahá, no. 16.5, pp. 51–52.

27. The Summons of the Lord of Hosts: Tablets of Bahá'u'lláh (Wilmette: Bahá'í Publishing, 2006), no. 5.51, p. 301.
28. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 4.23, p. 39.
29. The Summons of the Lord of Hosts, no. 3.17, p. 249.
30. From a talk given by 'Abdu'l-Bahá on 5 May 1912, published in The Promulgation of Universal Peace, par. 3, p. 127.
31. Bahá'u'lláh, in Bahá'í Prayers, p. 164.
32. Ibid., p. i.
33. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 6.19, p. 64.
34. Gleanings from the Writings of Bahá'u'lláh, LXXXII, par. 3, pp. 180–81.
35. Ibid., V, par. 2, pp. 6–7.
36. 'Abdu'l-Bahá, The Secret of Divine Civilization (Wilmette: Bahá'í Publishing, 2007, 2016 printing), par. 130, p. 93.
37. The Hidden Words, Arabic no. 70, p. 21.
38. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXXIX, par. 2, p. 316.
39. Ibid., CXXXIX, par. 4, p. 343.
40. From a talk given by 'Abdu'l-Bahá on 23 April 1912, published in The Promulgation of Universal Peace, par. 5, p. 69.
41. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXXV, par. 3, pp. 300–1.
42. Ibid., XV, par. 1, p. 39.
43. From a talk given by 'Abdu'l-Bahá on 5 May 1912, published in The Promulgation of Universal Peace, par. 4, p. 128.
44. From a talk given by 'Abdu'l-Bahá on 2 December 1912, ibid., par. 2, pp. 638–39.
45. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 6.3, p. 57.
46. Bahá'u'lláh, Epistle to the Son of the Wolf (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2016 printing), p. 23.
47. Bahá'u'lláh, in "Trustworthiness", published in The Compilation of Compilations, vol. 2, no. 2037, p. 334.
48. 'Abdu'l-Bahá, in "Bahá'í Prayers and Tablets for Children: A Compilation Prepared by the Research Department of the Universal House of Justice", no. 11.
49. Ibid., no. 10.
50. From a talk given by 'Abdu'l-Bahá on 14 April 1912, published in The Promulgation of Universal Peace, par. 9, p. 17.
51. Abdul Baha on Divine Philosophy (Boston: The Tudor Press, 1918), pp. 41–42.
52. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 35.8, p. 104.
53. Ibid., no. 7.4, p. 33.
54. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXXI, par. 6, p. 291.
55. Ibid., LXVI, par. 6, p. 144.
56. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 10.8, p. 155.
57. Bahá'u'lláh, in The Bahá'í World: Volume One, 1925–1926 (Wilmette: Bahá'í Publishing Trust, 1926, 1980 printing), p. 42.
58. The Hidden Words, Arabic no. 40, p. 13.
59. Ibid., Persian no. 50, p. 39.
60. From a Tablet of 'Abdu'l-Bahá. (authorized translation)

61. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXLVI, par. 1, p. 357.
62. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 1.7, p. 8.
63. From a talk given by 'Abdu'l-Bahá on 12 May 1912, published in The Promulgation of Universal Peace, par. 8, p. 166.
64. From a talk given by 'Abdu'l-Bahá on 16 and 17 October 1911, published in Paris Talks, no. 1.7, p. 6.
65. 'Abdu'l-Bahá, in Bahá'í Prayers, p. 173.
66. Bahá'u'lláh, ibid., p. 94.
67. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 179.1, p. 285.
68. From a talk given by 'Abdu'l-Bahá on 10 November 1912, published in The Promulgation of Universal Peace, par. 8, p. 599.
69. Gleanings from the Writings of Bahá'u'lláh, CLIII, par. 1, pp. 366–67.
70. The Hidden Words, Persian no. 21, p. 29.
71. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 178.1, p. 284.
72. From a talk given by 'Abdu'l-Bahá on 21 November 1911, published in Paris Talks, no. 34.8, p. 133.
73. Bahá'u'lláh, in "Trustworthiness", published in The Compilation of Compilations, vol. 2, no. 2013, p. 327.
74. Ibid., no. 2024, p. 330.
75. Ibid., no. 2027, p. 330.
76. Bahá'u'lláh, in "Guidelines for Teaching", compiled by the Research Department of the Universal House of Justice, published in The Compilation of Compilations, vol. 2, no. 1898, p. 293.
77. Gleanings from the Writings of Bahá'u'lláh, XV, par. 6, p. 41.
78. The Summons of the Lord of Hosts, no. 1.145, pp. 114–15.
79. The Call of the Divine Beloved: Selected Mystical Works of Bahá'u'lláh (Haifa: Bahá'í World Centre, 2018), no. 2.22, p. 21.
80. Bahá'u'lláh, in Bahá'í Prayers, p. 162.
81. 'Abdu'l-Bahá, ibid., p. 29.
82. From a Tablet of 'Abdu'l-Bahá. (authorized translation)
83. Bahá'u'lláh, in The Kitáb-i-Aqdas: The Most Holy Book (Wilmette: Bahá'í Publishing Trust, 1993, 2013 printing), par. 70, p. 45.
84. From a talk given by 'Abdu'l-Bahá on 23 November 1911, published in Paris Talks, no. 36.9, p. 140.
85. From a talk given by 'Abdu'l-Bahá on 12 April 1912, published in The Promulgation of Universal Peace, par. 2, p. 10.
86. The Tabernacle of Unity, no. 3.16, p. 64.
87. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 141.4, p. 228.
88. Ibid., no. 1.4, p. 6.
89. The Hidden Words, Arabic no. 48, p. 15.
90. Gleanings from the Writings of Bahá'u'lláh, LXVI, par. 11, p. 146.
91. The Summons of the Lord of Hosts, no. 2.30, p. 229.
92. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 14.11, p. 212.
93. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXXXIV, par. 1, p. 328.

94. Ibid., CLXI, par. 1, p. 384.
95. Ibid., CXLIII, par. 1, pp. 353–54.
96. Bahá'u'lláh, The Kitáb-i-Íqán: The Book of Certitude (Wilmette: Bahá'í Publishing Trust, 2003, 2018 printing), par. 146, pp. 123–24.
97. From a talk given by 'Abdu'l-Bahá on 23 November 1912, published in The Promulgation of Universal Peace, par. 4, p. 632.
98. 'Abdu'l-Bahá, in Bahá'í Prayers, p. 29.
99. The Hidden Words, Arabic no. 1, p. 3.
100. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXVIII, par. 1, p. 283.
101. The Hidden Words, Persian no. 3, p. 23.
102. 'Abdu'l-Bahá, cited by Shoghi Effendi, The Advent of Divine Justice, par. 40, p. 39.
103. 'Abdu'l-Bahá, in Bahá'í Prayers, p. 29.
104. The Hidden Words, Persian no. 49, p. 39.
105. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 6.37, p. 71.
106. The Hidden Words, Arabic no. 36, p. 12.
107. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 225.30, p. 407.
108. Bahá'u'lláh, in Bahá'í Prayers, p. i.
109. The Hidden Words, Arabic no. 42, p. 13.
110. Tablets of Abdul-Baha Abbas (New York: Bahá'í Publishing Committee, 1915, 1940 printing), vol. 2, p. 483. (authorized translation)
111. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 9.5, p. 139.
112. Gleanings from the Writings of Bahá'u'lláh, CXXXVI, par. 6, p. 336.
113. 'Abdu'l-Bahá, in "Bahá'í Prayers and Tablets for Children", no. 10.
114. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 138.1, p. 220.
115. The Summons of the Lord of Hosts, no. 1.119, p. 93.
116. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 10.4, p. 155.
117. Gleanings from the Writings of Bahá'u'lláh, CLVI, par. 1, p. 378.
118. Bahá'u'lláh, in Bahá'í Prayers, p. 94.
119. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 10.10, p. 156.
120. Selections from the Writings of 'Abdu'l-Bahá, no. 178.1, p. 284.
121. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 4.16, p. 37.
122. From a Tablet of Bahá'u'lláh. (authorized translation)
123. 'Abdu'l-Bahá, in Bahá'í Prayers, p. 29.
124. The Hidden Words, Arabic no. 11, p. 6.
125. Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas, no. 17, p. 257.
126. Gleanings from the Writings of Bahá'u'lláh, LXVI, par. 10, p. 146.
127. Ibid., CXV, par. 13, p. 278.